வெளியீடு: 25-8-2008 Issued: 25-8-2008

சென்னை-600 008
1558/25-3-09

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 11, 2008—தொகுதி 47—எண் 1**

**Friday the 11th April, 2008—Volume 47—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

**[Price Rs. 3.00**

V21, 3; P08
P08.47.1
228408

## 11–4–2008

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-x |
| Governor and Council of Ministers | xi-xv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii-xx |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi-xxxi |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-44 |
| **2. தனி உறுப்பினர் தனித் தீர்மானம்—** | |
| உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு அளித்தல் - தீர்மானம் கொண்டுவந்த முதலமைச்சருக்குப் பாராட்டு | 44-53 |
| திரு. ஜி.கே. மணி | 44-45 |
| திரு. டி. சுதர்சனம் | 45-47, 50 |
| திரு. சி. [illegible] | 47-48 |
| திரு. வை. [illegible] | 48-49 |
| திரு. கு. செல்வம் | 49 |
| * மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 50-52 |
| திரு. மு. கண்ணப்பன் | 52 |

பக்கங்கள்

**3. தகவல் கோரல்—**

மதுரை நகரின் சில பகுதிகளில் காலரா நோய் பரவுவதைத் தடுத்தல் — 53-55

திரு. என். நன்மாறன் — 53, 55

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் — 54-55

**4. கவன ஈர்ப்பு—**

மேட்டூர் அணை திறக்கப்படாததால் ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை — 55-58

திரு. விடியல் எஸ். சேகர் — 55-57

*மாண்புமிகு திரு. துரைமுருகன் — 55-56, 58

**5. அறிக்கைகள் அளித்தல்—**

மனுக்கள் குழு — 58

**6. மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 24—சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)
(ஆ) கோரிக்கை எண் 41—வருவாய்த் துறை
(இ) கோரிக்கை எண் 51—இ[illegible]ச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு
(ஈ) கோரிக்கை எண் 26—[illegible]சதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை — 59-212

* மாண்புமிகு திரு. இ. பெரியசாமி — 59,79,99, 134-135, 145-148,175, 181-182

மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன் — 115,135,139





பக்கங்கள்

**மானியக் கோரிக்கைகள், 2008–2009, விவாதமும், வாக்கெடுப்பும்**— தொடர்ச்சி

* திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் — 74,110, 135-145,156

திரு. கோ. ஐயப்பன் — 148-155

*திரு. ஆர்.எம். பழனிசாமி — 61,81,100 116-117, 157-165

திரு. தி.க. ராஜா — 63,83,119, 165-173

திரு. கே. மகேந்திரன் — 66,89,108, 121, 173-178

திரு. வை. சிவபுண்ணியம் — 66, 103-104, 121,178-185

திரு. மு. கண்ணப்பன் — 185-190

திரு. கு. செல்வம் — 66-67, 91-92 130, 190-196

திரு. பெ. காமராஜ் — 196-201

திரு. எச். வசந்தகுமார் — 201-206

*திரு. பி. பலராமன் — 77,96,100 122,206-212

**7. அறிவிப்பு—**

இரண்டு அமைச்சர்களின் பதிலுரைகளை 15-4-2008 ஆம் நாளுக்குத் தள்ளிவைத்தல் — 212-213

**8. அரசினர் தீர்மானம்—**

விதி 32-ஐத் தளர்த்துதல் — 213-214

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 214-215

## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

   பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

   நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

   மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228408
சென்னை—600 008
நூலகம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள், நிறுவனங்களைப் பதிவு செய்தல், வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு

**13. சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

**16. குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

குடிசை மாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு

**17. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

26. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

29. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

30. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

31. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. Chief Minister .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. Minister for Finance .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. Minister for Electricity .. **The Hon. Thiru Arcot N. Veeraswami:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. Minister for Rural Development and Local Administration .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. Minister for Co-operation .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Health** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Health, Medical Education and Family Welfare

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Housing** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits, Registration of Companies, Housing, Rural Housing and Housing Development

13. **Minister for Tourism and Registration** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism, Tourism Development Corporation, Registration and Stamp Act

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

16. **Minister for Slum Clearance and Accommodation Control** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. கு. பிச்சாண்டி
திரு. குத்தாலம் க. அன்பழகன்
திருமதி டி. யசோதா
திரு. கி. ஆறுமுகம்
திரு. என். நன்மாறன்
திருமதி பி. பத்மாவதி

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. அ.மு.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம்., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.எல். பி.ஜி.டி.சி.ஏ. | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம.ச. சந்திரமௌலி, எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| செல்வி எஸ். பிலோமினா, எம். எஸ். டபிள்யூ., பி.எட்., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. பா. அன்பழகன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி வி.வி. ரமா, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. இரா. பழனிசாமி, பி.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| திரு. சு. சந்திரன், பி.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திரு. பா.சி.க. சிங்காரவேலு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி மு. சுப்புலட்சுமி, எம்.ஏ., எம். ஃபில்., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |



## பேரவை உறுப்பினர்கள்
### (அகர வரிசைப்படி)
### பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. | சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. | அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. | திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. | சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. | சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. | ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. | பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி—1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. | அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. | செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. | ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. | கம்பம் |

21. இராமசாமி, திரு. தி. .. ஸ்ரீவில்லிபுத்தூர்

22. இராமசுவாமி, திரு. கே.பி. .. ராசிபுரம்

23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்

24. இராமச்சந்திரன், திரு. டி. .. தளி

25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். .. பள்ளிப்பட்டு

26. இராம்பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)

27. இராஜா, திரு. எஸ்.ஆர். .. தாம்பரம்

28. இராஜேந்திரன், திரு. ஆ. .. வீரபாண்டி

29. இராஜேந்திரன், திரு. இரா. .. பனமரத்துப்பட்டி

30. இராஜேந்திரன், திரு. க. .. ஜெயங்கொண்டம்

31. இராஜேந்திரன், திரு. சபா. .. நெல்லிக்குப்பம்

32. இராஜ்குமார், திரு. ம. .. பெரம்பலூர் (செ.வ.)

33. இளமதி சுப்பிரமணியன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

34. இளவரசன், திரு. வீர. .. திருமங்கலம்

35. இளவழகன், திரு. கே.எல். .. ஆற்காடு

36. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்

37. உதயம் சண்முகம், திரு. .. அறந்தாங்கி

38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. .. தஞ்சாவூர்

39. உலகநாதன், திரு. கே. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)

40. எதிரொலி மணியன், திரு. கோ. .. பெரணமல்லூர்

41. ஐய்ப்பன், திரு. கோ. .. கடலூர்

42. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)



43. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி

44. கண்ணப்பன், திரு. மு. .. தொண்டாமுத்தூர்

45. கண்ணன், திரு. பெ. .. தாரமங்கலம்

46. கண்ணன், திரு. வே. .. செஞ்சி

47. கமலாம்பாள், திருமதி பெ. .. காஞ்சிபுரம்

48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. .. தென்காசி

51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. .. முகையூர்

52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. .. அரவக்குறிச்சி

53. கலைராஜன், திரு. வி.பி. .. தியாகராய நகர்

54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

55. காமராஜ், திரு. பெ. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. .. மதுராந்தகம்

57. காவேரி, திரு. வை. .. எடப்பாடி

58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். .. கலசப்பாக்கம்

59. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி

60. குணசேகரன், திரு. சு. .. சிவகங்கை

61. குணசேகரன், திரு. ம. .. மானாமதுரை (செ.வ.)

62. குத்தாலம் க. அன்பழகன், திரு. .. குத்தாலம்

63. குமரகுரு, திரு. இரா. .. திருநாவலூர்

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்றாம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

| | | |
|---|---|---|
| 109. | சேகரன், திரு. கூ.ந. | திருவெறும்பூர் |
| 110. | சேகர், திரு. எஸ்.வி. | மயிலாப்பூர் |
| 111. | சேகர்பாபு, திரு. பி.கே. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 112. | சையது கௌஸ் பாஷா, திரு. சை. | மதுரை மத்தி |
| 113. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | லால்குடி |
| 114. | சௌந்திரபாண்டியன், திரு. அ. | குன்னூர் (செ.வ.) |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | வேலூர் |
| 116. | ஞானதாஸ், திரு. ஆர். | சிவகாசி |
| 117. | டில்லி பாபு, திரு. ப. | அரூர் (செ.வ.) |
| 118. | தங்கமணி, திரு. பி. | திருச்செங்கோடு |
| 119. | தங்கம் தென்னரசு, திரு. | அருப்புக்கோட்டை |
| 120. | தங்கவேலன், திரு. சுப. | கடலாடி |
| 121. | தண்டபாணி, திரு. மா. | வேடசந்தூர் |
| 122. | தமிழரசி, திருமதி ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. அ. | ஓமலூர் |
| 124. | தமிழ்செல்வன், திரு. சி. | ஏற்காடு (ஆ.வா.) |
| 125. | தம்பிதுரை, முனைவர் மு. | பர்கூர் |
| 126. | தர்மலிங்கம், திரு. எல்.பி. | சத்தியமங்கலம் |
| 127. | தாமோதரன், திரு. செ. | கிணத்துக்கடவு |
| 128. | தியோடர் ரெஜினால்டு, திரு. த. | பத்மநாபபுரம் |
| 129. | திருநாவுக்கரசு, திரு. கே. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. | துரைக்கண்ணு, திரு. இரா. | பாபநாசம் |



| | | |
|---|---|---|
| 131. | துரை சந்திரசேகரன், திரு. | திருவையாறு |
| 132. | துரைசாமி, திரு. வீ.பெ. | சங்கரி (செ.வ.) |
| 133. | துரைமுருகன், திரு. | காட்பாடி |
| 134. | துரைராஜ், திரு. சி. | சேடப்பட்டி |
| 135. | தேன்மொழி, திருமதி எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. | நன்மாறன், திரு. என். | மதுரை கிழக்கு |
| 137. | நெடுஞ்செழியன், டாக்டர் க. | கபிலர்மலை |
| 138. | நெடுஞ்செழியன், திரு. ரெ. | புதுக்கோட்டை |
| 139. | நேரு, திரு. கே.என். | திருச்சிராப்பள்ளி—2 |
| 140. | பதர் சயீத், திருமதி | திருவல்லிக்கேணி |
| 141. | பத்மாவதி, திருமதி பி. | நன்னிலம் (செ.வ.) |
| 142. | பரஞ்ஜோதி, திரு. மு. | ஸ்ரீரங்கம் |
| 143. | பரிதி இளம்வழுதி, திரு. | எழும்பூர் (செ.வ.) |
| 144. | பலராமன், திரு. பி. | பொன்னேரி (செ.வ.) |
| 145. | பழனிசாமி, திரு. ஆர்.எம். | மொடக்குறிச்சி |
| 146. | பன்னீர்செல்வம், திரு. எம். | சீர்காழி (செ.வ.) |
| 147. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | குறிஞ்சிப்பாடி |
| 148. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | பெரியகுளம் |
| 149. | பாண்டுரங்கன், திரு. கு. | அணைக்கட்டு |
| 150. | பாபு, திரு. வி.எஸ். | புரசைவாக்கம் |
| 151. | பாரதி மோகன், திரு. ஆர்.கே. | திருவிடைமருதூர் |
| 152. | பாலபாரதி, செல்வி கே. | திண்டுக்கல் |
| 153. | பிச்சாண்டி, திரு. கு. | திருவண்ணாமலை |

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)

155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்

157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)

158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) - ஆலங்குளம்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்

161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்

162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்

163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு

164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி

165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆ.வா.)

167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை

168. போளூர் ம. வரதன், திரு. - செங்கம் (செ.வ.)

169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்

170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி

171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்

173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்

174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்

176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு

178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை

179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்

180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி

181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்

182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்

183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)

184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்

185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்

186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்

190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்–1

193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்

194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி

195. ராமச்சந்திரன், திரு. கா. - கூடலூர்

196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி

197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி

198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்

| | | |
|---|---|---|
| 200. | ராஜன், திரு. அ. | .. நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பி. | .. ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | .. திருப்பத்தூர் |
| 203. | ராஜேந்திரன், திரு. கே.எஸ்.கே. | .. மதுரை மேற்கு |
| 204. | லட்சுமணன், திரு. ச. | .. போடிநாயக்கனூர் |
| 205. | லதா, திருமதி ஜி. | .. குடியாத்தம் |
| 206. | லீமா றோஸ், திருமதி ரா. | .. திருவட்டாறு |
| 207. | வசந்தகுமார், திரு. எச். | .. நாங்குநேரி |
| 208. | வரதராஜன், திரு. ரா. | .. விருதுநகர் |
| 209. | விசுவநாதன், திரு. இரா. | .. நத்தம் |
| 210. | விடியல் எஸ். சேகர், திரு. | .. காங்கேயம் |
| 211. | விஜயகாந்த், திரு. | .. விருத்தாசலம் |
| 212. | விஜயகுமார், திரு. கே.எஸ். | .. கும்மிடிப்பூண்டி |
| 213. | விஜயகுமார், திரு. பெ.சு. | .. போளூர் |
| 214. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | .. செய்யாறு |
| 215. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | .. பேராவூரணி |
| 216. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. சேலம்–2 |
| 217. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. வேதாரண்யம் |
| 218. | வேலு, திரு. எ.வ. | .. தண்டராம்பட்டு |
| 219. | வேலுசாமி, திரு. இல. | .. தருமபுரி |
| 220. | வேலுசாமி, திரு. செ.ம. | .. பல்லடம் |
| 221. | வேலுமணி, திரு. சு.ப. | .. பேரூர் |
| 222. | வேல்துரை, திரு. பா. | .. சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 223. | வேல்முருகன், திரு. தி. | .. பண்ருட்டி |
| 224. | வைத்திலிங்கம், திரு. ஆர். | .. ஒரத்தநாடு |
| 225. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | .. கிள்ளியூர் |
| 226. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | .. விளவங்கோடு |
| 227. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | .. அரக்கோணம் (செ.வ.) |
| 228. | ஜெயக்குமார், திரு. டி. | .. இராயபுரம் |
| 229. | ஜெயக்குமார், முனைவர் கு. | .. நாமக்கல் (செ.வ.) |
| 230. | ஜெயபால், திரு. எஸ். | .. குளச்சல் |
| 231. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | .. வந்தவாசி (செ.வ.) |
| 232. | ஜெயலலிதா, செல்வி ஜெ | .. ஆண்டிப்பட்டி |
| 233. | ஸ்டாலின், திரு. மு.க. | .. ஆயிரம் விளக்கு |
| 234. | ஹசன் அலி, திரு. கு. | .. இராமநாதபுரம் |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | .. நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. ஜி. மாசிலாமணி | .. | மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர் |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 29

## 2008 ஏப்ரல் 11, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு."

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 91, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**92—**

### அரிசி ஆலை

***34465—திரு. இரா. மாணிக்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதியில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 11

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) குளித்தலை தொகுதியில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பியிருக்கின்ற தொகுதி. அங்கே சுமார் 7,000 எக்டேர் விவசாய நிலங்கள் உள்ளன. 30,000-த்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தையே நம்பி இருக்கின்றன. அங்கே ஒரு நவீன அரிசி ஆலை அமைந்தால், விவசாயிகளுக்கு மிகுந்த உதவியாக இருக்கும். மேலும், நெல் அதிகப்படியாக உற்பத்தியாவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. தலைவர் ஆட்சிக் காலத்திலே அந்த ஆலை அமையாவிட்டால், வேறு எந்தக் காலத்திலே அமையப் போகிறது என்று தொகுதி மக்கள் ஏக்கத்தோடு கேட்கிறார்கள். ஆகவே, குளித்தலையிலே நவீன அரிசி ஆலை அமைக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் மொத்தம் சுமார் 50 கூலி அரிசி அரைவை ஆலைகள் உள்ளன. 6 நவீன அரிசி ஆலைகளும் உள்ளன. குளித்தலை தொகுதியைப் பொறுத்த அளவில், நவீன அரிசி ஆலை ஒன்றும் இல்லை. 12 கூலி அரைவை நிறுவனங்கள் தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றன. எனினும், குளித்தலை தொகுதியில் தொழில் முனைவோர்கள் நவீன அரிசி ஆலை அமைக்க முன்வருவார்களேயானால், அவர்களுக்கு அந்தத் தொழில் ஆரம்பிக்கத் தேவையான வழிமுறைகள், திட்ட அறிக்கை தயாரித்தல், வங்கிக் கடன் உதவி, துறை சார்ந்த ஒப்புதல்கள், மின் இணைப்புப் பெற்றளித்தல், மானிய உதவி மற்றும் சந்தை உதவி ஆகியவற்றுக்குத் தேவையான உதவிகளை ... மாவட்டத் தொழில் மையம் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை-600 008



2008 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

**திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் முன்வந்தால் அரிசி ஆலை நிறுவனம் அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலிலே சொல்லியிருக்கின்றார்கள். அப்படிப்பட்ட, அந்த அளவிற்கு செல்வாக்குப் படைத்த, பணம் படைத்த தனியார் குளித்தலை தொகுதியில் மிகவும் குறைவு. இருந்தாலும், விண்ணப்பதாரர்களை அணுகி அதற்கான முயற்சியை எடுக்கிறேன் என்று சொல்லி, வருங்காலத்திலாவது அரசு நவீன அரிசி ஆலை அமைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமாய்ப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு சமீபத்தில் அறிவித்துள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்கொள்கை 2008-ன்படி, நவீன அரிசி ஆலை வேளாண்சார் தொழில் வகைப்பாட்டில் வருவதால், மாநிலத்தில் எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படும் அந்த ஆலைகளுக்கும் அரசு அறிவித்துள்ள 15 சதவிகித முதலீட்டு மானியம், மூன்று ஆண்டுகளுக்கு 20 சதவிகித மின் மானியம், சிறப்பு வகைத் தொழில் முனைவோர் மானியம், வேலைவாய்ப்பு உருவாக்கும் மானியம் மற்றும் சுற்றுச்சூழலுடன் இயைந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் தொழில்நுட்ப மானியம் என பல்வேறு மானியப் பலன்கள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்தச் சலுகைகள் மட்டுமின்றி, வேளாண்சார் தொழில் நிறுவனங்கள் மத்திய அரசின் மானியத்தைப் பெற்றாலும், மாநில அரசின் மானியத்தையும் கூடவே பெறும் அளவிற்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. எனவே, தனியார் இலகுவாக அந்த நவீன அரிசி ஆலையை அமைக்க வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். மணி.

**திரு. எஸ். மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பொங்கலூர் தொகுதி முழுக்க முழுக்க ஏழையெளிய மக்கள், விவசாயக் கூலித் தொழிலாளர்களைக் கொண்ட தொகுதி. அங்கு ஒரு தொழிற்பேட்டை அமைப்பதற்காக இடமெல்லாம் சர்வே

செய்யப்பட்டது. எப்போது அந்தத் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தமில்லையென்றாலும், நான் நேற்று சட்டமன்றத்தில் அறிவித்தபடி பொங்கலூர் தொகுதி, கண்டியன்கோயில் கிராமத்தில் விரைவில் இந்த ஆண்டே தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சிவானந்தம்.

**திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்மூலம் அமைக்கப்பட்டிருக்கின்ற அரிசி ஆலைகள் வேளாண் தொழிலைச் சார்ந்தவை. அவற்றுக்கு மின் கட்டணம் முழுவதும் தள்ளுபடி செய்யவில்லையென்றாலும், tariff வகுத்து, குறைந்த கட்டணம் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் புதிதாகத் தொடங்குகின்ற நவீன அரிசி ஆலைகளுக்கு, அவை சிறு, குறு, நடுத்தர தொழில் வகைப்பாட்டில் அமைந்தால், அவற்றுக்கு ஆண்டுக்கு 20 சதவிகிதம் என மூன்று ஆண்டுகளுக்கு, மின் மானியம் உண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்குன்றத்தில் சுமார் 100 நவீன அரிசி ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. திருவள்ளூர் மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளிலிருந்து நெல், அரைவைக்கு வருகின்றது. அரிசியைத் தரம் பிரிப்பதற்கு நவீனக் கருவிகள் இப்பொழுது வந்திருக்கின்றன. அப்படிப் பெரிய தொழிற்சாலைகள், நவீன அரிசி ஆலைகள், அதுபோன்ற நவீன கருவிகளைப் பொருத்தி, அரிசியைத் தரம் பிரிப்பதற்குத் தேவையான கருவிகளை, தமிழக அரசு அப்பகுதியில் நிறுவி, ஏழையெளிய, சிறு, குறு வியாபாரிகளுக்கு அரிசி ஆலை அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அறிவித்தபடி அரிசி ஆலைகள் அல்லது வேளாண்சார் தொழில்கள் எங்கு அமைந்தாலும், தமிழக அரசு அறிவித்துள்ள, தலைவர் கலைஞர் அறிவித்துள்ள மானியமும், அதேபோல, கூடுதலாக மத்திய அரசு அறிவித்திருக்கின்ற ஏராளமான மானியமும் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. தனியார்களுக்கு நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. புதிய கருவிகள் ஏராளமாக வந்திருக்கின்றன. அவற்றை அவர்கள் வாங்கிப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூரிலே ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலையோ அல்லது ஒரு தொழிற்பேட்டையோ அமைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

ஏனென்றால், அங்கு திறமையான, படித்த இளைஞர்கள் உள்ளனர். அதேபோல, ஏழை மக்களும் உள்ளனர். அங்கே ஒரு ஜவ்வரிசித் தொழிற்சாலை அமைத்தால் அங்குள்ள விவசாயிகளுக்குச் சாதகமாக அமையும். எங்கள் மாவட்ட அமைச்சர் அவர்கள் விவசாயிகளைக் காப்பாற்றுகின்றவகையிலே, தொழிற்சாலைக்கு அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார். அதன்காரணமாக, நமது அரசு மூலமாக ஒரு தொழிற்சாலை அமைய வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வேளாண்சார் தொழிலிலே வருகின்ற

காரணத்தினால், தாங்கள் கூறிய அந்த ஆத்தூர் பகுதியில் தொழிற்சாலைகளைத் தனியார்கள் அமைத்தால், மத்திய மானியமும், மாநில அரசு வழங்கும் மானியமும், இரண்டும் கிடைக்கும்.

அதேபோல, பல்வேறு சலுகைகள் தொழில் கொள்கையிலே அறிவிக்கப்பட்டிருப்பதால், தனியார்கள் அவற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி, தொழிற்சாலைகள் அமைக்கலாம். ஏற்கெனவே சேலத்தில் 400-க்கும் மேற்பட்ட சேகோ தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அவற்றிலே, 30-க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் நலிவுற்ற நிலையில் இருக்கின்றன. அவற்றைக்கூட மீண்டும் இயக்குவதற்கு இந்த அரசு முயற்சிகள் செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 93, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**93—**

## புதிய கட்டடம்

***31863—திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.





**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளையார்கோவில் நகரம் என்பது தனி தாலுகா ஆவதற்கான தகுதியுள்ள ஒரு நகரமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. காளையார்கோவிலில் ஆண்டுதோறும் 5,000-க்கும் மேற்பட்ட பத்திரங்கள் பதிவு செய்யப்படுகிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அரசு ஒவ்வோர் ஆண்டும், ஒவ்வொரு பத்திரப் பதிவு அலுவலகத்திற்கும் நிர்ணயித்திருக்கிற குறியீட்டு அளவைவிட கூடுதலான வருமானத்தைப் பெற்றுத்தருகிற ஒரு பத்திரப் பதிவு அலுவலகம் அங்கே செயல்படுகிறது. கடந்த ஆண்டுகூட 1½ கோடி ரூபாய்க்கு மேலாக அங்கே வருவாய் ஈட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு வரக்கூடிய மக்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல், ஒரு காம்ப்ளக்ஸிலே இருக்கக்கூடிய வாடகைக் கட்டடத்தில், ஒரு சிறிய அறையிலே இயங்கிக்கொண்டிருக்கிறது. கணினிமயமாக்கப்படக்கூடிய சூழ்நிலைகூட அந்த அறையிலே இல்லாத நிலையில், அடிப்படைத் தேவைகளும் இல்லாத நிலையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே போதுமான அளவுக்கு அரசுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்ற நிலையில், காளையார்கோவிலிலே பத்திரப் பதிவு அலுவலகத்தை இந்த ஆண்டே கட்டித் தருவதற்கான நடவடிக்கையை அமைச்சரவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளையார்கோவில் சார்-பதிவாளர் அலுவலகம் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாதம் ரூ.3,115 வீதம் ஆண்டொன்றுக்கு சுமார் 37,380 ரூபாய் வாடகையாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் காளையார்கோவில் சார்-பதிவாளர் அலுவலகத்தின் அருகில் அரசுக் கட்டடம் கட்டத் தேவையான நிலம் பொதுமக்களிடமிருந்து தானமாகவோ அல்லது காலியாக உள்ள அரசு நிலம் ஏதேனும் ஒதுக்கப்பட்டாலோ சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காளையார்கோவில் நகரத்திற்குள்ளேயே நிறைய காலி இடங்கள் இருக்கின்றன. தற்போது உள்ள அரசு மருத்துவமனையின் பக்கத்தில் 16 சென்ட் இடம் உள்ளது. அதைப்போல, நகரத்தினுடைய மத்தியிலேயே 10 ஏக்கருக்கு மேற்பட்ட அரசு இடங்கள் இருக்கின்றன. எனவே, தேவைக்கு அதிகமான இடங்கள் இருக்கின்ற ஒரு சூழ்நிலையிலும், வருமானம் கூடுதலாக இருக்கிற நிலையிலும், அவசியம் இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவார்களா என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடு, சிவகங்கை மாவட்டத் தலைநகர் உருவாகின்ற நேரத்தில், அங்கே ஒரு மாடல் நகரத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உட்பட எல்லா அரசு அலுவலகங்களும் ஒரே காம்பவுண்டுக்குள் வருகிற ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். அந்த அடிப்படையில்தான் இப்போது பெரும்பான்மையான அரசு அலுவலகங்கள்/குடியிருப்புகள் 'மருதுபாண்டியன் நகர்' என்ற ஒரே அரசுக் குடியிருப்பில் இருக்கிற சூழ்நிலையில், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகம் மட்டும் தனியாக ஒரு சிறிய கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதுவும் இட நெருக்கடியில் இருக்கிற சூழ்நிலையில், மாவட்ட ஆட்சியர் வளாகத்திலேயே இடமும் இருக்கிற நிலையில், மாவட்ட பத்திரப் பதிவு அலுவலகத்தையும் அங்கே கட்டித் தருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டு வருகின்ற சார்-பதிவாளர் அலுவலகங்களை சொந்தக் கட்டடங்களுக்கு மாற்ற வேண்டுமென்று முடிவெடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளாக 35 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கான நிதியை ஒதுக்கித் தந்து அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. வாடகைக் கட்டடத்தில் இருக்கக்கூடிய சார்-பதிவாளர் அலுவலகங்களை சொந்தக் கட்டடங்களுக்கு மாற்ற வேண்டுமென்ற முடிவோடு ஆண்டுதோறும் படிப்படியாக சொந்தக் கட்டடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, காளையார்கோவில் பகுதியில் வருகின்ற ஆண்டில் நிச்சயமாக அரசுக் கட்டடம் கட்டுவதற்கான முயற்சிகளை இந்தத் துறை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கடந்த பட்ஜெட் கூட்டத் தொடரின்போது பதிவுத் துறை அமைச்சராக இருந்தார்கள். அப்போது பரமக்குடி சட்டமன்றத் தொகுதி, சத்தரக்குடியிலே சார்-பதிவாளர் அலுவலகம் புதிதாக கட்டிக் கொடுக்கப்படும் என்று என்னிடத்திலே உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாமல் கேட்கிறீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியின் தலைநகராகவும், வட்டாரத் தலைநகராகவும் இருக்கின்ற போளூரிலே தாலுகா அலுவலகம், Forest office, Registrar office, Court எல்லாம் ஒரே காம்பவுண்டுக்குள் இருக்கின்றன. அங்கே மக்கள் புழங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, அங்கே இருக்கும் சார்-பதிவாளர் அலுவலகத்தை மாற்றி புதிதாகக் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சார்-பதிவாளர் அலுவலகங்களைப் பொறுத்தமட்டில், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு தொடர்ந்து ஆண்டுதோறும் கட்ட முடிவு செய்து முதல் ஆண்டு 10 கட்டடங்களும், இரண்டாம் ஆண்டு 15 கட்டடங்களும் கட்டப்பட்டு வருகின்றன. வருகின்ற ஆண்டின் நிதிநிலையைப் பொறுத்து நிச்சயமாக வருங்காலத்தில் உறுப்பினருடைய கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.

[2008 ஏப்ரல் 11

முற்பகல் 9-45

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகரத்திற்கு உட்பட்ட சார்-பதிவாளர் அலுவலகம், கிழக்குத் தாம்பரம் பகுதியிலே இயங்கிக் கொண்டிருந்தது. அந்த இடத்தைக் காலி செய்யவேண்டுமென்று தனியார் சொன்னவுடன் மேற்குத் தாம்பரத்திற்கு அது மாற்றப்பட்டு, அந்த இடத்தையும் காலி செய்யுங்கள் என்று சொன்னவுடனே, மீண்டும் கிழக்குத் தாம்பரத்தில் வேறு ஒரு பகுதிக்கு அலுவலகம் சென்றிருக்கிறது. நான் தங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது என்னவென்று சொன்னால், சார்-பதிவாளர் அலுவலகம் எங்கெல்லாம் செல்கின்றதோ, அந்த அலுவலகத்தைச் சுற்றியிருக்கின்ற பகுதிகளிலே ஒரு சிறிய கடை எடுக்க வேண்டுமென்று சொன்னால், சற்றேறக்குறைய 5 இலட்சம் ரூபாய் அதற்குத் தருவதற்கு தனியார் தயாராக இருந்துக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** நகராட்சிக்குச் சொந்தமான நிலமோ அரசாங்க நிலமோ இருந்தால் அதைப் பயன்படுத்திக்கொண்டு புதிதாகக் கட்டடங்கள் கட்டினால் அதன்மூலமாக அரசாங்கத்திற்கு வருமானம் வரும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொண்டு, தாம்பரம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் வருமா என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைத்தான் இதற்கும் பதிலாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். தாம்பரம் பகுதியைப் பொறுத்தமட்டில் அரசாங்கத்தினுடைய நிலம் இருக்குமானால், அரசாங்க விதிப்படி குறைந்தபட்சம் வருடத்திற்கு ஆயிரம் பதிவுகள் பதியப்படுமானால், வருங்காலத்தில் சொந்தக் கட்டடம் கட்ட நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களுடன் கலந்துபேசி முடிவு எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பொன்னுசாமி.



2008 ஏப்ரல் 11]

**திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதி, புதுச்சத்திரம் ஒன்றியத்தில் சார்-பதிவாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குத் தேவைப்படுகின்ற நிலம் அனைத்தும் பொது மக்களால் வாங்கி அரசுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் புதிய கட்டடம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 568 சார்-பதிவாளர் அலுவலகங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதில் சொந்தக் கட்டடத்தில் இயங்கக்கூடிய அலுவலகத்தினுடைய எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில் 311 சார்-பதிவாளர் அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவருகின்றன. வாடகைக் கட்டடங்களைப் பொறுத்தவரையில், 257 சார்-பதிவாளர் அலுவலகங்கள், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்றன. வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரக்கூடியவற்றுக்காக, இந்தத் துறையின் சார்பாக ஆண்டுதோறும் வாடகைச் செலவினமாக 1 கோடியே 7 இலட்சத்து 44 ஆயிரத்து 788 ரூபாய் செலவிடப்படுகிறது. எனவே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய அந்த சார்-பதிவாளர் அலுவலகங்களை ஆண்டுதோறும் படிப்படியாக சொந்தக் கட்டடத்திற்கு மாற்றவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், 2006-2007 ஆம் ஆண்டு 10 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கும், 2007-2008 ஆம் ஆண்டில் 15 சார்-பதிவாளர் அலுவலகங்களுக்கும் நிதியினை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். எனவே, வருங்காலத்தில் படிப்படியாக புதிய கட்டடங்கள் கட்டப்படும் என்பதைத்தான் இப்போது என்னால் சொல்லமுடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 11

91—

## நெல் ரகங்கள்

***23069—திரு. கி. ஆறுமுகம்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*நெல் சாகுபடியை அதிகரிக்கும் வகையில் குறுகிய கால நெற்பயிர் இரகங்களை அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குறைந்த வயதுடைய நெல் இரகங்கள் தமிழ்நாட்டில் குறுவை மற்றும் நவரைப் பட்டங்களில் பயிரிடப்படுகின்றன. சமீபத்தில் 2006 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கோயம்புத்தூர் ஆர்.எச். 3 என்ற புதிய வீரிய ஒட்டு நெல் இரகம் 115 நாட்கள் வயதுடையது. சராசரியாக எக்டேருக்கு 7 டன் மகசூல் அளிக்கவல்லது. மேலும், ஆடுதுறை 43, ஆடுதுறை 45, ஆடுதுறை 47, ஆடுதுறை 48 போன்றவையும் குறைந்த வயதுடைய புதிய இரகங்கள் ஆகும். தமிழ்நாட்டில் அதிக அளவில் பயிரிடப்பட்டுவரும் அம்பாசமுத்திரம் 16, ஆடுதுறை 36, கோயம்புத்தூர் 47 போன்ற இரகங்களும் குறைந்த வயதுடைய உயர் விளைச்சல் இரகங்களாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகம் விவசாயத்தையே நம்பியிருக்கிற மாநிலம் ஆகும். எனவே, இங்கே விவசாயிகள் கருதுவது, ஒரு எக்டேருக்கு 9 டன் நெல் உற்பத்தி செய்கிற வகையிலும், அதேசமயத்திலே, 75 நாட்களிலே, குறுகிய காலத்திலே நெற்பயிர் அறுவடைக்கு வருவதைப்போன்ற பயிர்களை உருவாக்க வேண்டும் என்று விவசாயிகள் கருதுகிறார்கள். எனவே, இதுபோன்ற பயிர்களை நம்முடைய தமிழக அரசாங்கம் ஆராய்ச்சி செய்ய முன்வருமா என்று கேட்டு, ஏற்கெனவே எங்கள் ஊர் பெயரைக் கொண்ட செங்கல்பட்டு சிறுமணி, கிச்சிலி போன்ற நெற்பயிர்களை இப்போது யாருமே பயிரிடுவது இல்லை. அவற்றையெல்லாம் ஒட்டு இரகங்களாகப்



2008 ஏப்ரல் 11]

பயிரிடுவதற்கு நம்முடைய அரசு முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மூற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது ஏ.டி.டி. 36, 37, 42, 43, ஏ.டி.டி.ஆர். 45, ஏ.டி.டி.ஆர்.எச். 1, ஏ.எஸ்.டி. 16, ஏ.எஸ்.டி. 17, ஏ.எஸ்.டி. 18, ஐ.ஆர். 36, ஐ.ஆர். 50, ஐ.ஆர். 64 இந்த இரகங்கள்தான் தற்போது 105 நாட்கள் முதல் 110 நாட்களில் விளைச்சல் தரக்கூடிய இரகங்களாக இருக்கின்றன. மத்திய கால இரகங்களாக ஏ.டி.டி. 45, 38, 39, ஏ.எஸ்.டி. 19, கோ.ஆர்.எச். 2, இவைதான் 120 நாட்களிலிருந்து 130 நாட்கள் வரை விளைச்சலுக்கு வரக்கூடியவையாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு எழுப்பிய அந்த வினாவைப்போல் நம்முடைய தமிழ்நாட்டினுடைய வேளாண்மைப் பல்கலைக்கழகம் குறுகிய காலத்திலே விளைச்சல் தரக்கூடியதும், அதுவும் நீர் மேலாண்மைப் பற்றியும் அறிந்து, ஒவ்வோர் ஆண்டும் தான் கண்டுபிடித்த புதிய ஆலோசனைகளை, விதைகளை, இரகங்களை வெளியிட்டு வருகிறது. ஆகவே, தற்போது இந்த நிலைதான் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய காலத்திலே அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய நெற்பயிர்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும், அதேபோன்று பல்வேறு பயிர் இரகங்களைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளையும் அரசு எடுக்குமா என்பதை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் பல்வேறு நெல் இரகங்களைப் பற்றிச் சொன்னார்கள். ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள நெல் இரகங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவது, குறுகிய காலத்திலே அதிக மகசூலைக் கொடுக்கக்கூடிய நெற்பயிர்களையும் ஊக்குவிக்க வேண்டும். இப்போது சினிமா கலைஞர்கள் முதல் நாட்டியக் கலைஞர்கள் வரை ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு விருதுகள் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அதுபோன்று, நெல் உள்ளிட்ட பல்வேறு பயிர் இரகங்களைக்

[2008 ஏப்ரல் 11

கண்டுபிடிப்பவர்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் சிறப்பு விருதுகளை வழங்குவதில்லை என்ற ஏக்கம் விவசாயிகள் மத்தியிலும், விவசாயத்திலே திறமையாகச் செயல்படுகிறவர்கள் மத்தியிலும் இருக்கிறது. இதுபோன்ற சிறப்பு விருதுகளை நம்முடைய தமிழக அரசாங்கம் விவசாயிகள் மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பதற்கும், ஆராய்ச்சியை மென்மேலும் வளர்ப்பதற்குமான நோக்கிலே விவசாயிகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் வழங்குவதற்கு முன்வருமா என்று தங்கள்மூலம் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது நாற்று விட்டாலே 22 நாட்களுக்கு மேலேதான் எடுத்து நடுவோம். ஆனால், இந்தச் செம்மை நெல் சாகுபடி என்ற புதிய முறையிலே இப்போது ஒரு பயிர் நடுகின்ற அந்த முறையில், புதிய தொழில்நுட்பத்தை வழங்கி, கடந்த ஆண்டு 56,600 விவசாயிகளுக்குப் பயிற்சி தந்து, 11,300 எக்டேர்களில் இது பயிர் செய்யப்பட்டது. இதில் நல்ல விளைச்சல் கிடைக்கிறது. நாம் சாதாரணமாக சம்பா, கார் நெல் இதையெல்லாம் பயிர் செய்தால், அதிகபட்சம் போனால் 2 டன்கூட ஒரு ஏக்கருக்கு வராது. எல்லா விவசாயிகளுக்கும் இது தெரியும். ஆனால், இந்த முறையிலே, செம்மை நெல் சாகுபடி முறையில் ஒரு எக்டேருக்குக் குறைந்தபட்சம் 10 டன், அதிக அளவிலே 14 டன் வரை கிடைக்கின்றது. ஆகவே, இந்தப் புதிய தொழில்நுட்பத்தின்மூலம் நல்ல விளைச்சல் வரக்கூடியதை கடந்த ஆண்டு அறிமுகப்படுத்தி, இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கையிலே தெரிவித்திருப்பதைப்போல, பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஏக்கர்களில் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. நம்முடைய விருப்பத்திற்கு புதிய இரகங்களைக் கண்டுபிடிப்பது சாத்தியமல்ல. வேளாண்மைப் பல்கலைக்கழகம் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டுதான் 105 நாட்களிலிருந்து 110 நாட்கள் வரையுள்ள இரகங்களைக் கண்டுபிடித்து அவைதான் இப்போது குறைந்த நாட்களிலே விளைச்சல் தரக்கூடிய இரகங்களாக இருக்கின்றன.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் விருது வேண்டுமென்று சொல்கின்றார்கள். அவர் ஒரு புதிய இரகத்தைக் கண்டுபிடித்து,



2008 ஏப்ரல் 11]

அதை வேளாண்மைப் பல்கலைக்கழகம், 'சபாஷ்' என்று பாராட்டு தெரிவித்தால், விருதுகள் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதி விவசாயிகளையும் சென்றடையக்கூடிய வகையில், குறுகிய காலப் பயிர் பற்றிய விழிப்புணர்வு மற்றும் பயிற்சி ஆகியவற்றை விவசாயிகளுக்கு அளிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நன்னிலம் தொகுதியைச் சேர்ந்தவர். அவரே அந்தப் பிரச்சாரத்திலே ஈடுபட்டு விவசாயிகளை ஊக்குவிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 94, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**94—**

### மாணவர் விடுதி

**38429-திரு. அ. தமிழரசு:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓமலூர் தொகுதி, ஓமலூரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் புதிய விடுதி தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு அ. தமிழரசு.

**திரு அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமலூர், தாலுகா தலைமையிடம். ஓமலூர் பேரூர் பகுதியிலே அரசு மேல்நிலைப் பள்ளியிலே 1,400 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். தனியார் அரசு நிதி உதவி பெறும் பள்ளியிலே 1,700 மாணவர்கள் படித்து வருகின்றார்கள். அந்தப் பகுதி மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்ற பகுதி. மாணவர்கள் பள்ளிக்கு வர இயலாத காரணத்தால், பள்ளிப் படிப்பை முடித்துக்கொள்ள வேண்டிய ஒரு நிலை இப்போது இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய பள்ளி மாணவர்களின் நலன் கருதி, அங்கே மாணவர் விடுதி ஒன்றைத் தொடங்குவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்னிடம் தனியாகவும் இதைப்பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியினுடைய தேவையை நானும் புரிந்து வைத்திருக்கின்றேன். எதிர்காலத்திலே நம்முடைய சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிவோடு இந்த அரசாங்கம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு அ. தமிழரசு.

**திரு அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிலே அதைத் தொடங்குமாறு பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு ப. டில்லி பாபு.

**திரு ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பாக எத்தனை விடுதிகள் இருக்கின்றன? எனது தொகுதியான அரூர், ஊத்தங்கரை பகுதிகளில் 20 ஆயிரம் மாணவர்கள் அரசு உயர்நிலைப்



பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் படிக்கின்ற நிலையில், அங்கே வெறும் 500, 600 மாணவர்களுக்கு மட்டுமே விடுதி வசதி இருக்கின்றது. விடுதியை நிரப்புகின்ற காலகட்டத்திலே பல நூறு மாணவர்களுக்கு விடுதி கிடைக்காமல், தமது பள்ளிப் படிப்பை நிறுத்தக்கூடிய நிலைமைக்குத் தள்ளப்படுகின்றார்கள். ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக நான் அறிய விரும்புவது, தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் விடுதிகளில் இடம் கிடைக்காத மாணவர்களுக்கு வரும் கல்வியாண்டிலாவது கூடுதலாக விடுதிகள் ஏற்படுத்துவதற்கு தமிழக அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மொத்தம் 1,181 விடுதிகள் தற்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், அவர்களுடைய தொகுதிக்கு புதிதாக விடுதிகள் வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். இந்த நிதியாண்டிலே 25 புதிய விடுதிகள் தொடங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கின்றார்கள். நமது சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் மீண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, எதிர்காலத்திலே நிறைய விடுதிகளைத் தொடங்குவதற்கு வேண்டிய வழிவகைகளை நான் செய்வேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு ம. குணசேகரன்.

**திரு ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மானாமதுரை தொகுதியில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஒன்று இருக்கின்றது. அங்கே 1,400-க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். குறிப்பாக ஆதி திராவிடர், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகள்தான் அங்கே அதிகம் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அங்கே ஓரே ஒரு ஆதி திராவிடப் பெண்கள் விடுதி மட்டுமே இருக்கின்றது. அதிலேயும் 50 மாணவிகள் மட்டுமே தங்கிப் படிக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கின்றது.

[2008 ஏப்ரல் 11

முற்பகல் 10-00

அதேநேரத்தில், அங்கே 12 பிற்படுத்தப்பட்ட மாணவிகள் மட்டும்தான் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, 1,400 பேர் படிக்கின்ற அந்தப் பள்ளிக்குச் செல்கின்ற மாணவிகள் வெகு தொலைவிலிருந்து வருகின்ற நிலையில், மழைக் காலங்களிலும், வெயில் காலங்களிலும் அந்தப் பள்ளிக்கு வரமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது. குறிப்பாக, அந்தப் பள்ளி அரசுப் பள்ளியாக இருந்தாலும் சுமார் 85 விழுக்காட்டுக்கு மேல் அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவிகள் தேர்ச்சி பெறுகின்றார்கள். எனவே, அந்த மாணவிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு, அங்கே மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மாணவிகளுக்கான ஒரு விடுதியைத் தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னதைப்போல, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியிலே, உண்மையான தேவையை என்னிடத்திலே சொல்லி இதுபோன்ற விடுதிகளைக் கேட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே அந்தக் கோரிக்கைகள் எல்லாம் பரிசீலிக்கப்பட்டு எந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கவேண்டுமோ அந்தப் பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கி ஏற்பாடு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 95, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**95—**

## அர்ச்சகர் பயிற்சி நிலையம்

***29455—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 11]

(அ) தருமபுரியில் அர்ச்சகர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே சென்னை, திருவரங்கம், திருவண்ணாமலை, மதுரை, பழனி, திருச்செந்தூர் ஆகிய இடங்களில் மட்டும் அர்ச்சகர் பயிற்சி மையங்கள் நடந்து வருகின்றன. தற்போது கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தை இயற்றியுள்ள இந்த நோத்தில், தருமபுரியில் இந்தப் பயிற்சி மையத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக்களில் உரிய பயிற்சியும், தகுதியும் உள்ள அனைத்து சாதியினரும், திருக்கோயில்களில் அர்ச்சகர் ஆகலாம் என்ற தமிழக அரசின் ஆணைக்கிணங்க, நீதியரசர் ஏ.கே. இராஜன் அவர்களுடைய தலைமையிலே அமைக்கப்பட்ட உயர்நிலைக் குழு பரிந்துரை செய்த இடங்களில், தற்போது முதல் கட்டமாக—இதுவரை இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகள் என்பது தமிழகத்தில் இல்லாத ஒன்று—புதிதாக இப்போதுதான் ஏற்படுத்தப்பட்டு, முதல்கட்டமாக 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்போது அமைக்கப்பட்டிருக்கின்ற 6 இடங்களில், 2 இடங்களில் வைணவ அர்ச்சகர் பயிற்சி நிலையமும், 4 இடங்களில் சைவ அர்ச்சகர் பயிற்சி நிலையமும் நிறுவப்பட்டிருக்கின்றன. போதுமான மாணவர்கள் இதில் சேர்ந்து பயின்று வருகின்றார்கள். தேவைக்கேற்ப விரிவுபடுத்துகின்ற நேரத்தில் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

[2008 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே தெருக்கூத்துக் கலைஞர்கள், இசைக் கலைஞர்களுக்கெல்லாம் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. அதைப்போலவே, கிராமப்புறங்களில் ஊதியமில்லாமல் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற இந்த அர்ச்சகர்களுக்கு ஓய்வூதியம் வழங்குகின்ற திட்டம் அரசிடம் இருக்கின்றதா, வழங்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கிறது கேள்வி. மாண்புமிகு உறுப்பினர் திரு. மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருநெல்வேலி தொகுதி, சைவம் மற்றும் தமிழ் வளர்த்த பகுதியாகும். அங்கே அர்ச்சகர் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி என்பது முதன்முதலாக தமிழகத்தில் இப்போதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தப் பள்ளிகளுக்கு எந்த அளவிற்கு மாணவர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும் என்பது இப்போதுதான் தெரியவந்திருக்கிறது. 6 இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்ற இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் 207 மாணவர்கள், இப்போது இட ஒதுக்கீட்டு அடிப்படையிலே சேர்ந்து பயின்று வருகிறார்கள். ஆகவே, இந்த அர்ச்சகர் பயிற்சிப் பள்ளிகளில் பயில்வதற்கு மாணவர்களிடம் நல்ல வரவேற்பு இருக்கிறது. தேவைக்கேற்ப இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவது பற்றி யோசிக்கலாம். அப்படி யோசிக்கின்ற கட்டத்தில் திருநெல்வேலியும், அதேபோல மற்ற பகுதிகளும் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.



2008 ஏப்ரல் 11]

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஆலயங்களில் தமிழிலேயே பெண்கள் அர்ச்சனை செய்யும் ஒரே இடம் மருவத்தூர் ஆலயமாகும். அதேபோல, எல்லா ஆலயங்களிலும் தமிழில் பெண்களும், ஆண்களும் அர்ச்சனை செய்ய அரசு சட்டம் நிறைவேற்றுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்துக்களில் முறையாகப் பயிற்சி பெற்ற அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டம் இப்பொழுது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 96, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**96—**

## தரம் உயர்த்துதல்

***5436—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஜோதில்நாயக்கனூர் ஊராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உசிலம்பட்டி தொகுதி, ஜோதில்நாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தக் கோரி மதுரை முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து கருத்துருக்கள் பெறப்படவில்லை.

[2008 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, ஜோதில்நாயக்கனூரில் அமைந்திருக்கின்ற ஊராட்சி ஒன்றியத்தினுடைய நடுநிலைப் பள்ளி இருக்கும் அந்தப் பகுதி, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், ஆதி திராவிட மக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதியாகும். அங்கு கிட்டத்தட்ட 300 மாணவர்கள் பயிலுகின்றார்கள். அந்த ஜோதில்நாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்தக் கோரி அங்கிருக்கின்ற அதிகாரிகளிடத்திலே உரிய முறையில் இப்பொழுது கருத்துரு வழங்கப்பட்டுள்ளது. உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்து அந்தப் பள்ளியைத் தரம் உயர்த்தித் தருவாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கக்கூடிய ஜோதில்நாயக்கனூர் பள்ளியிலே இப்போது 212 மாணவர்கள் பயின்று கொண்டிருக்கிறார்கள். அதிலே எட்டாம் வகுப்பிலிருந்து ஒன்பதாம் வகுப்பிற்குச் செல்லக்கூடிய மாணவர்கள் எண்ணிக்கை 47 ஆக இருக்கிறது. ஆனால் இதுவரை அங்கே பொது மக்களுடைய பங்குத் தொகை செலுத்தப்பட்டு உரிய வடிவிலே அந்த கருத்துருக்கள், முன்மொழிவுகள் அங்கேயிருந்து அனுப்பப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே இப்போது தெரிவிக்கின்றபோது அத்தகைய முன்மொழிவுகள் கல்வி அலுவலரிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இங்கே அவர்கள் தகவல் தெரிவித்திருக்கிறார்கள். அது முறையான வகையில் அங்கிருந்து பரிந்துரைக்கப்பட்டு அரசுக்கு வருமென்று சொன்னால், நிச்சயமாக உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதேபோன்று உசிலம்பட்டி தொகுதியில் உசிலம்பட்டி நகராட்சியிலே, உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குச் சொந்தமான ஒரு நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு இப்பொழுது அங்கு



2008 ஏப்ரல் 11]

அதிகாரிகளிடத்திலே கருத்துரு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று உசிலம்பட்டி தொகுதியிலே உத்தப்பநாயக்கனூர் என்கின்ற ஒரு கிராமத்திலும் கருத்துரு வழங்கப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பள்ளிகளிலும் சுமார் 400 மாணவ, மாணவிகள் பயிலுகிறார்கள். இங்கும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களும், ஆதி திராவிட மாணவர்களும் பயிலுகிறார்கள். ஆகவே இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டும். ஒரு இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்கின்ற ஒரு விதி இருக்கிறது. அந்த விதியை இந்த அரசுப் பள்ளிகளுக்குத் தளர்த்தி அவற்றைத் தரம் உயர்த்தித் தருவதற்கு அமைச்சர் ஆவன செய்வாரா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டக்கூடிய பகுதியை நானும் அறிவேன். அவர் குறிப்பிடுவது உண்மை. மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி. நிறைய பள்ளிகள் அங்கே தேவையாக இருக்கின்றன என்பதும் நிதர்சனமான உண்மை. எனவே, அந்தப் பகுதிகளிலே பள்ளிகளைத் தரம் உயர்த்துவது குறித்து அரசு நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலிக்கலாம். ஆனால், அவர் இன்னொன்றைக் குறிப்பிட்டார். அரசுப் பள்ளிகளாக இருந்தாலும், அனைத்துப் பள்ளிகளுக்குமே அந்தப் பணம் ஒரு இலட்சம் ரூபாய் உயர்நிலைப் பள்ளிகளுக்கும், இரண்டு இலட்சம் ரூபாய் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டுவதிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்பது வேண்டுகோள். இதிலே என்ன முக்கியம் என்றால், ஏன் அந்த ஒரு இலட்சம் ரூபாயைக் கட்டவேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம் என்று சொன்னால், அத்தகைய பள்ளிகளைத் தரம் உயர்த்துகிறபோது அங்கிருக்கக்கூடிய பொதுமக்களுடைய பங்கு அதிலே இருக்க வேண்டும். தாங்கள் வசிக்கக்கூடிய பகுதியிலே அந்தப் பள்ளித் தரம் உயர்த்தப்படுவதற்கு அந்த [illegible] ஆர்வமெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் அந்த அடிப்படையிலே அதை நாங்கள் வைத்திருக்கிறோம். அரசுக்கு அந்தப் பங்குத் தொகையைச் செலுத்த வேண்டுமென்பது அதற்காகத்தான். சில இடங்களிலே, மலைக் கிராமங்களாக இருக்கக்கூடிய இடங்களில், ஆதி திராவிடர்கள் அதிகமாக வாழக்கூடிய இடங்களில் அந்தத் தளர்த்தக்கூடிய ஒரு சிறப்பு விதி அரசுக்கு உள்ளது; அந்த prerogative இருக்கிறது. இருந்தாலும்கூட, இத்தகைய அனைத்துப் பள்ளிகளிலுமே

அதைச் செய்வதென்பது சிரமம். உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக் கோரி பல்வேறு பள்ளிகளுக்குத் தொடர்ச்சியாக மனு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே பணம் கட்டியவர்களும் இருக்கிறார்கள். இவற்றையெல்லாம் கருத்திலே கொண்டு அது இப்போதைக்கு இயலாது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, படவேடு பேரூராட்சி, பச்சாம்பாளையம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு இரண்டு வருடத்திற்கு முன்பாகவே ஒரு இலட்சத்து ஆயிரம் ரூபாய் பணம் கட்டியாகிவிட்டது. இதுகாறும் உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படவில்லை. அது மட்டுமல்லாமல் அரசு, பணம் கட்டியவர்களுக்கு முன்னுரிமை தருகின்றதா, தூரத்தின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கின்றதா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது பகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிக்குப் பணம் கட்டி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன என்பதை கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிச்சயமாக அதைப் பரிசீலனையிலே எடுத்துக்கொள்கிறோம். ஆனால், அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலே இத்தகைய பள்ளிகளைத் தரம் உயர்த்துகிறபோது தூரம்தான் அடிப்படையான ஒரு தேவையாக இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரை குறைந்தபட்சம் 7 கிலோ மீட்டர் என்று ஒரு நிர்ணயம் வைத்திருக்கிறோம். இனி வரக்கூடிய காலங்களிலே, இந்த SUCCESS Plan வருகிறபோது, அதை 5 கிலோ மீட்டர்களாக குறைக்கக்கூடிய ஒரு நடைமுறையையும் நாங்கள் கருத்திலே கொண்டிருக்கிறோம். எனவே, இதிலே அளவுகோல் என்பது மாணவர்களுடைய எண்ணிக்கை, இன்னொன்று தூரம். அது தான் அடிப்படையான அளவுகோல். அதைத்தான் நாங்கள் இப்போது பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.



**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் ஒன்றியத்தில் உள்ள கொம்பன்குளம் ஊராட்சியில் 3,000 மக்கள் வாழ்கிறார்கள். இந்த ஊரைச் சுற்றி வெங்கடபுரம், நெடுங்குளம், புதுக்குளம் ஆகிய ஊராட்சிகளில் உயர்நிலைப் பள்ளிகள் இல்லை. இந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் உயர் கல்விக்காக மிகுந்த சிரமத்திற்கு இடையே 9 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சாத்தான்குளம் செல்லவேண்டும். ஆகவே, கொம்பன்குளத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த, அமைச்சர் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய முன்மொழிவுகள் அரசுக்கு அனுப்பப்படும் என்று சொன்னால் உறுப்பினரின் கோரிக்கையை உரிய வகையில் அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில் உள்ள வத்தலக்குண்டு ஒன்றியம், ரெங்கப்பநாயக்கன்பட்டி ஊராட்சி, தெப்பத்துப்பட்டியில் உள்ள அரசு கள்ளர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சரிடத்தில் அவர் எழுப்புவார் என்று சொன்னால், அவருக்கு நானும் பரிந்துரை செய்வதற்கு வாய்ப்பாக அமையும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 11

97—

## பாலம்

***14—திரு. துரை சந்திரசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், விண்ணமங்கலம் அருகே திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலையில் வெண்ணாற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம், திருவையாறு தொகுதியில் திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டி சாலை வரை செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலையில் விண்ணமங்கலம் அருகே வெண்ணாற்றின் குறுக்கே உள்ள பாலம் மிகப் பழமையான பாலம். வலுவிழந்து குறுகிய பாலமாக உள்ளது. இதை மாற்றிக் கட்டுவதற்கு அரசு நபார்டு வங்கிக்கு செயற்குறிப்பு அனுப்புவதற்கு பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை சந்திரசேகரன்,

**திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அனுமதி தந்து, கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே பூண்டி செங்கரையூரில் அமைய இருக்கின்ற பாலம் இன்னும் ஓராண்டு காலத்தில் முடிய இருக்கின்றது. அப்படி முடிகின்றபோது அதில் வருகின்ற கன ரக வாகனங்கள், அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள், காவிரி ஆற்றைக் கடந்து, அதேபோல இந்த வெண்ணாற்றைக் கடந்து, கல்லணைக் கால்வாயைக் கடந்து தேசிய நெடுஞ்சாலைக்குச் செல்லவேண்டும். காவிரி ஆற்றிலும் புதிய பாலம் அமைக்கப்படவேண்டும். அதேபோல, வெண்ணாற்றில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமைவாய்ந்த அந்தப் பாலத்தை மாற்றியமைக்கவேண்டும். அதேபோல, கல்லணைக் கால்வாயின் குறுக்கே இரயில்வே மேம்பாலம் அமைய உள்ளது. எனவே, காவிரி ஆற்றிலும், அதேபோல வெண்ணாற்றிலும் எந்த



2008 ஏப்ரல் 11]

ஆண்டு இந்தப் பணியைத் துறை தொடங்க இருக்கிறது என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன்பு, இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட பல பாலங்கள் இன்றைக்கு வலுவிழந்து. அவற்றின்மீது கன ரக வாகனங்கள் செல்கின்ற நேரத்திலே அவை உடைந்துவிழக்கூடிய சூழ்நிலையை அறிந்து, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவின் பேரில், அதுபோன்றுள்ள பாலங்கள் எத்தனை இருக்கின்றன என்ற எண்ணிக்கையைக் கணக்கெடுத்தபோது, சுமார் 600 பாலங்கள், குறிப்பாக தஞ்சை டெல்டா பகுதியிலே அவை அதிகம் என்ற விவரம் அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. அவற்றைப் பகுதிப் பகுதியாகப் பிரித்து நபார்டு வங்கியின் உதவி பெற்று அந்தப் பாலங்களைக் கட்டுவதற்குரிய செயற்குறிப்பு உள்ளது. முதல் பகுதியிலே, நம்முடைய திருவையாறு தொகுதியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கிற அந்தக் கேள்வியில் உள்ள வெண்ணாற்றின் குறுக்கே விண்ணமங்கலம் அருகே உள்ள அந்தப் பாலம் பட்டியலில் இடம் பெற்றிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, திருச்சி மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் இணைக்கக்கூடிய பூண்டி-செங்கரையூர் பாலப் பணி நடைபெற்று வருகிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு முழு வேகத்தில் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல பூதலூரிலே, இரயில்வே மேம்பாலம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அரசு பொறுப்பேற்ற பிறகு அறிவிக்கப்பட்டது. அந்தப் பாலமும் முடிவடையும் நேரத்திலே திருக்காட்டுப்பள்ளி, பூதலூர், செங்கிப்பட்டி, பட்டுக்கோட்டை வரை செல்லக்கூடிய அந்த மாநில நெடுஞ்சாலையில் போக்குவரத்து அதிகமாகப் போவதற்கு வாய்ப்புண்டு, எதிர்காலத்திலே. எனவே, அதை மனதில் வைத்து, ஏற்கெனவே நான் பதிலிலேயே குறிப்பிட்டேன். இந்த வலுவிழந்த பாலங்களைப் பட்டியலிட்டு, நம்முடைய நபார்டு வங்கியினுடைய கடன் உதவி பெற்று புதிய பாலப் பணியைச் செயல்படுத்துவதென பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதல் பகுதியிலேயே இந்த விண்ணமங்கலம் பாலம் இடம் பெற்றிருக்கிறது. எனவே, நபார்டு

[2008 ஏப்ரல் 11

வங்கியின் உதவி கிடைத்தவுடன் விரைவில் அந்தப் பாலப் பணியைத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, வாங்கல், மோகனூர் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுகின்ற பணியை இந்த ஆண்டு தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி நடவடிக்கை எடுக்கும்பட்சத்தில் பணி எப்போது தொடங்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய உத்தரவைப் பெற்றுதான் கடந்த நிதி ஆண்டிலே அறிவிக்கப்பட்டது, அந்தப் பாலம். மோகனூர், வாங்கல் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே அந்தப் பாலம் அமைவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்குரிய பணிகள், தல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அதாவது மண்ணினுடைய தாங்கும் தன்மைகள் எல்லாம் ஆய்வு செய்யப்படுகின்றன. அதுவும் குறிப்பாக, தனியார் ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டால் காலதாமதம் ஆகும் என்பதற்காக இந்தப் பாலத்தை விரைந்து முடிக்கவேண்டும் என்பதற்காக, நம்முடைய நெடுஞ்சாலைத் துறையினுடைய பொறியாளர்களே அந்த ஆய்வுப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அப்பணி முழு வேகத்தில் முன்னேற்றத்தில் உள்ளது. திட்டத்திற்கு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. பிறகு, ஒப்பந்தப்புள்ளி கோரி அந்தப் பணி விரைவில் துவங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதியையும், செய்யாறு தொகுதியையும் இணைக்கின்ற வகையிலே, மாமண்டூர்-பிரம்மதேசம் இடையே ஒரு பாலாற்றுப் பாலம் அமைத்துத்தர வேண்டும். ஏற்கெனவே இது நபார்டு திட்டத்தின்



2008 ஏப்ரல் 11]

மூலமாக பரிந்துரை செய்யப்பட்டு கிட்டத்தட்ட 9 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கிறது. ஆற்றின்மீது இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டால், கிட்டத்தட்ட 17 கிலோ மீட்டர் சுற்றளவு தூரம் குறையும். இதன்மூலம் எரிபொருள் மிச்சமாகும். போக்குவரத்து வசதியும் ஏற்படும். அதனால் உடனடியாக மாமண்டூர்-பிரம்மதேசம் வழியாக பாலாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா, இதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகின்ற பாலாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டுவதற்குரிய கருத்துரு நம்முடைய நெடுஞ்சாலைத் துறையின் பொறியாளர்கள்மூலம் அரசுக்கு வந்திருக்கிறது. அதை ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். நிதிநிலைமைக்கேற்ப அது எடுத்துக்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பாலங்கள் கட்டப்படுவதற்கான கேள்வி. சென்ற ஆண்டு, எனது தொகுதியிலே 3 பாலங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, டெண்டர் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர்கள் யாரும் முன்வராத காரணத்தினால் அது நிலுவையில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். கம்பி விலை, சிமெண்ட் விலை, கட்டுமானப் பொருட்களினுடைய விலை உயர்வின் காரணத்தினால் அவர்கள் வர மறுக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, சிமெண்ட் விலையையும், கம்பி விலையையும் குறைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாக நேற்றையதினம் நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். இதை வலியுறுத்தி, இதைக் குறைப்பதற்கான முயற்சி உடனடியாக செய்யப்படவில்லையென்று சொன்னால், கட்டுமானப் பணிகள் தடைப்பட்டுவிடுகின்ற அபாயம் இருக்கிறது. பாலங்கள் மிக அவசியத் தேவையாக இருக்கின்ற காரணத்தினால், இப்பொழுது இதைக் காரணம் காட்டி 1½ ஆண்டுகள் கடந்துவிட்டன. அங்கே இருக்கிற

[2008 ஏப்ரல் 11

பாலம் இடிந்து விழுகிற நிலையில் இருக்கிறது. அந்தப் பாலம் இடிந்து விழுந்துவிட்டால் 100 கிலோ மீட்டர் அளவுக்கு உள்ள, வேதாரண்யம் வரையிலும் செல்கின்ற சாலை தடைப்பட்டுவிடும்.

இப்படித் தமிழகம் முழுவதும் இருக்குமென்று கருதுகிறேன். ஆகவே, இதைத் தனி நேர்வாக எடுத்து மத்திய அரசிடத்திலே வலியுறுத்தி சிமெண்ட், கம்பி விலைகளைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுப்பதோடு இந்த ஒப்பந்தப்புள்ளிகளை மறு பரிசீலனை செய்து கூடுதலாக நிதியொதுக்குவதற்குரிய முயற்சிகள் எடுத்தாலொழிய, இந்தப் பணி முடிவதற்கு வாய்ப்பு இல்லையென்று கருதுகிறேன். இதைப்பற்றி அரசு என்ன கருத்து கொண்டிருக்கிறது? உடனடியாகத் தீர்வு கண்டு அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிடுகிற கூற்றைப் பொறுத்தவரையில், கடந்த காலங்களில் கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றத்தின் காரணமாக கடந்த 4 ஆண்டு காலமாகவே புதிய பாலங்கள், கட்டடங்கள், அணைகளைக் கட்டுகின்ற நேரத்திலே கொஞ்சம் தொய்வான சூழ்நிலை இருந்தது. அதுவும் குறிப்பாக, கடந்த காலங்களில் நெடுஞ்சாலைத் துறையினுடைய விதிமுறைப்படி ஒரு பணியினுடைய காலம் 18 மாதமும், 18 மாத காலத்திற்குமேலும் இருக்குமானால் அந்தக் கட்டுமானப் பொருட்களினுடைய விலை ஏற்ற, இறக்கத்திற்குரிய நிதியை அரசு வழங்கியது ஒப்பந்ததாரர்களுக்கு. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் புதிய அறிவிப்பை, அரசாணையை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் 6 மாதமும், 6 மாதத்திற்கு மேலும் இருக்கிற பணியும், அதேபோல அந்தப் பணியினுடைய மதிப்பு 25 இலட்சமும் அதற்குமேலும் இருக்குமானால், அந்த அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகளுக்கு அந்தக் கட்டுமானத்தினுடைய விலை ஏற்ற, இறக்கத்திற்கேற்ப அரசினுடைய நிதியிலிருந்து அது ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. எனவே, கடந்த காலத்தினுடைய தொய்வு இப்போது இந்த நிதியாண்டிலிருந்து



2008 ஏப்ரல் 11]

நிச்சயமாகத் தவிர்க்கப்படும். அந்தச் சூழ்நிலை நிச்சயமாக சீர்படுத்தப்படும். எனவே, ஒப்பந்ததாரர்களும் அதற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறார்கள்.

நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறையினுடைய கோரிக்கையை ஏற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். கடந்த காலங்களில்கூட, கட்டுமானப் பொருட்களின் விலை ஏற்றம் இருந்தால், அதற்கேற்ப ஒப்பந்ததாரர்கள் கூட்டி அந்த மதிப்பை ஏற்றியிருக்கிறார்கள். ஏற்கெனவே நாம் ஒரு கோடி ரூபாய்க்கு பாலம் கட்டுகிறோம் என்று சொன்னால் 1½ கோடிக்கு அவர்கள் மதிப்பீடு செய்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்கள். அது, அங்கே இருக்கக்கூடிய பொறியாளர்களுடைய உச்சவரம்பு அளவை மீறுமானால் அது நம்முடைய தலைமைப் பொறியாளருக்கு வருகிறது. அதற்குப்பிறகு அவருடைய வழிகாட்டலுக்கு மேலே இருக்குமானால், அந்த மதிப்பு ஒப்பந்த ஆணையத்திற்கு வருகிறது. இதிலே நிதித் துறையினுடைய செயலர், எந்த அலகின்மூலம் அது கட்டப்படுகிறதோ அந்த அலகின் தலைமைப் பொறியாளர் எல்லாம் அமர்ந்து, அந்த கட்டுமானப் பொருள்களின் விலையேற்றத்திற்கேற்ப ஒப்பந்தக்காரர் கோரியிருக்கிற ஒப்பந்தப்புள்ளி நியாயமாக இருக்குமானால் அதற்கு அனுமதி தருகிறார்கள். இல்லையென்று சொன்னால், மறு ஒப்பந்தப்புள்ளி கோருகிறார்கள்.

முற்பகல் 10-20

அந்த அடிப்படையிலேயும் பல பணிகள் நடைபெற்று வருகின்றன. இருந்தாலும், ஒரு சில பணிகள், டெல்டா பகுதிகளிலேயும், அங்கே பாறைகள், ஜல்லிகள் கிடைப்பதில் பிரச்சினைகள் இருக்குமானால் அதற்கேற்பவும் ஒப்பந்தப்புள்ளித் தொகை அதிகமாகக் கோரப்படுகின்றது. எனவே, இனி அந்தச் சூழ்நிலை இருக்க வாய்ப்பில்லை. எனவே, எதிர்காலத்திலே அது போன்ற குறைபாடுகள் இல்லாமல், நிச்சயமாக இருக்கின்ற பணிகளை விரைவாக நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 98, திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 ஏப்ரல் 11

**98—**

**பள்ளிக் கூடம்**

***28990—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டையில் மன நலம் குன்றியோருக்கான பள்ளியைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, லால்பேட்டையில் மன நலம் குன்றியோருக்கான பள்ளி திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் தொண்டு நிறுவனம் மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளி நடத்த முன்வந்தால், அங்கீகாரம் வழங்குவதோடு போதிய உதவிகள் வழங்கிட இவ்வரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், இருக்கையில் இல்லை. மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மன நலம் குன்றியோருக்கான பள்ளிகள் மொத்தம் 254 இருக்கின்றன. நமது அரசு, குரோம்பேட்டை அருகிலே சானடோரியத்திலே ஒரேயொரு பள்ளியைத்தான் நடத்துகிறது. மீதமுள்ள 253 பள்ளிகளிலே 34 ஆசிரியர்களுக்கு நம்முடைய அரசு சம்பளம் வழங்கி வருகிறது. இதேபோன்று, சம வாய்ப்புத் திட்டத்திலே 1995-லே ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆக, இதுபோன்ற தொண்டு நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கும்—லால்பேட்டை பகுதியிலே மன நலம் குன்றியவர்கள் அதிகம் அங்கே வசித்து வருகிறார்கள்; அவர்களுக்குப் பள்ளி அமைப்பதற்கும், — ஏற்கெனவே நம்முடைய முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்கள் அறிவித்த அந்த 3 சதவிகித



2008 ஏப்ரல் 11]

இடஒதுக்கீட்டுத் திட்டத்தை, தொகுப்பு வீடுகளிலும் நாம் நிறைவேற்றுவோமா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் நமது முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாயை மன வளர்ச்சிக் குன்றியோருக்கு சிறப்பு நிதியாக ஒதுக்கீடு செய்து, இரண்டு வாரங்களுக்கு முன்புதான் ஒரு விழாவின் வாயிலாக 200 சிறப்புப் பள்ளிகளுக்குத் தலா 50,000 ரூபாய், முக்கியமாக அங்கு பணிபுரியும் ஊழியர்களுக்காகவே வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரை, அது கொள்கை அளவில் எடுக்கப்படவேண்டிய ஒரு முடிவு. அதனை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர் ஆகியோருக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த கருணை உள்ளத்தோடு, பல்வேறு பணிகளை அறிவித்து, உதவிகளைச் செய்து வருகிற இந்த நேரத்தில், திருப்பூர் பகுதியிலே முற்றிலும் காது கேளாதோர், வாய் பேசாதவர்களுக்கென்று, ஒரு பள்ளி ஓர் அமைப்பின் சார்பிலே நடத்தப்பட்டு வருகிறது. அவர்களே முழுமையாக நன்கொடைகள் மூலமாக அந்தப் பள்ளியை நடத்தி வருகிறார்கள். தற்சமயம்கூட அந்தக் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிற காரணத்தினால், புதிய கட்டடங்கள்கூட நன்கொடை வசூலித்துக் கட்டியிருக்கிறார்கள். அவர்கள் அதைத் தொடர்ந்து நடத்துவதற்கும், அதற்கான ஆசிரியர்களுக்குத் தொடர்ந்து ஊதியம் வழங்குவதற்கும், பெரும் சிரமத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளி தொடர்ந்து நடந்து வருகிற சூழலில், அந்தக் காது கேளாத குழந்தைகளினுடைய எதிர்கால நலனுக்காக அந்த ஆசிரியர்களுக்குரிய

[2008 ஏப்ரல் 11

சம்பளத்திற்கான நிதியை அரசு உதவியாக வழங்க முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள பேசவியலாத, காது கேளாத அந்த ஊனமுற்ற குழந்தைகள் கல்வி பெறவேண்டுமென்ற முயற்சியின் அடிப்படையில், நம்முடைய அரசு உதவியுடன் தொண்டு நிறுவனங்கள் வாயிலாக இந்தக் குழந்தைகளுக்கான பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால், அந்தத் தொண்டு நிறுவனங்கள், பணியாற்றக்கூடிய ஆசிரியப் பெருமக்களுக்கு வருடக் கணக்கில் ஊதியம் வழங்குவதில்லை, அங்கே குழந்தைகள் சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டும் மேலோங்கியிருக்கிறது. அது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஆகவே, தொண்டு நிறுவனங்களை வலியுறுத்தியாவது ஆசிரியப் பெருமக்களுக்குரிய ஊதியத்தை வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிற அதேவேளையில், அந்தத் தொண்டு நிறுவனங்கள் சரியாக நடத்தப்படாத சூழ்நிலையில், அதுபோன்ற பள்ளிக்கூடங்களை அரசே ஏற்று நடத்துவதற்கு அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம், முக்கியமாக காது கேளாத குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அவர்கள் முன்பருவக் கல்வி பயில சிறப்புப் பள்ளிகள் நடத்தப்பட்டு வருடந்தோறும் 5 இலட்சம் ரூபாய் இந்தப் பள்ளிகளுக்காக வழங்கப்பட்டு வருகிறது. நமது சட்டமன்ற உறுப்பினர் கூறியதுபோல் தொண்டு நிறுவனங்கள் சரியாக இயங்காவிடில் கண்டிப்பாக இந்த அரசு அவர்களின் licence-ஐப் பறித்து விட்டு, கடுமையான நடவடிக்கை எடுக்கும்.



2008 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கையிலேயே மன நலம் குன்றியோர், ஊனமுற்றோருக்கான நல வாரியத்தை நமது அரசு அறிவித்தது. அந்த நல வாரியத்தில் உறுப்பினர் ஆவதற்கு மீண்டும் அவர்கள் அனைவரிடமும் சான்றிதழ் வாங்கி வரவேண்டுமென்று பணிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே தேசிய அளவிலான ஊனமுற்றோர் அடையாள அட்டையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அந்த அட்டையை வைத்திருப்பவர்கள் அனைவருமே நமது தமிழக அரசினுடைய ஊனமுற்றோர் நல வாரியத்தில் இணைவதற்கான தகுதி பெற்றவர்கள் என்று அறிவித்தாலே போதுமானது. ஆகவே, அது எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து மீண்டும் கலந்தாலோசித்து அரசு பரிசீலிக்கும். பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த *2007-2008* ஆம் நிதி ஆண்டில் எத்தனை மன நலம் குன்றியோருக்கான பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன? இதில் பெரியோர்களுக்கான பள்ளிகள் எத்தனை, குழந்தைகளுக்கான பள்ளிகள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

இதேபோல், நம்முடைய முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள், தன்னுடைய பொற்கால ஆட்சியில் இந்த நாட்டில் உள்ள மன நலம் குன்றியோரைக்கூட விட்டுவைக்காமல், டாக்டர்களிடமிருந்து பெறப்படுகின்ற certificate-ல் அவர்களுடைய mental retardation *60* விழுக்காடு இருந்தது என்று சொன்னால், அவர்களுக்கு மாதம் *500* ரூபாய் உதவித் தொகை வழங்கி வருகிறார்கள். இந்த *60* விழுக்காட்டை *40* விழுக்காடாகக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வருடம் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து 30 மாவட்டங்களில் தலா ஒரு முன்பருவக் கல்விப் பள்ளி மன வளர்ச்சி குன்றியோருக்காகத் தொடங்கப்பட்டுள்ளது. அதேசமயம் 7 மாவட்டங்களில் 14 வயதுக்கு மேற்பட்ட மன வளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகள், தொழிற்பயிற்சி, தங்குவதற்கு வசதிகள் நிறுவப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். கடந்த வருடம் முதல் உறுப்பினர் கூறியதுபோல 500 ரூபாய் வழங்கப்படுகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் வெறும் 200 ரூபாய்தான் வழங்கப்பட்டு வந்தது. நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், 200 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தி, (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மட்டும் 18 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, 31,000 மன வளர்ச்சி குன்றியவர்கள் பயனடைகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இத்திட்டம் நமது மாநிலத்தைத் தவிர இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப்படவில்லை என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**99—**

## வீட்டுமனைப் பட்டா

***20781—திரு. ந. சுப்ரமணியன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குளத்தூர் தொகுதி, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க



பொருத்தமான நிலங்கள் அக்கிராமத்தில் இல்லாததால் அக்கிராமத்தின் எல்லையை ஒட்டிய வருவாய் ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் தகுதியான புன்செய் நிலங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலிமலை ஊராட்சி ஒன்றியம், மேபூதக்குடி ஊராட்சியில் சுமார் 68 குடும்பத்தினர் 40 வீடுகளில் வசித்து வருகிறார்கள். ஏற்கெனவே, 15, 20 ஆண்டுகளுக்கு முன்பாகவே 40 குடும்பங்களாக இருக்கும்போதே அவர்கள் அங்கு வசிப்பதற்கு இட நெருக்கடி இருந்தது. எனவே, இப்போது குறிப்பிட்டுள்ள அந்த இடத்தில் வெகு விரைவில் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிடவேண்டும்.

இதேபோன்று, குன்னத்தூர் ஊராட்சி, பழைய பிடாரம்பட்டியில் உள்ள 25 தொகுப்பு வீடுகள் முழுவதும் இடிந்துவிட்டன. அதிலிருந்த மக்கள் குடியிருக்கும் அந்த இடம் கோயிலுக்குச் சொந்தமான இடம் என்பதால், அருகிலுள்ள கல்லாங்குத்துப் புறம்போக்கு இடத்தில் மேற்படி 25 நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா கொடுக்க இந்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், மேபூதக்குடி கிராமத்தில் சுமார் 45 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இவர்கள் அனைவருக்குமே நத்த புல எண் 69-ல் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. அந்த 45 குடும்பங்களில் 26 குடும்பங்களுக்கு அரசால் இலவசக் காலனி வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள நபர்கள் சொந்தமாக வீடுகட்டிக் குடியிருந்து வருகிறார்கள்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 11

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மேற்காணும் 45 குடும்பங்களின் வாரிசுதாரர்கள் அல்லது பிள்ளைகள் திருமணம் செய்து கூட்டுக் குடும்பமாக வசிப்பவர்கள். இந்த 29 நபர்களும் வீட்டுமனைப் பட்டா இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தகுதியான இடம் தேர்வு செய்யப்படும். மேபூதக்குடியை ஒட்டி அமைந்துள்ள வருவாய் ஊராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வீட்டுமனை இல்லாத அந்த 29 நபர்களுக்கும் தகுதியான புன்செய் நிலங்கள் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், நம்முடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் மட்டும் கடந்த 2006-2007-ல் 225 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், 2007-2008-ல் மாண்புமிகு குளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் உள்ள திருநல்லூரில் 33 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவும், மராயப்பட்டியில் 69 நபர்களுக்கும், ஆக மொத்தம் 102 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன், மாண்புமிகு உறுப்பினர் குன்னத்தூர் ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். அதையும் இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆறு மாதத்திற்கு முன்பாகவே 'அங்கு மனு நீதி நாள் முகாம் நடக்கும்போது குன்னத்தூரில் வசிக்கின்ற 25 ஆதி திராவிட மக்களும் அந்தக் கல்லாங்குத்துப் புறம்போக்கை தங்களுக்கு வீட்டுமனைப் பட்டா செய்து வழங்கவேண்டும் என்று கோரினார்கள். இதுநாள் வரையிலும் அவர்களுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, அந்த 25 ஆதி திராவிட பெருமக்களுக்கும் கல்லாங்குத்து புறம்போக்கு இடத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பரிசீலித்து தலைவர் கலைஞர் அவர்கள் அந்தப் பகுதிக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்களுக்காக நிலங்களை நாம் ஆர்ஜிதம் செய்கிறபோது, அந்த நிலத்தினுடைய மதிப்பீட்டை அதிகமாகச் சொல்கின்ற காரணத்தினாலே, அரசு நிர்ணயிக்கின்ற விலையில் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படுவதன் காரணமாக, பல இடங்களில் அப்பணியில் தடை ஏற்படுகிறது. அரசு நிர்ணயித்து இருக்கிற விலைக்கும் அங்கே விற்பனை விலைக்கும் ஏறத்தாழ 50 மடங்கு வித்தியாசம் இருக்கிற காரணத்தாலே நிலம் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, அதைப் பரிசீலனை செய்து அந்தப் பகுதிகளிலே உள்ள விலையேற்றத்திற்கேற்ப விலைகளை உயர்த்தித் தருவதற்கு ஒரு கொள்கை முடிவு எடுத்து, அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட இன மக்களுக்கு ஆட்சேபணையற்ற புறம்போக்கு நிலங்கள் இருந்தால் அந்தப் பகுதியில் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு வருகிறது. மேலும், அரசின் விதிமுறைகளின்படி சந்தையின் மதிப்புப்படி, வழிகாட்டுப் பதிவேட்டின் நில மதிப்பின் அடிப்படையில் எது குறைவோ அதன் அடிப்படையில் இடம் கையகப்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த நில மதிப்பை அதிகரித்துத் தரும்படி கேட்டிருக்கிறார்கள். தலைவர் கலைஞர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலித்து அவர்களின் வழிகாட்டுதலின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

[2008 ஏப்ரல் 11

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதியில் அந்தியூர் ஒன்றியம், சங்கராபாளையம் மற்றும் சின்னத்தம்பிபாளையம் போன்ற ஊராட்சிகளில் ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக வீட்டுமனைக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டு பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரையில் அந்த நிலத்தை சர்வே செய்து மக்களுக்கு இடத்தை கொடுக்காத காரணத்தினாலே அந்த நிலததை நில உரிமையாளர்களே இன்னும் உழுதுகொண்டிருக்கிறார்கள். ஆகவே, அரசு அந்த வீட்டு நிலத்தை அளந்து அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாவாக வழங்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று அதை உடனடியாகப் பரிசீலித்து அப்பகுதி மக்களுக்கு நிலம் அளந்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய ஈரோடு மாவட்டத்தில் மட்டும் தலைவர் கலைஞர் அவர்கள் 5-வது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, இதுவரைக்கும் 339 நபர்களுக்கு விட்டுமனைப் பட்டா 2007-2008-ல் வழங்கப்பட்டிருக்கிறது. அதேபோல், உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று இதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**100—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***34630—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 ஏப்ரல் 11]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2006-2007 ஆம் ஆண்டு பகுதி-II திட்டத்தின்கீழ், திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் இருந்து சுமார் 10 கிலோ மீட்டர். தொலைவில் 10 கிராமங்களை ஒருங்கிணைத்து, மேல்வள்ளியனூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 2,000 லிட்டர் கொள்ளளவுள்ள மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்பட உள்ளது. எனவே, அருகிலுள்ள கலசப்பாக்கத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க தற்போது வாய்ப்பில்லை.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் தொகுதியினுடைய தலைமை இடமான கலசப்பாக்கம் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், நிலமற்ற விவசாயிகள் அதிகம் வாழ்கின்ற பகுதியாகும். இந்தப் பகுதியிலேயிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற மேல்வள்ளியனூர் கிராமத்திலே அமைப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிய பணியின் தொடக்கமே இன்னும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்பொழுது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்படும் பாலைவிட, தனியார் நிறுவனங்கள் அதிக அளவிலே பாலைக் கொள்முதல் செய்கிறார்கள். தனியார் நிறுவனங்கள் குறைந்த விலையில் பாலைக் கொள்முதல் செய்து, நுகர்வோர்களுக்கு அதிக விலையிலே விற்பனை செய்துகொண்டு கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். தற்பொழுது கலசப்பாக்கத்திலேயிருந்து 30 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கின்ற திருவண்ணாமலையில் செயல்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையத்தில், பாலைப் பதப்படுத்திக் கையாளும் திறனைவிட, பால் அதிகமாக, உபரியாக உற்பத்தி செய்யப்படுகிறது. அதிகமாக உற்பத்தியாகின்ற பாலை திருவண்ணாமலையிலுள்ள குளிரூட்டும்

நிலையத்தில் பதப்படுத்த போதிய வசதிகள் இல்லாத காரணத்தினால், பால் உற்பத்தியாளர்களின் வயிற்றிலே பால் வார்க்கும் ஒரு நிகழ்வாக கலசப்பாக்கத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அவசியம் அமைக்க வேண்டுமென வலியுறுத்தி, அமைக்க இந்த அரசு முன் வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே 50 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் பெறப்படவேண்டும். அதைப்போல, இந்த பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கு ஏறத்தாழ 4 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது, 5 கோடி ரூபாய் வரை செலவு இருக்கிற காரணத்தால், அதற்குப் பதிலாகத்தான் அந்தந்தப் பகுதியில் 2 ஆயிரம் லிட்டர், 4 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுமேயானால், மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில்தான், தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திலே 150-க்கும் மேற்பட்ட மொத்த பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதியைப் பொறுத்த அளவில், ஏறத்தாழ மொத்தம் 5 பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதைப்போல அவர் குறிப்பிடுகிற அந்த கலசப்பாக்கம் பகுதியில் மாத்திரம் தினந்தோறும் 60 லிட்டர் பால்தான் கொள்முதலாகிறது. அதில் 50 லிட்டர் பால் உள்ளூரிலேயே விற்பனையாகிவிடுகிறது, 10 லிட்டர்தான் இருக்கிறது. வருகிற காலத்தில் அந்தப் பகுதியில் இரண்டாயிரம் லிட்டருக்குமேல் பால் கொள்முதல் செய்யப்படுமேயானால் தனியாக ஒரு மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்படும் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.



**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வளர்ந்து வருகின்ற விஞ்ஞான சூழ்நிலையில் ஒரு பசு மாடே 20 லிட்டர் பால் கறக்கின்றது, கலசப்பாக்கம் பகுதியிலே ஏறக்குறைய இரண்டாயிரம் கறவை மாடுகள் இருக்கின்றன. நான் குறிப்பிட்டது கலசப்பாக்கம் பகுதியிலே இருக்கிற 20 கிராமங்களை உள்ளடக்கிய பகுதியாகும். 2007-2008 பால் வளத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 6, தொடர் எண் 5-ல் பால் உற்பத்தி அதிகமாக உள்ள இடத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என இந்த அரசு தெரிவித்துள்ளது. அதன் அடிப்படையிலேயும், மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த ஆட்சியில் கலசப்பாக்கம் பகுதியில் ஒரு பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அதிகாரிகள் குழு வந்து இடத்தைப் பார்வையிட்டு இடமும் தேர்வு செய்துவிட்டுச் சென்றனர். மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட பல திட்டங்களை, ஏன் அரசு ஆணைகளைக்கூட நீங்கள் முன்னுதாரணமாக எடுத்துக்கொண்டு செயல்படுவதாகச் சொல்வதன் அடிப்படையிலும், எங்கள் ஆட்சியில் எடுத்து பரிசீலிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை செயல்படுத்தவேண்டுமென எனது தொகுதி மக்களின் நலன் கருதி வலியுறுத்தி, அரசு அமைக்க முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அங்கிருந்து 'ஏய்' என்று சத்தம் போட்டது யார்? (குறுக்கீடுகள்) 'ஏய்' என்று சத்தம் போட்டது யார்? (குறுக்கீடுகள்) அங்கெல்லாம் உறுப்பினர்கள் சத்தம் போடவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் 90 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. நாள் ஒன்றுக்கு 21,110 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. தூய்மையான, ஆரோக்கியமான பால் உற்பத்தி என்ற கொள்கையின் அடிப்படையில் இப்பகுதியில் 5 பால் குளிர்விப்பான்கள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவு வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நிதியின்கீழ் கேட்டவாய்பாளையம், பால்

[2008 ஏப்ரல் 11

கூட்டுறவுச் சங்கத்தில் பால் குளிர்விப்பான் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், மைய அரசு திட்டத்தின்கீழ் லாடவரம், இராந்தம், சொரகுளத்தூர் ஆகிய சங்கங்களில் பகுதி II திட்டத்தின்கீழ் மேல்வள்ளியனூர் சங்கத்தில் பால் குளிர்விப்பான் நிறுவப்படவுள்ளது. இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமேயானால், 10 கிராமங்களை ஒருங்கிணைத்து பயன்பெறும் வகையில் 2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மொத்த பால் குளிர்விப்பான் மேல்வள்ளியனூரில் இன்னும் பத்து நாட்களில் தொடங்க இருக்கிறது என்பதையும் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு) உட்காருங்கள்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தனி உறுப்பினர் தனித் தீர்மானம்

### உயர் கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு அளித்தல் — தீர்மானம் கொண்டுவந்த முதலமைச்சருக்குப் பாராட்டு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "29-3-2007 அன்று உச்ச நீதிமன்றம் அளித்துள்ள இட ஒதுக்கீடு குறித்த இடைக்காலத் தீர்ப்பு, கல்வியிலும், சமூக முன்னேற்றத்திலும், ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் பின்னடைவை உருவாக்க வழிவகுப்பதால், நாடாளுமன்ற உரிமையைப் பாதிக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள அந்தத் தீர்ப்பு குறித்து விவாதித்து நல்ல முடிவெடுக்க நாடாளுமன்ற இரு அவைகளையும் உடனே கூட்டவேண்டும் என்றும், அந்தத் தீர்ப்பினால் அடித்தட்டில் வாழும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் உரிய முடிவுகளை எடுக்கவேண்டும்



2008 ஏப்ரல் 11] [திரு. ஜி.கே. மணி]

என்றும், இந்தப் பேரவை மத்திய அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." என்ற தீர்மானம் 30-3-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் பேரவையில் கொண்டுவரப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

இந்தத் தீர்மானத்தினுடைய நோக்கம் நிறைவேறும் வகையில், தமிழக அரசு, உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில் 10-4-2008 அன்று உச்ச நீதிமன்ற 5 நீதிபதிகளைக் கொண்ட அமர்வு மத்திய அரசின் உயர் கல்வி மன்றங்கள் மற்றும் நிறுவனங்களில் 27 விழுக்காடு பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு என்று அறிவித்ததற்கு இடைக்கால தடை விதிக்கப்பட்டது செல்லாது என்று அறிவித்திருக்கிறது. இது பிற்படுத்தப்பட்ட மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைக்காகப் போராடும் மாண்புமிகு தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர், முதலமைச்சர் அவர்களின் முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதேபோல் நடுவண் அரசின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வற்புறுத்தி கருத்தொற்றுமை உருவாக்கியும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தும் முயற்சி மேற்கொண்ட பா.ம.க. நிறுவனர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.

"தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக இந்தத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வந்த, பிற்படுத்தப்பட்ட மக்களின் காவலர், முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தப் பேரவை மனதாரப் பாராட்டுகிறது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நாட்டிலே இருக்கின்ற ஏழையெளிய மக்கள் சமுதாயத்திலே

[திரு. டி. சுதர்சனம்] [2008 ஏப்ரல் 11

வாழ்விழந்து, பலமிழந்து, கூனிக் குறுகி நிற்கின்ற அடித்தள மக்களுடைய வாழ்க்கையை உயர்த்துவதே தன்னுடைய நோக்கமாகக் கொண்டிருக்கின்ற நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 30-3-2007 அன்று, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவேண்டும்; கல்வி அறிவிலே அவர்கள் நல்ல நிலை அடையவேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையில் இந்த அவையிலே ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டு, ஏகமனதாக அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. பல்வேறுபட்ட நண்பர்கள், பல்வேறுபட்ட சுயநலவாதிகள் அந்தத் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திலே தடையாணை பெற்றார்கள். அந்தத் தடையாணையை, திரும்பவும் மேல்முறையீடு செய்து, அதிலே நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனர் டாக்டர் ராமதாஸ் அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) அங்கே மேல்முறையீடு செய்தார்கள்; நம்முடைய தமிழக அரசும் அதிலே பங்கு கொண்டது. அதேபோன்று இரு அவைகளையும் கூட்டி, நம்முடைய முற்போக்குக் கூட்டணியினுடைய தலைவர்கள் அன்னை சோனியா காந்தி அவர்கள், டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அத்தனை பேர்களும் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய முயற்சியால் இந்த இட ஒதுக்கீடு பிரச்சினைக்கு முடிவு தர வேண்டுமென்று முயற்சி செய்து, அதை 10-4-2008 அன்று உச்ச நீதிமன்றத்திலே 5 நீதிபதிகள் கொண்ட பெஞ்ச்சானது விசாரித்து, இந்தத் தீர்ப்பானது நீங்கள் சட்டமன்றத்திலே கொண்டு வந்த அந்தத் தீர்மானம் நியாயமான தீர்மானம் என்று சொல்லி, 27 சதவிகித இட ஒதுக்கீட்டிற்கு ஆதரவு அளித்திருக்கின்றார்கள். ஐந்தாவது முறையாக பொறுப்பேற்றிருக்கின்ற நம்முடைய முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்காகவே வாழ்ந்து கொண்டிருக்கின்ற முதலமைச்சர், அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்ற முதலமைச்சர் அவர்களுடைய காலத்திலே இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு வந்திருப்பது சாலப் பொருத்தம்.

முற்பகல் 10-45

அதனாலே, காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இதற்கு ஆக்கபூர்வமாகப் பணியாற்றிய ஐயா டாக்டர் ராமதாஸ் அவர்களுக்கும், அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர்



2008 ஏப்ரல் 11] [திரு. டி. சுதர்சனம்]

மன்மோகன் சிங் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் திரு. மணி அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு I.I.M., I.I.T என்கிற மத்திய அரசினுடைய உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவிகிதம் இட ஒதுக்கீடு வழங்குவதற்கு வகைசெய்யக்கூடிய வகையில் மத்திய அரசாங்கத்தாலே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்குத் தடை விதிக்க வேண்டுமென்று ஏற்கெனவே சில அமைப்புகள், இட ஒதுக்கீடு கூடாது என்று ஒரு பகுதியும், இட ஒதுக்கீட்டிலே வசதி படைத்தவர்கள்—Creamy Layer—நீக்கப்பட வேண்டும் என்கிற வகையிலும் உச்ச நீதிமன்றத்திலே மனு தாக்கல் செய்து, உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து, அதனுடைய தொடர்ச்சியாக மத்திய அரசு மற்றும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் எடுக்கப்பட்ட முன்முயற்சியாலும், இந்தப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாகவும், மத்திய அரசாங்கம் இதில் தலையிட்டு, மறு ஆய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு, அது அரசியல் சட்ட பெஞ்சில் எடுத்துக்கொள்ளப்பட்டு, நேற்றையதினம் அது ஒரு சிறந்த தீர்ப்பினை வழங்கியிருக்கிறது.

உண்மையிலேயே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு, ஒடுக்கப்பட்டிருக்கிற மக்களுக்கு, சமூக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் நீதி கிடைக்கிறவகையில், நியாயம் கிடைக்கிறவகையில், இப்போது உச்ச நீதிமன்றம் ஒரு மிகச் சிறந்த தீர்ப்பினை வழங்கியிருக்கிறது. ஆகவே, அந்தத் தீர்ப்பினை மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி முழுமையாக, Creamy Layer உட்பட, முழுமையாக அந்தத் தீர்ப்பை வரவேற்கிறது, பாராட்டுகிறது. இதற்காக பெரு முயற்சி எடுத்துக்கொண்ட நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசிற்கும், குறிப்பாக மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அர்ஜுன் சிங் அவர்களுக்கும் மற்றும் பல்வேறு அரசியல் அமைப்புகள் இதற்கு எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சிகளுக்கும் நன்றி

[திரு. சி. கோவிந்தசாமி] [2008 ஏப்ரல் 11

தெரிவித்துக்கொள்கிறேன். இடதுசாரி இயக்கங்களும், தொடர்ச்சியாக மத்திய அரசு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தோடு இதுபற்றி விரிவாக வலியுறுத்தி வந்திருக்கின்றன. அனைத்து இடதுசாரி இயக்கங்களுக்கும், இதில் சம்பந்தப்பட்டிருக்கிற அனைவருக்கும் மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே எங்கள் மனப்பூர்வமான நன்றியை, வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர்களுக்கான 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்குவதற்காக மத்திய அரசு நிறைவேற்றிய சட்டத்தை எதிர்த்து பாரதிய ஜனதா கட்சி போன்ற மதவாத பின்புலமுள்ள சக்திகளின் உதவியால் உச்ச நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்கப்பட்டது. அதை எதிர்த்து மத்திய அரசும், அதிலே குறிப்பாக நம்முடைய மாநில முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் எடுத்த கடுமையான முயற்சியின் விளைவாக இந்த மாபெரும் வெற்றி கிட்டியிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மத்திய அரசுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் தீர்ப்பிலே மிக முக்கியமாக 93-வது அரசியல் சட்டத் திருத்தம் செல்லும், 'திருத்தத்தின்மூலம் சட்டங்கள் எவ்விதத்திலும் மீறப்படவில்லை என்றே நீதிபதிகள்' கூறியிருப்பது மிகப் பெரிய வெற்றியை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இந்தச் சலுகை வழங்கப்பட்டிருப்பதன் மூலமாக அவர்கள் கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் வாய்ப்பினை பெறுவதற்குரிய அரிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இதிலே குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய வேண்டுகோள் என்னவென்றால் இந்த இட ஒதுக்கீட்டுக் கொள்கையை எதிர்ப்பவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த அவையின் மூலமாக வைக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி விரும்புகிறது. அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். Creamy Layer முறை இருக்கக்கூடாது என்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலைப்பாடு. இதை எங்களுடைய மாநிலச் செயலாளர், அகில



2008 ஏப்ரல் 11] [திரு. வை. சிவபுண்ணியம்]

இந்தியச் செயலாளர் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைப்பற்றிக்கூட மத்திய அரசின் அமைச்சர் அவர்களும்கூட இன்றையதினம் அறிவித்திருக்கிறார். அதையும் பரிசீலிக்கவேண்டும் என்ற வேண்டுகோளோடு இதற்கு முன் முயற்சி எடுத்த நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம்.

*முற்பகல் 10-50*

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சியிலே, எவ்வளவோ நன்மைகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நடைபெற்றாலும், இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், சமூக நீதிப் பாதுகாவலராக இருந்து கொண்டிருக்கிறார் என்று நாமெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறோம். எந்தவொரு காரியத்தை எடுத்தாலும், நிதானமாகவும், அதைச் சரியாகவும் செய்கின்ற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்கெனவே இந்தச் சட்டமன்றப் பேரவையிலே, 30-3-2007 அன்று நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையிலே, இப்போது உச்ச நீதிமன்றத்திலே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை, நீதியை அங்கே வழங்கியிருக்கிறார்கள்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஏற்கெனவே இந்தக் கோரிக்கையை, சட்டப் பேரவையிலும், மக்கள் மன்றத்திலும் வைத்துப் போராடி வந்தது. ஆக, இந்த வெற்றி என்பது, முழுக்க முழுக்க நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி. இதேபோன்று நிலுவையிலுள்ள அனைத்து வழக்குகளிலும், இந்த ஆட்சியிலே நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை நமக்கெல்லாம் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்து நான் விடைபெறுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையில், (குறுக்கீடு) பேரவையின் சார்பாக மாண்புமிகு (குறுக்கீடு) மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [2008 ஏப்ரல் 11

உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள். (குறுக்கீடு) சரி, திரு. டி. சுதர்சனம், சொல்லுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்பு வரலாற்றுச் சிறப்புமிக்கத் தீர்ப்பு. இந்த அவையிலே இருக்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள்கூட ஆதரிக்கவேண்டிய தீர்ப்பு. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தீர்ப்பை அருள்கூர்ந்து அவர்களும், இங்கேயிருக்கின்ற மற்ற நண்பர்களும் ஆதரிக்கவேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், 27 சதவிகித இட ஒதுக்கீடு என்பது, தமிழகத்திலே இருக்கின்ற, இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மக்களுக்கும் பொருந்தும்; அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பொருந்தும். ஆகையினாலே, அவர்களும் இதை ஆதரிக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

*** மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டப் பேரவைக் கட்சியினுடைய தலைவர் நம்முடைய திரு. கோ.க. மணி அவர்கள் முன்மொழிந்து, சட்டமன்றக் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. டி. சுதர்சனம் அவர்களால் வழிமொழியப்பெற்ற இந்தத் தீர்மானத்தின்மீது சில கருத்துகளை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

சமூக நீதிக்கான பயணம், தமிழகத்தைப் பொறுத்தவரையில், நீதிக் கட்சிக் காலத்திலே, அன்றைய அமைச்சர் திரு. முத்தையா அவர்களுடைய காலத்திலேயிருந்து தொடங்கி, இன்றளவும் ஒரு நூற்றாண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. 1920 ஆம் ஆண்டிற்குப் பிறகு, முதல் Communal G.O. எனத் தொடங்கி, மத்திய அரசு கல்வி நிலையங்களில் பிற்படுத்தப்பட்டோருக்கு இட ஒதுக்கீடு 27 சதவிகிதத்திற்கான தனிச் சட்டம், 2007 ஆம் ஆண்டில் மத்திய அரசால் நிறைவேற்றப்பட்டதுவரை, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

தமிழ்நாட்டில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் ஆகியோர் இணைந்து கொடுத்த அழுத்தம் காரணமாக, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், இந்திய அரசியல் சட்டத்தில், இட ஒதுக்கீட்டிற்கென முதல் திருத்தத்தைச் செய்திட முன்வந்தார் என்பதை நாம் மறந்துவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)



2008 ஏப்ரல் 11] [கலைஞர் மு. கருணாநிதி]

அன்று தொடங்கி, இந்திய அரசியல் சட்டத்தில் 93-வது திருத்தம் வரையில், இட ஒதுக்கீட்டுப் பயணம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. அகில இந்திய அளவில் இட ஒதுக்கீட்டிற்கான முதல் கதவு, 1990 ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களால் திறந்து வைக்கப்பட்டதை யாரும் மறந்துவிட இயலாது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாக, மத்திய அரசுப் பணிகளிலே இட ஒதுக்கீடு 'கிடைத்தது. அப்போது, வடபுலத்திலே நடைபெற்ற வன்முறைகள், மாணவர்களைத் தீக்குளிக்கச் செய்கின்ற அளவிற்கு நடைபெற்றக் காட்டுமிராண்டித்தனமான எதிர்ப்புகள், இவற்றையெல்லாம் மீறி, இன்றைக்குச் சமூக நீதி வெற்றி பெற்றிருக்கின்றது.

முற்பகல் 10-55

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கொண்டு வந்து, உச்ச நீதிமன்றத்தால் தடுக்கப்பட்டு, நம்மைப் போன்றவர்கள் நடத்திய போராட்டம், கொடுத்த போர்க் குரலின் காரணமாக, இன்றைக்கு சமூக நீதி நிலைநிறுத்தப்பட்டு, 27 சதவிகித இட ஒதுக்கீட்டுச் சட்டத்தின் காரணமாக மத்திய கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு கிடைத்துள்ளது. அதுபற்றி நான் மத்திய மனிதவளத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. அர்ஜுன் சிங் அவர்களிடம் தொடர்பு கொண்டபோது, இதைப்பற்றி இன்னும் விரிவாக, குறிப்பாகச் சுட்டிக்காட்டப்படுகிற, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நண்பர் எடுத்துக்காட்டிய 'Creamy Layer' பற்றி அமைச்சரவையிலே யோசிக்கவிருக்கிறோம் என்று அவர் கூறியிருப்பது ஆறுதல் தரக்கூடிய ஒரு செய்தியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பெயரே 'கிரிமி லேயர்'—கிருமி அதிலே இருக்க வேண்டாம் என்பதுதான் நம்முடைய வாதம். ஆகவே, இதை விலக்கிக்கொள்கின்ற அளவுக்கு மத்திய அமைச்சரவை யோசித்து முடிவு எடுக்கும். நம்முடைய போராட்டத்தினுடைய தொடர்ச்சியாக சமூக நீதி என்பது முற்றுப் பெற்றுவிட்ட ஒரு போராட்டம் அல்ல. இன்னும் முழுமை அடையவேண்டிய நிலை; நிறைய பாக்கி இருக்கிறது. அதை நாம் நிறைவேற்றி ஆகவேண்டும்.

[கலைஞர் மு. கருணாநிதி] [2008 ஏப்ரல் 11

இந்தப் போராட்டத்தில் நாம் கொடுத்த குரலில் இந்த அவையிலே எழுப்பிய அந்தக் குரலுக்கு, அன்றைக்கும் சரி, இன்றைக்கும் சரி, ஆதரவாக நம்முடைய காங்கிரஸ் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள், பாட்டாளி மக்கள் கட்சி, மற்றும் உள்ள விடுதலைச் சிறுத்தைகள், வெளியிலே சொல்லாவிட்டாலும், அ.தி.மு.க., ம.தி.மு.க. ஆகிய இந்தக் கட்சிகளுக்கெல்லாம் இது உடன்பாடானவைதான் என்பதை நான் அறிவேன். அவர்கள் பேசவேண்டும், பேசவேண்டும் என்று திரு. சுதர்சனம் அவர்களும் அவர்களைப் பார்த்துக் கேட்டுக்கொண்டார். மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உரையில் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். நான் சற்று காலதாமதமாக வந்துவிட்டேன். இந்தத் தீர்மானம் வரும் என்பது எனக்குத் தெரியாது. நம்முடைய மூலாதாரக் கொள்கையான இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு இந்த அரசு முழு முயற்சி எடுத்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தாலும் (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றையெல்லாம் மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து அடியோடு முறியடித்து, மிகப் பெரிய வெற்றி கண்டிருப்பதை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் மனதார வரவேற்பதுடன் (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்திலே இன்னும் இந்தச் சமூக நீதியை நூற்றுக்கு நூறு நடைமுறைப்படுத்துவதற்கு எல்லா வகையிலும் நாங்கள் துணையிருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நண்பர் கண்ணப்பன் அவர்கள், காலதாமதமாக வந்து, காலதாமதமாகவாவது இந்த ஒத்துழைப்பைத் தந்ததற்கு நான் நன்றிகூறிக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் என்ற முறையில் பேரவையின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.



2008 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. தகவல் கோரல்

### மதுரை நகரின் சில பகுதிகளில் காலரா நோய் பரவுவதைத் தடுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரை நகரின் சில பகுதிகளில், காலரா நோய் பரவி வருவதைத் தடுக்க எடுக்கவேண்டிய உரிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பாக அறிவிப்பு கொடுத்துள்ளார். இதனைத் தகவல் கோரல் என்ற முறையில் எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

முற்பகல் 11-00

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரில், சில பகுதிகளில், குறிப்பாக 22-லிருந்து 26-வது வட்டம் முடியவுள்ள பகுதிகளில் காலரா நோய் பரவி வருவதாக நேற்றைக்கு எனக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாக மாவட்ட ஆட்சியர், ஆணையர் அலுவலகம், மேயர் ஆகியோரோடு தொடர்பு கொண்டேன். மதுரை மாநகராட்சி மருத்துவ அலுவலர்களோடும் தொடர்பு கொண்டேன். உரிய நடவடிக்கைகள் எடுத்து வருவதாகத் தெரிவித்தார்கள். அது மாநகராட்சிப் பகுதி என்றாலும்கூட, மக்கள் நல்வாழ்வுத் துறையும் இணைந்து இந்தப் பணிகளை மேற்கொண்டால் மேலும் இது பரவாமல் தடுக்கமுடியும் என்கிற உணர்வோடு இந்தக் கவன ஈர்ப்பை நான் கொண்டுவந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2008 ஏப்ரல் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்கப்பட்ட பகுதிகள் மாநகராட்சியைச் சார்ந்தவையாகும். இருந்தாலும், இந்தப் பகுதியில் மாநகராட்சி நல வாழ்வு மையம் 16—பட்டுத்தோப்பு, வார்டு 22, 23, 24 பகுதிகளில் வயிற்றுப் போக்கு இருப்பதாக சுகாதாரப் பாதுகாவலர்கள் மூலமாக 4-4-2008 அன்று காலை பத்து மணியளவில் தகவல் பெறப்பட்டது. உடனடியாக அந்தப் பகுதியைச் சார்ந்த அனைத்துக் களப் பணியாளர்களும் பாதிக்கப்பட்ட பகுதிக்குச் சென்று வியாதி ஏற்பட்ட குடும்பங்களில் உள்ள நபர்களைச் சந்தித்து நோய் ஏற்பட்ட காலம், உண்ட உணவு, பருகிய நீரின் தன்மை, தொற்று நோய் ஏற்படக் காரணம் ஆகியவற்றை கேட்டறிந்தனர். நான்கு பேர் கொண்ட மருத்துவக் குழுக்கள் நான்கு அமைக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியாகச் சென்று வயிற்றுப்போக்கு உள்ள நபர்களுக்கு antibiotics மற்றும் O.R.S. packets அனைத்தும் விநியோகம் செய்யப்பட்டன. மக்களுக்கு சுகாதாரக் கல்வி, தன் சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. 8-4-2008 அன்று மாலை 4-00 மணியளவில் முதன்மை நல அலுவலர் தலைமையில் மருத்துவக் குழு அலுவலர்களுக்கும், சுகாதார ஆய்வாளர்களுக்கும், களப் பணியாளர்களுக்கும் சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டு வீடு வீடாகச் சென்று நோயாளிகளைப் பார்வையிட்டு நலக் கல்வி அளிக்கப்பட்டது. செகண்டு தெருவில் உள்ள வார்டு 22—ல் மட்டும் தண்ணீர் மாசுபட்டிருப்பது பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் 126 பேர் பாதிக்கப்பட்டார்கள். மருத்துவமனையில் உள்நோயாளிகளாக 40 நபர்கள் அனுமதிக்கப்பட்டு இப்போது நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இதுசம்பந்தமாக மதுரை மாநகரில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு, வார்டுகள் 22, 23, 24-க்கு சுகாதாரத் துறை இணை இயக்குநர் தலைமையில் ஒரு குழு அனுப்பி வைக்கப்பட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், சென்னையில் இருந்து பொது சுகாதாரத் துறை இணை இயக்குநரையும் அனுப்பி நேரில் பார்வையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2008 ஏப்ரல் 11] [திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்]

இந்த நோயினுடைய தாக்கம் இப்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ள செய்தியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன். இது பொன்னகரம் பகுதியிலே கட்டுப்படுத்தப்படுகிறபோது செல்லூருக்கும் பரவுகிறது என்ற ஒரு தகவலும் இருக்கிறது. இது மேலும் பரவக்கூடாது; வீண் பீதிக்கும் மக்கள் ஆளாகவேண்டும் என்று நாங்கள் விரும்பவில்லை. உரிய நடவடிக்கையைத் தொடர்ந்து எடுக்குமாறு கேட்டு அமைகிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### மேட்டூர் அணை திறக்கப்படாததால் ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர் அவர்கள் கீழ்க்காணும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டூர் அணையிலிருந்து காவிரி தண்ணீர் திறந்து விடப்படாததால், ஈரோடு மாநகராட்சிப் பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறை நிலவுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

[திரு. துரைமுருகன்] [2008 ஏப்ரல் 11

**அறிக்கை**

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டி, வீரப்பன்சத்திரம், காசிபாளையம் ஆகிய நகராட்சிப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்சினை தீர்வதற்காக மேட்டூர் அணையிலிருந்து 26-3-2008 மாலை 6-00 மணி முதல் 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. மேலும், தேவைக்கேற்ப 31-03-2008 இரவு 8-00 மணி முதல் 800 கன அடியாக தண்ணீரின் அளவு அதிகரித்து கொடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். தமிழக அரசால் கடந்த 31-1-2008-ல் ஓர் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அரசாணையினுடைய வாசகத்தை அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

அந்த அரசாணையிலே, மேட்டூர் அணையிலிருந்து சேலம், திருச்சி மாவட்டங்களுக்கு, 17 பழைய கால்வாய்கள்மூலமாகப் பாசனத்திற்காகவும், காவிரி கரையோர மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் 1-2-2008-லிருந்து 12-6-2008 வரை கீழ்க்காணும் அளவுகளிலே தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. முதற்கட்டமாக, மிக வறட்சியாக இருக்கிற காலமான 1-2-2008-லிருந்து 30-4-2008 வரை 90 நாட்களுக்கு 1,800 கன அடி தண்ணீரும், அதற்குப் பிறகு 30-4-2008-லிருந்து 31-5-2008 வரை 1,200 கன அடி தண்ணீரும், அதற்குப் பிறகு மூன்றாவது கட்டமாக, 31-5-2008-லிருந்து 12-6-2008 வரை 1,000 கன அடி தண்ணீரும் திறந்துவிடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால், இது வறட்சிக் காலமென்பதால், அவ்வாறு தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டுமென்று அரசாணையில் இருக்கிறது. ஆனால், அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னால், 600 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது; தேவைக்கேற்ப 800 கன அடி தண்ணீராக அளவு அதிகரிக்கப்பட்டு வருகிறது என்ற செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அரசாணையிலே 1,800 கன அடி தண்ணீரைத் திறந்துவிடவேண்டும் என்றிருக்கிறது. உங்கள் பொதுப் பணித் துறை சார்பிலே போடப்பட்டிருக்கிற அரசாணையிலே 1,800 கன அடி தண்ணீரைத் திறந்துவிடவேண்டுமென்று இருக்கிறது. ஆனால், திறந்துவிடப்பட்டிருக்கின்ற தண்ணீரினுடைய அளவு 600 கன அடிதான்.



2008 ஏப்ரல் 11] [திரு. விடியல் எஸ். சேகர்]

அதுவும் குறிப்பாக, ஈரோடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலே, சாயக் கழிவாலே, தோல் கழிவாலே பாதிக்கப்பட்டது அப்பகுதி. தந்தை பெரியார் அவர்கள் நகராட்சித் தலைவராக இருந்தபோது, பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தி, அன்றைக்கே பாதுகாக்கப்பட்ட குடிநீரை வழங்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நகராட்சியை இன்றைக்கு மாநகராட்சியாக்கி பெருமை சேர்த்திருக்கிறார்கள் நம்முடைய முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். அப்படிப்பட்ட மாநகராட்சி மக்கள் இன்றைக்கு தண்ணீர் இல்லாமல் தவித்துக்கொண்டிருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. இது ஈரோடு மாவட்டத்திற்குமட்டுமான பிரச்சினையில்லை. ஈரோடு, சேலம், திருச்சி போன்ற மாவட்டங்களுக்கும், கரையோர மாவட்டங்களாக இருக்கிற நாமக்கல், கரூர் மாவட்டங்களுக்கும் இருக்கிற பிரச்சினை. இங்கிருந்துதான் திருப்பூர் L & T நிறுவனத்திற்குத் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இங்கிருந்துதான் பொன்னி சுகர்ஸ் நிறுவனத்திற்குத் தண்ணீர் எடுக்கப்படுகிறது. இங்கிருந்துதான் நாமக்கல், கரூர் மாவட்டங்களுக்குத் தண்ணீர் செல்கிறது. எனவே, இந்த அரசாணை இருக்கிறபோது, தஞ்சையிலே, திருச்சி மண்டலத்திலேயிருக்கிற பொறியாளர் oral orders-ஆகச் சொல்லி, அடிக்கடி தண்ணீரைக் குறைத்துவிடுகிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள், இதைச் சிறப்பாகக் கவனத்திலே எடுத்துக்கொண்டு, ஈரோடு மாநகராட்சி மட்டுமல்ல, ஈரோடு மாநகராட்சியைச் சுற்றியிருக்கிற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர், சுருக்கமாகச் சொல்லி முடியுங்கள்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சிப் பகுதி மக்களுடைய குடிநீர்த் தேவையையும் கருத்தில்கொண்டு, அரசாணைப்படி 1,800 கன அடி தண்ணீரைத் திறந்துவிட்டு, ஈரோடு மாவட்ட மக்களுடைய தாகம் தீர்க்க வேண்டுமென்று, அவைத் தலைவர்வாயிலாக அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர் அவர்கள், ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, சூரம்பட்டி நகராட்சி, வீரப்பன்சத்திரம் நகராட்சி, காசிப்பாளையம் நகராட்சி போன்ற பகுதிகளிலே குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் இருக்கிறது, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று 28-3-2008 அன்று அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இந்த முன்னறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பே, 26-3-2008 அன்றே, குடிதண்ணீருக்காக, மாலை 6-00 மணி முதல் 600 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. மேலும், தேவைக்கேற்ப 31-3-2008 இரவு 8-00 மணி முதல் 800 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டிருக்கிறது. இப்போது தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. நீங்கள் சொல்கிற அரசாணை, பாசனத்தோடு சேர்ந்தது. இப்போதும் திரு. சேகர் அவர்களுக்குச் சொல்கிறேன், இந்த மூன்று ஊர்களுக்கு காசிப்பாளையம், வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு இன்னும் தண்ணீர் தேவையென்றாலும், குடிநீரைப் பொறுத்தவரையில், நாங்கள் தண்ணீரைத் திறந்துவிடுவதற்குத் தயாராக இருக்கிறோம், பிரச்சினையில்லை. காரணம், உங்களுடைய வாழ்த்துகளால் இன்றைக்கு மேட்டூர் அணை ஐந்தாவது முறையாக நிரம்புகின்ற அளவிற்கு, 98 அடியை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

## 5. அறிக்கைகள் அளித்தல்

### மனுக்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மனுக்கள் குழுவின் தலைவர்.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2007-2008 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் 39 முதல் 46 வரையிலான எட்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.





## 6. மானியக் கோரிக்கைகள், 2008-2009, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 24 - சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 41 - வருவாய்த் துறை**

**(இ) கோரிக்கை எண் 51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு**

**(ஈ) கோரிக்கை எண் 26 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை**

—

### (அ) கோரிக்கை எண் 24 - சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2008-2009 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை), மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

* **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூபாய் 90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.10,39,02,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 24, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 236, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2845, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3554, திரு. ராம. சுப்புராம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4350, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4467, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4686, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7247, திரு. கு. ஹசன் அலி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8966, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 12814, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2208, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2656, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2783, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5878, திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7122, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7306, திரு. சி.வி. சண்முகம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண், 4812, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4987, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5299, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6196, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6979, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7085, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7568, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7595, திரு. மு.க. பெரியசாமி.



**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7668, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9538, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6524, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7537, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6672, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8260, திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7846, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் உள்ள சிறைச்சாலையை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4500, திரு. எம்.ஆர். சுந்தரம்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆத்தூரில் உள்ள சிறைச்சாலைகளை மேலும் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4128, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மத்திய ஆண்கள் சிறைச்சாலை, பெண்கள் சிறைச்சாலைகளில் உள்ள அனைத்துக் கழிவறைகளையும் நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3945, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2634, திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. கே.எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாநகரின் மத்திய சிறைச்சாலைகளில் கைதிகள் அளவுக்கு அதிகமாக அடைக்கப்படுவதால், சிறைச்சாலைக் கட்டடத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1467, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யாறில் சப்-ஜெயில் மீண்டும் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5858, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 8203, திரு. பெ. கண்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5399, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு நாள்தோறும் தியானம், அகிம்சை, தேசப்பற்று, யோகா ஆகியவற்றைக் கற்றுத்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7765, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் சிறைச்சாலைகளில் பணியாற்றும் காவலர்களுக்கு காவல் துறையில் பணியாற்றும் காவலர்களுக்கு இணையாகச் சம்பளம் வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7972, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலைகளில் உள்ள அனைத்து கைதிகள் மற்றும் வார்டன் (பணிபுரியும் பணியாளர்களுக்கும்) எய்ட்ஸ் பரிசோதனை செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8079, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைக் கைதிகளுக்கு யோகா பயிற்சி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5951, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி வட்டம், வட்டாட்சியர் அலுவலகத்திற்குள் இயங்கிவரும் சிறைச்சாலையால் இட நெருக்கடி ஏற்பட்டு பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே, தனியாக சிறைச்சாலை ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2660, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறையில் உள்ள இளம் குற்றவாளிகளுக்கு கணினிப் பயிற்சி



அளிக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4969, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைக் கைதிகளின் உணவுப் பொருட்களுக்கான நிதியை உயர்த்தி வழங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3885, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறைச்சாலையில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3000, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டையில் உள்ள மத்திய சிறைச்சாலையை மேலும் தரம் வாய்ந்ததாக உருவாக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 24 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.90,02,99,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,39,02,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4439, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு கிளைச் சிறைச்சாலைகளிலும் மகளிர் பிரிவு தொடங்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8717, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3557, திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7219, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியில் உள்ள கிராமக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகளில் (கட்டடச் சங்கங்களின் மூலமாக)



பெறப்பட்டுள்ள கடன் தொகைமீது வரும் வட்டி மற்றும் அபராத வட்டியினை முழுவதுமாக இரத்துச் செய்யவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8415, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு நெசவாளர்கள், டெக்ஸ்டைல் தொழிலாளர்கள், கொசுவலைத் தொழிலாளர்கள், பஸ் பாடித் தொழிலாளர்கள் எனவுள்ள பல்வேறு தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் நிரந்தரக் குடியிருப்புகள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6782, திரு. ரெ. நெடுஞ்செழியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7018, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசி தொகுதியில் பேரூராட்சிப் பகுதிகளில் இட நெருக்கடியைக் கருத்தில்கொண்டு, அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7813, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை தொகுதியில் உள்ள சிப்காட் தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.307,22,17,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.695,46,67,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6527, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள், முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள், வருவாய்த் துறை மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள

@ 217 முதல் 312 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.



வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்தபின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று நான்கு மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் 4 மானியக் கோரிக்கைகளின்மீதும் சேர்த்தே பேசலாம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் 15 நிமிடங்கள்.

*** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தலைவியின் மனதில் அச்சம் இல்லையோ, எந்தத் தலைவியினுடைய சிந்தனை சுதந்திரமாகச் செயல்படுகின்றதோ, எந்தத் தலைவி உண்மை என்ற அடித்தளத்தில் காணுகின்றாரோ, எந்தத் தலைவி இங்கே வஞ்சிக்கப்பட்ட சமுதாயத்திற்காக ஓய்வே இல்லாமல் சிந்திக்கின்றாரோ, (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் தலைவியின் செயலும், நடவடிக்கையும் இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் பயன்படும் என்று

@@ 313 முதல் 355 வரையிலான பக்கங்களில் இணைப்பு–III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

நம்புகின்றார்களோ, அந்தத் தலைவியாக இருக்கின்ற எங்களுடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கின்ற திசை நோக்கி வணங்கி, என் உரையைத் தொடங்குகின்றேன்.

சிறைச்சாலைகள், வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அமைவதற்குக் காரணமாக இருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட துறைகள்மீது என்னுடைய கருத்துகளைப் பதிய வைக்க, நாங்களும் உதவியாக இருக்கும்படி அன்புடன் கேட்டுக்கொண்டு என் உரையைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் என்னுடைய தொகுதியில் உள்ள முக்கியமான இரண்டு பிரச்சினைகளை நான் இந்த அவையிலே எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்று. இன்றைக்கு, விடிந்தால் அல்லல்படுகின்ற மீனவர்கள் பிரச்சினையை நான் எடுத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்று சொன்னால் மீனவர்கள் இப்போது என் பகுதியில் இருக்கின்ற நாட்டுப் படகு மீனவர்கள், என் பகுதியில் மட்டுமல்ல, நெல்லை மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், இந்தப் பகுதிகளில் இருக்கின்ற நாட்டுப் படகு மீனவர்கள், தங்கள் படகிலே பொருத்தியிருக்கின்ற இன்ஜின்களில் மண்ணெண்ணெய்யை உபயோகப்படுத்தி அவர்கள் தொழில் செய்கின்ற சூழ்நிலையில் இருக்கின்றனர். இப்போது இருக்கின்ற நிலை என்னவென்று சொன்னால், வெளியிலும் மண்ணெண்ணெய் இல்லை. அரசாங்கமும் மண்ணெண்ணெய் ஒதுக்கிக் கொடுக்கவில்லை. இந்த நிலைகளையெல்லாம் அறிந்து தமிழகத்தினுடைய முன்னாள் முதலமைச்சராக இருந்த அம்மா அவர்கள் அதற்கான ஒரு அரசாணையை வழங்கி அந்தப் படகுகளுக்கெல்லாம் ஒரு மாதத்திற்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய்யை வழங்குகிறேன் என்று வழங்கிவந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசாங்கம் வந்த பிறகு அந்த மீனவர்களை ஒட்டுமொத்தமாகப் பாதிக்கின்ற வகையிலே, மண்ணெண்ணெய்யோ



வழங்கவில்லை. அரசும் மண்ணெண்ணெய் வழங்காது, வெளியிலும் மண்ணெண்ணெய் வாங்கமுடியாது என்றால் அவர்கள் எப்படித் தொழில் செய்வார்கள் என்பதை இந்த அரசு உணரவேண்டுமென்பதற்காக இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்னும் சொல்லப்போனால், என்னுடைய தொகுதியில் சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த, இனிய சகோதரர்களாக இருக்கின்ற இஸ்லாமிய சகோதரர்கள் நிறைந்த பகுதி காயல்பட்டணம். அந்தப் பகுதிக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் குடிதண்ணீர் பிரச்சினைக்காக பொன்னன்குறிச்சி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தந்து ஓரளவு அவர்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திருக்கின்றார்கள். அதுபோல, திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திருக்கின்றார்கள். ஆனால், குடிநீர்ப் பிரச்சினை முழுவதும் தீர்ந்தபாடில்லை. ஆகவே, காயல்பட்டணத்திற்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டமும், திருச்செந்தூர் பேரூராட்சிப் பகுதிக்குத் தனியாக ஒரு குடிநீர்த் திட்டமும் தரவேண்டுமென்ற தொகுதி மக்களுடைய கோரிக்கையை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றபோது தமிழ்நாடு வீட்டு வசதித் துறை மிகவும் நலிவுற்ற நிலையிலிருந்தது. இந்நிலையை மாற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமது நிர்வாகத் திறமையாலும், போர்க்கால அடிப்படையிலும், பல நடவடிக்கைகளை மேற்கொண்டு இத்துறைக்கு புத்துயிர் ஊட்டியிருக்கின்றார்கள். உதாரணமாக, 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய கடன் தொகை 918 கோடி ரூபாயாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால், அந்தக் கடனை 230 கோடி ரூபாயாகக் குறைத்த சாதனையை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டாண்டு காலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தொடர்பான மானியக் கோரிக்கையில் கொடுக்கப்படுகின்ற

அறிவிப்புகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதற்கு சிலவற்றை இந்த அவைக்கு சுட்டிக்காட்டி நான் பதில் பெறவிரும்புகிறேன். கடந்த இரண்டாண்டு அறிவிப்புகளில் 198 கோடியில் 1,356 ஏக்கர் நிலப் பரப்பளவில் 14 புறநகர்த் திட்டங்களில், 4,818 மனைகள் அபிவிருத்தி செய்யப்படும் என்ற தங்களுடைய அறிவிப்பு இன்றைக்கு எந்த நிலையில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் அறிவிக்க வேண்டும்.

அதேபோல, 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 554 வீடுகள், ஈரோடு, கோவை, ஒசூர் மற்றும் மதுரையில் கட்டப்படும் என்ற அறிவிப்பு எந்த நிலையில் உள்ளது என்பதையும் பதிலாகத் தரவேண்டும்.

அதேபோல, 80 கோடி ரூபாய் மதிப்பில் 536 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்ற அறிவிப்பு எந்த நிலையில் உள்ளது என்பதையும் அறிவிப்பிலே தரவேண்டும்.

முற்பகல் 11-35

அதுபோல, சென்னை பட்டினப்பாக்கத்தில் தற்போதுள்ள 982 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அகற்றிவிட்டு ரூ.95 கோடி மதிப்பில் 1,040 புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்ற திட்டம் எந்த நிலையில் உள்ளது என்பதை இங்கே விளக்கவேண்டும்.

அதேபோல, குடிசை மாற்று வாரியத்திற்குச் சொந்தமான இடத்தில், வாரியத்திற்கு நிரந்தர வருமானம் வரும் வகையில், வணிக வளாகம் கட்டப்படும் என்று கடந்த ஆண்டு அறிவிப்பிலும் இருந்தது, இந்த ஆண்டு அறிவிப்பிலும் இருக்கின்றது. அது எந்த நிலையில் உள்ளது என்பதை பதிலுரையிலே அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

அதுபோல, பழுதடைந்த குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் உள்ள இடங்களில், குடியிருப்புகளை அழித்துவிட்டு புதிய வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் திட்டம், கடந்த ஆண்டு அறிவிப்பிலும் இருந்தது, இந்த ஆண்டு அறிவிப்பிலும் இருக்கின்றது. இந்தத் திட்டம் என்ன நிலையில் உள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்தவேண்டும்.

அதுபோல, எண்ணூரில் கடந்த 15 வருடங்களாகச் செயல்படாமல் இருந்த தக்கைக் கல் தொழிற்சாலை பற்றி கடந்த 2 ஆண்டு காலமாக தங்களுடைய புதிய அறிவிப்பில் அறிவித்திருக்கின்றீர்கள். இந்த



ஆண்டும் அறிவித்திருக்கின்றீர்கள். அந்த அறிவிப்பினுடைய நிலை எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும். இன்றைக்குச் சென்னை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு குடிசை மாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு பிரம்மாண்டமான, இந்தியாவிலேயே மிகச் சிறந்த ஒரு தொழிற்சாலை. அதை உங்களுடைய ஆட்சியிலே விற்பதற்கு ஏலம் விடப்பட்டது; டெண்டர் கோரப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் வந்து, அவருடைய திருக்கரங்களாலே துவக்கி வைக்கப்பட்ட அந்த ஆலை விற்பனையைத் தடுத்தி நிறுத்தி இருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். Joint venture முறையிலே அதை மீண்டும் புதுப்பிப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறந்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை பெருநகரப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டத்திற்கான வரைவுக்கு 30-3-2007 அரசாணை எண் 124-ல் இசைவு தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த இரண்டாம் முழுமைத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது; எப்போது அறிவிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே தெரியப்படுத்தவேண்டும் என்ற கருத்தை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுபோல, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீட்டுமனை பெற்றவர்களுக்கு நீண்ட . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட சென்னை பெருநகருக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் எல்லோரும் ஆவலோடு எதிர்பார்க்கின்ற வகையில் எல்லாவற்றையும் பூர்த்தி செய்கின்ற வகையில், வெகு விரைவில் அறிவிக்கப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், பேசுங்கள்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக வழங்கப்படாத 40,000 விற்பனைப் பத்திரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் போகின்றோம், எடுத்திருக்கின்றோம் என்ற வகையிலே அறிவித்திருக்கின்றீர்கள். எவ்வளவு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே திட்டங்கள் தீட்டுகின்றபோதே வேண்டிய நிதியினையும் ஒதுக்கீடு செய்து, கால அளவினையும் நிர்ணயம் செய்து, குறித்த காலத்தில் திட்டங்களின் பயன்களை மக்களுக்கு அளித்த தலைவர் எங்கள் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அதேபோல, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிக்கின்ற திட்டங்கள், தலைமுறைகளைத் தாண்டி பலன் அளிக்கின்ற திட்டங்களாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், நீங்கள் அறிவிக்கின்ற திட்டங்களைப் பார்த்தால் அது தலைப்புச் செய்தியாக அறிவிக்கின்ற திட்டங்களாகத்தான் இருக்கின்றன என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி). குறிப்பாகச் சொல்லும்போது, வீட்டு வசதி வாரியம் என்று சொன்னாலே வீட்டு வசதி வாரியத்திலே தோராய மதிப்பீடு என்ற வகையிலே ஒதுக்கீடு பெற்றவர்கள், இப்போது கடுமையாக அல்லல்படுகின்ற நிலை தமிழகம் முழுவதும், எந்தக் காலத்திலேயும் இருக்கின்ற நிலையாக இருக்கின்றது. அந்த நிலைகளையெல்லாம் மாற்றுகின்ற வகையிலே மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த வீட்டு வசதி வாரியத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்றபோது எங்களிடம் சொன்ன கருத்து என்னவென்றால், இனிமேல் தோராய மதிப்பீடு என்று வழங்கக்கூடாது; நீங்கள் இறுதி விலையாக அறிவித்துத்தான் கொடுக்கவேண்டும். அவர்கள் பணத்தைக் கட்டிவிட்டால் உடனடியாக விற்பனைப் பத்திரத்தைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்; அந்த வகையிலே இவ்வளவு சிக்கல்களைத் தீர்ப்பதற்கு என்ன செய்யப்போகிறோம் என்ற வகையிலே, ஆய்வெல்லாம் நடைபெற்றது. ஆய்வுகள் நடைபெறுகின்றபோது தேர்தல் காலம் வந்துவிட்டதால் அந்த ஆய்வுகள் இடையிலே நிற்கின்றன. இப்போது குறிப்பாக இந்த அரசுக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நாங்கள் சொல்லிக்கொள்வது என்னவென்றால், பல இலட்சம் பேர் தோராய மதிப்பீடுகள் என்ற வகையிலே ஒதுக்கீடுகளைப் பெற்று, நீதிமன்றத்தில்



வழக்குகள் எல்லாம் இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு ஒதுக்கீடு கொடுக்கவில்லை என்ற கோரிக்கைகள் வந்து கொண்டேயிருக்கின்ற நிலை இருக்கிறது. அதையெல்லாம் தீர்க்கின்ற வகையிலே வீட்டு வசதி வாரியத்தினுடைய சட்டங்களை, விதிகளைத் திருத்தி, இருக்கின்ற விற்பனைப் பத்திரங்களை எப்படிக் கொடுக்கலாம் என்ற வகையிலே ஆய்வு செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதை இந்த அவையிலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறைத் துறையைச் சார்ந்த காவலர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்; கடுமையாக ஒதுக்கப்பட்டிருக்கின்றார்கள், பல்வேறு மட்டத்தில், எல்லா வகையிலும் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் அது குறித்து கோரிக்கைகள் இன்றைக்கு வரப்பெற்றிருக்கின்றன. அந்தவகையிலே, அவர்கள் "சிறைத் துறையிலே காவலர்களாக இருக்கின்ற எங்களுக்கு, தமிழ்நாட்டிலே இருக்கின்ற காவலர்களுக்கு வழங்கப்படுகின்ற வேலை எப்படி இருக்கிறதோ, அதேபோன்றுதான் எங்களுக்கும் வேலை இருக்கிறது; ஆனால், அதற்கான சம்பளங்கள் வழங்கப்படுன்றனவா என்று சொன்னால், இல்லை. எங்களுக்கென்று ஒரு தனிச் சம்பளம், காவல் துறைக்கு என்று ஒரு தனிச் சம்பளம் இருக்கின்றது. ஆகவே, எங்களுக்கும், காவல் துறைக்கு ஏற்றாற்போல் சம்பளத்தைத் தரவேண்டும்" என்று கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். அதை இந்த அரசு செய்துதரவேண்டும் என்ற வகையிலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

புழல் மத்திய சிறையிலே இருக்கின்ற பெண் காவலர்கள், 8 மணி நேரம்தான் வேலை செய்யவேண்டுமென்று அரசாணை இருக்கிறது. ஆனால், அங்கேயிருக்கின்ற நிலை என்னவென்று சொன்னால் 30 மணி நேரம் அவர்கள் பணியாற்றக்கூடிய வகையிலே அங்கே நிலைமையிருக்கின்றது. காலையில் போனார்கள் என்று சொன்னால், காலை, மாலை, அடுத்த நாள் காலை என்ற வகையில் 30 மணி நேரம் பணியாற்றும் நிலை இருக்கின்றது. ஆகவே, அவர்கள் 8 மணி நேரம் மட்டுமே பணியாற்றக்கூடிய சூழ்நிலையை நீங்கள் உருவாக்கித்தர வேண்டுமென்ற கோரிக்கையையும் நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல, அரசு விடுமுறை

நாட்களிலே பணி செய்கின்றார்கள். அவ்வாறு பணி செய்கின்ற காலத்தில், காவலர்களுக்கு அதை ஈடுசெய்கின்ற வகையிலே படி வழங்கவோ அல்லது அதற்கான மிகை நேரப்படி, ஊதியம் வழங்கவோ ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கின்றது. அதையும் கவனத்தில் கொள்ளவேண்டுமென்ற கருத்தை நான் இங்கே வைக்கின்றேன்.

கோவை, பாளையங்கோட்டை, மதுரை ஆகிய மத்திய சிறைச் சாலைக் காவலர்கள் குடியிருப்பில் இருக்கின்ற காவலர்களுக்கு தெரு விளக்குகள், அவர்கள் குடிக்கின்ற குடிதண்ணீர் ஆகிய அத்தனைக்கும் ஆகின்ற செலவுகளை அவர்களுடைய சம்பளத்திலே பிடிக்கின்ற நிலை இருக்கின்றது. இந்த அடிப்படையான பிரச்சினைகள் அங்கே இருக்கின்றன. அவர்களுடைய சம்பளத்திலே பிடிப்பது என்பது ஆகாத வேலை. ஆகவே, அரசு செய்யவேண்டிய வேலையை அவர்கள்மீது போடுவது தவறு என்று சொல்லி அதையெல்லாம் மாற்ற வேண்டுமென்ற கருத்தை உங்களிடம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வருவாய்த் துறை வட்டாட்சியர் அலுவலகம் என்று எடுத்துக்கொண்டால், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் 1965 வரையிலும் 3 வட்டாட்சியர் அலுவலகங்கள்; அதற்குப் பின்னர் 5 வட்டாட்சியர் அலுவலகங்கள் உள்ளன. குறிப்பாகச் சொல்லப்போனால் நேற்று பேப்பரிலே வந்திருக்கிறது. சென்னையினுடைய போலீஸ் கமிஷனர் அலுவலகம் இரண்டாக மாற்றப்படப் போகின்றது; சென்னையிலே ஜனத்தொகைக்கு ஏற்றார்போல் கமிஷனர் அலுவலகம் எல்லாம் இரண்டாகப் போகிறது என்று சொன்னார்கள். அதுபோல், இன்றைக்கு கார்ப்பரேஷனை எடுத்துக்கொண்டால் 10 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இப்படி எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் மக்களுக்கு எளிதாகப் பயன்படுகின்றவகையில் பிரிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. அதுபோல, இந்த சென்னை மாநகராட்சிப் பகுதியைப் பொறுத்தவரையில், ஏறக்குறைய 43 ஆண்டு காலமாக இந்த 5 தாசில்தார்கள், 5 தாலுகா அலுவலகங்கள்தான் இருக்கின்றன. ஆகவே, ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் எளிதாக மக்கள் பயன்படுகின்ற வகையில் அந்த தாலுகா அலுவலகங்கள் எவ்வளவு வேண்டுமென்பதை அடிப்படையாக வைத்து தாலுகாக்களைக் கூட்டவேண்டுமென்ற கோரிக்கையை நான் இந்தச் சபையிலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், தமிழ்நாடு முழுவதும் எந்தெந்தப் பகுதியிலே ஜனத்தொகை



கூடியிருக்கின்றதோ, அங்கேயெல்லாம் மக்கள் பயன்பெறுகின்ற வகையிலே தாலுகா அலுவலகங்கள் கூட்டப்படவேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தின் முற்பகுதியில் வரலாறு காணாத வறட்சியும், பிற்பகுதியில் கொட்டித் தீர்த்த கனமழை, நாடு கண்டிராத ஆழிப்பேரலை என்ற சுனாமி என்று இப்படி இயற்கை சோதித்தபோது உடனடியாக போர்க்கால நடவடிக்கையாக அந்த மக்களுக்குத் தேவையான. . . (குறுக்கீடு)

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிஷம். (குறுக்கீடு) ஆலோசனை சொன்னால் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** அந்த மக்களுக்குத் தேவையான நிவாரணத்தை வழங்கி, இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டுவந்து மக்களைக் காத்த தலைவி, மனிதாபிமானத்திற்குச் சொந்தக்காரர் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைய நிலை என்ன? கடந்த வட கிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்பட்ட மழையின் போது விவசாயிகள், மீனவர்கள், உப்பளத் தொழிலாளர்கள் இவர்களெல்லாம் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் மத்திய நிபுணர் குழுவும் பாதிப்புகளைப் பார்வையிட்டுச் சென்றது. மத்திய அரசு நிவாரணத் தொகையாக 1,531 கோடி ரூபாயை வழங்கவேண்டுமென்று நீங்கள் கோரிக்கையாக வைத்தீர்க்ள். நீங்கள் 200 கோடி ரூபாயை ஒதுக்கியிருப்பதாக அறிவித்தீர்கள். ஆனால், அங்கே விவசாயிகளுக்குக் கொடுத்தது என்னவென்று சொன்னால், இப்போது நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கின்றீர்களே, அந்த 56.5 கோடி ரூபாய்தான் அந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்ற நிலைகளை அறிவித்திருக்கின்றீர்கள். அந்த சோகத்திலிருந்தே மீளமுடியாத நிலையில் இருக்கின்றபோது, இப்போது மீண்டும் தென் பகுதி மாவட்டங்கள் அத்தனையும் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

குறிப்பாகச் சொல்லும்போது, என்னுடைய தூத்துக்குடி மாவட்டத்திலே விவசாயிகளினுடைய நிலம் பாதிக்கப்பட்டவை

மட்டும் 25,000 ஏக்கர். அதுபோல மிளகாய், மற்ற தொழில்கள் உள்ளவை 25,000 ஏக்கர். அதுபோல், உப்பளப் பகுதிகளிலும் கடுமையான பாதிப்பு. இப்படிப் பல்வேறு வகையிலே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அதற்கான நிவாரணங்களை வழங்கிவிட்டீர்களா? அதற்கான நிவாரணங்கள் வழங்க கணக்கெடுத்துவிட்டீர்களா? (குறுக்கீடு) இதிலே நிவாரணம் பெறுவதற்கான கணக்குகளை நீங்கள் எடுத்துவிட்டீர்களா? யாருக்கெல்லாம் வழங்கப்போகின்றீர்கள் என்று அறிவித்தீர்கள்? இன்றைக்கு விவசாயிகள் அந்த நிவாரணம் சரியாக வராதோ என்ற அச்சத்தோடு இருக்கின்றார்கள். உடனடியாக நிவாரணம் வழங்கவேண்டும். உப்பளத்தில் வேலை செய்கின்ற ஏறக்குறைய 1¼ இலட்சம் தொழிலாளர்கள் இனி 3 மாத காலத்திற்கு உப்பளத் தொழிலே செய்யமுடியாத நிலை உள்ளது. அப்படிப்பட்ட உப்பளத் தொழிலாளர்களுக்கும் நீங்கள் நிவாரணம் வழங்கவேண்டும்.

கடலுக்குச் செல்கிறவர்கள் 15 நாட்களாகக் கடலுக்கே போகவில்லை. அந்த மீனவர்களுக்கும் நீங்கள் நிவாரணம் வழங்கவேண்டும் என்ற ஆலோசனையை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிலமற்ற ஏழை விவசாயிக்கு 2 ஏக்கர் நிலம் இலவசமாக வழங்குவது என்பது உங்களுடைய திட்டம். நான் இதிலே கேட்பது என்னவென்றால், மாவட்டவாரியாக இலவச நிலம் பெறவுள்ள பயனாளிகளுடைய பட்டியலை அமைச்சர் தயாரித்துவிட்டார்களா? எந்தெந்த மாவட்டத்திலே எவ்வளவு பயனாளிகள் என்பதை அறிவிக்கத் தயாராக இருக்கின்றாரா? அதுபோல், மாவட்டவாரியாகத் தரிசு நிலங்கள் எத்தனை ஏக்கர் உள்ளது என்பதைக் கணக்கெடுத்துவிட்டீர்களா? இந்த நிலையை எல்லாம் பார்க்கின்றபோது, என்னுடைய தூத்துக்குடி மாவட்டத்திலே பயன் பெற்றிருக்கின்ற விவசாயிகள் எவ்வளவு என்று கேட்டால் 7,195 பேர் வெறும் 10,000 ஏக்கர்தான் பெற்று பயன் பெற்றிருக்கின்றார்கள். இன்னும் பயன் பெறவேண்டியவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? ஒரு இலட்சத்து 90 ஆயிரம் விவசாயிகள் இன்றைக்கு நிலமற்ற விவசாயிகளாக, அனாதைகளாக இருக்கின்றார்கள். நீங்கள் அந்த . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். நேரம் ஆகிவிட்டது.



**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** நீங்கள் அந்த நிலத்தைத் தரப்போகின்றீர்கள் என்று விவசாயிகள் ஏக்கத்தோடு இருக்கின்றார்கள். நான் விசாரித்த வகையில் தூத்துக்குடியில் வேறு நிலமே இல்லை என்ற நிலை இருக்கின்றது. அப்படி இருக்கின்றபோது, விவசாயிகளுக்கான நிலங்களைக் கொடுப்போம் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வருகின்றபோது அந்தத் திட்டத்தின் பயன் எல்லோருக்கும் வந்து சேரவேண்டும். பாதிக்கப்படுகின்றவர்கள் அத்தனை பேருக்கும் வரவேண்டும்; அதுதான் திட்டம். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாத நிலை இருக்கின்றபோது, பாதிக்கப்படுகின்ற ஒரு இலட்சத்து 90 ஆயிரம் விவசாயிகளுக்கும், அந்த நிலம் அப்படி வழங்கப்படவில்லையென்றால் அவர்களுக்கான தொகைகளை நீங்கள் வழங்கவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வலியுறுத்தலை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. ஐயப்பன். (குறுக்கீடு) இல்லை, 15 நிமிடங்கள் முடிந்துவிட்டன. (குறுக்கீடு) பிரதான எதிர்க்கட்சிக்குத்தான் 15 நிமிடங்கள் கொடுத்திருக்கிறோமே? (குறுக்கீடு) 18 நிமிடங்கள் கொடுத்திருக்கிறோம். (குறுக்கீடு) மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் நிறைய விளக்கங்களை இங்கே கேட்டிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக சுனாமியைப் பொறுத்த அளவில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம்தான் வழங்கப்பட்டது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டு ஆண்டுக் காலத்திலே அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்காக இதுவரை அரசு செலவழித்திருக்கின்ற பணம் 1,780 கோடி ரூபாய் என்பதை நான் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேகூடச் சொன்னார்கள், கடந்த வடகிழக்குப் பருவமழையின்போது நிவாரணப் பணிகளுக்கு 200 கோடி ரூபாயை அரசாங்கம் ஒதுக்கியது; அதிலே 56.5 கோடி ரூபாய்தான் செலவழித்திருக்கின்றார்கள்; ஒதுக்கிய பணத்தில் மீதம் என்னவாயிற்று என்று கேட்டார்கள். 200 கோடி ரூபாயை அரசாங்கம் அனைத்து

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வழங்கிவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உடனடி நிவாரணத்திற்காக சுமார் 56 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள்.

இதுபோக, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் என இதர அமைப்புகளுக்கு மொத்தம் 143 கோடி ரூபாயை அங்கு இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அங்கே விடுவித்து இருக்கிறார்கள். அந்தத் தொடர் பணிகள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குரிய விளக்கத்தைக்கூட நான் பின்னர் தரத் தயாராக இருக்கிறேன்.

முற்பகல் 11-50

இப்போதுகூட ரூபாய் 1,500 கோடி நாம் கேட்டிருக்கிறோம். நிரந்தரமாகச் சாலைகள் மற்றும் அங்கு இருக்கக்கூடிய வாய்க்கால்கள், ஓடைகள், குளங்கள் அத்தனையும் செப்பனிடப்படுவதற்கு Permanent Restoration, Temporary Restoration, இரண்டு திட்டங்களும் இருக்கின்றன. தற்காலிகப் பணிகளை நிறைவேற்றுவதற்கும், நிரந்தரப் பணிகளை நிறைவேற்றுவதற்கும் அரசு மூலம் திட்ட மதிப்பீடு தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். தலைவர் கலைஞர், முதல்வர் அவர்கள் வடகிழக்குப் பருவமழை முடிந்தவுடனேயே ரூ.200 கோடி ஒதுக்கியது அல்லாமல் 27-12-2007-லே நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு இந்தத் தொகையினை வழங்கவேண்டும் என்று நினைவூட்டுக் கடிதம் ஒன்று அனுப்பியிருக்கிறார்கள். இப்போதுகூட கடிதத்தை எழுதியிருக்கிறார்கள். இப்போது ரூ.175 கோடி ஒதுக்கியிருக்கிறோம், இப்போது ஏற்பட்ட இந்த வெள்ளம், நாம் எதிர்பார்க்காத காலகட்டத்தில் அதிகமான மழை தமிழ்நாட்டிலே கோடை காலத்திலே பெய்ததனால் ஏற்பட்டது. இது unseasonal rain. இந்த காலகட்டத்தில் அதிகமான மழை பெய்திருக்கிறது. மூன்று மாத காலத்திற்குள்ளாகவே இரண்டு மழை, வெள்ளத்தைத் தமிழகம் சந்தித்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏராளமான நிதியினை ஒதுக்கியுள்ளார்கள். முதலில் ரூ.200 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இப்போது ரூ.175 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் ஒதுக்குவார்கள். மத்திய அரசிடம் இதற்கு எவ்வளவு நிதி வந்திருக்கிறது என்று நீங்கள் கேட்கிறீர்கள், (குறுக்கீடுகள்) ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மத்திய அரசு நிதியை ஒதுக்குவதற்கென்று ஒரு கமிட்டி இருக்கிறது. Group of Ministers இருக்கிறார்கள். அமைச்சர் குழு ஒன்று இருக்கிறது,



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு என்று. அந்தக் கமிட்டி இன்னும் கூடவில்லை. அந்தக் கமிட்டி கூடியவுடன் மாநில சர்க்காருக்கு நிதி கிடைக்கும். (குறுக்கீடுகள்) அதேசமயத்தில் இன்னும் ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று சொன்னால் ரொம்ப முக்கியமாக இங்கே குறிப்பிட்டிருப்பது, தூத்துக்குடி மாவட்டத்தில் இந்த ஆட்சியில் நிலமற்ற ஏழைகளுக்கு எவ்வளவு நிலம் கொடுத்து இருக்கிறீர்கள் என்பதாகும். பின்னால் இதற்குப் பதில் சொல்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிறைய பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவ்வளவு விவரமும் இப்போது சொல்ல முடியாது. ஒன்றே ஒன்றைச் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) சொல்லி முடித்துவிடுகிறேன். கொஞ்சம் விடுங்கள். (குறுக்கீடுகள்) தூத்துக்குடியில் மட்டும் நிலமற்ற ஏழைகளுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுக்கும் திட்டத்தில் ஏறத்தாழ 1,542 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது, ஏற்கெனவே அவர்கள் உழவடை செய்து அனுபவித்துக்கொண்டிருக்கிற நிலங்கள் என்ற வகையில் ஏறத்தாழ 407.69 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. இதுபோக மூன்றாவது Category -யிலும் சொந்தமாக நிலம் வைத்து இருப்பவர்களுக்கு நம்முடைய விவசாயத் துறையின் முலமாக பண்படுத்தித் தருகின்ற நிலத்தை சேர்த்து மொத்தம் இதுவரை தூத்துக்குடி மாவட்டத்தில் 9616.66 ஏக்கர் நிலம் இன்றைக்கு பண்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியதில் மிக முக்கியமாக சிறைத் துறையைப் பற்றிச் சொன்னார்கள். காவல் துறைக் காவலர்களுக்கு இணையான சம்பளம் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். சிறைத் துறை காவலர்களுக்கும், காவல் துறைக் காவலர்களுக்கும் வேறுபாடு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுசம்பந்தமாக நான் பின்னர் பதில் சொல்கிறேன். குறிப்பாக, மிகை நேரப்படி, சலுகைப் படி எல்லாம் கொடுக்கிறார்களா என்று கேட்டார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நீண்ட நெடுங்காலமாக இருந்த அந்தக் குறைபாட்டை கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே அவர்களுக்கு சலுகைப் படியை உயர்த்தி ரூ.30 என்று இருந்ததை ரூ. 100 ஆக அறிவித்து, அதுபோல் மிகை நேரப் படியையும் ரூ. 100 ஆக உயர்த்தி வழங்கியிருக்கின்ற ஆட்சி

தலைவர் கலைஞர் ஆட்சி என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே கடைசியாக ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) கொஞ்சம் இருங்கள். ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். பின்னர் சொல்ல முடியாதல்லவா? அவர் சொன்னதற்குப் பதில் சொல்கிறேன். விற்பனைப் பத்திரம் பற்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். வீட்டு வசதித் துறையைப் பொறுத்து, சார் ஒன்றே ஒன்று சொல்லிவிடுகிறேன். வீட்டு விற்பனைப் பத்திரத்தை பொறுத்தவரையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த ஆட்சியில் நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா என்று கேட்டார்கள். இதுவரை, இரண்டு ஆண்டு காலத்தில் 43,000 வீட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் விற்கப்படாமல் இருந்த மொத்த எண்ணிக்கை 26,000-ல் 16,000 எண்ணிக்கையைக் கழக அரசு விற்று இன்றைக்கு நம்முடைய வீட்டு வசதி வாரியத்திற்குச் சேர்த்து இருக்கிறது என்பதைத் தெரிவித்து மற்றவற்றை என்னுடைய பதிலுரையில் தெரிவிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐயப்பன். (குறுக்கீடுகள்) இங்கே பாருங்கள். (குறுக்கீடு) இங்கே பாருங்கள். 15 நிமிடங்கள் என்று ஒதுக்கி 18 நிமிடங்கள் பேசிவிட்டார். 18 நிமிடங்கள் கழித்துதான் அமைச்சர் பேசினார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் டைம் பார்ப்பதில்லை. இல்லை, இல்லை. 18 நிமிடங்கள் பேசிவிட்டார். 15 நிமிடங்கள் கொடுத்தோம். 18 நிமிடங்கள் பேசிவிட்டார். அப்புறம் நீங்கள் என்ன முடிவு வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் கூடத் தர முடியாது. திரு. ஐயப்பன், பேசுங்கள்.

*முற்பகல் 11-55*

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்தாம் முறையாக ஆட்சிக் கட்டிலை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் வாழும் வள்ளுவரே, இந்திய மண்ணில் தமிழ் மண்ணுக்கு தனி வரலாறு கண்ட தங்கப் பெட்டகமே, எழுதுகோலில் வளையாத எண்ணச் சித்தரே ஏற்றமிகு அண்ணாவின் எழுச்சிமிகு தம்பி, திராவிட வழிகாட்டி, அரசியல் மாணவர்களின் பாடம், அகிலத் தமிழுக்கு அலங்கார நுழைவாயில், ஆற்றலும்...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐயப்பன், கொஞ்சம் இருங்கள். இன்றைக்கு 4 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டி



இருக்கிறது, பாருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. 15 நிமிடங்களுக்குப் பதிலாக 18 நிமிடங்கள் திரு. அனிதா ராதாகிருஷ்ணன் பேசிவிட்டார். அவர் பெயர் அனிதா ராதாகிருஷ்ணன் என்கிறதனாலே 3 நிமிடம் நான் கொடுத்திருக்கிறேன். ராதாகிருஷ்ணன் என்றால்கூட அடித்திருப்பேன். அனிதா ராதாகிருஷ்ணன் என்பதாலே கொடுத்திருக்கிறேன். 18 நிமிடங்கள் முடிந்துவிட்டன. ஒரு நிமிடம்கூட என்னால் கொடுக்க முடியாது. நீங்கள் Chairperson-உடன் ஒத்துழைப்பு கொடுங்கள். திரு. ஐயப்பன், பேசுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஐந்தாம் முறையாக ஆட்சிக் கட்டிலை அழகுபடுத்திக் கொண்டிருக்கும் வாழும் வள்ளுவரே, இந்திய மண்ணில் தமிழ் மண்ணுக்கு தனி வரலாறு கண்ட தங்கப் பெட்டகமே, எழுதுகோலில் வளையாத எண்ணச் சித்தரே, ஏற்றமிகு அண்ணாவின் எழுச்சிமிகு தம்பி . . .(குறுக்கீடு)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐயப்பன், பேசுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** திராவிட வழிகாட்டி, அரசியல் மாணவர்களின் பாடம், அகிலத் தமிழர்களின் அலங்கார நுழைவாயில், ஆர்த்தெழும் தமிழர்களின் ஆல விழுது, தமிழனின் நாகரிக வரலாறு எனத் தனிப்பெரும் கருணையாக, அருட்பெரும் ஜோதியாக, இந்த அவையை அலங்கரித்துக் கொண்டு இருக்கும் எங்கள் அருமைத் தலைவர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களே (மேசையைத் தட்டும் ஒலி) வளரும் தலைமுறையின் வாயில், வளரும் இளைஞர்களின் இதயம், அரசியல் கானகத்தின் ஒளிக்கீற்று, இளைஞர்களின் வாழ்வின் இளஞ்சூரியன், கனவுத் தமிழர்களின் நனவுப் பட்டறை, எதிர்காலத் தமிழகத்தின் ஏற்றமிகு தீபம், இளைஞர்களின் வரலாற்றின் கண் இமை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களே, கழகத்தின் தூணாம், கலைஞர் அவர்களின் தோளாம் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஆற்காட்டார் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களே, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த

உங்கள் அத்தனை பேருக்கும் உளமார என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறைச்சாலைகள், வருவாய், இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை என நான்கு மானியங்களில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐயப்பன், தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** ஆங்கிலேயர்களால் 1886-லே அமைக்கப்பட்டதுதான் வருவாய்த் துறை வாரியம். அப்போது நில வருவாய் மட்டுமே மாநில நிதித் துறையின் ஊற்றுக் கண்ணாக இருந்தது. கழக ஆட்சி வந்தபோது எல்லாம் இந்த வருவாய்த் துறைக்கு வளமான காலம். ஆற்றல்மிகு, அச்சாரமிகு, அழகுமிகு வரவுத் திட்டங்களை இந்தத் துறை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

"ஓர்தட்டிலே பொன்னும் ஓர்தட்டிலே
நெல்லும் ஒக்க விற்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே
தங்கள் காரியப் போர்
ஆர்தட்டினும் தட்டு வராமலே
யன்ன தானத் துக்கு
மார்தட்டிய துரை மால் சீதக்
காதி வரோ தயனே!"

என்பது இயற்கை இடர்ப்பாடுகளில் ஒன்றான மழைவெள்ளம் இல்லாத பஞ்ச காலத்திலே பாடியது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Nothing will go on record.

**திரு. கோ. ஐயப்பன்:** மழை பெய்தும் கெடுக்கிறது என்பார்கள். அந்த வகையிலே சமீபத்தில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளின்போது நம் கலைஞர் அவர்கள் சீதக்காதி வள்ளலைப்போல சற்றும் தாமதிக்காமல் சட்டசபையை ஒத்திவைத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர்களை எல்லாம் பார்வையிடச் செய்து, நிவாரணங்களை வழங்கி, விவசாயிகள் வயிற்றிலே பால் வார்த்தார்கள் என்றால் அது பெருமைக்குரிய



ஒரு நிகழ்வாகும். தலைவர் கலைஞரின் எண்ணங்கள் எல்லாம் எப்பொழுதும் தமிழ்நாட்டு மக்களின் ஏற்றம் குறித்துத்தான் இருக்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை இல்லாத அளவிற்கு ஒரு ஹெக்டேர் நிலத்திற்கு ரூ.7,500 வழங்கி சாதனை புரிந்த. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப்பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் வேறு ஓர் உறுப்பினரை அழைத்துப் பேசிக்கொண்டு இருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமானால் அமைச்சர் பதிலளிக்கிறபொழுது கேட்கலாம்; விளக்கத்தைப் பெறலாம். இப்பொழுது அவர் அமரலாம். அவர் பேச்சைத் தொடங்கிவிட்டார். (குறுக்கீடுகள்) பரவாயில்லை. முடிந்து போய் விட்டது. அவர் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐயப்பன், பேசுங்கள்.

**திரு. கோ. ஐயப்பன்:** சிலப்பதிகாரத்தில் கண்ணகி வழக்குரை காதையில் நீதி கேட்பதாக இளங்கோவடிகள் எழுதியுள்ளார். அந்த வகையிலே 1969 ஆம் ஆண்டு, தான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற அந்த தருணத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் மனுநீதித் திட்டம் என்ற ஓர் உன்னதத் திட்டத்தைக் கொண்டு வந்து, அத்திட்டத்தில் ஒரு சிறிதும் தொய்வு ஏற்படாமல் தொடர்ந்து நடைபெற வழிவகுத்தவர். தற்போது அத்திட்டத்தால் வகுப்புச் சான்றிதழாக இருந்தாலும், வசிப்பிடச் சான்றிதழாக இருந்தாலும், வாரிசுச் சான்றிதழாக இருந்தாலும், வருமானச் சான்றிதழாக இருந்தாலும் அனைத்தும் எளிதாகப் பெற முடிகிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*நண்பகல் 12-00*

1970-லே கழக அரசில்தான் நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. 1960-லே 30 standard acre என்று இருந்த உச்ச வரம்பு 1970-லே 15 standard acre என்று கொண்டுவரப்பட்டு 1,78,850 ஏக்கர் நிலங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை கையகப்படுத்தப்பட்டன.

நீண்ட காலத்திற்குப் பிறகு மாவட்ட எல்லைகளை மாற்றியமைத்தவர் தலைவர் கலைஞர் முதல்வர் அவர்கள்தான். 14-1-1971-லே புதுக்கோட்டை மாவட்டத்தைத் தோற்றுவித்தார்கள். 1989-1991 ஆம் ஆண்டுகளிலே திருவண்ணாமலை, நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்களைத் தோற்றுவித்தார். வேலூர் வருவாய்க் கோட்டம், பரமத்திவேலூர் வருவாய்க் கோட்டம் ஆகியவற்றை உருவாக்கியது தலைவர் கலைஞர் அவர்களுடைய சாதனைகள். 1996-லே நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர் ஆகிய நான்கு மாவட்டங்களை உருவாக்கித் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். திருச்செங்கோடு, மதுராந்தகம், திருத்தணி, பொன்னேரி, உத்தமபாளையம், திருவாரூர், குளித்தலை, ஆத்தூர் ஆகிய 8 வருவாய்க் கோட்டங்களை உருவாக்க அனுமதியளித்தவர் வாழும் வள்ளலாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1999-லே பெரம்பலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து அரியலூர் மாவட்டதிற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டன. கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த அரியலூர் மாவட்டத்தை இரத்துச் செய்தார்கள். மீண்டும் முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றதும், அரியலூர் மாவட்டம் மீண்டும் உதயமாகும் என்று அறிவித்தார்கள். அதன்படி அண்மையில், நமது இனிய தளபதியார் அவர்கள் 23-11-2007 அன்று தொடங்கி வைத்து அரியலூர் மாவட்டம் உதயமானது என்பதை இங்கே பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தூத்துக்குடி, சென்னை, விழுப்புரம், திருவண்ணாமலை, நாமக்கல், கரூர், திருவாரூர், நாகப்பட்டினம், திருவள்ளூர், தேனி உள்பட பல்வேறு மாவட்ட ஆட்சியாளர் அலுவலங்களைப் புதிய பொலிவுடன் இன்றும் கண்ணுக்கினிய இனிய ஒளியுடன் விளங்குமாறு பல்வேறு மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை அமைத்துப் பெருமை சேர்த்தவர் தலைவர் கலைஞர் என்பதை இங்கே பட்டியலிட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரியலூர் மாவட்டத்திற்குப் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சி மாவட்டத்திற்குப் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தஞ்சை மாவட்டத்திற்குப் புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் என ரூ.20 கோடி மதிப்பீட்டிலே பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதைப் பெருமையோடு குறிப்பிட விரும்புகின்றேன்.



ஈரோடு, கோவை ஆகிய மாவட்டங்களின் எல்லைகள் மாற்றியமைக்கப்பட உள்ளன. 29-12-2007 அன்று முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்தவாறு, திருப்பூரைத் தலைநகராகக்கொண்டு புதிய மாவட்டம் உருவாக இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்ட மக்களின் நீண்டகாலக் கோரிக்கையையேற்று, கருப்படிக்குப்பம். பொன்னமராவதியை தலைமையிடமாகக்கொண்டு இரு புதிய வருவாய் வட்டங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. தூத்துக்குடி, கோவில்பட்டி நகரத்திற்கு அருகிலுள்ள திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டத்தைச் சேர்ந்த 12 வருவாய்க் கிராமங்கள் கோவில்பட்டி வட்டத்துடன் இணைய இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் நின்றுகொண்டிருந்தனர்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐயப்பன், ஒரு நிமிடம். (குறுக்கீடு) நான் உட்காரச் சொல்லி உட்காரவில்லையென்றால், (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். வேறு எங்கிருந்து direction வந்தால் உட்காருவீர்கள்? (குறுக்கீடுகள்) நான் வெளியேற்றமாட்டேன். நாங்கள் ஜனநாயகத்தின்மேலே முழு நம்பிக்கை உள்ளவர்கள். நான் வெளியேற்றமாட்டேன். நீங்கள் நிற்பதானால் நில்லுங்கள். திரு. ஐயப்பன்.

**திரு. கோ. ஐயப்பன்:** பள்ளி மாணவர்கள் உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி முடித்துச் செல்கின்றபோது அவர்கள் சாதிச் சான்றிதழ் பெற மிகவும் சிரமப்படுகின்றனர் என்பதையறிந்த தாயுள்ளங்கொண்ட முதல்வர் அவர்கள், 1989 ஆம் ஆண்டு பள்ளியிலேயே சாதிச் சான்றிதழ் வழங்கப்படும் என்று அறிவித்துப் பெருமை சேர்த்தவர். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் அண்ணா அவர்கள், 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா வழியில் நடைபோடும் தலைவர் கலைஞர் அவர்கள், 1971 ஆம் ஆண்டு பல இலட்சம் பேருக்கு அவர்கள் குடியிருந்த வீடுகளை, அதாவது அனுபவதாரர்கள் சட்டத்தின்கீழ் சொந்தமாக்கி, அவர்களுக்குப் பல்வேறு சலுகைகளையும் உரிமைகளையும் பெற்றுத் தந்தவர். இதுபோன்று வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கியது குறித்து, 1971 ஆம் ஆண்டு தஞ்சை மண்ணிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மணலி கந்தசாமி அவர்கள்

பாராட்டியதை இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன். பல பேர் இரத்தம் சிந்திப் பெறமுடியாத உரிமையை ஒரு துளி பேனா மையினால், ஏறத்தாழ பல இலட்சம் பேர்களுக்கு அவர்கள் குடியிருந்த வீடுகளை உரிமையாக்கித் தந்தவர் முதல்வர் கலைஞர் அவர்கள் என்று—நான் கூறவில்லை—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த பெருமைக்குரிய மணலி கந்தசாமி அவர்கள் 1971-லே பெருமைபடக் கூறியதை இங்கே நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடப்பாண்டிலே முதல்வர் கலைஞர் அவர்கள் ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று வந்தபொழுது, 3,98,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டு சிறப்புமிகு திட்டத்தை அறிவிப்புச் செய்திருக்கின்றார் என்பதை இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நடப்பாண்டில், அதாவது 2008-2009 ஆம் ஆண்டில், 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வீட்டுமனைப் பட்டாக்களுக்கு குடியிருப்பு கால அளவு 10 ஆண்டுகள் என்பது தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட சட்டம். ஏற்கெனவே 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள் என்ற சட்டத்தையெல்லாம் மாற்றி, 10 ஆண்டுகள் என்ற சட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐயப்பன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 12-05

**திரு. கோ. ஐயப்பன்:** இப்போது மேலும் அந்த 10 ஆண்டுகள் என்பதைக் குறைத்து, 5 ஆண்டுகள் குடியிருந்தாலே போதும்; அவர்களுக்கு அந்த மனைப் பட்டாக்களை வழங்குகின்ற ஒரு நிலையை உருவாக்கித் தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். 2006 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலே தலைவர் கலைஞர் அவர்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தவாறு, இதுவரையிலே 1,37,995 விவசாயிகளுக்கு, 1,60,620 ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்கியவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நன்றியைச் சொல்லி முடியுங்கள்.



**திரு. கோ. ஐயப்பன்:** என்னுடைய தொகுதியின் ஒரு சில கோரிக்கைகளை வலியுறுத்த விரும்புகின்றேன். எங்களுடைய மருத்துவமனை அனைத்து வசதிகளும் நிறைந்த மருத்துவமனையாக இருக்கின்றது. 100 ஆண்டுக் கால பழமைவாய்ந்த, பெருமைமிக்க மருத்துவமனையாக இருக்கின்றது. அதை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரிதான்; அவர் உள்ளூர் மந்திரி. நீங்கள் கேட்பதைக் கொடுத்துவிடுவார். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) முடித்துவிட்டாரா? (குறுக்கீடு) ஒரு நிமிடம் கொடுங்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்)

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் தொடர்ந்து நின்று கொண்டிருந்தனர்.)

**திரு. கோ. ஐயப்பன்:** கடலூருக்குப் புறவழிச் சாலையை அமைத்துத் தந்து உதவிடுமாறு அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, 13 ஆண்டுக் காலமாக இயங்காமல் இருந்த கப்பல் போக்குவரத்தை, மீண்டும் இயக்கி பெருமை சேர்த்து, கப்பல் துறைமுகத்திலே இப்போது கப்பல் எல்லாம் வருகின்ற அளவிற்கு, கடலூருக்குப் பெருமை சேர்த்துத் தந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, கப்பல் இயங்குகின்ற அளவிற்குத் துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, கடலூரில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தையும், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தையும் புதிய கட்டடங்களாக மாற்றியமைத்துத் தந்து உதவிடுமாறு கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிரதான எதிர்க்கட்சியில், மாண்புமிகு கொறடா அவர்களோ அல்லது மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களோ, ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்புகின்றார்கள்; விளக்கம் கேட்பதிலே தவறு இல்லை. ஆனால், தங்களுடைய அனுமதியைப் பெற்றிருக்கவேண்டும். ஆனால், அதற்காக விடாப்பிடியாக நின்று கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தோன்றுவது என்னவென்றால், இங்கே மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு எல்லாம் நிற்கிறார்கள். இப்படி நாங்கள் அந்தக் காலத்திலே பேசியபோது, எப்படி அனுப்பினார்கள்? (குறுக்கீடுகள்) எப்படி அனுப்பினார்கள் என்று தெரியும். இருந்தாலும், அவற்றையெல்லாம் மறப்போம்; மன்னிப்போம். அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று கேட்போம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஒரு நிமிடம் தருகிறேன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குச் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் பயன் தருகின்ற வகையிலே, அதற்கான நிதியாதாரங்களைப் பெற்றுத் தந்ததும் எங்களுடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகளை எப்படிச் செய்யவேண்டுமென்று திட்டம் வகுத்துக் கொடுத்தவரும், எங்களுடைய தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2 ஆண்டுக் காலமாக வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சியுற, அனைத்துத் துறைகளிலும் தமிழகம் தலைநிமிர, அமைதிப் பூங்கா குலுங்குகின்ற பூஞ்சோலையாகத் தமிழகம் மாறிட, மீண்டும் எப்போது வரும் எங்கள் அம்மா அவர்களுடைய ஆட்சி என்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகமே ஏக்கப் பெருமூச்சில் ஏங்கி நிற்கின்றது. ஏழைகளின் வாழ்வு மலர, எங்கள் அம்மா அவர்கள் அரியணை ஏறும் நாளை எதிர்நோக்கி ஆவலோடு காத்திருக்கிறார்கள் எங்கள் தாய்த் தமிழக மக்கள் என்பதைத் தெரிவித்து, நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சியினர் இந்த நாட்டையே சுவரக்கூடிய ஒரு மாபெரும் கருத்தைச் சொல்லாமல் போயிருப்பார்கள். இப்போது சொல்லியிருக்கிறார்கள். இந்த மங்களாசாசனத்திற்காகவா இவ்வளவு பெரிய பாடு? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்கள்.

***திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே வருவாய்த் துறை, சிறைத் துறை, இயற்கைச் சீற்றம் மற்றும் வீட்டு வசதித் துறை சார்ந்த மானியக் கோரிக்கைகளிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தியாகத் தலைவி, ஓய்வுக்கு ஓய்வு தந்த ஒப்புயர்வற்ற தலைவி, அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், தன்மானத் தலைவர் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், எங்கள் சட்டப் பேரவைக் கட்சியின் தலைவர் அண்ணன் திரு. டி. சுதர்சனம் அவர்களுக்கும், துணைத் தலைவர் திருமதி டி. யசோதா அவர்களுக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவரான உங்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை என்பது ஒவ்வொரு மனிதனுடைய தினசரி வாழ்க்கையிலே முக்கியப் பங்கு வகிக்கும் ஒரு துறையாகும். இந்தத் துறை பெயரில் மட்டும் வருவாய்த் துறை; ஆனால், நலத் திட்டங்களை மக்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிற அற்புதமான துறை. குடியிருக்க இடமற்ற ஏழை விவசாயிகளுக்கு 3 இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இந்த ஆண்டு 3,98,000 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கியுள்ளதை மனதார வரவேற்கிறேன். புறம்போக்கு நிலங்களிலே குடியிருப்போருக்குப் பட்டா வழங்குவதற்குக் குடியிருப்புக் கால அளவை, 10 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுக் காலமாகக் குறைத்தும், மேலும் வருமான வரம்பை நீக்கியதும் மிகவும் வரவேற்கத்தக்க செயல்.

பிற்பகல் 12-10

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி தலைமை)

வருகிற ஆண்டுகளிலே ரூ.20 கோடி செலவிலே ஆர்.டி.ஓ. அலுவலகம் மற்றும் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், கிராம நிருவாக அலுவலகம், குடியிருப்புகள் கட்டுவதற்குத் திட்டமிட்டுள்ளதை வரவேற்கிறேன். அரியலூரைத் தொடர்ந்து திருப்பூரை மாவட்டமாக அறிவித்து, அதேபோல நிர்வாக வசதிக்காக புதிய வருவாய் வட்டங்களை அறிவித்துள்ளதை வரவேற்கிறேன்.

ஈரோடு வருவாய் வட்டம் என்பது சுமார் 8 இலட்சம் மக்களை உள்ளடக்கிய பகுதியாக உள்ளது. இதிலே கொடுமுடி, மொடக்குறிச்சி ஒன்றியப் பகுதிகளை உள்ளடக்கிய புதிய வருவாய் வட்டம் ஒன்றை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அந்தியூரையும் உள்ளடக்கி ஒரு தனி வருவாய் வட்டம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 35,268 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு மீதமுள்ள வீடுகள் கட்டப்பட்டு வருவதாகவும், தொண்டு நிறுவனங்கள்மூலம் கட்டப்பட முடியாத 3,912 வீடுகளை அரசே கட்டப்போவதாகவும், இராஜீவ் காந்தி சுனாமி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் கடலிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்திலே கட்டப்பட்டுள்ள 52,000 குடியிருப்புகளிலே 22,000 வீடுகள் கட்ட வேலைகள் நடந்துகொண்டிருப்பதாகவும், மீதி 30,000 குடியிருப்புகளுக்கு அனுமதி வந்தவுடன் பணி துவங்குவதாகவும் சொல்லப்பட்டுள்ளதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மத்திய அரசாலே தொடங்கப்பட்டுள்ள இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் சார்பிலே சுமார் 9 இலட்சத்து 77 ஆயிரம் பேர் பயனடைந்து, 2008-2009 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே ரூ.830 கோடியாக உயர்ந்துள்ளதை வரவேற்கிறேன்.

சாதாரண வருமானச் சான்றிதழ்களில் ரூ.12,000 என்று இருந்தால்தான் பல்வேறு அரசின் சலுகைகள் ஏழையெளிய மக்களுக்குக் கிடைக்கும் என்ற நிலையிலே, தமிழகத்திலே எந்த நிருவாக அதிகாரியும், வருவாய் வட்டாட்சியரும் ரூ.18,000 அல்லது ரூ.24,000 என்றுதான் சான்றளிக்கிறார்கள். இதனால் உண்மையான பயனாளிகள் பயன் பெற முடிவதில்லை. ஆகவே, தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்கள் மக்களுக்கு வழங்குகிற நலத் திட்டங்கள் முழுமையாகச் சென்று சேரவேண்டுமென்று சொன்னால் வருமான உச்சவரம்பை ரூ.24,000 ஆக உயர்த்தி, அரசின் சகல நலத் திட்டங்கள்மூலம் ஏழையெளிய மக்கள் பயன்பெற கருணை உள்ளத்தோடு அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தீப்பிடித்து எரிந்துபோன குடிசைகள், மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட குடிசைகள், இவற்றுக்கென 2,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இந்த 2,000 ரூபாயிலே எந்தவிதமான வேலையும் செய்ய இயலாது. குறைந்தது 10,000 ரூபாயாவது நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே இசை வேளாளர் என்ற சமூகம் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஈரோடு மாவட்டத்திலே உள்ள இசை வேளாளர்களுக்கு இசை வேளாளர் என்ற சான்றிதழ் வழங்கப்படுவதில்லை. பல முறை இதுகுறித்து தகவல் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லாததால் பல இசை வேளாளர் இனக் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் உடனே இதற்கு உத்தரவிட்டு எங்கள் மாவட்டத்தினுடைய இசை வேளாளர் சமூகத்திற்கு நீதி கிடைத்திட உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் ஆயுள் தண்டனை பெற்றுவருகிற கைதிகள், அவர்களது நன்னடத்தையின்பேரிலே 10 ஆண்டுகளிலே விடுவிக்கப்படுகிறார்கள். இன்றைக்கு அதை மாற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நூற்றாண்டைக் கொண்டாடுகிற இந்த நேரத்திலே 7 ஆண்டு காலமாகக் குறைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சிறைச்சாலைகளுக்கு நவீன வசதிகள் இன்றைக்கு தேவையென்கின்ற அடிப்படையிலே கட்டப்படுகிற போதிலும், சிறையிலே உள்ள கைதிகளுக்கு வாரத்திலே ஒரு நாள் யோகாசனப் பயிற்சி, மன நல மருத்துவர்கள்மூலம் கலந்தாய்வு-counselling என்ற நல்ல மாற்றத்தை உருவாக்கி அவர்களை சமூகத்திலே நல்ல மனிதர்களாக மாற்றிக்கொடுக்க வேண்டிய அடிப்படையில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனியார் அமைப்புகள் மூலம் பயிற்சி கொடுப்பதை வரவேற்கிறேன்.

மேலும், அசைவ உணவு சாப்பிடும் கைதிகளுக்கு சிறையிலே வாரம் ஒரு முறை கோழிக் கறியும், சைவத்திற்கு கேசரியும், உருளைக்

கிழங்கும் கொடுப்பதை மனதார வரவேற்கிறேன். புழல் சிறை நீங்கலாக மற்ற அனைத்துச் சிறைகளிலும் சுமார் ரூபாய் 126.14 இலட்சம் ரூபாய் செலவிலே 6,307 மின் விசிறிகள் அமைப்பதை மனதார வரவேற்கிறேன். மத்திய சிறைச்சாலைக் கைதிகளுக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் சார்பிலே திறந்தவெளிப் பல்கலைக்கழகப் பாடத் திட்டத்தின் சார்பிலே 1,230 பேருக்கும், அதேபோல பட்டயப் படிப்புக்கு 285 பேருக்கும் இந்த ஆண்டு 1 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

வீட்டு வசதித் துறையின்கீழ் நகர்ப்புறங்களில் மட்டுமே கட்டப்படுகிற வீடுகளைப்போல கிராமப்புறங்களிலே உள்ள பள்ளி ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், கிராம நிருவாக அதிகாரிகள், இப்படி அத்தனை அரசு ஊழியர்களுக்கும் வீடுகள் கட்டித் தந்தால் கிராமப்புறங்களிலே பணியாற்றுகிறவர்கள் அனைத்து வசதிகளும் கிடைப்பதன் காரணமாக கிராமத்தை விட்டுச் செல்லமாட்டார்கள்.

நம்முடைய அருமைக்குரிய அண்ணன் ஞானசேகரன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய ஆந்திர அரசாங்கம், ஹைதராபாத் மாநகரிலே, கர்நாடக மாநிலம், பெங்களூர் மாநகரிலே எம்.எல்.ஏ.க்களுக்கு தலா இரண்டு கிரவுண்ட் வீட்டுமனைகளை சலுகை விலையிலே தந்து 'எம்.எல்.ஏ.க்கள் காலனி' அமைத்துள்ளன. நான் ஒன்றே ஒன்றைத்தான் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டு பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழா. ஆகவே, தலைவர் அவர்களே, முதல்வர் அவர்களே, நீங்கள் இந்தப் பகுதியிலே சென்னையிலே சோழிங்கநல்லூரிலே 'அறிஞர் அண்ணா நூற்றாண்டு விழா சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு' என்ற ஒன்றை உருவாக்கி அதைச் சலுகை விலையிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-15

வட்டக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் சார்பிலே 1991-லே 60,000 ரூபாய் கடன் வாங்கியவன் 2004-லே வட்டி, கூட்டு வட்டி, penal interest அத்தனையும் சேர்த்து 2 இலட்சத்து 16,000 ரூபாய் என்று கணக்கிடப்பட்டு அது அசலாக்கப்பட்டிருக்கிறது. ஆக, இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டம் சரியான திட்டமல்ல. அசலாகக் கொடுக்கப்பட்ட 60,000 ரூபாயை வேண்டுமானால் நீங்கள் பெற்றுக்கொண்டு மீதியிருக்கிற வட்டி அத்தனையையும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



மூதறிஞர் இராஜாஜி காலத்திலே நகர வளர்ச்சிக் கழகம் என்று தொடங்கப்பட்டது. பின்னர் பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரப்பட்டன. அவற்றில் குடியிருப்பவர்களுக்கு அந்த வீடுகள் உரிமையாக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதற்குப்பிறகு வீட்டு வசதி வாரியம் உருவாக்கப்பட்டு அதில் ஒரு பகுதி வீடுகள் தியாகராய நகரிலே குடியிருப்போருக்குச் சொந்தமாக்கப்பட்டது. ஆனால், தற்சமயம் வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு வாடகையை உயர்த்தியது மட்டுமல்லாமல் குடியிருந்தவர் இறந்துபோனால் வாரிசுகளையும் வெளியேற்றுகிற நிலைமை இருக்கிற காரணத்தினாலே அங்கே குடியிருந்தவர்களுடைய வாரிசுகளுக்கு அந்த இடங்களையே நீங்கள் கொடுக்க வேண்டுமென்று வீட்டு வசதித் துறையைக் கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையாளர்களுக்கு கொட்டிவாக்கத்திலே சுமார் 300 வீட்டு மனைகள் அளிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன். அதேசமயத்திலே இந்தப் பத்திரிகையாளர்களில் விடுபட்டவர்கள், நலிந்த நிலையிலே இருக்கிறவர்களை அனைத்துப் பத்திரிகையாளர்களுக்கும் ஏதாவது ஒரு பகுதியிலே குறைந்தபட்சம் இன்னும் 200 வீட்டுமனைகள் தரப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாற்றுத் தலைவர் அவர்களே, கூட்டுறவு பதிவாளர் கட்டுப்பாட்டில் உள்ள பணியாளர்கள் 1980 முதல் 2001 வரை தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் 28,000 பேர் பணி நிரந்தரப்படுத்தப்பட்டுள்ளார்கள். வீட்டு வசதி சங்கங்களிலே பணிபுரிகிற 600-க்கும் மேற்பட்டவர்களையும் பணி நிரந்தரம் செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும், வீட்டு வசதி வாரியத்தின் வீடுகளை வாங்கியுள்ளவர்கள் நீதிமன்ற உத்தரவின்படி முறையாக அறிவிக்கப்பட்ட பணத்தைச் செலுத்தி உரிய வீட்டுப் பத்திரங்களை அவர்களுக்கு வழங்கிட அரசு முன்வந்து, அவர்களுடைய பிரச்சினைகளுக்கு நிரந்தரமாகத் தீர்வு காணவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்னை சி.ஐ.டி. நகரிலே பெருந்தலைவர் காமராஜர் காலத்திலே குடிசைவாசிகளுக்கு ஏற்படுத்தப்பட்ட பழைய மஸ்தான் தோட்டத்திலுள்ள குடியிருப்புகளுக்கு கிரயத் தொகை

பெற்றுக்கொண்டு 30 வீடுகளுக்கு விற்பனைப் பத்திரம் தரப்பட்டுள்ளது. மீதியுள்ள 20 வீடுகளுக்கு விற்பனைப் பத்திரம் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கபெற்றது) இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். (குறுக்கீடு) நான் பேசிவிடுகிறேன் அம்மா. அப்புறம் நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நமது உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடும், காலனியும் அமைக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தனிப்பட்ட கருத்துக்குள் நான் செல்ல விரும்பவில்லை. அது அவர்களுடைய விருப்பம், வேண்டுகோள். ஆனால் வீடே இல்லாத மக்களினுடைய தேவையைப் பூர்த்தி செய்யவேண்டிய இடத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஏற்கெனவே ஓர் உறுப்பினர் காரிலே பச்சை விளக்கு பொருத்த வேண்டுமென்று சொன்னபோது, எங்களது உறுப்பினர் தோழர் நன்மாறன் அவர்கள் என்னிடம் சைக்கிள் மட்டும்தான் இருக்கிறது, நான் எந்த விளக்கைப் பொருத்துவது என்று புலம்பிக்கொண்டு வந்தார். ஆகவே, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தாக, இந்தக் கருத்தை தொடர்ந்து காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்துவது மக்களிடம். . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள். (குறுக்கீடு) உறுப்பினர் அவர்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம். செல்வி கே. பாலபாரதி, உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது அதைச் சொல்லலாம். (குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தயவுகூர்ந்து அவரவர்களது இயக்கத்திற்குக் கொடுக்கின்ற நேரத்திலே தன்னுடைய கருத்துகளைச் சொல்லட்டும். தயவுகூர்ந்து எங்களுடைய நேரங்களை எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்று சொன்னால், நாங்களும் இந்தச் சட்டமன்றத்திலே எங்களுடைய கருத்துகளை பதியவைக்க ஆசைப்படுகிறோம்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களே, நீங்கள்தான் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்குச் சென்னையிலே காமராஜர் சாலையிலே சிலை நிறுவி, நட்புக்கும் கலைத் துறைக்கும் பெரிய மரியாதை செய்தீர்கள். அதேபோல, மாபெரும் நடிகர் திலகத்திற்கு நீங்கள் ஒரு மணி மண்டபம் கட்டித்தர தமிழக மக்கள் மற்றும் காங்கிரஸ் கட்சி, சிவாஜி மன்றத்தின் நண்பர்கள் சார்பில் முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களே உங்களிடம் நாங்கள் இந்த வேண்டுகோளை வைக்கிறோம்.

தமிழக அரசியலிலே நேர்மை, தூய்மை, எளிமை இத்தனையாலும் மக்கள் மனதில் நிலையான இடம்பெற்ற காங்கிரஸ் கட்சியின் அற்புதத் தலைவர், நேரு குடும்பத்தின் வாழ்நாள் விசுவாசி, முத்தமிழ் அறிஞர் முதல்வர் கலைஞர் அவர்களின் நெஞ்சில் நிறைந்த நண்பர், மறைந்த ஐயா திரு. ஜி.கே. மூப்பனார் அவர்களுக்கு தமிழக அரசின் சார்பிலே காமராஜர் சாலையிலே ஒரு சிலை அமைத்துத்தர வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே, என் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதேபோல, இன்னொரு முக்கியமான பிரச்சினை, என்னுடைய தொகுதியிலுள்ள பிரச்சினை. சுதந்திரப் போராட்ட வீராங்கனை, வெங்கலக் குரலால் தமிழக மக்களைக் கவர்ந்த கொடுமுடி கோகிலம், கே.பி. சுந்தராம்பாள் அவர்கள். சாதாரணக் குடும்பத்திலே பிறந்து, தன்னுடைய குரல் வளத்தால், நாடகத் துறையிலே, திரைப்படத் துறையிலே, சுதந்திரப் போராட்டத்திலே, முழுமையாக ஈடுபட்டு, தமிழக மக்களின் மனதிலே நீங்காத இடம்பெற்ற இவர், இன்னும் சொல்லவேண்டுமென்றால், தமிழக முதல்வர் அவர்களுடைய நெருங்கிய நண்பர் அவர் அன்பைப் பெற்ற அந்த மாபெரும் தியாகி, 1958 ஆம் ஆண்டிலே, பெருந்தலைவர் காமராஜராலே, தமிழக மேலவை உறுப்பினராக, எம்.எல்.சி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அதேபோல, 1970 ஆம் ஆண்டிலே இந்திய அரசின் சார்பிலே வழங்கப்பட்ட பத்மஸ்ரீ விருதைப் பெற்றவர். அதனை, இன்றைக்கு இருக்கின்ற பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே, இன்றைய முதல்வரும், அன்றைய முதல்வருமான கலைஞர் அவர்களின் கரங்களாலே அன்றைக்குப் பெற்றிருக்கிறார்கள். மேலும், இவரைப்பற்றிச் சொல்லவேண்டுமென்றால், பெருந்தலைவர் காமராஜர், அறிஞர் அண்ணா, கலைஞர், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். ஆகிய முதல்வர்களோடு அன்புடன் பழகிவந்த கொடுமுடி கே.பி. சுந்தராம்பாள் அவர்களின் நூற்றாண்டு விழா, 26-10-2007 முதல்

26-10-2008 வரை நடைபெற்று வருகிறது. இவ்வளவு செல்வாக்கும், சிறப்பும் பெற்றிருந்த அமரர் கொடுமுடி கே.பி. சுந்தராம்பாள் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், தமிழக அரசின் விழாவாக அறிவித்து, சென்னையிலே விழா எடுக்கவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அவருடைய உருவ தபால் தலையை மத்திய அரசின் சார்பிலே வெளியிட, தமிழக அரசு வேண்டுகோளை வைத்து, மரியாதைக்குரிய முத்தமிழ் அறிஞர், முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என் தொகுதி சார்பிலும், காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதிபற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி இரண்டு நிமிடங்களில் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன். மொடக்குறிச்சி தொகுதியில், காலிங்கராயன் கால்வாயைச் சீரமைப்பதற்கு 12 கோடி ரூபாயும், அதேபோல அரக்கன்கோட்டைக்கு 15 கோடி ரூபாயும் நபார்டு வங்கியிடமிருந்து நிதியைப் பெற்றுக்கொடுத்த மரியாதைக்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல, மொடக்குறிச்சி தொகுதியிலே, குரங்கன்பனை அணையை ஆழப்படுத்த வேண்டும். பெரும்பள்ளம் ஓடையை ஆழப்படுத்தி, வாய்க்கால்களைத் தூர்வாரிட வேண்டும். கொடுமுடியில் காவிரியாற்றின் போக்கு தெற்கிலிருந்து கிழக்கு நோக்கித் திரும்புவதால், முன்பு கட்டப்பட்டிருந்த வட்டக்கொம்பணை, மேல்கொம்பணை ஆகியவற்றை முழுவதுமாகக் கட்டவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

அடுத்தது, கடைசியாக, இந்திய அரசியலில் அனைவரும் வியந்து பார்க்கிற எளிமை, திறமை, பொறுமை ஆகிய இவற்றுடன் திண்மை, துணிவு இத்தனையையும் ஒருங்கே கொண்டுள்ள அன்னை சோனியா காந்தி அவர்கள், தமிழகத்திற்கு எந்தத் திட்டம் வேண்டுமென தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கேட்டாலும், உடனே அந்தத் திட்டத்திற்கு முழு ஆதரவு தந்து, நிறைவேற்றப் பாடுபட்டு வருகின்றார். பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும் நேரு குடும்பத்தின் வாரிசு, அன்னை சோனியா காந்தி அவர்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களைப் பார்த்து, பேராசிரியர் அவர்களைப் பார்த்து, நம்முடைய தளபதி திரு. மு.க. ஸ்டாலின் அவர்களைப் பார்த்து நான் வியந்து போகிறேன். ஏனென்றால்,



நாட்டிலே பல பேருக்குக் கருணை இருக்கும். ஆனால், கொடுக்க நிதி இருக்காது. சிலரிடம் நிதி இருக்கும். ஆனால், அவர்களிடம் கருணை இருக்காது. நமது முதல்வர் கலைஞர் அவர்களுக்கு, அவரது பெயரைப்போல, மக்கள்மீது கருணையும் உண்டு; மக்கள் நலத் திட்டமென்றால், அதற்கு ஏன் என்று கேட்காமல் நிதி அளிக்கின்ற மனதும் உண்டு. அதனால்தான், அவர் கருணாநிதி என்ற பெயரைப் பெற்றாரோ என்று வியந்து பாராட்டுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா. (குறுக்கீடு)

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** முடித்துவிடுகிறேன். ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** இவர்கள் வாழ்கின்ற காலத்திலே நாங்களும் பொதுவாழ்விலே உள்ளோம் என்ற பெருமையோடு எனது இந்த உரையை நிறைவு செய்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள், வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின்மீது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே இருக்கிறபோதுதான், சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவதற்கு இடத்தைத் தந்தார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரம் குறைவாக இருக்கிறது. குறுக்கீடுகள் வேண்டாமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான காலனி குறித்துக் கேட்டுக்கொண்டிருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் பாலபாரதி அவர்கள் குறுக்கிட்டு (குறுக்கீடு) ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மற்றவர்களுக்குப் பட்டா கேட்டுக்கொண்டிருக்கக்கூடிய நிலையைச் சொன்னார்கள்.

*பிற்பகல் 12-25*

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே வீட்டுமனை இல்லாதவர்களுக்கு மூன்று இலட்சம் பேருக்கு பட்டாக்களை வழங்கியிருக்கிறார்கள்; இன்னும் வழங்கிக்கொண்டே இருக்கிறார்கள்; 4 இலட்சத்திற்குப் போய்க்கொண்டிருக்கிறது. அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் வந்து கேட்கிறபோது அவர்களுடைய கருத்தைச் சொல்ல அனுமதிக்க வேண்டும். **

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு உறுப்பினர், நேரம் இல்லை. அமைச்சர்களெல்லாம் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. திரு. தி.க. ராஜா, நீங்கள் பேசுங்கள்.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தயவு செய்து நேரத்தைக் கணக்கிட்டுக் கொள்ளுங்கள். குறுக்கீடு இல்லாமல் எனக்கு நேரத்தை ஒதுக்கவேண்டும். எனக்குப் பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கும், மருத்துவர் அய்யா அவர்களுக்கும்,

** 15-4-2008 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அளித்த ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



சின்னய்யா அவர்களுக்கும், தலைவர் கோ.க. மணி அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறைத் துறையிலே பணியாற்றக்கூடிய காவலர்கள், காவல் துறையிலே பணியாற்றுகின்ற காவலர்களைவிடக் குறைவான சம்பளம் வாங்குவதால், அவர்களுடைய மனதிலே ஒரு தாழ்வு மனப்பான்மை இருக்கிறது. எனவே, காவலருக்கு இணையாக சிறைத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களின் சம்பளத்தை உயர்த்தித் தரவேண்டும். அதேபோல, வேலை நேரமும் எட்டு மணி நேரமாக அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். புழல் சிறையிலே பெண் காவலர்களிடம் எட்டு மணி நேரத்திற்கு மேலாக வேலை வாங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே, அதை எட்டு மணி நேரமாக மாற்றவேண்டும்.

சிறைச்சாலைகளை, குற்றவாளிகளைச் சீர்திருத்தும் மையமாகக் கருதி, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தரவேண்டும். அடிக்கடி கைதிகள் தப்பி ஓடுவதைத் தடுக்கவும், செலவினங்களைக் குறைக்கவும், அனைத்து நீதிமன்றங்களிலும், சிறைச்சாலைகளிலும் Video Conferencing திட்டத்தை முழுமையாக அமல்படுத்தவேண்டும். சமீபத்திலேகூட, கைதியின் மனைவி கற்பழிப்பு, சிறையிலே ஆயுதம், கஞ்சா விற்பனை என்று பல செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. சிறை, கைதிகள் சிலருக்குப் புகலிடமாக இருக்கிறது; தேவையானவற்றை நிறைவேற்றக்கூடிய இடமாக இருக்கிறது. இவை தடுக்கப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஆயுள் கைதிகளெல்லாம் தெரியாமல் ஏதோ ஆத்திரத்திலே தவறு செய்துவிட்டு, இன்றைக்கு 10 ஆண்டு காலத்திற்குமேலாக சிறையிலே கொடுமைகள் அனுபவித்து வருகிறார்கள். அவர்களும், தாய் தந்தையரோடு, பெண்டு பிள்ளைகளோடு வாழவேண்டுமென்று விரும்புகிறார்கள். பேரறிஞர் அண்ணாவினுடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த வேளையிலே, நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் 10 ஆண்டுகள் என்பதைக் குறைத்து 7 ஆண்டுகளாக நல்லெண்ண அடிப்படையிலே அந்தக் கைதிகளுக்கெல்லாம் பொது மன்னிப்புக் கொடுத்து, விடுதலை செய்ய வேண்டுமென்று தமிழக முதல்வர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, பவானி கிளைச் சிறையை கோவைச் சிறையோடு இணைப்பதாகச் சொல்கிறார்கள். கோவைக்குச் சென்றுவிட்டால் *150* கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டி இருக்கின்ற காரணத்தினாலே, அந்த பவானி கிளைச் சிறைச்சாலை தொடர்ந்து பவானியிலேயே இயங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, என்னுடைய திருப்பத்தூர் தொகுதியிலே, *1886*-லே கட்டப்பட்ட கிளைச் சிறையிலே இப்போது போதிய வசதிகள் இல்லாமல் இருக்கிறது. பெண் கைதிகள் தங்குவதற்கு இடமில்லாமல் *200* கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேலூருக்குச் கொண்டு செல்லக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, திருப்பத்தூர் கிளைச் சிறைச்சாலையைத் தரம் உயர்த்தவேண்டும்.

இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குகிற திட்டம் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. என்னுடைய தொகுதியிலேகூட பல்லாயிரக்கணக்கான பேருக்கும், எங்களுடைய தலைவருடைய தொகுதியிலேகூட இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. எனவே, இந்த கால அவகாசத்தை நீட்டித்துத் தரவேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே அரக்கோணம் பகுதியிலே சிறப்புப் பொருளாதார மண்டலம் வருகிறதென்று சொல்லி, விவசாய நிலத்தைப் பத்திரப் பதிவு செய்யக்கூடாது என்று வருவாய்த் துறை அதிகாரிகள் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகத்திற்குத் தடை போட்டிருக்கிறார்கள். வெளிநாட்டிலே இருக்கிறவர்கள் எல்லாம் இங்கு தாராளமாக நிலத்தை வாங்கிக் குவிக்கும்போது, உள்நாட்டிலே இருக்கிற விவசாயிகள் தன்னுடைய நிலத்தை விற்கவோ, வாங்கவோ முடியாத நிலைமை வேலூர் மாவட்டத்திலே இருக்கிறது. அதை நீங்கள் மாற்றவேண்டும். திருப்பத்தூரிலே "உதவும் உள்ளங்கள்" என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. அது மனநோய் மறுவாழ்வு மையமாகத் தமிழ்நாட்டிலே முதல் முதலாகத் தொடங்கப்பட்டு, மன நோயாளிகள் எல்லாம் திருத்தப்பட்டு, அவர்களெல்லாம் இப்போது சுய தொழில் செய்துகொண்டிருக்கிறார்கள். அதேபோல, பெண்களுக்கு மனநலக் காப்பகம் உருவாக்குவதற்கு அங்கே ஒரு 'தாமரை மகளிர் மன்றம்' என்ற கட்டடம் இருக்கிறது. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** *உறுப்பினர்கள் அமைதி காக்கவும்.*



**திரு. தி.க. ராஜா:** அந்த தாமரை மகளிர் மன்றக் கட்டடத்தை, அந்த உதவும் உள்ளங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல நமது தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வது, நீங்கள் கோயம்புத்தூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து இன்றைக்குத் திருப்பூரைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். நாங்கள் பாராட்டுகிறோம். அவை வளர்ந்த மாவட்டங்கள். நாங்கள் மிகப் பின்தங்கிய மாவட்டத்தில் இருக்கிறோம். வேலூரை இரண்டாகப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராக்க வேண்டுமென்று கேட்டோம். இந்த ஆண்டு இல்லையென்று சொன்னாலும், அடுத்த ஆண்டு பட்ஜெட்டிலே வரக்கூடிய அளவிலே எங்களுடைய மாவட்டத்தினுடைய அமைச்சர் அண்ணன் ஆற்காட்டார் அவர்களுடைய உதவியோடு, அண்ணன் துரைமுருகன் அவர்களுடைய உதவியோடு நீங்கள் வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டும். ஏனென்றால், கோயம்புத்தூரும் *12* தொகுதிகள்கொண்டதுதான்; வேலூரும் *12* தொகுதிகள்கொண்டதுதான். விழுப்புரத்தையும் அதிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

அமைப்புசாரா நல வாரியங்கள் பதினான்கையும் கொண்டுபோய் நீங்கள் வருவாய்த் துறையிலே சேர்த்ததன் விளைவாக, மிகப் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. அரசாணை நிலை எண் *23*-ஐ பயன்படுத்தினீர்கள். இப்போது உயர் நீதிமன்றம் அதற்குத் தடை விதித்திருக்கிறது. எனவே, அரசாணை *23*-ஐ நீங்கள் இரத்துச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கேரளாவிலே, அவர்களுடைய பட்ஜெட்டிலே அங்கு நல வாரியங்களுக்கென்று ஒட்டுமொத்த வருவாயிலே மூன்றரை சதவிகிதத்தை ஒதுக்குகிறார்கள். அதேபோல தமிழகமும் பின்பற்ற வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல தொகுதிகளில் பட்டா வழங்காமல் இருக்கிறார்கள். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கால நேரத்தை நீட்டித்து, பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வருவாய்த் துறையிலே நீண்ட காலமாக தற்காலிகமாகப் பணியாற்றுபவர்களை பணி நிரந்தரம் செய்யவேண்டும். சிப்பந்திப் பணியிடங்கள் நிறைய காலியாக இருக்கின்றன. என்னுடைய தொகுதி திருப்பத்தூரிலேகூட 90 இடங்கள் காலியாக இருக்கின்றன. பணி நியமனத்திலே பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியின மக்களுக்கு பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். அதேபோல வாரிசுதாரர்களுக்கு வேலை. இறந்துபோனவர்களுடைய வாரிசுகளை compassionate ground-ல் உடனடியாக வேலையில் அமர்த்திட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பாட்டாளி மக்கள் கட்சி தொழில் துறைக்கு, தொழிற்சாலைகளுக்கு எதிரானது அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் நினைவுப்படுத்த கடமைப்பட்டிருக்கிறேன். வேலைவாய்ப்பை உருவாக்கி உற்பத்தியைப் பெருக்குகின்ற வருவாயை ஈட்டுகின்ற தொழிற்சாலைகளை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தேவைக்கு அதிகமாக, திட்டமிட்டு சிறப்பு பொருளாதார மண்டலம் என்ற பெயரால் விளைநிலங்களை விவசாயிகளிடமிருந்து அடிமாட்டு விலைக்குப் பிடுங்கி, ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பன்னாட்டு முதலாளிகளுக்கும், வெளிநாட்டவர்களுக்கும் கொடுப்பதைத்தான் நாங்கள் கண்டிக்கிறோம். எனவே, நீங்கள் நிலங்களை அபகரிக்கக்கூடாது. அவர்களிடத்திலே கருத்து கேட்டு, அவர்களாகக் கொடுக்க முன்வந்தால் நீங்கள் நிலத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொழில் தொடங்காமல் கிடப்பிலே போட்டு, பெரிய ரியல் எஸ்டேட் கொள்ளை நடந்துகொண்டிருக்கிறது. எனவே, விளைநிலங்களின் பரப்பு குறைந்து, விவசாய உணவுப் பொருட்களின் உற்பத்தி குறைந்து, எதிர்காலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படககூடிய நிலைமை இருக்கிறது, இப்பொழுது நம்முடைய நாட்டு கோதுமையைவிட இறக்குமதி கோதுமையின் விலை அதிகமாக இருக்கிறது. அரிசி தானிய உற்பத்தி குறைந்து, எதிர்காலத்தில் மாத்திரையை சாப்பிட்டு நாம் எல்லாம் வாழமுடியாது. எனவேதான் விளைநிலங்களைக் கையகப்படுத்துவதிலே, அரசு மிகுந்த எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நாங்கள்கூட அங்கே போய் கருத்து கேட்கும்போது மக்கள் சொன்னார்கள், "இந்த ஆட்சியிலே நிலம் இல்லாதவர்களுக்கு 2 ஏக்கர் நிலம் தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால், நாங்கள் வைத்துக்கொண்டிருக்கிற



கால் ஏக்கர், அரை ஏக்கர் நிலங்களையும் அடிமாட்டு விலைக்குப் பிடுங்கி பன்னாட்டு முதலாளிகளுக்குக் கொடுக்கிறார்கள். எங்களுக்கு 2 ஏக்கர் நிலம் வேண்டாம். எங்களை இப்படியே விட்டுவிடுங்கள். நாங்கள் இந்த நிலத்துடன் வாழ்ந்துகொள்கிறோம்" என்று சொல்லி அந்த விவசாயிகள் எல்லாம் கெஞ்சுகிறார்கள். எனவே, தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இதைக் கருத்திலே கொள்ளவேண்டும். நிலம் பதிவு செய்யும்போது பட்டா மாற்றுவதற்கு பணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், பட்டா மாற்றம் . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. பிச்சாண்டி):** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*** மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள், அரசு ஏதோ அடிமாட்டு விலைக்கு நிலத்தை கையகப்படுத்தி, பன்னாட்டு முதலாளிகளுக்கு தொழில் தொடங்க வழங்குவதாகச் சொல்கின்றார்கள். நம்முடைய முதலமைச்சர் உறுதியான ஒரு கொள்கையை, மத்திய அரசாங்கமும் சொல்லி இருப்பதைப்போல, தொழிற்சாலை தொடங்குவதற்கு அல்லது வேறு பெரிய திட்டங்கள் வருவதற்கு வேண்டுமானாலும்கூட, விவசாயிகளோடு நேரடி பேச்சுவார்த்தையின்மூலம், அவர்களின் சம்மதத்தின்பேரிலே கையகப்படுத்தி அந்த நிலங்கள்தான் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறாரே தவிர, அடிமாட்டு விலைக்கு பலாத்காரமாக இந்த அரசு நிலத்தை கையகப்படுத்தாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்படி ஒரு வண்டி வாங்கினால், ஆர்.சி. புத்தகம் இருக்கிறதோ அதுபோல நிலம் வாங்கினால் பட்டா புத்தகம் என்பது அவசியமாகிறது. எனவே, பட்டா புத்தகம் வாங்குவதிலே பல்வேறு சிரமங்களும், காலதாமதமும் ஏற்படுவதை வருவாய்த் துறை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியத்திலே வீடு வாங்கி பணத்தையெல்லாம் கட்டிவிட்டார்கள். அவர்களுக்கு எல்லாம் மிகவும் வயதாகி விட்டது. சாகக்கூடிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த வீட்டை விற்று

குழந்தை, குட்டிகளுக்கு கல்யாணம் செய்யலாம் என்று நினைத்தால் பத்திரம் கிடைக்கவில்லை. கடந்த ஆட்சியிலே 5 வருடங்களாக நாங்கள் கேட்டோம். இப்போதும் கேட்கிறோம். என்னுடைய தொகுதியிலே 2 ஆயிரம் பேருக்கு இன்னும் பத்திரம் வழங்கப்படாமல்—அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்கள், 60 ஆயிரம் பேர்கள் என்று. ஒரு இலட்சம் பேர்களுக்கு அந்தப் பத்திரம் திரும்ப வழங்கப்படாமல் இருக்கிறது. நான் பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினராக இருந்து ஆய்வு செய்கின்ற நேரத்தில் இது தெரிந்த காரணத்தினால், நீங்கள் உடனடியாக பத்திரங்களை திருப்பி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நம்முடைய வீட்டு வசதி வாரிய வீடுகள் பல இடங்களில் விற்பனையாகாமல் அரசாங்கத்தினுடைய பணம் முடங்கி இருக்கிறது. அந்த வீடுகளை எல்லாம் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நீங்கள் வட்ட, நகரக் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியோருக்கு 25 ஆயிரம் ரூபாய் வரை கடன் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இன்றைக்கு ஒரு இலட்சம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் வாங்கியவர்கள் எல்லாம், அடுத்த வேளை சாப்பாட்டிற்கே வழியில்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்வது, நீங்கள் விவசாயிகளுக்கு 7 ஆயிரம் கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்தீர்கள். இந்தக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின்மூலம் அளிக்கப்பட்ட கடன் வெறும் 2,500 கோடி.

எனவே, நீங்கள் வட்டி, அசல் ஆகியவற்றை ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று நான் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், இதனால் 52 ஆயிரம் குடும்பங்கள் பயன் அடையும். அதேபோல, அதில் பணிபுரியக்கூடிய 30,000 தொழிலாளர்களுக்கும், நீங்கள் தள்ளுபடி செய்த அந்த உரிய தொகையை (மணியடிக்கப்பெற்றது) உடனடியாக சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு வழங்கி அவர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும்.

பிற்பகல் 12-35

கூட்டுறவுச் சங்கத்தினுடைய Act & Rule-ஐ மாற்ற வேண்டும். இல்லையென்று சொன்னால், கூட்டுறவுத் தத்துவமே சிதைந்துவிடும். கூட்டுறவுச் சங்கமே இனி செயலிழந்துவிடும். எனவே, நீங்கள் என்ன



செய்யவேண்டுமென்று சொன்னால், தேசிய வங்கிபோல, 4 சதவிகிதத்திலே கடனை வீடு கட்டுவதற்காக, சட்டத்தை மாற்றி, அந்த அடிப்படையிலே கொடுத்தால்தான் இனி வரக்கூடிய காலங்களிலே அந்த வீட்டு வசதிச் சங்கம் செயல்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்காக இன்னும் விவசாயிகள் பணம் வாங்கவில்லை. கோர்ட்டுக்குப் போய் அவர்களுக்கு சாதகமாகத் தீர்ப்பு வந்திருக்கிறது. தீர்ப்பாகியும்கூட, இன்னும் நிலத்தை ஒப்படைக்காமல், சாட்சி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். (குறுக்கீடு) இருக்கிறது, கோவை மாவட்டத்தில் இருக்கிறது; கிருஷ்ணகிரியில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு நிலம் எடுத்துவிட்டு, அதை செக்ஷன் 48 (பி)-ன் பிரகாரம் விவசாயிகள் திருப்பித் தர வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன். (குறுக்கீடு) Correct-ஆக நேரத்தை maintain செய்தால்தான் அலுவல்களை முடிக்க முடியும்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகள், வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு முதலிலே எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக வருவாய்த் துறையின் சார்பாக இதுவரை 4 இலட்சத்திற்கும் அதிகமான இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்பதெல்லாம் இப்போது தமிழகத்திலே இன்னும் இலட்சக்கணக்கான மக்கள் வீட்டுமனைப பட்டா கேட்டு விண்ணப்பித்துள்ள நிலையில், அனைத்து மனுக்களையும் பரிசீலித்து அனைவருக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா கிடைக்கும் என்ற இந்தத் திட்டம் தொடர்ந்து 5 ஆண்டு காலம் தொடர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சிகள், நகராட்சிகளில் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பாக துப்புரவுப் பணியாளர்களுக்கு என்று ஒதுக்கிக் கொடுத்த வீடுகளை அவர்களுக்கே சொந்தமாக்கிடும் வகையில் இலவச வீட்டுமனைப்

பட்டா வழங்கவேண்டும். குறிப்பாக, தருமபுரி மாவட்டத்தில் உள்ள செங்கொடிபுரம் மற்றும் பெரம்பூரிலே இருக்கக்கூடிய துப்புரவுப் பணியாளர்களுக்கான குடியிருப்புகளை அவர்களுக்கு இலவசமாக வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

5 ஆண்டுகளுக்கு மேலாக அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். எனது தொகுதியில் 1966 ஆம் ஆண்டு தாயகம் திரும்பிய பர்மா தமிழர்களை அரசே குடியமர்த்திய பக்தவத்சலம் காலனி, சாஸ்திரி நகர், இந்திரா நகர் பகுதிகளில் வாழும் பர்மா தமிழர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கிடவேண்டும். பல்வேறு புறம்போக்கு நிலங்களை இப்போது வகைமாற்றம் செய்து பட்டா வழங்கப்படுகிறது. அதேபோன்று நத்தம் புறம்போக்கில் வாழ்பவர்களுக்கும் இலவச வீட்டுமனை வழங்குவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக உறுதிசெய்ய வேண்டுகிறேன்.

அரசு ஆவணங்களில் மட்டும் நீர்ப்பிடிப்புப் பகுதிகள் என்றுள்ள பல்வேறு பகுதிகளில் 40, 50 ஆண்டுகளுக்கு முன்பே நீர்வரத்துப் பகுதிகள் அடைக்கப்பட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில், அந்தப் பகுதிகள் எல்லாம் குடியிருப்புகளாக மாறியிருக்கிறது. குறிப்பாக, சென்னை புறநகர்ப் பகுதிகளான அம்பத்தூர் பகுதி, கொரட்டூர் பகுதி, திருவேற்காடு பகுதி, பெரிய பல்லாவரம் பகுதிகள் குடிநீருக்கோ அல்லது விவசாயத்திற்கோ பயன்படுத்த முடியாது என்று 1992 ஆம் ஆண்டு குடிநீர் வாரியம் அறிவித்துள்ள சூழ்நிலையில் அந்தப் பகுதியில் 50 ஆண்டுக் காலமாக குடியிருக்கக்கூடிய மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டும். தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய இதுபோன்ற பகுதிகளிலே குடியிருக்கக்கூடிய மக்களுக்கு இலவசப் பட்டா வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அரசு நிலங்கள் இப்போது தனியார் சுய நிதிக் கல்லூரிகளாலும், அதேபோன்று மலைப் பகுதிகளில் இருக்கக்கூடிய தோட்டத்தினுடைய முதலாளிகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன. இலவசமாக இரண்டு ஏக்கர் நிலம் வழங்கப்படும் என்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, இப்போது தமிழகத்திலே அமலாகிக்கொண்டிருக்கிற சூழ்நிலையில், அரசு நிலங்கள் தனியாரால் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. கையகப்படுத்தப்பட்டிருக்கக்கூடிய இந்த அரசு நிலங்களை தனியார்



முதலாளிகளிடமிருந்து அரசு மீண்டும் கையகப்படுத்தி, நிலமில்லாத விவசாய, ஏழை மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று, இலவசமாக 2 ஏக்கர் நிலம் வழங்கக்கூடிய திட்டம், இன்றுவரையில், நீலகிரி மாவட்டத்தில் தொடங்கப்படாமல் இருக்கிறது. அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள் பயன்படுத்தக்கூடிய நிலங்களை அவர்களுக்கு உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். வருவாய் துறையைப் பொறுத்தவரையில், இப்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-40

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மிக முக்கியமான பிரச்சினை. நீலகிரி மாவட்டத்தில் அதற்கென்றே சிறப்பாக மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்டாட்சியர், சிறப்பு அலுவலர்களெல்லாம் நியமிக்கப்பட்டு, அளவைத் துறையைச் சார்ந்த அத்தனை அலுவலர்களும் நியமிக்கப்பட்டு, அவர்களுக்குப் பட்டா வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு விரைந்து எடுத்து வருகின்றது.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. வருவாய்த் துறை மூலமாக முதியோர், விதவை, ஊனமுற்றோருக்கான உதவித் தொகைகள் தங்களது அரசால் உயர்த்திக்கொடுக்கப்பட்டுள்ளதை, வரவேற்கின்றோம். ஆனால், அந்த உதவித்தொகைகளைப் பெறுவதில் உள்ள விதிகள் தளர்த்தப்பட்டு, ஆண் வாரிசுகள் உள்ளவர்களுக்கும் இந்த உதவித்தொகை வழங்கப்படும் என்ற தங்களது அறிவிப்பு இன்றுவரை தமிழகத்தில் அமல்படுத்தப்படாமல் இருக்கின்றது. அதனை அமலாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்குக்கான திருமண உதவித்தொகையை ரூபாய் 20 ஆயிரமாக உயர்த்தியிருப்பது பாராட்டுக்குரியது. ஆனால், இந்த உதவித்தொகையைப் பெறுவதற்கு குடும்பத்தின் ஆண்டு வருமானம் 12 ஆயிரம் ரூபாயாக இருக்கவேண்டுமென்று சொல்கின்றார்கள். வட்டாட்சியர்களைப் பொறுத்தவரை இன்றைக்கு ஆண்டு வருமானம் 24 ஆயிரம்

ரூபாய்க்குக் குறைவாக யாருக்கும் சான்றிதழ் கொடுக்கமுடியாது என்று சொல்லக்கூடிய காரணத்தால், இந்த வருமான வரம்பை 12 ஆயிரம் ரூபாயிலிருந்து 24 ஆயிரம் ரூபாயாக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இன்றைக்கு உலகம் முழுவதும் பூமி வெப்பமடைந்து வருவதால் பருவகாலங்களில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் டிசம்பர், மார்ச் மாதங்களில் பெருமழை பெய்து பெருநஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். டிசம்பரில் பெய்த பெருமழையினால் ஏற்பட்ட நஷ்டத்தை சரிசெய்வதற்குள்ளாக, மார்ச்சில் பெருமழை பெய்து, பெருநஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. இதை உடனடியாக சரிசெய்ய, பேரிடர் நிவாரண நிதியை கூடுதலாக்குவதோடு, மத்திய அரசு இதுபோன்ற பேரிடர் ஏற்படுகின்றபோது, பாதிக்கப்பட்ட விவசாயிகள் மற்றும் பல்வேறு துறைகளுக்குத் தேவையான நிதியை உடனடியாக வழங்குவதற்கு மத்திய அரசாங்கத்தை நம்முடைய மாநில அரசாங்கம் நிர்ப்பந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

2001 ஆம் ஆண்டிலிருந்து வறட்சி; 2004-ல் சுனாமி பாதிப்பு; தொடர்ந்த பெருமழை. இந்தச் சூழலில் விவசாயிகளுக்கான குத்தகை பாக்கியை தள்ளுபடி செய்யவேண்டும். அதேபோன்று, வேலூர் மாவட்டத்தில் விவசாயிகளிடம் வசூலிக்கும் வரப்பு வரியை இரத்து செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சுனாமியால் பாதிக்கப்பட்ட குமரி மாவட்ட மக்களுக்கு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு பணிகள் பாதியிலேயே நிற்கின்றன. இந்தப் பணிகள் நிறைவடைவதற்கு ஏதுவாக—கட்டுமானப் பொருட்களின் விலை மிகக் கடுமையாக உயர்ந்துள்ள காரணத்தினால், ஒப்பந்தத் தொழிலாளர்கள் இந்தப் பணிகளை மேற்கொள்ளாமல் இருக்கின்றார்கள்—இந்தப் பணிகள் விரைந்து முடிவடைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரை, ஒதுக்கீட்டுதாரர்கள் பணம் முழுவதையும் கட்டி முடித்து பல ஆண்டுகள் ஆகியும், இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு பகுதிகளிலே விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாமல் உள்ளன. (குறுக்கீடு) சார், 10 நிமிடங்கள்தானே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு 7 நிமிடங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.



**திரு. கே. மகேந்திரன்:** அவர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் வழங்கப்படாமல் உள்ளன. அவர்களிடம் தற்போது மறுமதிப்பீடு செய்து, விலையை உயர்த்தி அதற்கு வட்டி, கூட்டு வட்டி என்று பல்வேறு பெயர்களில் வட்டி வசூல் செய்யப்படுவதை நிறுத்தி, அவர்களுக்கு விற்பனைப் பத்திரங்கள் உடனடியாக வழங்கப்படவேண்டும்.

வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெற்றவர்கள், ஒரு இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக கடன் பெற்றுள்ள அனைவருக்கும் அந்தக் கடனை இரத்து செய்யவேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்கின்றேன். குறிப்பாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது, மதுரை எல்லிஸ் நகரிலே விற்பனைக்குரிய நிலம் குறைவாக இருப்பதை அளந்து சரிபார்ப்போம் என்று சட்டமன்ற உறுப்பினர்களான தோழர்கள் நன்மாறன், கௌஸ் பாஷா முன்பாக அதிகாரிகள் சொன்னார்கள். ஆனால் இன்றுவரை அது நிறைவேற்றப்படவில்லை. அரசு நிலம் ஏக்கர் 3.92-க்கு எடுக்கப்பட்டு, விலை நிர்ணயம் செய்யப்படவேண்டும். கணக்கிலுள்ள தவறுகளையும், கூட்டு வட்டியிலிருந்து தனி வட்டியாகக் கணக்கிட்டபோது செய்த தவறுகளையும் நிவர்த்தி செய்யவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கின்றேன்.

இப்போது தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய அடுக்கு மாடிக் குடியிருப்புகள், பல பகுதிகளிலே பழுதடைந்து இடிந்து விழும் நிலையிலே இருக்கின்றன. அப்படிப்பட்ட குடியிருப்புகளை இடித்துவிட்டு, அதே பகுதியில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டிக்கொடுக்கப்படவேண்டும். பெரம்பூர் தொகுதியைப் பொறுத்தவரை, பி.எஸ். மூர்த்தி நகர் என்ற அடுக்குமாடிக் குடியிருப்பில், 10 ஆண்டுகளுக்கு முன்பாக மூன்று குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, இன்றுவரை அந்தக் குடியிருப்புகள் கட்டப்படாமல் இருக்கின்றன. அந்தக் குடியிருப்புகள் உட்பட, பழுதடைந்த அனைத்து வகையான குடியிருப்புகளையும் இடித்துவிட்டு, புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டவேண்டுமென்ற வேண்டுகோளையும் வைக்கின்றேன். குடிசை மாற்று திட்டப் பகுதிகளில் பல பகுதிகள் நிலம் வகைமாற்றம் செய்யப்பட்டு, விற்பனைப் பத்திரம் சென்னை மாநகரத்திலே வழங்கப்படாமல் இருக்கின்றது. அவர்களுக்கெல்லாம் விற்பனைப் பத்திரம் வழங்குவதோடு, இன்று சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு நலத் திட்டங்களை (மணியடிக்கப்பெற்றது) சாதாரண மக்கள் பெறவேண்டுமென்றால்,

வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் செல்லவேண்டிய நிலைமை இருக்கின்றது. சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை 5 வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் மட்டும்தான் இருக்கின்றன. இந்த 5 வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் மக்கள் தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. எனவே, மக்கள்தொகை அடிப்படையில் சென்னை மாநகரத்தில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தைக் கூடுதலாக்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-45*

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரை, சிறைச்சாலைகளிலே பணியாற்றக்கூடிய காவலர்களுக்கும், காவல்துறையிலே பணியாற்றக்கூடிய காவலர்களுக்கும் இடையிலே ஊதிய வித்தியாசம் இருந்துகொண்டிருக்கிறது. அதைச் சரி செய்வதோடு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) No. No. உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தைவிட 2 நிமிடங்கள் கூடுதலாகத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தின் காரணமாக ஏற்பட்ட பாதிப்பிற்கு, மத்திய அரசாங்கத்திடம் ரூபாய் 1,140 கோடி வேண்டுமென்று, மத்தியக் குழுவிடம் கோரிக்கை வைத்திருப்பதற்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதிலே, குறிப்பாக திருவாரூர் மாவட்டத்தில் 1,20,000 ஹெக்டேர் நிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்குரிய நிவாரணம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே, குறிப்பாக இந்த மழை வெள்ளதால் பாதித்திருக்கின்ற விவசாயிகளுக்கு நில வரியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை நான் ஏற்கெனவே முன்வைத்திருக்கின்றேன். நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது. நில வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

அதைப்போலவே, குத்தகைச் சாகுபடியாளர்களுக்கானக் குத்தகையையும் தள்ளுபடி செய்வதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான்



கேட்டுக்கொள்கிறேன். இதிலே மிக முக்கியமான ஒன்று, இந்த மழை வெள்ளம் பாதித்தவர்களுக்கு நில வரியைத் தள்ளுபடி செய்யவேண்டும், குத்தகையைத் தள்ளுபடி செய்யவேண்டும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலேகொண்டு, இதற்கான முன் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வீட்டுமனைப் பட்டா குறித்து இங்கே பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. சிறப்பாக, 3 இலட்சம் பேர்களுக்கு வழங்கப்படும் என்று அறிவித்து 3,98,000 பேர்களுக்கு மேலே வழங்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது. மேலும், நிலப்பட்டா வழங்க வேண்டும்; குடியிருப்பு மனைப் பட்டா வழங்குகின்ற அந்தத் தொடர் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதிலே, நீர்நிலைப் புறம்போக்குகள் என்று காரணம் காட்டி நிலப் பட்டா வழங்குவதிலே பிரச்சினைகள் இருக்கின்றன. இதை எப்படிச் சரி செய்வது என்பது பற்றிக் கண்டறிய வருவாய்த் துறையும், பொதுப் பணித் துறையும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஏரி, குளங்கள் என்று காரணம் காட்டப்படுகிறது. ஆனால், 50 ஆண்டுகளாக மக்கள் குடியிருந்து வருகிறார்கள். ஆகவே, 50, 60 ஆண்டு காலம் குடியிருந்து வருகின்றவர்களுக்குப் பட்டா வழங்குவதிலே எந்தவிதமான தடையும் இருக்கமுடியாது. வரைபடத்திலே வேண்டுமானால், அடங்கலிலே அல்லது பதிவுகளிலே ஏரி, குளம் என்று இருக்கலாம். ஆனால், அந்த இடத்தில் ஏரிக்கான அடையாளமோ, குளத்திற்கான அடையாளமோ இல்லாதபொழுது அவர்களுக்குரிய பட்டா வழங்கப்படலாம்.

நான் ஏற்கெனவே இந்த அவையிலே ஓர் ஆலோசனை சொல்லியிருக்கிறேன். ஏரி, குளங்கள் பாதுகாக்கப்படவேண்டும், நீர் நிலைகள் பாதுகாக்கப்படவேண்டும், நிலத்தடி நீர் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்கான முயற்சி என்ற அடிப்படையிலேதான் ஆக்கிரமிப்பு அகற்றப்படவேண்டுமென்று கோரிக்கை வருகிறது. ஆனால், அப்படிப்பட்ட அந்த அடையாளமே இல்லாமல் வந்துவிட்ட நிலையில், 50, 60 ஆண்டுகாலம் கழித்து, அந்த இடத்திலே திரும்ப ஏரியைத் தோண்டப் போகிறோமா, குளம் தோண்டப் போகிறோமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். ஆகவே, நான் சொல்கின்ற யோசனை, அந்த இடத்தில் இருப்பவர்களுக்குப் பட்டா வழங்கலாம். அதற்கு மாற்றாக புதிய

ஏரிகளையோ, குளங்களையோ வெட்டுவதற்கான முயற்சிகளை எடுத்து நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை இந்த அரசு ஒரு தொலைநோக்குப் பார்வையுடன்கூடிய திட்டமாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாகப் பட்டா வழங்குவதில் பிரச்சினைகள் பல இடங்களில் இன்னும் தடையாக உள்ளன. தேனி மாவட்டம், அல்லி நகரம் நகராட்சியில், எம்.ஜி.ஆர். நகர்ப் பகுதி என்று இருக்கிறது. அங்கே 25 ஆண்டு காலமாகக் குடியிருக்கிறார்கள். வீட்டு வரி, குடிநீர், மின் கட்டணம் எல்லாம் செலுத்தப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்கு இதுவரையிலே பட்டா கிடைக்கவில்லை. அதை நமது அமைச்சர் அவர்கள் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மதுரை மாவட்டம், மேலூர் தாலுகா, செம்மணியம்பட்டி என்கிற இடத்திலே, சுமார் 10 ஏக்கர் நிலம், 23 பேர்களுக்கு உழவடை நிலமாக ஒப்படைக்கப்பட்டது. அதை, அவர்கள் தனியாருக்கு விற்பனை செய்துவிட்டார்கள். அதை வட்டாட்சியரிடம், அந்தப் பகுதியில் வாழ்கின்ற தலித் மக்கள் போராட்டம் நடத்தி, சாலை மறியல் நடத்தி கேட்டபோது, அந்த மேலூர் வட்டாட்சியர் என்ன சொல்கின்றார் என்றால், டாமின் நிறுவனத்திற்கு வழங்கிவிட்டதாகச் சொல்கிறார். ஆனால், டாமின் நிறுவனத்தினுடைய மேலாளரை அணுகிக் கேட்கின்றபோது, அவர் அப்படியில்லை என்று மறுத்துவிட்டார். நாங்கள் அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்யவில்லை, எங்களுக்கு அந்த நிலம் ஒப்படைக்கப்படவில்லை என்பதைச் சொல்லியிருக்கிறார். ஆகவே, வட்டாட்சியர் தவறான தகவல் சொல்கின்ற காரணத்தினாலே— அந்த இடத்தை அங்கே வாழ்கின்ற 300 தலித் குடும்பங்களுக்குப் பட்டா வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். வட்டாட்சியர், காவல்துறை அதிகாரிகளெல்லாம் தலையிட்டு சமாதானம் செய்திருக்கிறார்கள். இதைக் கவனித்து அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுகா, விளாங்குடி பேரூராட்சி, சொக்கநாதபுரம் பகுதியிலே இருக்கின்ற 419 குடும்பங்களுக்கு குடிசை மாற்று வாரியத்தால் ஏற்கெனவே இடம் பிரித்து வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர்களுக்குப் பட்டா இல்லை. காரணம், மதுரை நகர விஸ்தரிப்புப் பணிகளுக்காக அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், அப்படிப்பட்ட பாதிப்பு இல்லை என்று சொல்கிறார்கள்.



அதைக் கவனித்து அவர்களுக்குப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாநகராட்சி, பதினைந்தாவது வார்டிலே, சௌரிபாளையம் பகுதியில், ஜி.ஆர்.ஜி. மனைப் பிரிவில், பொது ஒதுக்கீடாக இருக்கின்ற திட்டத்திலே ஒதுக்கப்பட்ட நிலத்தை ஒரு தனி நபர் ஆக்கிரமித்து வேறு பெயரிலே பட்டா பெயர் மாற்றம் செய்து விற்பனைக்கான முயற்சியை எடுத்து வருகிறார்.

*பிற்பகல் 12-50*

அதிலே முக்கியமானது என்னவென்றால், அந்த மாநகராட்சியிலே இருக்கிற கட்டட வரைவாளரே அந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார் என்று கண்டுபிடித்து முதலமைச்சர் அவர்களுக்கும், உங்களுக்கு எல்லாம் மனு அனுப்பி இருக்கிறார்கள். அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நல வாரியங்களைப் பொறுத்தவரையிலும் அது நீதிமன்றத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது பத்திரிகையிலே வருகிற செய்தி, நமது அரசின் சார்பிலே சொல்கிற விளக்கங்கள் என்று பார்க்கிறபோது, குழப்பமாக இருக்கிறது. நல வாரியங்களை வருவாய்த் துறையே ஏற்றுச் செயல்படுத்துவதென்பது உங்களுக்கு மிகப் பெரிய சுமையாக இருக்கும் என்ற காரணத்தினாலே. . .

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மன்னிக்க வேண்டும். வருவாய்த் துறை ஏற்றுச் செயல்படுத்தவில்லை. அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம் தொழிலாளர் நலத் துறையின் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது. ஏனென்றால், தொழிலாளருக்கென்று தனியாக நல வாரியம் இருக்கிறது. அதுவும் தொழிலாளர் நலத் துறையில் இருக்கிறது. ஆனால், என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், குறிப்பாக நமது குமரி மாவட்டத்திலே ஒரு நபர் 2, 3 நல வாரியங்களிலே பதிவு செய்து duplication ஏற்பட்டு அவர்கள் அரசினுடைய நலத் திட்ட உதவிகளைப் பெறுவதாக அரசுக்கு ஆதாரபூர்வமான தகவலை அனுப்பி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலேதான் அதை verify பண்ணுவதற்கு, அதாவது வருவாய்த் துறையிலே இருக்கக்கூடிய V.A.O.-வும், அங்கு இருக்கக்கூடிய தாசில்தாரும் உண்மையிலேயே இவர் அந்த வாரியத்தில் இருக்கிறாரா என்பதை verify பண்ணுவதற்காகத்தான், verify பண்ணுகின்ற பணிதான் வருவாய்த் துறைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பணம்

வழங்குவதற்கும், verify பண்ணுவதற்கும்தான் வருவாய்த் துறைக்குக் கொடுக்கப்பட்டுள்ளதே தவிர வேறு ஒன்றுமில்லை. அந்த வாரியம் தொழிலாளர் நலத் துறையில்தான் இருக்கிறது.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது, வருவாய்த் துறை ஊழியர்களை நான் குறை சொல்வதற்காகச் சொல்லவில்லை. ஆனால், இன்றைக்கு கீழ்மட்டத்திலே என்ன நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிக்கான பட்டியல் தயாரிப்பதுகூட முறையாக நடைபெறுவதில்லை என்ற குற்றச்சாட்டு கீழ் மட்டத்தில் இருக்கிறது. ஆகவே, இந்த மாதிரிப் பணிகளைக்கூட அவர்களால் செய்ய முடியாதபோது இந்தச் சுமையும் அவர்கள் தலையில் சுமத்தப்படுகிறபோது நிறைய தவறுகளுக்கு வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினாலேதான், தவறு நடந்தால் அதை எப்படிச் சரி செய்வது என்பதைப்பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும் என்றுதான் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அரசு ஊழியர்களுக்காக வாதாடக்கூடியது நம்முடைய பொதுவுடைமைக் கட்சி. அதில் ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், எவ்வளவு சுமைகள் இருந்தாலும் இந்த duplication வராமல் இவர் இந்த ஊரில் குடியிருக்கிறார், இவர் தச்சுத் தொழில் செய்கிறார், இவர் டீக்கடை வைத்திருக்கிறார் என்று சொல்லி அங்கே இருக்கக்கூடிய குடியிருப்பு இடத்தை வைத்துத்தான் அதைப் பரிசோதிக்க முடியும். ஆனால், தொழிலாளர் நலத் துறையிலே அந்த அலுவலர்கள் போய் அங்கே இருக்கக்கூடிய இடத்தைப் பரிசோதிப்பதற்கு அல்லது ஆய்வு செய்வதற்கு வாய்ப்பில்லை. அதனால்தான் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள் ஆய்வு செய்வதற்கும் அந்த நிதியை வழங்குவதற்கும் வருவாய்த் துறையைப் பயன்படுத்தலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் முழுக்க, முழுக்க நம்முடைய தொழிலாளர் நலத் துறையினுடைய கட்டுப்பாட்டில், தொழிலாளர் நலத் துறை வாரியத்தில்தான் அமைப்புசாரா தொழிலாளர் வாரியங்கள் அத்தனையும் இடம்பெற்றிருக்கின்றன.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம், உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** தலைவர் அவர்களே, இதோ முடித்துவிடுகிறேன். தொழிலாளர் நல வாரியங்களை தொழிலாளர் நலத் துறையில் இயக்குவதில் ஆட்சேபணை இல்லை. நீங்கள் இந்த விஷயங்களைச் சொல்வதிலேயும் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால், அதற்கான பணியாளர்கள் இல்லை என்ற குறைபாடுகள் இருக்கின்றன. அதை நீங்கள் நிவர்த்தி செய்யவேண்டும். அதற்குரிய முயற்சிகளை எடுக்கவேண்டும்.

கோலப்பன் குழு பரிந்துரைகளைப் பற்றித் தொடர்ந்து சொல்கிறோம். மீதமிருக்கிற பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். இந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தில் திருவில்லிப்புத்தூர் தொகுதி, அச்சங்குளம் ஊராட்சியில் காரைவளர்ந்தான்பட்டி பூவானி என்ற கிராமத்திலே சுந்தையாத் தேவர் என்பவர் குடும்பத் தலைவராக இருந்திருக்கிறார். உறுப்பினரான அவர் பெயரில் அட்டை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவரும் இறந்துவிட்டார். அவருடைய துணைவியாரும் இறந்துவிட்டார். அந்தக் குடும்பத்திலே அவருடைய மகள் மட்டும்தான் இருக்கிறார். அவருக்குத் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற முயற்சிகள் எடுத்து கேட்கப்பட்டு பணம் வழங்குவதற்கான வகையில் எல்லாம் வந்து இப்போது பணம் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம் குடும்பத் தலைவர் இறந்துவிட்டார். அவர் இல்லை என்ற காரணத்தினாலே அந்த உறுப்பினருக்குக் கிடைக்கவில்லை. அதைத்தான் நாங்கள் நல வாரியத்திலே தனி நபர் அடையாள அட்டை வழங்கவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். ஆனால், இந்த மாதிரியான சிக்கல் ஏற்படுகிறது. திருவில்லிப்புத்தூர் தாலுகாவிலே இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதைக் கவனித்து உடனடியாக அந்த நிதியை வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் என்று அன்போடு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய் கிராமப் பணியாளர்கள், உதவியாளர்களுக்குக் காலமுறை ஊதியம் 2,550 ரூபாயாக வழங்கவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்களில் தகுதி உள்ளவர்களை V.A.O.-ஆக பதவி உயர்வு செய்யவேண்டும் என்ற கோரிக்கையும் இருக்கிறது.

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திலே பல்வேறு சலுகைகளை அறிவித்து நாம் காரியங்களைப் பண்ணியிருக்கிறோம் என்றாலும் இந்த வட்டி, அபராத வட்டி என்பதிலே வித்தியாசப்படுகிறது. அதைச் செலுத்தமுடியாத சூழ்நிலைக்கு ஆளாகிறார்கள். ஆகவே வட்டி, அபராத வட்டியைத் தள்ளுபடி செய்து அசலை செலுத்தவேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்கிறார்கள். இதை எப்படியாவது பரிசீலிப்பதற்கான முயற்சிகளை எடுக்கலாமா என்பதைப் பார்க்கவேண்டும். கடன் கணக்கு குரூப்பாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், உரையை முடித்துவிடுங்கள். நேரமில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். ஐந்து நிமிடம்கூட ஆகவில்லை. (குறுக்கீடு) பசிப்பது எல்லாம் சரி. பேசுகின்றவர்களை விட்டுவிடுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** கடன் பெற்றவர்கள் குரூப்பாக 4 பேர்கள், 5 பேர்கள் என்று சொல்லப்படுகிறது. அதனால் யார் ஒருத்தராவது கடன் கட்டினாலும் அவர்கள் பத்திரம் திரும்பப் பெறுவதிலே சிரமம் ஏற்படுகிறது. ஆகவே, தனி நபர்கள் என்ற அடிப்படையிலே அந்தப் பத்திரம் பெறுவதற்கான முயற்சிகளை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்த நிலையில் இப்போது இருக்கின்றன. அதன் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவது பிரச்சினையாக இருக்கிறது. அதை என்ன செய்வது என்பது பற்றிப் பார்க்கவேண்டும்.

சிறைச்சாலைகள் துறையிலே, சிறைச்சாலைக் காவலர்களுக்கு, காவல் துறைக் காவலர்களுக்கு இணையான சம்பளம் வழங்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில் இதுவரையிலும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, அவர்களுக்கு இடையிலே இருக்கிற அந்த ஊதிய முரண்பாட்டை நீக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சாதிச்



சான்றிதழ் வழங்குவதிலே பிரச்சினை இருக்கிறது. இந்தச் சாதிச் சான்றிதழ்கள்பற்றித் தொடர்ந்து இந்த அவையிலே பேசப்பட்டு வந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி கவனித்து உரிய முறையிலே சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கு குறிப்பாக மலைவாழ் மக்களுக்கு வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். அந்த முயற்சிகள் நம்முடைய மாநிலத்தில் குறைவாக இருக்கின்றன. மத்திய அரசோடு பேசி, சாதிச் சான்றிதழ் வழங்குவதற்கான முயற்சிகளை உடனடியாகச் செய்வதற்கு நமது அரசு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Speaker Sir, . . .

**திரு. மு. கண்ணப்பன்:** நான் பேசுவதற்கு Point of Order-ஆ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் இல்லாத நேரத்தில் இப்போது போய் Point of Order என்கிறீர்களே? என்ன Point of Order இப்போது? சொல்லுங்கள்,

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவையில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? திரு. சுதர்சனம் அவர்கள் அமைச்சர்கள் இடத்திலே இருக்கிறார். அதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன், பேசுங்கள்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் இந்த அவைக்கு வரவில்லை. ஏதாவது கோபமா அல்லது கட்சியில் இருந்து ஒதுக்கி வைத்திருக்கிறீர்களா?

**திரு. மு. கண்ணப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பமே தலைகீழாக இருக்கிறது. நீங்கள்தான் கவனித்துக்கொள்ள வேண்டும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எழுந்து நிற்கிறபோதே அவர் Point of Order என்கிறார். அதுதான் என்ன என்று கேட்டேன்.

**திரு. மு. கண்ணப்பன்:** கோவை மாவட்டம், கோவை வடக்கு வட்டத்திற்கு உட்பட்ட வீரகேரளம் என்கின்ற பேரூராட்சிப் பகுதியில் 1982 ஆம் ஆண்டில் 567 ஏக்கர் நிலம், வீடு கட்டும் திட்டத்திற்காக வீட்டு வசதி வாரியத்தின் சார்பிலே கையகப்படுத்துவதற்கு Notice கொடுக்கப்பட்டது. Notice கொடுத்தார்களே தவிர, வீரகேரளம் பேரூராட்சிக்கோ அல்லது அந்தப் பகுதியில் இருக்கிற சார்-பதிவாளர் அலுவலகத்திற்கோ எந்த அறிவிப்பும், உத்தரவும் இல்லாத காரணத்தால், கடந்த 26 ஆண்டு காலத்தில், பேரூராட்சி மன்றம் அந்தப் பகுதியிலே வீடுகள் கட்டுவதற்கும், தொழிற்சாலைகள் ஏற்படுத்துவதற்கும் அனுமதி கொடுத்து 5,000-க்கு மேற்பட்ட வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதேமாதிரி தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. 10 சதவிகிதம் தென்னந்தோப்புகளும் அந்தப் பகுதியிலே இருந்து கொண்டிருக்கின்றன. வீடு கட்டுகின்றவர்களும், தொழிற்சாலைகளை ஏற்படுத்தியவர்களும், வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், L.I.C. போன்ற நிறுவனங்களில் கடன் வாங்கி உள்ளார்கள். 20,000-க்கு மேற்பட்ட மக்கள் அந்தப் பகுதியிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். 1982-ல் புல notice கொடுத்த வீட்டு வசதி வாரியம், சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு எந்தவித அறிவிப்பும் தெரிவிக்கவில்லை. 26 ஆண்டு காலத்தில்நில விற்பனை மாற்றங்கள் நடைபெற்றுள்ளன. இந்த நிலையில், 24 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது, கடந்த 2006-ல் பேரூராட்சிக்கும், சார்-பதிவாளர் அலுவலகத்திற்கும், வீடுகள் கட்ட அனுமதிக்கக்கூடாது; அப்படி ஏதாவது அனுமதி கொடுத்திருந்தால் அந்தப் பத்திரப் பதிவுகளையெல்லாம் இரத்து செய்யவேண்டும் என்று அவர்களை அறிவுறுத்தியிருக்கின்றார்கள். இது நடைமுறைக்கு சாத்தியமில்லாத ஒன்று.

நான் ஏற்கெனவே இதுகுறித்து சட்டமன்றத்தில் 2006 ஆம் ஆண்டு பேசி இருக்கின்றேன். அந்தப் பேச்சின்மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, கையகப்படுத்துவதற்கு notice கொடுக்கப்பட்ட அந்தப் பகுதியில், 567 ஏக்கரில் வீட்டு வசதி வாரியம் 200 வீடுகள் கட்டி இருக்கின்றது. வீட்டு மனைகளாகப் பிரித்து தனியாருக்கு விற்பனை செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதிபோக, மீதி நிலங்கள் அனைத்தும் நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து இரத்து செய்யவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, வீட்டு வசதி வாரிய வீட்டை விலைக்கு வாங்கியவர்களுக்கும், கிரயப் பத்திரம் இதுவரைக்கும் வழங்கவில்லை. அவர்களுக்கும் கிரயப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



கோவை மாநகரத்திற்குட்பட்ட பகுதிகளில், புறநகர்ப் பகுதிகளிலும் குறிப்பாக கணபதி மாநகர், காந்தி மாநகர், வ.உ.சி. நகர், வெற்றி விநாயகர் நகர் போன்ற பகுதிகளில் 5,000-க்கு மேற்பட்ட வீடுகள் வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டு 30 ஆண்டுகளுக்கு முன்னாலே ஒதுக்கீடு செய்யப்பட்டது. அவர்கள் செலுத்தவேண்டிய அத்தனை தவணையையும் வீட்டு வசதி வாரியத்திற்கு திருப்பிச் செலுத்திவிட்டார்கள். ஆனால், அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய கிரயப் பத்திரம் இதுவரை வழங்கப்படவில்லை. அதற்குக் காரணம் நிலத்தினுடைய பழைய சொந்தக்காரர்கள், அரசிலே கொடுத்த நஷ்ட ஈடு போதாது என்று சொல்லி நீதிமன்றத்திற்குச் சென்று வழக்கு நடந்துகொண்டிருப்பதைக் காரணமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் சொல்கிறது. அதேபோல 2 ஆண்டுகளுக்கு முன்னாலே ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டு குழுவினரும் அதைப்பற்றி விசாரித்தார்கள். கட்டப்பட்ட வீடுகளுக்கு இதுவரை எந்தவிதமான பத்திரங்களும் வழங்கப்படவில்லை. ஆனால், ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களுக்கு மட்டும் வீட்டுமனைகளுக்கு மட்டும், கிரயப் பத்திரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-00*

நான் இங்கே தெரிவித்துக்கொள்வது, நிலம் ஆர்ஜிதம் செய்து, வீடுகள் கட்டப்பட்டு முறையாக விளம்பரம் செய்யப்பட்டு அந்த வீடுகளை பொதுமக்கள் யார் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்ற விளம்பரம் செய்ததன் பேரிலேதான் பொதுமக்கள் விண்ணப்பங்கள் தருகிறார்கள். அந்த விண்ணப்பத்தை வாங்கி அரசு குலுக்கல் முறையிலோ அல்லது வேறு வகையிலோ அவர்களுக்கு வீடுகளை ஒதுக்கீடு செய்கிறார்கள். அரசாங்கமே ஒதுக்கீடு செய்யக்கூடிய வீடுகளில் வில்லங்கங்கள் ஏற்பட்டு 30 ஆண்டுகாலம் பத்திரம்கூட பதிவு செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. இதை நீக்குவதற்கு அரசு முன் வரவேண்டுமென்று

கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, நில எடுப்பிலே பிரச்சினை இருக்குமானால் அதனுடைய பின் விளைவுகளை கூடுதலாக நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று சொன்னால் அரசாங்கமே அதற்கு பொறுப்பேற்றுக்கொண்டு அல்லது வீட்டு வசதி வாரியமே பொறுப்பேற்றுக்கொண்டு கொடுக்கவேண்டுமேயல்லாது அதனுடைய செலவைப் பயனாளிகள் தலையிலே கட்டுவது என்பது எந்த வகையிலும் நியாயமான காரியம் அல்ல. ஆகவே, அரசு இதை ஏற்றுக்கொண்டு இதை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும். அனைவருக்கும் கிரயப் பத்திரம் வழங்குவதற்கு முன்வர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட மருதமலை கோயில் மிகவும் புகழ்பெற்ற கோயில். அந்த கோயிலினுடைய அடிவாரத்தில் தொழுநோயாளிகள் 75 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 25 ஆண்டு காலத்திற்கு மேலாக புறம்போக்கு நிலத்திலே வீடு கட்டிக்கொண்டு அரசினுடைய அனுமதியோடு வீடு கட்டிக்கொண்டு குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு குடிநீர் வசதி, ரோடு வசதி, விளக்கு வசதி இத்தனையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதேபோல அவர்கள் நில வரியும் கொடுக்கிறார்கள். வீட்டு வரி செலுத்துகிறார்கள். 25 ஆண்டுகாலமாக அவர்கள் முயற்சி செய்கிறார்கள், ஆனால் பட்டா கொடுக்கப்படவில்லை. கடந்த 2 ஆண்டுகளில் நான் அந்த தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பிறகு, பலமுறை மாவட்ட அதிகாரிகளைச் சந்தித்து விண்ணப்பம் கொடுத்தும், நேரில் சந்தித்துக் கேட்டும், இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் தலையிட்டு 25 ஆண்டு காலமாக அங்கு வாழ்பவர்களுக்கு உதவ வேண்டும். அதுவும் அது சமுதாயத்திலே ஒதுக்கப்பட்ட தொழுநோயாளிகள் வாழக்கூடிய பகுதி; யாருக்கும் இடையூறு இல்லாத பகுதி; நானே பலமுறை நேரில் சென்று பார்த்திருக்கிறேன். நம்முடைய அமைச்சர் பொங்கலூர் பழனிசாமி அவர்களுக்குக்கூட அந்த இடம் தெரியும். அவர்களும் அங்கே நிகழ்ச்சிக்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு, உடனடியாகப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தொண்டாமுத்தூர் தொகுதியைச் சேர்ந்த கோவை மாநகரப் பகுதிகளான கணபதி, மணியக்காரன்பாளையத்தில் இராஜரத்தினம் வீதியிலே 30 பேருக்கும், கக்கன்ஜி வீதியில் நத்தம் புறம்போக்கிலே



200 ஆண்டுகளாகக் குடியிருக்கக்கூடிய 130 குடும்பத்தாருக்கும், அதேபோல இரவீந்தரநாத் தாகூர் வீதியில் 93 வீடுகளுக்கும், சங்கனூர் கிராமம், ரத்தினபுரி, மகேஸ்வரி நகர், சின்ராஜ் நகர் ஆகிய பகுதிகளிலே 40 ஆண்டுகளாகக் குடியிருக்கக்கூடிய 62 பேருக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நல்லாம்பாளையப் பகுதியில் சேர்மேன் ராஜ் நகர், கண்ணப்பன் நகர் ஆகிய மக்கள் அதிகம் வசிக்கின்ற பகுதியில் 15 பேர்களுக்கு மட்டுமே பட்டா கொடுத்திருக்கின்றார்கள். மீதி இருக்கக்கூடிய அத்தனை பேரும் ஏழையெளிய மக்கள், அவர்களிடத்திலே பணம் கட்ட வேண்டும், அதற்கான மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று கூறிப் பணம் கேட்கிறார்கள். அவ்வாறு கட்டமுடியாத நிலையில் இருக்கின்ற காரணத்தாலே, அவர்களுக்கும் இலவசமாகப் பட்டா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேமாதிரி, கோவை மாநகரத்தினுடைய மையப் பகுதியில் ஓடுகின்றது சங்கனூர் பள்ளம் ஓடை. இது நீண்டகாலமாக இருந்துவரக்கூடிய பிரச்சினை. அதன் கரையோரத்திலே வீடு கட்டி, சுமார் 40,000-க்கும் மேற்பட்ட மக்கள் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. பழனிசாமி அவர்கள் அங்கே தேர்தலுக்கு நின்றபோது, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களோடு அங்கே பிரச்சாரத்திற்கு வந்திருந்தார்கள். அவர்கள் அந்தக் கூட்டத்திலே பேசும்போதுகூட மனிதாபிமானத்தோடு அவர்களுடைய கோரிக்கையை நாங்கள் பரிசீலிப்போம் என்று மனிதநேயத்தோடு கூறிவிட்டு வந்திருக்கிறார்கள்.

ஆகவே, அரசு அவர்களுக்கு உடனடியாக இடையூறு இல்லாத வீடுகளுக்குப் பட்டா வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிஷம்.

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையை முடியுங்கள். ஒரே நிமிடம்.

**திரு. மு. கண்ணப்பன்:** அடுத்து, நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம், 3-8-1976-ல் நடைமுறைக்கு வந்தது. 1996-லே அந்தச் சட்டம் இரத்து செய்யப்பட்டது. உச்ச வரம்பு நிலம் என்று தெரியாமல் 1978 முதல் 1985 வரை கோவை மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 25 ஆண்டுகளுக்கு முன்னாலே அங்கே காலிமனைகள் விலைக்கு வாங்கி சுமார் 5,000 வீடுகள்

கட்டியிருக்கின்றார்கள். 2006-வது ஆண்டு அந்த நிலங்களை அரசு உபரி நிலம் என்றும், அவற்றை விற்கவும், கடன் பெறவும் முடியாமல் தடை செய்து பத்திரப் பதிவையும் தடை செய்துவிட்டனர். மாநகராட்சிக்கு முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்த முடியவில்லை. எனவே, உச்ச வரம்பு நிலம் என்று அறிவிக்கப்பட்ட நிலங்களுக்கு உரிமையாளர்கள் இதுவரை இழப்பீடும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆகவே, உபரி நில அறிவிப்பை இரத்து செய்து, பத்திரப் பதிவுத் தடையை நீக்கி, அந்தப் பகுதியிலே வாழுகின்ற மக்களுக்கு உரிய நிவாரணத்தை வழங்கவேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். திரு. கு. செல்வம், உங்களுக்கு 7 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**திரு. கு. செல்வம்:** 10 நிமிடங்கள் என்று சற்றுமுன் நடந்த அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, 7 நிமிடங்கள்தான்.

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய், வீட்டு வசதி, சிறைத் துறை மற்றும் குடிசை மாற்றுத் துறை ஆகிய துறைகளின் சார்பாக 7 நிமிடங்கள் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு விடுதலைச் சிறுத்தைகளின் சார்பாக நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அரசு தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. உபரி நிதியாக உள்ளதென நாம் நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறோம். நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் சுறுசுறுப்பாக இரவும் பகலுமாக 3 துறைகளையும் நன்றாகச் செயல்படுத்தி வருகிறார். இந்த ஆண்டு நாம் 3 இலட்சம் பட்டாக்களைக் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயித்தாலும், அதை விஞ்சுகின்ற வகையிலே 3 இலட்சத்து 89 ஆயிரம் பட்டாக்களை வழங்கி சாதனை படைத்திருக்கிறார்கள்.

அரசுப் புறம்போக்கு நிலங்களிலே வீடுகட்டி இருந்துவரும் ஏழை, எளிய மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கான வரம்பை 10 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாகக் குறைத்திருப்பது வரவேற்கத்தக்கது.



நீர்ப்பிடிப்பு நிலங்களிலே வீடு கட்டியவர்களை அகற்றவேண்டுமென்று ஒரு நீதிமன்ற ஆணை இருந்தாலும், அவர்களை அகற்றி, இந்த மண்ணின் மைந்தர்களை நாம் எங்கே எடுத்துக்கொண்டுபோய் சேர்க்கவேண்டுமென்று அரசிலே ஏதாவது கொள்கை முடிவு எடுக்கப்படுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்கவேண்டும்.

வெள்ள நிவாரணம் வழங்கப்பட்டபோது என்னுடைய தொகுதியிலே திட்டக்குடி பகுதியிலே வருவாய்த் துறையைச் சார்ந்தவர்கள், அந்தப் பகுதியிலே வெள்ளம் இல்லை என்று சொல்லி மறுத்து வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியிலே என்ன நடந்தது என்பதை ஆராய ஒரு குழுவை அமைக்கவேண்டும்.

என்னுடைய பகுதியிலே ஒரு சிறைச்சாலை வேண்டும்; கிளைச் சிறைச்சாலையை அமைத்துத் தாருங்கள் என்று கேட்டிருந்தேன். திட்டக்குடி பகுதி உங்களுக்குத் தெரியாத பகுதி இல்லை. தமிழ் மொழிப் பற்றாளர்கள், தமிழுக்காகப் போராடியவர்கள் எல்லாம் பிறந்து, வளர்ந்து, மறைந்த இடம் அது. குறிப்பாக, நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே ஒரு கிளைச் சிறைச்சாலையை அமைத்துத் தரவேண்டும்.

இப்போது 25,000 ரூபாய்வரை நாம் கூட்டுறவு வங்கியிலே கடன் வாங்கியவர்களுக்கு கடனை இரத்து செய்திருக்கிறோம். Economically weaker sections என்று நாம் கூறியிருந்தாலும், கோடிக் கணக்கிலே இன்று வீடுகளைக் கட்டுகிறார்கள், கோடிக் கணக்கிலே ரூபாய் செலவழித்து இடங்களை வாங்குகிறார்கள். ஆனால், நாம் 25,000 ரூபாய் தள்ளுபடி செய்தது 0.2 விழுக்காடுகூட வரவில்லை. குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாயாக அதை உயர்த்த வேண்டும். ஒரு இலட்சம் ரூபாய்வரை வாங்கியவர்களுடைய அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும்.

அதேபோன்று, ஏழை, எளிய ஆதி திராவிட மக்களுக்கெல்லாம் 1974-லே முதன் முதலில் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இலவசமாக வீடுகளைக் கட்டிக் கொடுத்தவர். அதை இப்போது மத்திய அரசும் பாராட்டிப் பின்பற்றி வருகிறது. ஏற்கெனவே மத்திய அரசு 25,000 ரூபாய் எனவும், தமிழக அரசு

12,000 ரூபாய் எனவும், ஆக மொத்தம் 37,000 ரூபாய் கொடுத்திருந்ததை, இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் தேசிய திட்டக் குழுக் கூட்டத்தில் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று கேட்டிருந்தாலும், இப்போது மத்திய அரசு 35,000 ரூபாய், தமிழக அரசு 20,000 ரூபாய், ஆக மொத்தம் 55,000 ரூபாய் கொடுக்கிறோம். இந்த 55,000 ரூபாயில் நாம் வீடு கட்ட முடியுமா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இதைக் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தவேண்டுமென்று நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்திலே செம்மஞ்சேரி பகுதியிலே 100 ஏக்கர் கையகப்படுத்தியதாகப் பத்திரிகையிலே படித்தோம். அதில் (iv) (i) Notification Order கொடுத்தும் அதற்குப் பிறகு அது கைவிடப்பட்டது. இப்படி யாராவது ஒரு பிரச்சினையை எழுப்புகிறார்கள். இந்த இடத்தை எடுக்கக்கூடாது, அந்த இடத்தை எடுக்கக் கூடாது என்றால் வீட்டு வசதி வாரியம் பணிந்துவிடுகிறதா, இல்லை விவசாயிகளின் நலனுக்காக அதைத் திருப்பிக் கொடுக்கிறதா என்பதுதான் கேள்வி.

பிற்பகல் 1-10

விவசாயிகளுக்கு நாம் திருப்பிக் கொடுக்கிற நிலத்தை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால், குறிப்பாக திருமழிசை பகுதியில் 2,000 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்தினோம். இப்போது நம்மிடம் வெறும் 400 ஏக்கர் நிலம் இருக்கிறது., அதற்கும் வழி இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால், விவசாயிகளுக்குக் கொடுத்த அந்த 1,600 ஏக்கரை அவர்கள் இப்போது பட்டா போட்டு விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். கலைஞருடைய ஆட்சிக்காலத்தில் எப்படி கலைஞர் நகரம், அண்ணா நகரம் ஏற்பட்டு ஒரு மிகப் பெரிய நகரமாக இன்று செயல்பட்டுக்கொண்டிருக்கிறதோ அதேபோன்று வீட்டு வசதித் துறை அந்தந்தப் பகுதியிலே உள்ள நிலங்களை எடுத்து ஒரு மிகப் பெரிய lay-out போடவேண்டும். இப்போது ஆலந்தூரிலே, மடிப்பாக்கத்திலே பார்க்கிறோம். அப்போது அவர்கள் போட்ட அந்த ரோடுகள் எல்லாம் 20 அடி ரோடு. ஆனால், நம்முடைய முத்தமிழ் அறிஞர் அவர்கள் போட்ட ரோடுகள் எல்லாம் 60 அடி, 100 அடி ரோடு என்று பிரம்மாண்டமான நகராக இன்று மிளிர்ந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருவது எல்லாம் அவர்கள் கேட்கும் குரலுக்கு நீங்கள் அந்த விவசாயிகளுக்கு நிலத்தைத் திருப்பிக்



கொடுப்பதால் அங்கே Land Grabbing நடந்து நிலம் விற்பனை ஆகிக்கொண்டிருக்கிறது. அதை நம்முடைய அரசு தடுத்து நிறுத்த வேண்டும்.

அதேபோன்று நம்முடைய குடிசை மாற்று வாரியத்திலும் கடந்த 20, 30 ஆண்டுகளாக நடைபெற்ற பணிகளை துரிதப்படுத்தி, 5 ஆண்டுகளிலே திட்டம் தீட்டி இப்போது 12,877 வீடுகள் கட்டி முடித்ததாக அறிவிப்பு வந்திருக்கிறது, அது வரவேற்கத்தகுந்தது.

கிராம நிர்வாக உதவியாளர்களுக்கு இதுவரை பணி நிரந்தரமோ, அவர்களுக்கு பதவி உயர்வோ கொடுக்கவில்லை என்ற ஒரு குறை இருக்கிறது. அரசாணை எண் 625, அரசாணை எண் 804, இப்படி ஆணைகள் போட்ட பிறகும் காலமுறை ஊதியம், அடிப்படை ஊதியம் ரூ.2,550 என்பதை இதுவரை கொடுக்கவில்லை. கிராம நிர்வாக உதவியாளர்கள் எல்லாம் படித்தவர்கள். பத்தாம் வகுப்பு முதல் பட்டப் படிப்பு வரை படித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரை எந்தப் பதவி உயர்வும் இல்லை. ஆனால், நாம் இப்போது கிராம நிர்வாக அதிகாரிகளை நியமித்து இருக்கிறோம். அவர்களுக்கு சிட்டா அடங்கல் என்றால் என்னவென்று தெரியவில்லை. 'A' ரிஜிஸ்டர் என்றால் என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், இதையெல்லாம் அந்த உதவியாளர்கள்தான் எழுதிக் கொடுக்கிறார்கள். சொல்லிக்கொடுக்கிறார்கள். இவ்வளவு விவரமாக, இவ்வளவு காலமாக பணியாற்றிய அவர்களுக்குப் பணி உயர்வு கொடுக்கப்படவேண்டும்.

வருவாய்த் துறை, வீட்டு வசதித் துறை சிறப்பாக நடைபெற்றாலும் இன்னும் நாம் கவனிக்கவேண்டிய துறை சிறைத் துறை. அதில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகவும் கவனம் செலுத்தவேண்டும். நம்முடைய புகழ் மணக்கும் பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவை நாம் நடத்தவிருக்கிறோம். இந்த நூற்றாண்டு விழாவிலே ஏழையெளிய மக்கள், தமிழின மக்கள் எல்லாம் தன்னுடைய குடும்பங்களை வீதியிலே விட்டுவிட்டு 10 வருடம், 15 வருடமாக சிறையிலே அடைபட்டிருக்கிறார்கள். நம்முடைய கலைஞர் அவர்களுடைய பொன் விழாவிலே, 10 ஆண்டுகளில் விடுதலை செய்வோம் என்று அறிவிப்பு செய்தோம் ஆனால், என்ன நடந்தது என்றால், இந்த Indian Penal Code (I.P.C) Section 224-ன்படி அவர்கள் ஒரு நாள் தாமதமாக சிறைக்குச் சென்றாலும் அவர்களை நாம் விடுதலை செய்ய முடியாது என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அதேபோல் Indian Penal Code (I.P.C) Sections 396 முதல் 400 வரை, 10 ரூபாய் கத்தியைக் காட்டி வாங்கினார் என்ற குற்றச்சாட்டு இருந்தால் அவர்கள் 17 வருடம்

வரை சிறையில் இருக்கிறார்கள். இது என்ன கொடுமை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராயவேண்டும். ஏற்கெனவே ஒரு கொள்கை முடிவு எடுத்து, 10 ஆண்டுகள் சிறைத் தண்டனைப் பெற்றவர்கள் எல்லாம் வெளியே வரலாம் என்று நம்முடைய முத்தமிழ் அறிஞர் பொன்விழாவிலே ஆணை பிறப்பித்தீர்கள். ஆனால், அதிகாரிகள் முட்டுக்கட்டை போட்டு I.P.C. Section 397-ல் இருக்கிறது, விடக்கூடாது என்று சொல்கிறார்கள். இது எந்தவிதத்தில் நியாயம் என்று தெரியவில்லை. 10 ரூபாய் வாங்கியவனுக்கும் அந்த நிலை. 1,000 ரூபாய் வாங்கியவனுக்கும் அந்த நிலை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 10 வருடம் என்று இருப்பதை பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழாவில் 7 வருடமாகக் குறைக்கவேண்டும். நாம் ஒன்றும் தமிழகத்தில் இதைப் புதியதாகச் செய்யப்போவதில்லை. ஏற்கெனவே கர்நாடகாவிலே 7 வருடத்தில் வெளியில் விட்டிருக்கிறார்கள். ஆந்திராவிலே விட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவி அம்மா மாயாவதி மூன்று வருடத்திலே விட்டிருக்கிறார். ஆகவே, நீங்கள் இதை நடைமுறைப்படுத்தவேண்டும். (குறுக்கீடுகள்) நான் இந்த புரட்சித் தலைவியை சொல்லவில்லை. நான் ** புரட்சித் தலைவியைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) ஆக, எங்களுடைய புரட்சித் தலைவி மாயாவதி அவர்கள் அங்கே புரட்சி செய்துகொண்டிருக்கிறார். விசாரணை சிறைவாசிகளுக்கு தண்டனையைக் குறைக்கவேண்டும். ஏற்கெனவே நம்முடைய விசாரணை சிறைவாசிகளுக்கு ஆறு மாதமாக அங்கே குறைக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அமைதியாக இருங்கள். உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம் அவர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் ** புரட்சித் தலைவி என்று சொன்னார். அந்த ** என்ற வார்த்தையை மட்டும் நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. ** என்ற வார்த்தையை நீக்குகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திரு. கு. செல்வம்:** உத்தரப் பிரதேசத்தில் புரட்சி செய்துகொண்டிருக்கிறார்கள். அதனால் புரட்சித் தலைவி என்று சொன்னேன். இதில் என்ன தவறு இருக்கிறது?

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சிரித்தார்கள், நான் புரட்சித் தலைவி என்றதும். நான் இவர்கள் இல்லை, அவர்கள் என்று சொல்கிறேன். சிறைவாசிகள் தன்னுடைய உறவினர்களுடன் பேசுவதற்கு . . .

*பிற்பகல் 1-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** One minute திரு. செல்வம். (குறுக்கீடு) என்ன, திரு. செங்கோட்டையன்?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. செல்வம் அவர்கள் தேர்தலிலே போட்டியிடுகிறபோது நூற்றுக்கணக்கான தடவை புரட்சித் தலைவி அம்மா, அம்மா என்று சொல்லி ஓட்டு வாங்கி வெற்றி பெற்றிருக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது.

**திரு. கு. செல்வம்:** மத்திய சிறையிலே, சிறைவாசிகள் தன்னுடைய உறவினர்களிடம் பேசும்போது அங்கே ஜன்னல்களைப் போட்டு, சல்லடை அடித்து வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, சிறைத் துறையில் உள்ளே நுழைகிறபொழுது, சிறை வாசலிலே அதிகாரிகள் தடுத்து, நிறுத்தி பரிசோதனை செய்து உள்ளே அனுப்புகிறார்கள். உறவினர்கள் உள்ளே ஏதும் எடுத்துச் சென்றுவிடக்கூடாது என்பதற்காக அந்தச் சோதனை நடைபெறுகிறது. ஆனால், சிறைவாசிகள் அங்கே தன்னுடைய உறவினர்களைப் பார்க்கும்பொழுது சுலபமாகப் பேச முடியவில்லை. ஆகவே, உடனே சிறையில் உள்ள அந்தக் கம்பிகளை அகற்றவேண்டும் என்று நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, please ஒரேயொரு நிமிடம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செல்வம், please co-operate with me. Time எனக்கு முக்கியம். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ். (குறுக்கீடு) One minute, one minute. சொல்லுங்கள் திரு. செல்வம். சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கு. செல்வம்:** இதுவரை 75 வயதுக்கு மேற்பட்டவர்கள் 107 சிறைவாசிகள் சென்னை சிறையிலே ஆயுள் கைதிகளாக இருக்கிறார்கள். அதேபோன்று சிறை மருத்துவமனைகளை நாம்

reform செய்ய வேண்டும். அங்கே psychiatrists என்ற மருத்துவர்கள் இல்லை. Welfare Officer என்று சொல்லுகின்ற அந்த நல அலுவலர்களை அங்கே நியமிக்கவேண்டும். சிறைச்சாலையில் மருத்துவ வசதியை நாம் ஊக்குவிக்கவேண்டும். எப்படி நம்முடைய மக்கள் நல்வாழ்வுத் துறையிலே, கல்வித் துறையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ், you have only five minutes.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறம், பொருள், இன்பம், வீடு என அகிலத்தின் அடக்கம் நான்கு; அந்த அகிலம் இயங்கும் திசைகளும் நான்கு; கொண்டல், தென்றல், கோடை, வாடை எனத் திசைகளில் வீசும் காற்றும் நான்கு; திசைகளில் ஒலிக்கும் வேதமும் நான்கு; வேதங்கள் ஓதும் நிலங்களும் நான்கு; பேரவையில் இன்று மானியங்களும் நான்கு! ஆம்; சிறைச்சாலைகள், வருவாய், இயற்கைச் சீற்றங்கள் மற்றும் வீட்டு வசதி என வரும் நான்கின் மீதும் நனி விருப்பம் கொண்டே நலமாகப் பேசுகிறேன். எனது பேச்சுக்கு வித்தாக நின்ற தமிழர்களின் கருவூலம், தமிழ் உணர்வுகளின் நிகண்டு, திராவிட அகராதி, அறிவாலய ரங்கோலி, பெரியாரின் கீதம், அண்ணாவின் நாதம், சட்டமன்றத்தில் பொன்விழா கண்ட சரித்திர நாயகர், (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய அரசியலின் இன்றைய நாட்காட்டி, இங்குள்ள அரசியலின் நடப்புப் பஞ்சாங்கம், தமிழினத் தலைவர், தமிழினக் காவலர், தளர்விலா நாவலர் என பன்முக விற்பன்னராய் விளங்கும் எங்கள் தலைவர், மாண்புமிகு முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களே! என் முகவரியே! உம்மை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சிக்குப் பொறுப்பேற்று நல்லாட்சி செய்யும் நயன்மிகு நாயகர், அறிவாலயத் தலைவாயில், அயர்விலாச் செல்வர், சென்னைச் சிங்காரம், தமிழகத்தின் சிருங்காரம், எங்கள் அண்ணன் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தளபதியார் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாமலையிலும் பயின்று, அண்ணாவிடமும் பயின்ற கலைஞரின் உள் மனதே, கழகத் தூணே, பெரியார் பாதையே, பேரறிவாளரே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியில் எனது வெற்றிக்குக் கரை கட்டிய நாடாளுமன்ற உறுப்பினர், கொடை வள்ளல், என் ஆருயிர் அண்ணன் கரூர் கழக வரலாறு, திரு. கே.சி.பி. அவர்களே, எழுதப்படுகிற வரலாறு எடுத்துக்காட்டாக வேண்டும் என்ற வகையில் வரலாற்றை எழுதிக்



கொண்டிருக்கும் என் தானைத் தலைவர் ஆட்சியில், என் தொகுதி முறையீடுகளை நிரல்பட வைக்கிறேன். அவை உறுதிபட நிறைவேற கழகத் தலைவராம் எங்கள் முதல்வரை வேண்டுகிறேன்.

கூடிக் கரையும் காகங்களாக இல்லாது, கூடிப் பொழியும் மேகங்களாக எனது தொகுதித் திட்டங்கள் இருக்க வேண்டுமென்பது எனது கிருஷ்ணராயபுரத்து மக்களின் ஆசை. அவர்களின் ஆசை விடியல் காண தலைவர் கலைஞர் அவர்களே, எங்களுக்கு நீங்கள் அதில் கிழக்குத் திசையாக இருக்க வேண்டுகிறேன்.

வளமை என்பது சிலருக்கு விதிக்கப்பட்டிருக்கிறது; சிலரோ விதித்துக் கொள்கிறார்கள். எனது தொகுதியோ வளமை இல்லாத தொகுதி. எனவே, அது வளம் பெற வேண்டுமானால், அடிப்படையிலே ஒரு தேவை உள்ளது, அதுவும் அத்தியாவசியத் தேவை. அதுதான், புதிய கடவூர் வட்டம் என்ற எதிர்பார்ப்பு. கருவாகிக் கருவாகி, உருவாகிற நேரம் உருக்குலைந்து போகிற கோரிக்கை இது. எனவே, தரகம்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்ட கடவூர் வட்டம் என்ற புதிய வட்டம் ஒன்றை உருவாக்கித்தர வேண்டுகிறேன். 13-8-2006-ல் இப்பேரவையில் இதுகுறித்து நான் வினா எழுப்பியபோது, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், எல்லை வரையறை ஆணையத்தின் அனுமதி வரப்பெற்றதும் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்றார். இதுகுறித்து அனைத்து முன்மொழிவுகளும் அரசிடம் உள்ளன. எனவே, இந்த முன்மொழிவை மாண்புமிகு முதல்வரின் மனமும் கொஞ்சம் முன்மொழிய வேண்டுமென இந்த நேரத்தில் அருள்கூர்ந்து வேண்டுகிறேன். எனது கோரிக்கைகளில் இதுதான் தலைக் கோரிக்கை; தலையாய கோரிக்கை.

உடல்நலம் பேண வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டரும், சான்றிதழ் வேண்டுமானால் 40 கிலோ மீட்டரும் முறையே குளித்தலைக்கும், கோவக்குளத்திற்கும் மக்கள் பயணிக்க வேண்டியுள்ளது. சரியில்லாத பாதையில் இந்தத் தொலைவுகளே அவர்களுக்கு ஒரு வரலாற்றுப் படையெடுப்பாய்த் தெரிகிறது. அப்படிப் படையெடுத்தும் பலர் விழுப்புண்ணோடுதான் வருகிறார்கள். பயண நேரமே அவர்களை இப்படி புறமுதுகிடச் செய்கிறது. எனவே, இப்பகுதி மக்கள் வாகைசூட ஒரு வழிகாட்ட வேண்டுகிறேன். கிருஷ்ணராயபுரம், பஞ்சப்பட்டி, தரகம்பட்டி வரை புதிய வழித் தடத்தில் பேருந்துகளை இயக்கி, இந்த மக்களுக்கு உதவிட வேண்டுகிறேன்.

பிற்பகல் 1-20

கல்லூரிகள் என்று எடுத்தால் என் தொகுதி வெறும் காற்று மண்டலம். தடையேதுமின்றி தொகுதி முழுக்கக் காற்று பிரயாணம் செய்கிறது. எனவே எழுத்தே தெய்வம், எழுதுகோலே தெய்வம் என்று கொண்டுள்ள எங்கள் கல்விக் கண் தலைவரே, என் தொகுதிக்கும் அறிவொளி தாருங்கள். மணவாசியில் ஓர் அரசு மருத்துவக் கல்லூரி, தாந்தோணி ஒன்றியம், மணவாடியில் ஓர் அரசு பொறியியல் கல்லூரி, கடவூர் ஒன்றியம், தரகம்பட்டியில் அரசு கலை, அறிவியல் கல்லூரி என ஏதேனும் ஒரு கல்லூரியை இந்நிதியாண்டில் அனுமதித்து, அப்பகுதி மாணவர்களின் கல்விக் கண் ஊற்றுக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு தீஞ்சுனையாய் இருக்க வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் கோரிக்கையை ஏற்று எனது கிருஷ்ணராயபுரம் தொகுதிக்குட்பட்ட மாயனூரில் தற்போது அமையவிருக்கும் கட்டளை தடுப்பணையால் வெள்ளக் காலங்களில் வரும் மழை நீரைத் தெற்கு மாவட்டங்களுக்கு வாய்க்கால்மூலமாகக் கொண்டு செல்லும்போது, எனது தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களும் பயன்பெறும் வகையில் வெள்ள நீரை, நீரேற்றுப் பாசன முறையில், Lift Irrigation என்று சொல்வார்களே, அதனடிப்படையில் உயர் மட்டத்தில் உள்ள குளங்களில் தேக்கி, இப்பகுதி மக்கள் மேம்பட, முன்னேற்றமடைய, உரிய திட்டங்களை நீரேற்றுப் பாசன முறையில் வடிவமைத்துச் செயல்படுத்திட ஆய்வுப் பணிகளை விரைவில் தொடங்கிட ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தினமும் எண்ணூறுக்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் வந்து போகிற மைலம்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேலும் தரம் உயர்த்தி, அதை ஓர் அரசு மருத்துவமனையாக ஆக்கித்தர வேண்டுகிறேன். கண்ணொளி வழங்கிய கற்பக விருட்சமே, இந்த ஆரம்பச் சுகாதார நிலையம் ஓர் அரசு மருத்துவமனையானால், அப்பகுதி மக்களுக்கு நிச்சயம் அதுவொரு கண்ணொளியாக விளங்கும் என்பதை இந்த நேரத்தில் வேண்டுதலாக வைக்கிறேன்.

தொகுதியின் தேவைக்கேற்ப கால்நடை மருத்துவமனை அல்லது துணை நிலையம் அமைக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பில் செயல்படும் மாவத்தூர் மற்றும் நந்தன்கோட்டை நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், மேலும் பாலவிடுதி மற்றும் வேங்கம்பட்டியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தித்தர வேண்டுகிறேன். பள்ளிகளின் தரம் உயர்ந்தால், அங்குள்ள மாணவர்களின் கல்வியின் தரம் உயரும். இதற்கான முன்மொழிவுகளும் அரசின் பார்வையிலே உள்ளன.

எனது தொகுதியில் உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அமைத்திட வேண்டுகிறேன்.

தமிழகத்தையே ஒரு தொழில் பூங்காவாக்கி வரும் தலைவர் ஆட்சியில், எனது தொகுதியில் அரசு சார்பில் தொழிற்சாலைகள் எனச் சொல்ல ஏதுமில்லை. எனவே, இதையும் பரிசீலிக்க வேண்டுகிறேன்.

பத்திரப் பதிவு அலுவலகங்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலகங்கள், நெடுஞ்சாலைத் துறை அலுவலகங்கள் என எல்லா அலுவலகங்களுமே தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அவற்றைச் சொந்தக் கட்டடங்களுக்குக் குடி பெயர்த்திட வேண்டுகிறேன்.

சீரான மின் விநியோகம் கிடைத்திட சிந்தாமணிப்பட்டி, காணியாளம்பட்டி ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைத்துத்தர வேண்டுகிறேன்.

பிற்படுத்தப்பட்ட ஆதி திராவிட மாணவ, மாணவியர் தங்கிப் படிக்க ஏதுவாக விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை இரு மடங்காக உயர்த்த வேண்டுகிறேன். அவசர விபத்துச் சிகிச்சை மையம் ஒன்று மாயனூரில் அமைக்கப்பட வேண்டுகிறேன்.

வருவாய்த் துறையைப் பொறுத்தமட்டில் என் பணிவான வேண்டுகோள், கடந்த பல ஆண்டுகளாய் தண்ணீர் வரக்கூடிய சூழ்நிலைகளே இல்லாமல், இன்னும் அரசு ஆவணங்களில் பெயரளவில் இருக்கும் குளங்கள், குட்டைகள், ஏரிப் பகுதிகளில் வசிக்கும் ஏழை மக்களை ஆக்கிரமிப்பு என்று அகற்றிவிடாமல் அவர்கள் வசிக்கும் இடங்களுக்குப் பட்டா வழங்கப் பரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவுடன் வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அறிந்தோ, அறியாமலோ அறிவு மழுங்குகிறபோது, குற்றங்கள் நிகழ்ந்து, அப்படி அறிவு மழுங்கியதால் குற்றவாளிகள் பெருகி, அவர்களில் பெரியவர்கள் என்றால் சிறைச்சாலைகளிலும், சிறியவர்கள் என்றால் சீர்திருத்தப் பள்ளிகளிலும் இருந்து வருகிறார்கள். சிறைச்சாலைகளில் யோகா மற்றும் தியான வகுப்புகளின் அறிமுகங்களை அடுத்து, இவர்களும் இப்போது திருந்தி வருகிறார்கள். மனம் வியர்த்துப் போனவர்களுக்கு உடல் வியர்த்துப் போகாதபடி சிறைகளில் இப்போது மின் விசிறிகள் வழங்கப்பட்டு வரும் வேளையில், இவர்களுக்கு மனமும் வியர்த்துப் போகாதபடி, தலைவர்களின் பிறந்த நாளில் ஆயுள் தண்டனை பெற்றவர்களில் குறைந்தது பத்தாண்டுகள் தண்டனை முடிந்து அவர்களின் நன்னடத்தையைக் கருத்தில்கொண்டு விடுதலை செய்கிறார்கள். அப்படி விடுதலை செய்யப்படுபவர்களைப் பற்றித் தலைவர் அவர்களிடத்திலே ஒரு தனி கோரிக்கை. அறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டை ஒட்டி இந்தக் குறைந்த கால தண்டனை, பத்தாண்டுகள் என்பதை, எட்டாண்டுகள் எனக் குறைத்து, அறிஞர் அண்ணாவின் பெயரைச் சொல்லியாவது அவர்கள் திருந்தி வாழ, இந்தத் தண்டனைக் காலத்தை ஒரு சிறப்பு நேர்வாகக் கருதி, குறைத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், போதும் உட்காருங்கள். (குறுக்கீடு) அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார். (குறுக்கீடு) திரு. காமராஜ், சொல்லுங்கள். உரையை முடியுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திரு. பெ. காமராஜ்:** தமிழ், தமிழர், தமிழ்நாடு என்பதையே தம் உடல், பொருள், ஆவியெனக் கொண்ட அருமைத் தலைவருக்கு இன்று பூமியே தொட்டிலாய் நின்று தாலாட்டுப் பாடுகிறது. 'தோன்றின் புகழொடு தோன்றுக' என்று தொடங்கும் குறளுக்கு முகத்துவாரமாய் விளங்கும் எங்கள் தலைவருக்கு எண் திசையெங்கும் இன்று ஏற்றமிகு பாராட்டுகள். அவருக்காக ஐந்து முறை வாய்த்த ஐந்து சிம்மாசனங்களுமே பிஞ்சில் பழுத்ததல்ல; எல்லாம் இயற்கை உரமிட்டு, இயற்கையாய் விளைந்த இன்சுவைக் கனிகள். நீர்த்துப் போகாத வரலாற்றை நீணிலத்தில் பதித்துள்ள அவர், இன்று இந்த மண்ணிலே ஒரு பெரும் தலைவர்; (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படிப்பட்ட என் தலைவரை, எண்ணியது முடிக்கும் தலைவர். இடர் கண்டு துவளாத் தலைவர், திண்ணமாய்ச் செய்யும் தலைவர், தெரிந்தவர் போற்றும் வேளை, உண்மையாய் உலகம் போற்றும்



உயர்புகழ் தலைவர் தன்னை, கண்ணெனப் போற்றும் நானும் காலமும் வாழ்த்துவனே, என்று சொல்லி, பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வசந்தகுமார்.

**திரு. எச். வசந்தகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பூமி உள்ளளவும் பாராட்டுகின்ற நாங்குநேரி தொகுதியின் Hi-Tech Industrial Park-க்கு நேற்று புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடு செய்த தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டங்களுக்கு எல்லாம் அடிப்படையாக, உதவியாக இருக்கின்ற எங்கள் தலைவி அன்னை சோனியா காந்திக்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறைச்சாலை, வருவாய்த் துறை, இயற்கைச் சீற்றங்கள், வீட்டு வசதி குறித்து அத்தனை பேர்களும் பேசிவிட்டாலும் ஒரே கருத்து, சிறைச்சாலையிலே பணியாற்றுகின்ற காவலர்களுக்கு அதிக ஊதியம் கொடுக்க வேண்டியது முதல் கட்டமாக இருக்கிறது. இயற்கைச் சீற்றங்களைச் சமாளிப்பதில் நமது தமிழக அரசு நல்ல ஒரு நிலையில் பணியாற்றிக்கொண்டிருந்தாலும், 2007 ஆம் ஆண்டு தென்னகத்திலே நெல்லை மாவட்டத்திலே நடந்த அழிவில் அந்த மக்களுக்கு சரியான உதவிகள் கிடைக்கவில்லை.

வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரையிலே, ஏழை எளிய மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு நீங்கள் வீடுகளைக் கட்டித் தருகின்றீர்கள்; பாராட்டுகிறோம். ஆனால் சென்னை மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கின்ற நகரங்களில் இளைஞர்களும், பெண்களும் அதிகமாகப் பணியாற்றுகின்றார்கள். அந்த இளைஞர்களுக்குப் பொதுவாக யாருமே வீடு கொடுப்பதில்லை. தனியாக அந்த இளைஞர் செல்கின்ற நோத்தில் வாடகைக்கு வீடு கொடுப்பதில்லை. அதேபோல, பத்திரிகைத் துறையிலே இருப்பவர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, திருமணமாகாதவர்களுக்கு வீடு கொடுப்பதில்லை. எனவே, தமிழக அரசு அந்த இளைஞர்களுக்கும், அந்த இளம் வயதுப் பெண்களுக்கும் தனியாக hostel மாதிரி பெரிய கட்டடங்களைக் கட்டி, அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்திலே பனை ஏறுகின்ற தொழிலாளர்கள் ஏராளமான பேர் இருக்கின்றார்கள். ஆனால், காவல் துறையினர் பதநீர் இறக்குபவர்களைப் பிடித்துக் கள் இறக்குவதாக அவர்கள்மீது குற்றச்சாட்டுகளைக் கூறி, அவர்களுக்குத் தண்டனை விதிக்கின்றார்கள். அதை மாற்றவேண்டும்.

நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்; மாட்டு வண்டியிலே மணல் எடுப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். ஆனால், உண்மையிலேயே தேவைக்காக எடுக்கின்ற அந்த ஏழை விவசாயிகளுக்கு நீங்கள் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடுமட்டுமல்ல. நீங்கள், கலைஞர் ஆட்சியில் அருமையான ஒரு சட்டமன்ற வளாகத்தை கட்ட இருக்கின்றீர்கள். அந்தச் சட்டமன்ற வளாகத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, எனது தொகுதியைப் பொறுத்தவரையிலே மழைக் காலங்களில் அதிகமாக அங்கே பேரழிவு நடந்துகொண்டிருக்கிறது. பட்டாக்களைப் பொறுத்தவரையிலே தமிழக அரசு நெல்லை மாவட்டத்திலே எங்கள் நாங்குநேரி தொகுதிக்கு அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்னும் பல கிராமங்களுக்கு வந்து சேரவில்லை. பாலங்களை நான் நமது அமைச்சர் பெருமானிடம் வந்த நாளிலேயிருந்து கேட்டுக்கொண்டிருக்கிறேன். பாலங்கள் வரவில்லை. ஐயா, நீங்கள் பாலங்கள் தரவேண்டும். சாலைகள் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாங்குநேரி தொகுதியைப் பொறுத்தவரையிலே, இந்த நாங்குநேரி Hi-Tech Industrial Park வந்தால் மக்கள் ஏராளமாக வருவார்கள். 70 ஆயிரம் பேர் பணியாற்ற இருக்கின்றார்கள். அவர்களுக்குக் குடிதண்ணீர் வேண்டும். அந்தக் குடிதண்ணீருக்காக வள்ளியூர், நாங்குநேரி, விஜயநாராயணம் குளங்களை 18 கோடி ரூபாயிலே நீங்கள் சரிசெய்தால் 365 நாட்களுக்கும் குடிதண்ணீர் வந்து விவசாயிகளும் அங்கே பயன்பெறுகின்ற வாய்ப்புகள் கிடைக்கும்.



சித்த மருத்துவத்தைப் பொறுத்தவரையிலே, தமிழக அரசு ஊக்கம் கொடுக்கிறது. ஆனால், நாங்குநேரி தொகுதியிலே இருக்கின்ற சித்த மருத்துவமனையில் டாக்டர்கள் போதிய அளவு இல்லை; அதனால், அங்கே வருகின்ற நோயாளிகள் சரியான முறையில் கவனிக்கப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. வள்ளியூரிலே பெரிய ஆஸ்பத்திரியைக் கட்டிக் கொடுத்தார்கள், நமது அமைச்சர் பெருமக்களும் தமிழக அரசும். ஆனால், அங்கே அதற்குரிய உபகரணங்களும், டாக்டர்களும் உதவியாளர்களும் இல்லாமல் இருக்கின்றார்கள்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எச். வசந்தகுமார்:** மேலும், வள்ளியூரைப் பொறுத்தவரையிலே, main road—அதாவது, National Highways-ன் குறுக்கிலே ஒரு ஓடை வருகிறது. ஏறத்தாழ 15 அடி அகலமுள்ள அந்த ஓடை குறுகிக் குறுகி, 3 அடியாக மாறி, இப்போது மழை வருகின்ற காலத்தில், அந்த ஓடையிலேயிருந்து வருகின்ற தண்ணீர், சாலையைத் தாண்டி, அங்கேயிருக்கின்ற கடைகளுக்கும், வியாபாரம் செய்கின்ற இடத்திற்கும் இடைஞ்சல் கொடுக்கிறது. எனவே, நமது அமைச்சர் பெருமக்கள், தமிழக அரசின் உதவியோடு அதனை அகலப்படுத்தவேண்டும்—15 அடி இருக்கின்ற அந்த ஓடையை, மக்கள் இப்போது 3 அடியாகச் சுருக்கியிருக்கின்றார்கள். அதை மாற்றி 15 அடியாகத் தந்தால், மீண்டும் அந்த மக்களுக்குத் துன்பம் வராத சூழ்நிலை ஏற்படும்.

பொத்தையடி என்ற ஊரிலே், வெறும் 4, 5 வார்டுகளிலே இருக்கின்ற அந்தச் சாக்கடைகள் ஒரு இடத்திலே தேங்கி, ஏர்வாடிப் பகுதியிலே மிகவும் மோசமான சூழ்நிலை உள்ளதால், மக்கள் நோயாளிகளாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, வள்ளியூரிலே ஏற்கெனவே இருக்கின்ற மலையைக் குடைந்தெடுத்து, அதில் 60 அடி ஆழத்திற்குத் தண்ணீரும், சாக்கடையும் கலந்து நோய் அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. எங்கள் தொகுதிக்கு இதையெல்லாம் போக்கும் நடவடிக்கைகளை நீங்கள் எடுக்கவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் பெருந்தலைவர் காமராஜர் இலவசக் கல்வியைத் தந்தார்; நீங்களும் தொடர்ந்து தந்தீர்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாள் விழாவை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் குழந்தைகளைக் கொண்டாட வைத்தீர்கள்.

அந்தப் பள்ளிக்கூடங்களைச் சுற்றி காம்பௌண்ட் சுவரினை அரசே கட்டிக் கொடுக்கவேண்டும். அங்கேயிருக்கின்ற அந்தத் தலைமை ஆசிரியர்கள் எல்லாம் என்னிடம் சொல்கிறார்கள்; "பெண்கள் படிக்கின்ற பள்ளிக்கு நீங்கள் சுற்றுச் சுவர் கட்டித் தந்தால்தான், பாதுகாப்பாக இருக்கும்" என்று சொல்கிறார்கள். அதையும் நீங்கள் செய்து தரவேண்டும்.

அதே நேரத்திலே, போக்குவரத்துத் துறை இலாபமாக வருவதற்கு courier service -ஐ நீங்கள் நடத்த வேண்டுமென்று கேட்டேன். நமது போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், "நடத்துவேன், அதை நான் test முறையில் செய்வேன்" என்று சொன்னார்கள். அதை இன்னும் செய்யவில்லை. நீங்கள் உடனடியாக courier service-ஐ ஏற்படுத்தி, போக்குவரத்துக் கழகத்திற்கும் இலாபத்தைச் சேர்க்கவேண்டும். நம்முடைய நேரு பெருமான் அவர்கள், எங்களுக்கு நல்ல உதவியைச் செய்திருக்கின்றார்கள். ஆனால், deluxe bus என்று சொல்லப்படுகின்ற அந்த சொகுசு பஸ்ஸை, நாங்குநேரி தொகுதிக்கு ஒன்றைக்கூடக் கொடுக்கவில்லை. ஏற்கெனவே, மூன்று பேருந்துகள் கேட்டிருக்கிறேன்; 'தருவேன்' என்று சொல்கிறார்கள். சந்தோஷமாகச் சொல்லுகின்ற ஒரே அமைச்சர் நமது நேரு பெருமான் அவர்கள்தான். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அதிகமாகத் தருவார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது.

கடந்த வெள்ளச் சேதத்திலே நமது தமிழக அரசின் சார்பில் ஹெக்டேருக்கு ரூ.7,500/- இழப்பீடு கொடுத்தார்கள்; அது போதாது; ரூ.15,000/- கொடுக்கவேண்டும். ஏழையெளிய மக்களுக்கு நமது அரசாங்கத்தின்மூலம் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறோம். அதைச் சரிசெய்ய வேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் ரூ.12,000/- கொடுக்கிறது. அந்த 12,000/- ரூபாயும், ஏழைகளே அவர்கள் கையிலிருந்து போட்டுக் கட்டிவிட்டுத்தான், அந்தப் பணத்தை வாங்கமுடியும். 12,000/- ரூபாய் இல்லாத காரணத்தினால், எங்கள் தொகுதியிலே ஒதுக்கிய 19 வீடுகளுக்குப் பணம் திரும்பி மீண்டும் அரசாங்கத்திற்கே வந்துவிட்டது. எனவே, ரூ.12,000/- என்பதை, ரூ. 20,000—ஆக நீங்கள் மாற்றிக் கொடுத்தால், அந்த ஏழையெளிய மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

Scheduled Caste என்னும் ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த மக்கள் வாழ்கின்ற இடத்தைப் போய்ப் பாருங்கள்; இந்த மழைக் காலத்திலே, நான் சென்ற இடங்களிலெல்லாம், 4 அடி, 5 அடி உயரத்திற்குத் தண்ணீர் நின்றது. சாப்பிடாமல் இருக்கிறார்கள் அந்த Scheduled Caste people; ஏராளமான பேர். காரணம் என்னவென்று சொன்னால், சுற்றியிருக்கின்ற வசதி படைத்தவர்கள்; சுற்றியிருக்கின்ற மற்ற இனத்தவர் (மணியடிக்கப்பெற்றது) அவர்களுக்கு வழி விடுவதில்லை. அவர்கள் வாழ்க்கைத் தரத்தோடு மோதுகிறார்கள். தெரு விளக்கு வசதி இல்லை; சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. அந்த ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற இடங்களில், தெரு விளக்கு இல்லை; ரோடு இல்லை; குடிக்கத் தண்ணீர் இல்லை. மழை வந்தால் 5 அடி உயரத்திற்கு அங்கே தண்ணீர் நிற்கிறது. தமிழக அரசாங்கம் சிறப்புக் கவனம் செலுத்தி, அந்த மக்களைப் பாதுகாக்கவேண்டும். 27 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த நமது திரு. அர்ஜுன் சிங் அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும், அந்த ஏழையெளியவர்களுக்காகப் பாடுபடுகிறார்கள். ஆனால், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமக்களே, அந்த ஏழையெளிய மக்களின் கண்ணீரைத் துடைக்க நீங்கள் எல்லோரும் அந்த Scheduled Caste people வாழ்கின்ற இடத்திற்கு மழைக் காலத்தில் செல்லுங்கள். நேரடியாக மழை பெய்கின்ற நேரத்தில் செல்லுங்கள்; போய்ப் பாருங்கள். அந்த மக்களின் கண்ணீரைத் துடையுங்கள். தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நீடுழி வாழ வேண்டுமென்று அவர்கள் வாழ்த்துகின்ற அளவில் நீங்கள் வாழவேண்டுமென்று..



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீடூழி வாழ வேண்டுமென்று சொல்லி, உரையை முடியுங்கள்.

பிற்பகல் 1-35

**திரு. எச். வசந்தகுமார்:** ஏழையெளிய மக்கள் நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கு ரூ.12,000 ஆண்டு வருமானத்திற்குள் இருந்தால்தான் அந்த உதவிகள் கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ரூ.12,000 என்பதை ரூ.25,000 ஆக மாற்றவேண்டும். அப்படிச் செய்தால்தான் ஏழையெளிய மக்களுக்கு எல்லாவிதமான உதவியும் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். நீங்கள் உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன். (குறுக்கீடு) எல்லாம் நீங்கள் சொல்லிவிட்டீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. எச். வசந்தகுமார்:** திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பெருமை சேர்த்து, 70 ஆயிரம் இளைஞர்களின் வாழ்க்கையில் ஒளி ஏற்றிய தமிழக அரசுக்கு மீண்டும் நன்றி சொல்லி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** தஞ்சமென வந்தவரைத் தாய்போல ஆதரித்து, வஞ்சகர்களின் செயல்களுக்கு வாய்முனையில் தீர்ப்பளித்து, அஞ்சாத திராவிட நெஞ்சில் அன்புக்கு இடம் கொடுத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களைக் காத்து வரும் தாயே! நாளைய சரித்திரங்களை ஆளப்போவதும் நீயே! கேட்டதைத் தந்திடும் கற்பகம், கேளாததையும் தரும் அற்புதம், நாட்டுக்கு ஏற்றது உன் தலைமை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் உரையை முடிக்கவேண்டும்.

**திரு. பி. பலராமன்:** நானிலம் போற்றும் உன் புலமை, புள்ளி விழாத வெள்ளி நிலவே, பூமிப்பந்தின் நிகழ்கால அதிசயமே! நீருக்குள் நெருப்பாய், நெருப்புக்குள் ஈரமாய், தாழ்ந்த தமிழர்களின் கைகளின் போர்வாளே! தருக்கர்களின் கொடுக்கினை நறுக்கிடும் அரிவாளே! அறிவியல் மோகனமே, ஆன்மீகப் பூபாளமே, அடங்காத பேர்களை அடக்கிடும் போர்க்குணமே! குணத்தால் தங்கம், கொதித்தால் சிங்கம், பார்த்தால் தென்றல், பகைத்தால் பிரளயம் என்ற அத்தனை வார்த்தைகளுக்கும் சொந்தக்காரராக இருக்கும் மாண்புமிகு இதயதெய்வம், (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க எங்களுடைய மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, இன்றைக்கு சிறைத் துறை, வருவாய், வீட்டு வசதி மற்றும் இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் துடைப்பு ஆகிய துறை மானியக் கோரிக்கைகளின்மீது பேசுவதற்குக் காரணமாக இருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் வாய்ப்பு தந்தமைக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர் காலத்திலிருந்து இன்றுவரை வழக்கத்தில் உள்ள ஜமாபந்தி முறையை மாற்றி, அனைத்து வருவாய்த் துறைக் கணக்கையும் தணிக்கை செய்யும் முறையை அமல்படுத்திட இந்த அரசை வலியுறுத்துகிறேன்.



சென்னை மற்றும் புறநகரில் வசிக்கும் ஏழையெளிய, நடுத்தர மக்கள் அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து, குடியிருந்துவரும் நிலையில், 1,000 சதுர அடி நிலம் அளவுக்கு நீண்டகாலமாக குடியிருக்கும் நபர்களுக்கு, அரசு வீட்டுமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையில் பக்கம் 46-ல் குறிப்பிட்டுள்ள திருமண உதவித் திட்டத்தில் வருமானச் சான்றிதழ் வரம்பு ரூ.12,000 என்று உள்ளதை ரூ.24,000 ஆக உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தற்சமயம் அரசு குறிப்பிட்டுள்ள வருமான வரம்பின்கீழ், வருமானச் சான்று வழங்குவதில் கிராம நிர்வாக அதிகாரிக்கும், வருவாய் ஆய்வாளருக்கும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. உதாரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் அம்பத்தூர் வட்டாட்சியாளர் அலுவலகத்தில் பணிபுரிந்த வருவாய் ஆய்வாளரும், கிராம நிருவாக அலுவலரும் இதனால் பணியிடை நீக்கம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந்தச் சான்றிதழ் வழங்குவதில் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலை தமிழகம் முழுவதும் பரவலாக உள்ளது என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றேன்.

வட்டாட்சியர் அலுவலகங்களில் அனைத்துச் சான்றிதழ்களும் இருப்பிடச் சான்று, வாரிசுச் சான்று, வருமானச் சான்றிதழ், சாதிச் சான்று, நில உரிமைச் சான்று, பட்டா, 'A' Register நகல், FMB வரைபடம், செல்நிலைச் சான்று ஆகிய பல்வேறு சான்றிதழ்களையும் மிகவும் விரைவாக விசாரணை செய்து குறிப்பிட்ட கால அளவுக்குள் online மூலமாக 24 மணி நேரத்திற்குள் வழங்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் ஒரு வட்டத்துக்கு ஒரு வட்டாட்சியர் அலுவலகம் என்று சீரமைக்க வேண்டும். தற்பொழுது சென்னையில், 3, 4 தொகுதிகளுக்கு ஒரு வட்டாட்சியர் அலுவலகம் என்று உள்ளது. எனவே, விரைவாகப் பணியாற்ற இயலாத நிலை உள்ளது. உதாரணமாக, சென்னை, தண்டையார்ப்பேட்டை வட்டாட்சியர் அலுவலகத்தைக் குறிப்பிடுகின்றேன்.

அரசின் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில் பக்கல் 16-ல் பத்தி 2.7-ல் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்மீது மாவட்ட ஆட்சித் தலைவர்மூலம் உடனுக்குடன் மேல் நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. 2007-2008-ல், 31-12-2007 வரை

43,355 மனுக்களின்மீது நடவடிக்கை எடுத்து தீர்வு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த மாவட்டத்தில், எவ்வளவு மனுக்கள் பெறப்பட்டன? தெளிவான விவர அறிக்கையைத் தரவேண்டுமென்று இந்த அரசை வலியுறுத்துகின்றேன்.

நான் இரண்டு வருட காலமாக மாவட்ட ஆட்சியருக்கு பல மனுக்கள் கொடுத்தும், இதுவரையில் எந்த ஒரு பதிலும் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களும், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் கொடுக்கும் புகார் மனுக்களுக்கு உரிய பதிவேடுகள் வைக்கப்படுவதில்லை. புகார் மனுக்களுக்கு பதில் அளிப்பதும் இல்லை. அரசாணைப்படி 60 நாட்களுக்குள் பதில் அளிக்கவேண்டும். தற்போது நிலவி வரும் நிலையை மாற்றி, சீரமைத்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி இந்த அரசை வலியுறுத்துகின்றேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு மத்திய அரசால் National Scheduled Caste/ Scheduled Tribe Finance Development Corporation (NSFDC) மூலம் தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டுள்ள கடன் நிலுவைத் தொகை 70 கோடி ரூபாயாகும். இந்தக் கடனைக் கட்டமுடியாமல் ஆதி திராவிட மக்கள் அவதிப்படுகிறார்கள். மத்திய அரசில் அங்கம் வகிக்கும் இந்த அரசு, NSFDC, TAHDCO மூலமாகப் பெற்ற கடன்களை, அந்த 70 கோடி ரூபாயை முழுவதுமாகத் தள்ளுபடி செய்து கடன் பெற்ற நலிந்த ஆதி திராவிட பயனாளிகளைக் காப்பாற்றிட மத்திய அரசை வலியுறுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

சமுதாயத்தில் உடல் ரீதியாக ஊனமுற்றோர்கள், கணவரால் கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்ற முதியோர், விதவைகள் இவர்களுக்கெல்லாம் இவர்கள் சார்ந்திருக்கிறவர்களை கருத்தில் கொள்ளாமல், இவர்கள் உதவித்தொகைக்கு விண்ணப்பித்தவுடன் சம்பந்தப்பட்ட வருவாய் அலுவலர்கள், அவர்கள் இருப்பிடம் சென்று, ஆய்வு செய்து ஓரிரு வார காலத்திற்குள் உதவித்தொகையை வழங்க இந்த அரசைக் கேட்டுக்கொள்கின்றேன்.

பொன்னேரி தொகுதியில் கடந்த அக்டோபர் மாதம் பெய்த கன மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வெள்ள நிவாரண உதவிக்காக தமிழக முதல்வர் அவர்கள் வந்து பார்வையிட்டார்கள்.



ஆனால், அவர் பார்வையிட்டுச் சென்ற பிறகு கொடுக்கப்பட்ட தொகை வெறும் 32 இலட்ச ரூபாய். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில், கொடுக்கப்பட்ட தொகையோ 17 கோடி ரூபாய் என்பதை நான் இங்கே நினைவுபடுத்த கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், 2005 ஆம் ஆண்டு பெய்த அதே அளவு மழைதான் தற்போதும் பெய்திருக்கிறது. இதில் என்ன மர்மம் உள்ளது என்பதைத் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் உள்ள இருளர்கள், பழங்குடியின மக்களுக்கு இதுவரை வீட்டுமனைப் பட்டாவோ, இரண்டு ஏக்கர் நிலமோ வழங்கப்படவில்லை. இரண்டு இலட்சம் பழங்குடியின மக்களுக்கு இப்பிரச்சினையில் இந்த அரசு என்ன செய்திருக்கிறது?

பழங்குடியின மக்களுக்கு தாய், தந்தையர்கள் ஜாதிச் சான்றிதழ் பெற்றிருந்தாலும் அவர்கள் பெற்ற பிள்ளைகளுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்க மறுக்கப்படுகிறது. பத்திரம் இல்லாமல் இருக்கும் இருளர் இன மக்கள் எந்தப் பத்திரத்தைத் தருவார்கள் என்பதை உணர்ந்து இந்த அரசு உடனடியாக ஜாதிச் சான்றிதழ் வழங்குவதற்குண்டான நடவடிக்கையை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் ஆத்தூர் வட்டாட்சியாளர் அலுவலகமும், திருவண்ணாமலை மாவட்டத்தில் தண்டராம்பட்டு வட்டாட்சியாளர் அலுவலகமும் இந்த அரசால் ஆரம்பிக்கப்பட்டது. இதில் கூடுதல் பணியிடங்கள் ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. தண்டராம்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு மறுக்கப்பட்டுள்ளது. பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சிங்காநல்லூர் பகுதியிலும், புறநகர்ப் பகுதியிலும் சுமார் 25 ஆண்டுகளுக்கு மேலாக பலர் வீடுகட்டிக் குடியிருந்து வருகிறார்கள். இவர்கள் வீடுகட்டிக் குடியிருக்கும் இடம், அரசின் உபரி நிலம் என்று கூறி அரசு பத்திரப் பதிவு செய்ய மறுத்து வருகிறது. சுமார் 25,000 மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த மக்களை வாழ்வாதார ரீதியாக வாழவைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பொன்னேரி தொகுதியில் ஒருசில கோரிக்கைகள். பொன்னேரி தொகுதியிலுள்ள வட்டாட்சியர் அலுவலகம் பிரிட்டிஷ் காலத்தில் கட்டப்பட்டு மிகவும் பாழடைந்த நிலையிலுள்ளது. மழைக் காலத்தில் ஒதுங்குவதற்குக்கூட இடம் இல்லாமல் பணிபுரியும் அலுவலர்களும், அங்கு வரும் பொதுமக்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும், பதிவேடுகளைப் பராமரிப்பதும் கடினமாக உள்ளது. எனவே, இந்த அரசு, புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, தற்சமயம் அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இயங்கிவரும், பொன்னேரி-கும்மிடிப்பூண்டி வட்டத்தின் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின நலத் துறை அலுவலகத்தினை பொன்னேரி கோட்டாட்சியர் அலுவலக வளாகத்திற்கு மாற்றித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பொன்னேரி தொகுதிக்குட்பட்ட பெரும்பேடு அரசினர் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் உரிய பணம் செலுத்தியும் இதுநாள் வரை தரம் உயர்த்தப்படாமல் உள்ளது. மேலும், ஜெகநாதபுரம், விச்சூர், சின்னம்பேடு ஆகிய ஊர்களில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தித் தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னேரி தொகுதி வருவாய் எல்லைக்குட்பட்ட காட்டுப்பள்ளி கிராமத்தில் தற்போது அமைந்துள்ள எண்ணூர் கப்பல் கட்டும் தளத்தை, காட்டுப்பள்ளி கப்பல் கட்டும் தளம் என்று பெயர் மாற்றம் செய்யவேண்டும். ஏனென்றால், அது வருவாய்த் துறைக்குட்பட்டது என்பதை நினைவூட்டுகிறேன்.

அதேபோன்று, TIDCO மூலம் காட்டுப்பள்ளி, குப்பநத்தம் ஆகிய ஆதி திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளில் சுமார் 4,000 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் வாழ்வாதாரம் உயர, நிலம் கொடுத்த அக்குடும்பங்களில் வீட்டுக்கு ஒருவருக்கு வேலைவாய்ப்பும், ஆதி திராவிட மற்றும் மீனவ மக்களுக்கு வீடு கட்டித்தரவும் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து மாவட்டத்திற்கும் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்கும் திட்டத்தை அறிவித்துள்ள இந்த அரசு பொன்னேரியைத்



தலைமையிடமாகக் கொண்டு, பெரும்பான்மையாக வசிக்கும் ஆதி திராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அரசு மருத்துவக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவொற்றியூர், பொன்னேரி, பஞ்செட்டி நெடுஞ்சாலையில் T.P.P. மேலூர் கிராமத்திலிருந்து எண்ணூர் அனல் மின் நிலையத்திற்குச் செல்லும் சாலையை, அத்திப்பட்டு புதுநகர் வழியாக, எண்ணூர் கடற்கரை வழியாக சென்னை செல்லும் எண்ணூர் விரைவுச் சாலையுடன் இணைத்தால், சென்னை மாநகரத்திற்குச் செல்லும் பொதுமக்களும், அரசு ஊழியர்களும், பள்ளி, கல்லூரி மாணவர்களும் விரைந்து செல்ல ஏதுவாக இருக்கும்.

மணலி புதுநகரிலிருந்து பொன்னேரி வரை நான்குவழிச் சாலை அமைக்க நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, ஏழை எளிய மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க அரசு வழிகாட்டுதல் மதிப்பீட்டின்படி இல்லாமல், சந்தை விலையில் வழங்கியும், மிகவும் மோசமாக உள்ள கனரக வாகனங்கள் மிக அதிக வேகத்தில் செல்லும் இச்சாலையைப் போர்க்கால அடிப்படையில் செப்பனிட்டுத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

பொன்னேரியில் இயங்கிவரும் அனைத்து நீதிமன்றக் கட்டடங்களையும் ஒருங்கிணைத்து வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், காவல் நிலையம், மகளிர் காவல் நிலையம் இவை அனைத்தையும் ஒன்றாக சேர்த்து ஒரே இடத்தில் அமைப்பதற்குண்டான ஏற்பாட்டைச் செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மீஞ்சூர் மற்றும் பஞ்செட்டி பகுதியைச் சுற்றியுள்ள தொழிற்சாலைகளில் சுமார் 15,000 ஏழைத் தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்களுக்கு, ESI காப்புறுதித் திட்டம் இல்லாத காரணத்தினால், இவர்களுக்குக் காப்புறுதித் திட்டம் வழங்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, அங்குள்ள I.O.C. -யில் தொழிலாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் காப்புறுதித் திட்டம் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும், குறிப்பாக பழவேற்காடு பகுதியில் உள்ள மீனவர்களுக்கு வருடந்தோறும் சுமார் 45 நாட்களுக்கு மீன் பிடிக்கத்

தடை உத்தரவு உள்ளது. மீன் இனப் பெருக்கத்திற்காக உள்ள இந்தத் தடை உத்தரவால், கஷ்டப்படும் மீனவ மக்களுக்கு செலவினத் தொகையினை இந்த அரசு வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

எண்ணூர் முதல் பழவேற்காடு-கொல்கத்தா சாலையருகே செல்லும் பக்கிங்ஹாம் கால்வாயைத் தூரெடுத்து, பொது மக்களுக்கும், மீனவப் பெருமக்களுக்கும் பெரிதும் பயன்பெறும்வகையில், செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஜி.என்.டி. சாலையிலிருந்து சோழவரம், ஓரக்காடு, அருமந்தை செல்லும் சாலைகளைச் செப்பனிட ரூபாய் ஐந்து கோடியே பதினான்கு இலட்சம் ஒதுக்கப்பட்டது. தி.மு.க. அரசு பதவியேற்ற நாள் முதல் இதுநாள் வரையில், அந்தச் சாலைகள் செப்பனிடப்படாமல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இச்சாலைகள் சீரமைக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதால்தானோ என்பதை அறிந்துகொள்ள விரும்புகின்றேன். பேருந்துப் போக்குவரத்து இன்மையும் மக்களுக்குப் பெரிய பாதிப்பாக உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், திட்டங்கள் அச்சாரம்போல் போடப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. இந்த ஆட்சியில் திட்டங்கள் அச்சிடப்பட்ட காகிதங்களாகத்தான் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

## 7. அறிவிப்பு

### இரண்டு அமைச்சர்களின் பதிலுரைகளை 15-4-2008 ஆம் நாளுக்குத் தள்ளிவைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர்கள் 15-4-2008, செவ்வாய்க்கிழமை அன்று பதிலுரை வழங்குவார்கள். 15-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது





குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்க. (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், என்ன?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நேரம் கடந்துவிட்டது. எனவே, பதிலுரையை நீங்கள் ஒத்திவைப்பதிலே எனக்கு ஒன்றும் மாற்றுக் கருத்து இல்லை. குறைந்தபட்சமாக, முன்னணித் தலைவர்களுக்காவது தகவல் தெரிவிக்க வேண்டுமா, இல்லையா? அவர்களிடம் கலந்துபேசிவிட்டுச் சொல்லவேண்டுமா, இல்லையா? நீங்களே முடிவெடுத்து அறிவிப்பது என்பது, எந்தவகையிலே பொருத்தமாக இருக்கிறது? ஒரு சில கட்சித் தலைவர்களிடம் மட்டுமே கலந்துபேசிவிட்டு, அறிவித்துவிடுகிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உங்களுக்குப் பதில் சொல்வார்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று எதிர்பாராதவிதமாக பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. கோ.க. மணி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார்கள். நீங்களெல்லாம் அதில் பேசிய காரணத்தினாலே, ஏறக்குறைய 40 நிமிட நேரம் அதற்காகச் செலவழிக்கப்பட்டுவிட்டது. அதனால்தான் இந்தச் சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கின்றது. எதிர்காலத்திலே இப்படி ஏற்படாமல் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 15-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 15-4-2008, செவ்வாய்க்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

15-4-2008 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 15-4-2008 (செவ்வாய்க்கிழமை) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-47 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

40. (i) 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின்கீழ் பதிவு பெற்ற யாதொரு வணிகர், ஓசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ். மோட்டார் நிறுவனத்திற்கு அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களுக்காக விற்பனை செய்யப்படும் பொருட்களின்மீது செலுத்தத்தக்க வரியினை அறிவிக்கையில் இணைக்கப்பட்ட படிவத்தில் உறுதிமொழி அளிக்கப்படுவதின் பேரில் விலக்களித்தது குறித்தும்; (ii) ஓசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ். நிறுவனத்தால் தயாரிக்கப்படும் மூன்று சக்கர வண்டிகளின் விற்பனைமீது கூடுதல் வரி செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்தும் மற்றும் (iii) ஓசூரில் உள்ள திருவாளர்கள் டி.வி.எஸ் நிறுவனத்தில் தயாரிக்கப்படும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வண்டிகளின் விற்பனைமீது அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியினை ஒரு சதவிகிதமாகக் கணக்கிட வேண்டும் என்பது குறித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 6-11-2007 ஆம் நாளிட்ட 181 ஆம் எண் அரசாணையில்



வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

53. மானியக் கோரிக்கை எண் 24-சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

54. மானியக் கோரிக்கை எண் 41-வருவாய்த் துறை மற்றும் மானியக் கோரிக்கை எண் 51-இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

55. மானியக் கோரிக்கை எண் 26-வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009. (தமிழ், ஆங்கிலம்)

56. மனுக்கள் குழுவின் முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2007-2008)

57. மனுக்கள் குழுவின் நாற்பதாவது அறிக்கை. (2007-2008)

58. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஒன்றாவது அறிக்கை (2007-2008)

59. மனுக்கள் குழுவின் நாற்பத்து இரண்டாவது அறிக்கை (2007-2008)

60. மனுக்கள் குழுவின் நாற்பத்து மூன்றாவது அறிக்கை (2007-2008)

61. மனுக்கள் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை (2007-2008)

62. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை (2007-2008)

63. மனுக்கள் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை (2007-2008)

# இணைப்பு I

(134 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 24 - சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### I. முன்னுரை

சிறைச்சாலைகள், குற்றவியல் நீதி முறை நிருவாகத்தில் உள்ள முக்கியமான முகவரமைப்புகளில் ஒன்றாகும். சிறைக் கைதிகளை சீர்திருத்தி, அவர்கள் சிறையிலிருந்து விடுதலையான பின்னர் அவர்களை மீண்டும் சமுதாயத்துடன் இணைத்து மறுவாழ்வைத் தொடங்கச் செய்வதும், மீண்டும் குற்றம் இழைக்காவண்ணம் அவர்களைத் தடுப்பதும் சிறைத் துறையின் இரட்டைக் குறிக்கோள்களாக உள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு சிறைக் கைதிகள் சிறையிலிருந்து விடுதலையான பின்னர், அவர்கள் ஒரு கண்ணியமான வாழ்க்கை வாழ இயலும் பொருட்டு தனிப்பட்டவர் தேவைகள், சமுதாயக் கடப்பாடுகள் மற்றும் குடும்பப் பொறுப்புகள் ஆகியவற்றிற்கு ஈடுகொடுத்து செயல்பட சிறைக் கைதிகளுக்கு உதவுவதற்காக வேலை நோக்கில் அமைந்த பல பயிற்சி வகுப்புகள், யோகா மற்றும் தியான வகுப்புகள் ஆகியவை நடத்தப்படுகின்றன. சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சிறைகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும், பாதுகாப்புத் தேவைகளையும் மேம்படுத்துவதற்காகவும், சிறைவாசிகளின் வாழ்க்கை நிலைகளை உயர்த்துவதற்காகவும் அரசு கணிசமான அளவுக்கு முதலீடுகள் செய்துள்ளது.

### II. சிறைச்சாலைகள்

2. சிறைத் துறை நிருவாகத்தின்கீழ் மொத்தம் 134 சிறைச்சாலைகள் உள்ளன. அவற்றில் மத்திய சிறைகள் 9, பெண்களுக்கான தனிச் சிறைகள் 3, மாவட்டச் சிறைகள் 4, ஆண்களுக்கான கிளைச் சிறைகள் 100, பெண்களுக்கான கிளைச் சிறைகள் 9, ஆண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் 3 மற்றும் பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகள் 3 ஆகியவை அடங்கும்.

இவை மட்டுமின்றி இளம் குற்றவாளிகளுக்கான சீர்திருத்தப் பள்ளி ஒன்று, திறந்தவெளிச் சிறை ஒன்று, பண்ணைச் சிறை ஒன்று ஆகியவையும் செயல்படுகின்றன. சிறைத் துன்ற, காவல் துறை கூடுதல் இயக்குநர் பதவித் தரத்தில் உள்ள முதுநிலை இந்திய காவல் பணி அதிகாரி ஒருவரின் தலைமையின்கீழ் இயங்குகிறது. இவருக்கு உதவியாக தலைமை அலுவலகத்தில் சிறைத் துறைத் துணைத் தலைவர் ஒருவர், சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை ஆகிய சரகங்கள் ஒவ்வொன்றிலும் சிறைத் துறைத் துணைத் தலைவர்கள் ஆகியோர் உள்ளனர். சிறைக் கண்காணிப்பாளர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டில், மத்தியச் சிறைகளும் அவற்றின் அதிகார வரம்பிற்குட்பட்ட கிளைச் சிறைகளும் இயங்குகின்றன. பெண்களுக்கான சிறைகள் முழுதும் பெண் பணியாளர்களாலேயே நிர்வகிக்கப்படுகின்றன. சிறைத் துறைப் பணியாளர்களின் எண்ணிக்கை 4,883 ஆகும். அனைத்துச் சிறைகளிலும் சேர்த்து 20,321 சிறைக் கைதிகளை தங்க வைக்க இடவசதி உள்ளது.

### III. நன்னடத்தைப் பிரிவு

3. சிறைத் துறையின் நன்னடத்தைப் பிரிவு, தலைமை நன்னடத்தைக் கண்காணிப்பாளரின் தலைமையின்கீழ் 96 நன்னடத்தை அலுவலர்களையும், 12 வட்டார நன்னடத்தை அலுவலர்களையும் கொண்டு செயல்படுகிறது. நன்னடத்தை அலுவலர்கள் குற்றவாளிகளின் நடத்தை மற்றும் அவர்கள் வாழ்க்கை நிலைகள் குறித்து நீதிமன்றத்திற்காக விசாரணை செய்கிறார்கள். அவர்கள் நன்னடத்தையின் பேரில் விடுதலை செய்யப்படும் குற்றவாளிகளைக் கண்காணித்து அவர்களின் மறுவாழ்வையும் கவனிக்கின்றனர். மேலும், முதன் முறையாகக் குற்றம் செய்யும் குற்றவாளிகளுக்கு தண்டனை அளித்து, சிறைக்கு அனுப்புவதற்கு பதிலாக சில நிபந்தனைகளின் அடிப்படையில் நன்னடத்தையின் பேரில் அவர்களை விடுவிப்பது அவர்களுடைய முக்கியமான பணியாகும். காவல் நிலைய சிறை வைப்பு அறைகளில் மனித உரிமை மீறல் ஏதும் இல்லை என்பதை உறுதி செய்யும் பொருட்டு, அவற்றைப் பார்வையிடுமாறு நன்னடத்தை அலுவலர்களுக்கு அரசு ஆணையிட்டுள்ளது.

### IV. சிறை நிருவாகத்தை நவீனப்படுத்துதல்

4. சிறை நிருவாகத்தை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ், சிறைச்சாலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவற்காக 75:25 என்ற





விகிதத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் நிதி உதவியைக் கொண்டு பல திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு சாதனங்கள், பதிவு செய்யும் வசதி கொண்ட வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Televisions), செல்லிடத்து தொலைபேசியை செயலிழக்கச் செய்யும் கருவிகள், மின் கம்பி வேலி அமைத்தல், மின் விளக்கு வசதிகள் செய்தல், வெடிகுண்டு கண்டுபிடிப்புக் கருவிகள், ஆயுதங்களைக் கண்டறியும் கருவிகள், இரவு நேர இரட்டை தொலைநோக்காடிகள் (Night vision binoculars), கண்காணிப்பு கோபுரங்கள், நுணுக்கமாகத் தேடி ஆயுதங்களைக் கண்டுபிடிக்கும் கருவி, செயல் விரைவு மிக்க சிறு ஆயுதங்கள் முதலியவை போன்ற நவீன சாதனங்களை வழங்க அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. சிறைக் கைதிகள் மற்றும் சிறைப் பணியாளர்களின் பாதுகாப்பினைக் கருத்திற்கொண்டு சிறைப் பணியாளர்களுக்கு நவீன முறையில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், வேலூர், புழல் ஆகிய இடங்களில் உள்ள ஐந்து மத்தியச் சிறைகளில் உயர் பாதுகாப்பு அடைப்புகள் கட்டப்பட்டுள்ளன.

### V. மனித வள மேம்பாடு

#### சிறைக் காவலர்களுக்கு பயிற்சியளித்தல்

5. தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் தேர்வு செய்யப்படுகிற சிறைக் காவலர்களுக்கு (நிலை-II) வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி மையத்தில், ஆறு மாதங்களுக்கு, உடற்பயிற்சி, ஒழுங்குமுறை, மேலாண்மை, சீர்திருத்த முறைகள் ஆகியவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறைக் கைதிகளின் மனித உரிமைகள் பற்றி அறியச்செய்வதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்படுகிறது. அவர்களுக்கு நவீனப் படைக்கலங்களைக் கையாள்வதைக் கற்பிப்பதுடன், அந்தப் படைக்கலங்களில் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இவை தவிர, நிலை-I சிறைக் காவலர்களுக்கும், தலைமை சிறைக் காவலர்களுக்கும் குறிப்பிட்ட காலத்திற்கொருமுறை புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன.

6. வேலூரில் உள்ள சிறைக் காவலர் பயிற்சி மையம், 111 நிலை-II ஆண் சிறைக் காவலர்களுக்கும், 25 நிலை-II பெண் சிறைக் காவலர்களுக்கும் பயிற்சியளிக்கும் திறனுடன் செயல்படுகிறது. ஆயுதமில்லாமல் தனித்து நின்று போராடுதல், வெடிகுண்டு

[2008 ஏப்ரல் 11

கண்டறிதல் மற்றும் அவற்றைச் செயலிழக்கச் செய்தல் முதலியவற்றில் பயிற்சி பெறுவதற்காகவும், சென்னை காவல் துறை அதிரடிப்படைப் பயிற்சிப் பள்ளிக்கு சிறைக் காவலர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**மண்டல நிர்வாக சீர்திருத்தப் பயிற்சி நிறுவனம், வேலூர்**

7. இந்நிறுவனம், 1979 ஆம் ஆண்டிலிருந்து, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் மற்றும் தமிழ்நாடு ஆகிய நான்கு தென் மாநிலங்களைச் சேர்ந்த சிறை அதிகாரிகளுக்கு சிறை மேலாண்மை மற்றும் குற்றவாளிகளின் சீர்திருத்த அம்சங்கள் ஆகிய துறைகளில் பயிற்சியளித்து வருகிறது. இந்நிறுவனத்தின் செலவை, இதில் பங்குபெறும் நான்கு தென்மாநிலங்களும் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன.

**தேசிய அளவிலான பயிற்சி**

8. புது டில்லி, காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம், புது டில்லி, தேசிய மனித உரிமைகள் ஆணையம், புது டில்லி, தேசிய தடய அறிவியல் நிறுவனம், புது டில்லி, தேசிய சமூகப் பாதுகாப்பு நிறுவனம், புது டில்லி, தேசிய குற்ற ஆவணங்கள் கழகம் ஆகியவற்றால் நடத்தப்படும் மனித உரிமைகள் மற்றும் சிறை மேலாண்மை முதலியவற்றிலான தேசிய அளவிலான பயிற்சி வகுப்புகளுக்கும் சிறைத் துறையின் அதிகாரிகள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

**ஏனைய பயிற்சிகள்**

9. வேலூரில் உள்ள மண்டல நிர்வாகச் சீர்திருத்த பயிற்சி நிறுவனமும், சென்னை, அண்ணா மேலாண்மை நிறுவனமும் நடத்தி வருகிற பல்வேறு குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பயிற்சிகளுக்கு சிறைத் துறையைச் சேர்ந்த நிருவாகப் பணியாளர்களும் அமைச்சுப் பணியாளர்களும் அனுப்பப்படுகின்றனர். இந்தப் பயிற்சிகளில், பல்வேறு மென்பொருளில் கணினிப் பயிற்சி, அலுவலக நிருவாகம், மன அழுத்தம் நீக்கப் பயிற்சி முதலியவை அடங்கும்.

**பணியாளர் தேர்வு**

10. சிறைத் துறையின் ஆண் மற்றும் பெண் இரண்டாம் நிலைக் காவலர்களைத் தேர்வு செய்யும் முகவரமைப்பு, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம் ஆகும்.



2008 ஏப்ரல் 11]

**VI. சிறை ஒழுங்கு முறை**

**உயர் பாதுகாப்பு சிறைக் கைதிகளைக் கையாளுதல்**

11. அரசின் கொள்கை முடிவிற்கேற்ப, கடுங்குற்றங்களில் ஈடுபட்ட சிறைக் கைதிகளை அடைப்பதற்காக, தொடக்கத்தில், கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருச்சியில் உயர் பாதுகாப்பு கட்டடத் தொகுதிகள் கட்டப்பட்டன. பின்னர், பெருகிவரும் கடுங்குற்றங்களில் ஈடுபடும் சிறைக் கைதிகளைக் கையாளவும், அவர்களைப் பிரித்து தனிமைப்படுத்தி வைப்பதற்கும் ஏதுவாக இத்தகைய உயர் பாதுகாப்பு கட்டடத் தொகுதி முறை ஏனைய மத்தியச் சிறைகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. அடிப்படைவாத மற்றும் கடுங்குற்றங்களில் ஈடுபடும் சிறைக் கைதிகள் தற்பொழுது பல்வேறு சிறைகளில் உள்ள உயர் பாதுகாப்பு கட்டடத் தொகுதிகளில் அடைக்கப்படுகின்றனர். இந்த உயர் பாதுகாப்பு கட்டடத் தொகுதிகளின் உட்புறம் சிறைக் காவலர்களாலும், வெளிப்புறம் தமிழ்நாடு காவல் துறையினராலும் பாதுகாக்கப்படுகின்றன. மேற்கண்ட சிறைக் கைதிகள் அன்றாடச் சோதனைக்கு உட்படுத்தப்படுவதுடன் குறித்த காலத்திற்கொருமுறை உயர் அலுவலர்களாலும் ஆய்வு செய்யப்படுகின்றனர். சிறை விதிகளின்படி இச்சிறைக் கைதிகள் பிற கைதிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர்.

12. இச்சிறைக் கைதிகளைக் காண வரும் பார்வையாளர்கள், கைதிகளைக் காண்பதற்கு முன்னரும், கைதிகளைப் பார்த்த பின்னரும் சிறை மற்றும் காவல் துறையினரால் தீவிரமாகப் பரிசோதிக்கப்படுகின்றனர். சிறைகளில் விரும்பத்தகாத நிகழ்வுகள் ஏற்படாமல் தடுக்கவும், சிறைக் கைதிகள் தப்பித்து விடாமல் பாதுகாக்கவும், அழிவுச் செயல் தடுத்தல் குறித்த பரிசோதனைகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதுகாப்பு நடவடிக்கையாக, முறையான வெளிச்சத்திற்கான மின்சார விளக்குகள், பதிவு செய்யும் வசதி கொண்ட வரையறுக்கப்பட்ட பகுதியில் மட்டும் பயன்படுத்தத்தக்க தொலைக்காட்சிப் பெட்டிகள் (Closed Circuit Television), வெடிகுண்டு கண்டுபிடிப்புச் சாதனங்கள், சிறை மதிற் சுவர்களில் மின் கம்பி வேலிகள் அமைத்தல் முதலியவை அனைத்து மத்தியச் சிறைச்சாலைகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகள் அனைவரும் மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, பரிவுடனும் உரிய கண்ணியத்துடனும் நடத்தப்படுகின்றனர்.

[2008 ஏப்ரல் 11

## VII. சிறைவாசிகளின் நலன்

### உணவு மற்றும் உடை

13. தமிழ்நாடு சிறை நடைமுறை நூலில் வரையறுக்கப்பட்ட அளவின்படி சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் சத்துள்ள உணவு சிறைவாசிகளுக்கு வழங்கப்படுகிறது. நோய்வாய்ப்பட்ட சிறைக் கைதிகளுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் பரிந்துரையின் பேரில், மருத்துவ உணவாக பால், ரொட்டி, முட்டை முதலியன வழங்கப்படுகின்றன. அசைவ உணவு சாப்பிடும் சிறைக் கைதிகளுக்கு வாரம் ஒரு முறை கோழிக் கறியும், சைவ உணவு சாப்பிடும் சிறைக் கைதிகளுக்கு வாரம் ஒரு முறை கேசரி, உருளைக்கிழங்கு கறி மற்றும் ஒரு வாழைப்பழமும் வழங்கப்பட்டு வருகின்றன. ஆரோக்கியமான மற்றும் சுகாதாரமான நிலையை உறுதிப்படுத்த சிறைக் கைதிகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் குவளைகள் வழங்கப்பட்டுள்ளதோடு எவர்சில்வர் சமையல் பாத்திரங்களும், உணவினை எடுத்துச் செல்ல தள்ளு வண்டிகளும் சிறைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட உணவே பெண் சிறைக் கைதிகளுக்கும் வழங்கப்படுகிறது. ஆனால், பாலூட்டும் பெண் சிறைக் கைதிகளுக்கு கூடுதலாக பால் வழங்கப்படுகிறது. பெண் சிறைக் கைதிகளுடன் உள்ள குழந்தைகளுக்கு பால், ரொட்டி, வாழைப்பழம் மற்றும் குழந்தைகளுக்கான உணவும் வழங்கப்படுகிறது. வரையறுக்கப்பட்ட அளவின்படி உடைகள் மற்றும் படுக்கைகள் வழங்கப்படுகின்றன.

14. சிறைக் கைதிகளுக்கு டெரிகாட்டன் சட்டை, அரைக்கால் சட்டை மற்றும் பெரிய அளவிலான தரைவிரிப்பும் வழங்கப்படுகின்றன. போதுமான உடை இல்லாத விசாரணை சிறைக் கைதிகளுக்கும் உடைகள் வழங்கப்படுகின்றன. சிறைகளில் சிறந்த வாழ்க்கை நிலைகளை உறுதிசெய்வற்காக அடிப்படை வசதிகளும் துப்புரவு வசதிகளும் செய்து கொடுக்கப்படுகின்றன.

### காலையில் தேநீர் வழங்குதல்

15. மாநிலத்தின் அனைத்து சிறைகளிலும் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு காலையில் தேநீர் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டம் 2007, ஜூலையிலிருந்து செயல்படுத்தப்படுகிறது.

### மருத்துவப் பாதுகாப்பு

16. சிறைக் கைதிகளுக்கு போதுமான மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மருத்துவ முகாம்களும் தொடர்ந்து



2008 ஏப்ரல் 11]

நடத்தப்படுகின்றன. தொழுநோயால் அவதிப்படும் சிறைக் கைதிகளுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மன நலங்குன்றிய சிறைக் கைதிகள் சென்னை அரசு மன நலக் காப்பகத்தில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குப் போதுமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. உடல் நலப் பாதுகாப்பு நடவடிக்கையாக சிறைகளில் புகை பிடிப்பதை அரசு தடை செய்துள்ளது. அனைத்து மத்தியச் சிறைகளுக்கும், நோயாளி அவசர சிகிச்சை ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், மத்தியச் சிறைகளில் மருத்துவப் பரிசோதனைமூலம் நோய் கண்டறியும் சோதனையை மேற்கொள்வதற்காக, மருத்துவப் பரிசோதனைக் கூடங்கள், இதயத்துடிப்பை அறிய உதவும் சாதனங்கள் (E.C.G.) இரத்தத்தை ஆய்வு செய்யும் தானியங்கிக் கருவிகள், எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ்-கதிர் படமெடுக்கும் கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளின் சுகாதாரத்தைப் பேணுவதற்காக அவர்களுக்கு பற்பொடி மற்றும் குளியல் சோப்பு ஆகியவை வழங்கப்படுவதுடன் தேவையின் அடிப்படையில் பெண் சிறைக் கைதிகளுக்கு 'நாப்கின்களும்' வழங்கப்படுகின்றன.

17. அவசரத் தேவை ஏற்படும்போது மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக மத்திய சிறைகள் மற்றும் பெண்களுக்கான தனிக் கிளைச் சிறைகளைச் சேர்ந்த கைதிகளை அழைத்துச் செல்ல நோயாளர் அவசர சிகிச்சை வேன்கள் பயன்படுத்தப்படுகின்றன. கிளைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள பெண் கைதிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதற்கான அவசரத் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடனும், அவர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லவும், அரசு ரூ.23.82 இலட்சம் மொத்த செலவில் பெண்களுக்கான 9 கிளைச் சிறைகளுக்காகவும், பெண்களுக்கான 2 தனிக் கிளைச் சிறைகளுக்காகவும் 11 மாருதி ஆம்னி வேன்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது. 2007 ஆம் ஆண்டில் அவை வாங்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

18. புழல் சிறை வளாகம் நீங்கலாக, மற்ற அனைத்துச் சிறைகளிலும் உள்ள கைதிகளின் பயனுக்காக ரூ.126.14 இலட்சம் மொத்த செலவில் 6,307 மின் விசிறிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அவை அண்மையில் நிறுவப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### நேர்காணல் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள்

19. சிறைக் கைதிகள் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களை நேரில் சந்தித்துப் பேசுவதற்கான வசதிகள்

[2008 ஏப்ரல் 11

செய்து கொடுக்கப்படுகின்றன. கைதிகளைச் சந்திப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுவதுடன், இப்படிவத்தினை சிறைத் துறை இணைய தளத்திலிருந்தும் பெறலாம். செய்தித்தாள்களும், குறித்தகால வெளியீடுகளும் சிறைக் கைதிகளுக்கு அரசு செலவில் வழங்கப்படுகின்றன. கல்வித்தரம் மற்றும் இலக்கியத் தரம்வாய்ந்த புத்தகங்கள் சிறை நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளின் பயன்பாட்டிற்காக மாவட்ட நூலகங்களில் இருந்தும் கடனாகப் புத்தகங்கள் பெறப்படுகின்றன. சிறைக் கைதிகளுக்கு உள்ளரங்கு மற்றும் வெளியரங்கு விளையாட்டு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

**கல்வி**

*20.* சிறைக் கைதிகளுக்கு அரசு செலவில் அஞ்சல் வழிக் கல்வி பயிலும் வசதி வழங்கப்பட்டுள்ளது. முதியோர் கல்விக்காக தகுதிவாய்ந்த ஆசிரியர்களைக் கொண்ட ஆரம்பப் பள்ளிகள் சிறைகளில் செயல்பட்டு வருகின்றன. இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப் பல்கலைக்கழகம், கீழ்க்கண்ட பாடப் பிரிவுகளை நடத்தி வருகிறது:—

1. உணவு மற்றும் ஊட்டச்சத்தில் சான்றிதழ் படிப்பு
2. இளநிலை பட்டதாரிகள் ஆயத்தப் பயிற்சித் திட்டம்
3. கணினிப் பயன்பாட்டுப் பயிற்சியில் சான்றிதழ் படிப்பு
4. தொழில் நிர்வாகத்தில் பட்ட மேற்படிப்பு
5. கணினிப் பயன்பாட்டில் பட்ட மேற்படிப்பு.

*21.* மத்திய சிறைகளிலுள்ள கைதிகளுக்கென்றே மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்பிற்கான பாடப் பிரிவுகளை சிறையிலேயே நடத்தி வருகிறது. நாட்டிலேயே முதன்முறையாகத் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், பாடத் திட்டங்கள் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தால் வரையறுக்கப்பட்டபடி நடத்தப்படுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் மொத்தம் 1,230 தண்டனைக் கைதிகள் சிறைத் தண்டனையை அனுபவிக்கும்போதே பல்வேறு பாடங்களை படித்துள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| அடிப்படைப் பயிற்சி வகுப்பு | : | 1,086 |
| தொழில் நிருவாகப் பட்ட மேற்படிப்பு | : | 2 |
| தத்துவத்தில் பட்ட மேற்படிப்பு | : | 1 |
| சட்டத்தில் பட்ட மேற்படிப்பு | : | 1 |



2008 ஏப்ரல் 11]

| | | |
|---|---|---|
| முதுகலை பட்டப் படிப்பு | : | 6 |
| பொதுச் சட்டத்தில் பட்டப் படிப்பு | : | 3 |
| இளங்கலை பட்டப் படிப்பு | : | 81 |
| வணிகவியல் பட்டப் படிப்பு | : | 3 |
| இளம் அறிவியல் பட்டப் படிப்பு | : | 2 |
| அறிவியல் பட்ட மேற்படிப்பு | : | 1 |
| தொழில் நிருவாகப் பட்டப் படிப்பு | : | 15 |
| கணினிப் பயன்பாட்டில் பட்டப் படிப்பு | : | 9 |
| இலக்கியத்தில் பட்டப் படிப்பு | : | 2 |
| உணவு மற்றும் ஊட்டச்சத்தில் சான்றிதழ் படிப்பு | | 18 |

மேற்சொன்ன படிப்புகள் தவிர, 225 சிறைக் கைதிகள், சில சிறப்பு பட்டயப் படிப்புகளைப் படிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதன் விவரம் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| சித்தாந்த பட்டயப் படிப்பு | : | 1 |
| நான்கு சக்கர வாகன இயந்திரவியல் பட்டயப் படிப்பு | : | 83 |
| ஆடை வடிவமைப்பு மற்றும் ஆடை தயாரித்தல் பட்டயப் படிப்பு | : | 62 |
| குழாய்ப் பணி தொழில்நுட்பவியல் பட்டயப் படிப்பு | : | 3 |
| குளிர்பதனப் பெட்டி மற்றும் சீர்வளி சாதன தொழில்நுட்பவியல் பட்டயப் படிப்பு | : | 76 |

*2007-2008* ஆம் ஆண்டில் இந்நோக்கத்திற்காக ரூ.1.83 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

**இலவச சட்ட உதவி**

*22.* சிறைக் கைதிகளுக்கு இலவச சட்ட உதவி வசதிகள் உள்ளன. சென்னையில் உள்ள தமிழ்நாடு மாநில சட்ட உதவி ஆணைக் குழு அனைத்து மத்தியச் சிறைகள் மற்றும் பெண்கள் தனிச் சிறைகளில் இலவச சட்ட உதவி தனிப் பிரிவை அமைத்துள்ளது.

**குறை தீர்த்தல்**

*23.* சிறைக் கைதிகள் தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொருட்டு, அனைத்து மத்திய சிறைகளிலும் மூடி முத்திரையிடப்பட்ட புகார்ப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

[2008 ஏப்ரல் 11

ஒவ்வொரு மாதமும் முதல் பணி நாளன்று இந்த புகார்ப் பெட்டிகளைத் திறந்து புகார்களை உரிய நடவடிக்கைக்காக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்புகிறார். அமர்வு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர்கள் மாதம் ஒரு முறை சிறைகளுக்கு திடீர் வருகை புரிந்து சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் இதர வசதிகளைச் சரிபார்ப்பதுடன், அவர்களின் குறைகள் குறித்தும் விசாரணை மேற்கொள்கின்றனர். கூடுதல் சிறைத் துறை இயக்குநரும், சரக சிறைத் துறைத் துணைத் தலைவர்களும் ஆண்டுக்கு ஒரு முறை சிறைகளை ஆய்வு செய்யும்போது ஒவ்வொரு சிறைக் கைதிகளிடமும் அவர்களுடைய குறைகள் குறித்து விசாரிப்பதோடு, அவர்களுடைய குறைகள் நியாயமானதாக இருப்பின், அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது.

**அலுவல் மற்றும் அலுவல்சாரா பார்வையாளர்கள்**

24. சிறந்த நிருவாகம் மற்றும் சிறைக் கைதிகள் நடத்தப்படும் முறை குறித்து உறுதி செய்துகொள்வதற்காக அலுவல்சார்ந்த பார்வையாளர்கள், குறித்த காலத்திற்கொருமுறை சிறைகளுக்கு வருகை புரிகின்றனர். மேலும் சிறைக் கைதிகளுக்கு அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும், அவர்கள் முறையாக நடத்தப்படுகின்றனரா என்பதையும் உறுதிசெய்து கொள்வதற்காக மனித உரிமை ஆணையத்தின் உறுப்பினர்கள், மாண்புமிகு நீதிபதிகள் மற்றும் இதர முக்கியப் பிரமுகர்களும் சிறைகளைப் பார்வையிடுகின்றனர்.

25. முக்கியமாக சிறை சீர்திருத்தத்தில் ஈடுபாடு உள்ள, சிறந்த சமூக சேவைப் பின்னணி உள்ள பொதுமக்கள் துறைத் தலைவரால் அலுவல்சாரா பார்வையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் சிறைக் கைதிகளைச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். விதிகள் மற்றும் விதிமுறைகள் உரிய நேரத்தில் நடைமுறைப்படுத்துவதை நேரில் பார்த்து மன நிறைவு அடைவதற்காக அவர்கள் சிறைகளின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிடுகின்றனர். இந்த அலுவல்சாரா சிறை பார்வையாளர்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகளாகும்.

**மனித உரிமைகள்**

26. சிறைக் கைதிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு அனைத்துச் சிறைகளிலும் அடிப்படை வசதிகளும் தேவைகளும் செய்து தரப்பட்டுள்ளன. சிறைக் கைதிகளின் நியாயமான



2008 ஏப்ரல் 11]

குறைகளை உணர்ந்து அதனைத் தீர்க்கவும் அவர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் ஏதுவாக தகுந்த பண்புகளை வளர்த்துக் கொள்ள சிறை அதிகாரிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

27. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாநில மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களும், மாண்புமிகு நீதிபதிகளும் தமிழ்நாட்டில் உள்ள சிறைகளுக்கு வருகை புரிந்து சிறைகளின் நிருவாகத்தைப் பாராட்டி உள்ளனர். தற்போது புதுக்கோட்டை, ஸ்ரீவைகுண்டம், நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் ஆகிய நான்கு இடங்களில் மாவட்டச் சிறைகள் செயல்பட்டு வருகின்றன. விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டச் சிறைகளின் கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன. இந்த மாவட்டச் சிறைகள் மத்தியச் சிறைகளின் இடநெருக்கடியைக் குறைக்கும். மேலும் மாவட்ட அளவில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதால் கைதிகளைத் தேவை இல்லாமல் இடமாற்றம் செய்வதையும் தவிர்க்க உதவும்.

**VIII. கைதிகளின் மறுவாழ்வு**

**அரசுசாரா நிறுவனங்களின் பங்கேற்பு**

28. சிறைக் கைதிகளின் உடல் நலன் மற்றும் மன நலனை மேம்படுத்த சிறைகளில் யோகாசனம், தியானப் பயிற்சி ஆகியவை நடத்தப்பட்டு வருகின்றன. சிறைகளில் யோகாசனம், தியானம், கலந்துரையாடல், ஒழுக்கவியல் குறித்த விரிவுரை, இலவச மருத்துவ சிகிச்சை முகாம் மற்றும் தொழிற்கல்விப் பயிற்சி போன்றவற்றை அளிக்க தனியார் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது.

**சிறை தொழிற்சாலைகள் மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சிப் பிரிவுகள்**

29. சிறைக் கைதிகளிடையே உழைக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதற்காக சிறைகளில் பல்வேறு தொழில்கள் மற்றும் தொழிற் பயிற்சிப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. விடுதலைக்குப்பின் சுய வேலைவாய்ப்பை மேற்கொள்ள இயலும் வகையில் செங்கல் தயாரித்தல், குழாய் பொருத்துதல், விளம்பரப் பலகை எழுதுதல் மின் கம்பி இணைப்பு, நெசவுத் தொழில், புத்தகம் கட்டுதல், தையல் வேலை, கூர்நாடா தயாரித்தல், மெழுகு, பாதணிகள், பினாயில், நாடாக்கள், சோப்பு, கம்பளம், கோப்பு அட்டைகள் தயாரித்தல்

போன்ற சிறு தொழில்களில் சிறைக் கைதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. பயிற்சியின் முடிவில் மாநில வாழ்க்கை தொழில் கல்வி மற்றும் பயிற்சிக் குழுவினரால் பயிற்சிச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

30. சிறைத் துறை 'சேவைத் துறை'யாக அறிவிக்கப்பட்டுள்ளது. சிறைத் துறை பிற அரசுத் துறைகளுக்கு தேவைப்படும் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை இலவசமாக வழங்குகிறது. கடந்த நான்கு ஆண்டுகளில் சிறைத் தொழிற் பிரிவுகளின் சராசரி உற்பத்தி மதிப்பு ஆண்டொன்றுக்கு சுமார் ரூபாய் நான்கு கோடி என்று கணக்கிடப்பட்டுள்ளது.

31. இம்மாநிலத்தில் உள்ள அனைத்து மத்தியச் சிறைகள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, மகளிருக்கான தனிச் சிறைகள் ஆகியவற்றில் சிறைக் கைதிகள் ஊதியம் ஈட்டும் திட்டம் செயலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறைக் கைதிகளுக்கு தினசரி ஊதியமாக பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 60/- வீதமும் ஓரளவு பயிற்சி பெற்றவர்களுக்கு ரூ. 50/- வீதமும் பயிற்சி பெறாதவர்களுக்கு ரூ.45/- வீதமும் வழங்கப்படுகிறது. இவ்வூதியத்தில் பராமரிப்பிற்காக 50 சதவிகிதத்தையும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக 20 சதவிகிதத்தையும் பிடித்தம் செய்வதுடன், எஞ்சிய 30 சதவிகித ஊதியம் சம்பந்தப்பட்ட சிறைக் கைதிகளுக்கு வழங்கப்படுகிறது.

## IX. பணியாளர் நலன்

### பதக்கங்கள்

32. கடமைகளை நிறைவேற்றும்போது வீரத்துடனும் போற்றத் தக்க வகையிலும் சிறப்பாகப் பணிபுரியும் சிறைப் பணியாளர்களுக்கு வழங்க கீழ்க்காணும் பதக்கங்கள் அரசால் நிறுவப்பட்டுள்ளன:—

**(i) முதலமைச்சரின் பதக்கம்**

**(அ) தமிழ்நாடு முதலமைச்சரின் வீரதீரச் செயல்களுக்கான சிறைப் பணிப் பதக்கம்**

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ. 100/- மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.





**(ஆ) தன்னிகரற்ற பணி ஈடுபாட்டிற்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பணிப் பதக்கம்**

இச்சேவைக்கு, பதக்கமும் கீழ்க்கண்டவாறு ரொக்கப் பரிசும் ஒரு முறை வழங்கப்படும்:—

- சிறை அலுவலர் முதல் சிறைக் கண்காணிப்பாளர் வரை : ரூ. 5,000/-
- உதவி சிறை அலுவலர் மற்றும் துணை சிறை அலுவலர் : ரூ. 3,000/-
- சிறைக் காவலர்கள் முதல் முதன்மை தலைமைக் காவலர் வரை : ரூ. 2,000/-

**(இ) நற்சேவைக்கான தமிழ்நாடு முதலமைச்சரின் சிறைப் பணிப் பதக்கம்**

இப்பதக்கம் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது. இப்பதக்கம் பெறுவோருக்கு கீழ்க்கண்டவாறு மாதாந்திரப் படி வழங்கப்படுகிறது:—

- முதல் நிலை சிறைக் காவலர் : ரூ. 50/-
- இரண்டாம் நிலை சிறைக் காவலர் : ரூ. 40/-

**(ii) குடியரசுத் தலைவரின் சீர்திருத்தப் பணிப் பதக்கம்**

**(அ) வீரதீரச் செயல்களுக்கான பதக்கம்**

இப்பதக்கம் பெறுவோருக்கு ரூ. 60/- மாதாந்திரப் படியாக வழங்கப்படுகிறது.

**(ஆ) பாராட்டத்தகுந்த சேவைக்கான பதக்கம்**

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

**(இ) நிகரற்ற சேவைக்கான பதக்கம்**

பதக்கம் மட்டும் வழங்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 11

**கருணைத் தொகை வழங்குதல்**

33. சிறைத் துறைப் பணியாளர்களுக்கு அல்லது அவர்களது குடும்பத்தினருக்கு குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகளில் கருணைத் தொகை வழங்கப்படுகிறது. சிறைப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போது வீரதீரச் செயல்களில் ஈடுபட்டு இறக்க நேரிட்டால் அவரின் சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு, இறந்த பணியாளர் இறுதியாகப் பெற்ற ஊதியம் அவர் (ஆண்/பெண்) உயிரோடு இருந்தால் பணிமூப்பில் ஓய்வு பெறும் நாள்வரை குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. அதற்குப் பின்னர், தகுதியான குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

**குறை தீர்க்கும் நாள்**

34. சிறைத் துறையின் உயர் அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்படுகிறது:—

1. கூடுதல் சிறைத் துறை இயக்குநர் - 3 மாதங்களுக்கு ஒரு முறை
2. சிறைத் துறை சரக துணைத் தலைவர்- மாதமொருமுறை
3. சிறைக் கண்காணிப்பாளர் - வாரமொருமுறை

சிறைப் பணியாளர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு விரைவாகத் தீர்க்கப்படுகின்றன.

**மிகை நேரப் பணி ஊதியம்**

35. சிறைக் காவலர்கள் தங்களுடைய வாராந்திர விடுமுறை நாளில் பணி புரிந்திருந்தால் அவர்களுக்கு, மிகை நேரப் பணி ஊதியம் நாளொன்றுக்கு ரூ. 150/- வீதம் வழங்கப்படுகிறது.

**உணவுக் கட்டணங்கள்**

36. அவசர காலங்கள் மற்றும் பெருமளவில் கைது செய்யப்படும் போது மத்திய சிறையில் பாதுகாப்புப் பணிகளில் அமர்த்தப்படும் திருவாகப் பணியாளர்களுக்கு சென்னை தவிர பிற இடங்களில் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு ரூ.35/- வீதமும், முதல் நிலை சிறைக் காவலர்கள் மற்றும் முதன்மை தலைமை சிறைக் காவலர்களுக்கு ரூ.40/- வீதமும், துணைச் சிறை அலுவலர் பதவி வரையில் உள்ள மற்ற அனைவருக்கும் ரூ.50/- வீதமும் சென்னை மாநகரில் உள்ள அனைத்துப் பணியாளர்களுக்கும்



2008 ஏப்ரல் 11]

ரூ.80/- வீதமும் உணவுக் கட்டணங்கள் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**இரவு உணவுப் படி**

37. மத்திய சிறைகள் மற்றும் இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் இரவு நேரங்களில் பணி புரியும் சிறைக் காவலர்களுக்கு இரவு உணவு மற்றும் காலை தேநீர் வழங்கப்படுகிறது. மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள், திறந்தவெளிச் சிறைகளில் இரவு நேரத்தில் பணி புரியும் சிறைக் காவலர்களுக்கு இவ்வசதிகள் வழங்கப்படுவதில்லை. மத்திய சிறைகளில் இரவு நேரங்களில் பணிபுரியும் சிறைக் காவலர்களுக்கும், மாவட்ட சிறைகள், தனிக் கிளைச் சிறைகள், கிளைச் சிறைகள் மற்றும் திறந்தவெளிச் சிறைகளில் இரவு பணி புரியும் சிறைக்காவலர்களுக்கும் இடையேயான இவ்வேறுபாட்டைக் களைவதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.23.30 இலட்சம் செலவில், மாநிலத்தில் உள்ள அனைத்துச் சிறைகளிலும் இரவு நேரத்தில் பணி புரியும் சிறைக்காவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.12/- என்ற வீதத்தில் இரவு உணவுப் படி வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வாணை 1-6-2007 முதல் செயல்படுத்தப்படுகிறது. அனைத்து மத்திய சிறைகள், புதுக்கோட்டை, இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளி, வேலூர், திருச்சி, புழல் மகளிருக்கான தனிச் சிறை ஆகியவற்றில் இரவு நேரங்களில் பணி புரிகின்ற சிறைக் காவலர்களுக்கு, நபர் ஒருவருக்கு, நாளொன்றிக்கு வழங்கும் இரவு உணவு மற்றும் தேநீர் படி ரூ.9.10-ல் இருந்து ரூ.12- ஆக உயர்த்தியும் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**சீருடை தையற்கட்டணம்**

38. சிறைக் காவலர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு ஜோடி சீருடைகள் தைப்பதற்காக ரூ.200/- தையற்கட்டணமாக வழங்கப்படுகிறது.

**சலவைப் படி**

39. கிளைச் சிறையில் பணி புரியும் சிறைக் காவலர்களுக்கு அனுமதிக்கப்பட்டவாறு, மத்திய சிறைகள், இளங்குற்றவாளிகள் சீர்திருத்தப் பள்ளியில் பணி புரியும் முதல் மற்றும் இரண்டாம் நிலை சிறைக் காவலர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.100/- சலவைப் படி அனுமதிக்கப்படுகிறது. இவ்வாணை 1-6-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 11

## X. சிறை மற்றும் நீதிமன்றங்களில் காட்சி வழி உரையாடல் முறை

40. முன்னோடி நடவடிக்கையாக சிறைகளையும் நீதிமன்றங்களையும் இணைத்து காட்சி வழி உரையாடல் முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. இம்முறையினால், கைதிகள் நீதிமன்றங்களில் நேரடியாக ஆஜர்படுத்தப்படாமல் அவர்களைக் காவலில் வைக்கும் கால அளவை நீட்டிக்க இயலும். இம்முறையினால் விரும்பத்தகாத சம்பவங்கள் தடுக்கப்பட்டிருப்பதுடன் காவல் துறை பாதுகாப்பு மற்றும் வாகனங்கள் வகையில் ஆண்டொன்றிற்கு தோராயமாக ரூ.10 கோடி அளவுக்கு செலவு குறைந்துள்ளது. காவலில் வைக்கப்படும் கால அளவை நீட்டிப்பதற்காக இதுவரை 3,17,354 கைதிகள் காட்சி வழி உரையாடல் முறைமூலம் நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

41. தற்போதுள்ள காட்சி வழி உரையாடல் முறையின்கீழ் அனைத்து மத்தியச் சிறைகள் மற்றும் பெண்களுக்கான தனிச் சிறை உட்பட 17 இடங்களும் 276 நீதிமன்றங்கள் அடங்கிய 64 நீதிமன்ற வளாகங்களும் உள்ளன. இத்திட்டத்தை மேலும் 14 சிறைகளுக்கும் (மாவட்ட சிறைகள் உட்பட) 72 நீதிமன்றங்களுக்கும் ரூ. 894 இலட்சம் செலவில் நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக சிறை நிருவாகத்தை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் தேவையான நிதியுதவி வழங்குமாறு மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

## XI. புதிய முயற்சிகள்

### தகவல் தொழில்நுட்பம்

42. அனைத்து மத்தியச் சிறைகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. தேசிய தகவல் மையத்தின் உதவியுடன், நம் நாட்டிலேயே முதன்முறையாக "சிறைக் கைதிகளின் தகவல் அமைப்பு முறை" குறித்து ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சிறை பதிவுருக்களை கணினிமயமாக்குவதற்காக தேசிய தகவல் மையம் மென்பொருளை உருவாக்கி வருகிறது. சிறைக் கைதிகளுக்கு கணினியில் பயிற்சி அளிக்க, ஒவ்வொரு மத்திய சிறை மற்றும் பெண்கள் தனிச் சிறையில் கணினி மையம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. சிறைச்சாலைகளில் உள்ள கணினிகளுக்கு அகண்ட அலைவரிசை வசதியும் அளிக்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 11]

43. சிறைத் துறையில் வெளிப்படையான நிருவாகம் இருப்பதற்கும், சிறைத் துறையின் செயல்பாடுகளைப் பொதுமக்கள் அறிந்துகொள்வதற்கும் தேசிய தகவல் மையத்தினரால் வடிவமைக்கப்பட்ட பின்வரும் வலைத்தளம் சிறைத் துறையால் தொடங்கப் பெற்றுள்ளது. இதன் முகவரி வருமாறு:-

www.tn.nic.in/prisons
www.tn.gov.in/prisons

### தகவல் அறியும் உரிமைச் சட்டம்

44. இத்துறையில் பொதுத் தகவல் அதிகாரிகளும், உதவி பொதுத் தகவல் அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் 2007 ஆம் ஆண்டில் 49 இனங்களில் தகவல் கேட்டுள்ளனர். அவர்களுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இத்துறையைப் பொருத்தமட்டில் பொது மக்களின் பயனுக்காக தகவல் நடைமுறை நூல் தயாரிக்கப்பட்டு http:/ /www.tn.gov.in/rti என்னும் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

### புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு

45. காவல் துறை ஆய்வாளர் ஒருவர், காவல் துறையின் இரண்டு உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர் ஒருவர், இரண்டாம் நிலைக் காவலர் ஒருவர் ஆகியோர் அடங்கிய புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு ஒன்று இத்துறையில் தலைமையிடத்தில் முறையான அடிப்படையில் இயங்கி வருகிறது.

46. அன்றாட நெருக்கடிகளைச் சமாளிக்கும் பொருட்டும், கைதிகள் மற்றும் சிறைப் பணியாளர்களின் நடவடிக்கைகளை நுணுக்கமாகக் கண்காணிக்கவும், அவசரமான மற்றும் முக்கியமான தகவலைக் குறித்த நேரத்தில் துறைத் தலைவருக்குத் தெரிவிக்கவும் புலனாய்வு மற்றும் விழிப்புப் பணிப் பிரிவு வலுப்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்த மேற்பார்வைக்காக தலைமையிடத்தில் காவல் துறை துணை கண்காணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 9 மத்திய சிறைகள் ஒவ்வொன்றிலும் காவல் துறை உதவி ஆய்வாளர் ஒருவர், தலைமைக் காவலர் ஒருவர், காவலர் ஒருவர் ஆகியோர் அடங்கிய விழிப்புப் பணிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**தொலைநோக்குத் திட்டம்**

47. சிறைகளைக் குறைந்த அளவு தரங்களுடன் நிருவகிக்கும் நோக்கத்துடன் புது டில்லி இந்திய அரசின் உள் விவகாரங்கள் அமைச்சகம், சிறை சீர்திருத்தங்கள் குறித்த தொலைநோக்குத் திட்டம் ஒன்றையும் ஆண்டு செயல் திட்டத்தையும் தயாரித்து உள்ளது. இத்திட்டத்தின்கீழ் மைய அரசு 2002-2007 வரையிலான ஐந்தாண்டுகளுக்கு தற்காலிகமாக ரூ.95.34 கோடியை (இதில் மாநில அரசின் 25% பங்களிப்புத் தொகை அடங்கும்) கீழ்க்கண்ட நான்கு முக்கியப் பணிகளைச் செயற்படுத்துவதற்காக ஒதுக்கியுள்ளது.

(அ) புது சிறைச்சாலைகள் கட்டுதல்

(ஆ) தற்போதுள்ள சிறைக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல்

(இ) சுகாதாரம் மற்றும் குடிநீர் வழங்கல்

(ஈ) சிறைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

48. இத்திட்டத்தின்கீழ், நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல்லிலுள்ள இரண்டு கிளைச் சிறைகள் மாவட்டச் சிறைகளாக மாற்றப்பட்டுள்ளன. ஆத்தூர், கோபிசெட்டிபாளையம், நாகப்பட்டினம், விருதுநகர், இராமநாதபுரம் ஆகிய இடங்களிலுள்ள 5 கிளைச் சிறைகளும் மாவட்டச் சிறைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. மகளிருக்காக திருச்சி மற்றும் கடலூரில் இரு சிறைகள் கட்டப்பட்டு வருகின்றன. சிறைகளை விரிவுபடுத்துவதன்மூலம் சிறைகளில் இட நெரிசல்களை குறைப்பதுடன் குடிநீர் வழங்கல், துப்புரவுப் பணியாளர்களுக்குக் குடியிருப்பு போன்ற வசதிகளை அதிகரிப்பதே இத்தொலைநோக்குத் திட்டத்தின் நோக்கமாகும். 2002-2003, 2003-2004 ஆகிய ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. 2004-2005, 2005-2006, 2006-2007 ஆகிய ஆண்டுகளுக்கு அனுமதிக்கப்பட்ட பணிகள் பல்வேறு செயல்பாட்டு நிலைகளில் உள்ளன. பணியை முடிப்பதற்காக இத்திட்டம் மேலும் இரண்டாண்டு கால அளவிற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

## XII. பகுதி II திட்டங்கள்

49. 2008-2009 ஆம் ஆண்டுக்கான பகுதி II திட்டங்களின்கீழ் பின்வரும் முக்கியத் திட்டங்கள் உட்பட பதினைந்து திட்டங்களுக்கு ரூ.91.95 இலட்சம் அளவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.





| தொடர் எண். | பணியின் பெயர் | மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை சரகங்களின் சிறைத் துறை துணைத் தலைவர் அலுவலகத்திற்கு 6 கணினிகள், பல்வகை பணி பிரிண்டர்கள் 3, துணை பாகங்கள், கணினி பாகங்கள், அறைகலன்கள், ப்ளாப்பிகள், சி.டி.க்கள் மற்றும் எழுது பொருள் முதலிய நுகர்பொருள் ஆகியவற்றை வழங்குதல். | 3.72 |
| 2. | சென்னை, கூடுதல் சிறைத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு 5 கே. வி. ஏ. திறனுள்ள தடையற்ற மின் சக்தி வழங்கும் சாதனம் 2 வழங்கல். | 3.00 |
| 3. | சிறை ஒன்றுக்கு ரூ. 1.50 இலட்சம் வீதத்தில், வேலூர், கடலூர், திருச்சி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் ஆகிய மத்திய சிறைகளுக்கும், வேலூர் மற்றும் திருச்சியில் உள்ள மகளிர் தனிச் சிறைக்கும், புதுக்கோட்டை மாவட்ட சிறைக்கும் 9 புதிய EPBAX தொலைபேசி இணைப்பகங்களை, தொடர்பான அனைத்து துணைப் பாகங்கள், கருவிகளுடன் வழங்குதல். | 13.50 |
| 4. | மதுரை மத்திய சிறையில் தற்போதுள்ள டெம்போ டிராக்ஸ் வண்டிக்கு பதிலாக புதிய ஜீப் வழங்குதல். | 5.00 |
| 5. | மதுரை மத்திய சிறையில் தற்போதுள்ள நோயாளர் ஊர்திக்கு பதிலாக புதிய நோயாளர் ஊர்தி வழங்குதல். | 6.80 |
| 6. | நாகர்கோவில் மற்றும் திண்டுக்கல் மாவட்ட சிறைகளுக்கு இரண்டு ஜீப்புகள் வழங்குதல். | 9.48 |
| 7 | நாங்குநேரி, பூவிருந்தவல்லி மற்றும் திருச்சி தனிக் கிளைச் சிறைகளுக்கு நோயாளி ஊர்தி வழங்குதல். | 14.22 |

[2008 ஏப்ரல் 11

| | | |
|---|---|---|
| 8 | சிறைத் துறைப் பணியாளர்களுக்குக் கணினிப் பயிற்சி அளித்தல். | 16.36 |
| 9 | வேலூர் மற்றும் திருச்சி மகளிருக்கான தனிச் சிறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு பணியாளர் கார் 2 வழங்குதல். | 9.16 |
| 10 | வேலூர் மத்திய சிறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள பழைய பயனற்ற பணியாளர் காருக்கு பதிலாக புதிய கார் வழங்குதல். | 4.00 |

### XIII. விரிவான சட்டம் ஒன்று இயற்றுதல்

50. சிறைகள் மற்றும் சிறைக் கைதிகள், 1894 ஆம் ஆண்டு சிறைகள் சட்டம், 1900 ஆம் ஆண்டு சிறைக் கைதிகள் சட்டம், 1950 ஆம் ஆண்டு சிறைக் கைதிகளுக்கான இடமாற்றம் செய்யும் சட்டம் ஆகியவற்றின் விதித்துறைகளின்மூலம் நிருவகிக்கப்படுகின்றனர். இவை அனைத்தும் மத்தியச் சட்டங்களாகும். சிறை நிருவாகம் மற்றும் சிறைக் கைதிகளை நடத்தும் முறை ஆகிய அனைத்து அம்சங்கள் அடங்கிய விரிவான புதிய சட்டத்தை இயற்ற அரசு கருதுகிறது.

### XIV. முடிவுரை

51. சிறைத் துறையின் சீரிய நிருவாகத்திற்கு அரசு உரிய முன்னுரிமை அளித்து வருகிறது. சிறைக் கைதிகளின் நலன், சிறைப் பணியாளர்களின் நலன், அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள், சிறைகளின் பாதுகாப்பு, உடல் நலன் மற்றும் மனித உரிமைகளைப் பேணுதல் போன்றவற்றை மேம்படுத்தி ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. சிறைக் கைதிகளின் தேவைகள் எப்போதும் கவனத்தில் கொள்ளப்படுகின்றன. சிறை சீர்திருத்தம் குறித்த பல்வேறு குழுக்களின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. மாவட்ட சிறைகள் அமைத்தல் என்ற புதிய கோட்பாடு இம்மாநிலத்தில் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது. பெண் கைதிகளுக்கு மட்டும் 9 கிளைச் சிறைகள் மற்றும் 3 தனிக் கிளைச் சிறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது நாட்டிலேயே முன்னோடி நடவடிக்கையாகும். தமிழ்நாட்டில் உள்ள சிறைகள் அனைத்தும், அரசின் முழுமையான ஆதரவுடன் எண்ணத்தாலும் எழுத்தாலும் சீர்திருத்த நிலையங்களாக அமையவும், கைதிகளின் மனித உரிமைகளை முறையாகச் செயல்படுத்தவும் இத்துறை சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.



2008 ஏப்ரல் 11]

## இணைப்பு II

(134 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண் 41 - வருவாய்த் துறை
## கோரிக்கை எண் 51 - இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### முன்னுரை

மாநிலத்தின் நிர்வாக அமைப்பில், வருவாய்த் துறை மிகவும் பழமையானது என்ற மரபுவழி வாய்ந்த பெருமை கொண்டதாகும். இத்துறை, நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் தொடர்ந்து செயல்படுகிறது. மேலும், சீரான சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் இதன் பங்களிப்பு கணிசமானதாகும்.

2. வருவாய்த் துறையின் முக்கியப் பணி மாநிலத்தின் அனைத்து நிலங்களைப் பாதுகாப்பதாகும். நிலங்களின் மீதான மக்களின் உரிமையை, நில ஆவணங்களை முறையாகப் பதிவு செய்தல் மற்றும் இன்றைய நிலைக்கேற்ப மாற்றுதல் ஆகியவற்றின்மூலம் வருவாய்த் துறை பாதுகாக்கிறது. நில ஒப்படை, நில எடுப்பு, உரிமை மாற்றம், வீட்டுமனைப் பட்டா வழங்குதல், நில உச்ச வரம்பு, நகர்ப்புற நில வரி வசூலித்தல் போன்ற பல்வேறு பணிகளை வருவாய்த் துறை செய்து வருகிறது.

3. புயல், வெள்ளம், வறட்சி, பூகம்பம் நிலச்சரிவு, ஆழிப் பேரலை போன்ற இயற்கை இடர்ப்பாட்டுக் காலங்களில் மக்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம், அத்தியாவசியப் பொருட்கள், நிதி உதவி போன்ற பல்வேறு உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளித்து இன்றியமையாத பணியை வருவாய்த் துறை செய்து வருகிறது. இவ்வாறான தனது பல்வேறு பணிகளின்மூலம், குடிமக்களின் வாழ்வில் பல்வேறு கோணங்களில் உதவுகிறது.

4. மாநில அளவில் வருவாய்த் துறையின் பணிகள் வருவாய் நிர்வாக ஆணையர், நில நிர்வாக ஆணையர், நிலச் சீர்திருத்த ஆணையர், நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையர்

மற்றும் ஆணையர், நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நில வரி ஆகியோரால் மேற்பார்வை செய்யப்படுகிறது. மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், துணை வட்டாட்சியர், வருவாய் ஆய்வாளர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் அமைச்சுப் பணியைச் சார்ந்த பணியாளர் போன்ற பல்வேறு பணியாளர்கள்மூலம் வருவாய்ப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

5. ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களை நிரப்புதல், அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல், அதிகாரங்களை ஒதுக்கீடு செய்தல், நிர்வாக அமைப்பிற்குள் அதிகாரங்கள் மற்றும் பணிகளை ஒப்படைப்பு செய்தல் மற்றும் அலுவலகங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான கட்டடம், வாகனம், கணினிமயமாக்குதல், தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுப்பதன்மூலம் சிறந்த, திறமையான ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்தி மிகச் சிறந்த திறமையான சேவையைச் செய்துவருகிறது.



## அத்தியாயம் 2

## வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் தணிக்கும் துறை

### ஆட்சி எல்லைகளைச் சீரமைத்தல்

இம்மாநிலம் 74 வருவாய்க் கோட்டங்கள், 208 வட்டங்கள், 1,120 குறு வட்டங்கள் மற்றும் 16,563 கிராமங்களைக் கொண்டு 31 மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகத்தை திறனுடையதாக மாற்றவும் பொதுமக்களின் குறைகளைப் போக்கி அவர்களின் தேவைகளுக்கேற்ப செயல்படும் விதத்தில் பின்தங்கிய பகுதிகளை முன்னேற்றவும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும் காலங்களில் ஆதரவு அளிக்கவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும், பெரிய மாவட்டங்கள் சீரமைக்கப்பட்டு புதிய மாவட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

இந்த அரசின் முந்தைய ஆட்சிக் காலத்தில் அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டு, அதன்பிறகு வந்த அரசால் கைவிடப்பட்டது. இந்நிலையில் பல்வேறு தரப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் 31-வது மாவட்டமாக மீண்டும் அரியலூர் மாவட்டம் உருவாக்கப்படும் என 25-07-2006 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வறிவிப்பின் அடிப்படையிலும் அப்பகுதி மக்களின் விருப்பத்தினை கருத்திற்கொண்டும் மற்றும் நிர்வாக நலனைக் கருதியும் அரசு தனது 19-11-2007 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 683-ல் பெரம்பலூர் மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு பெரம்பலூர் மாவட்டமும், அரியலூரைத் தலைமையிடமாகக் கொண்டு அரியலூர் மாவட்டமும் உருவாக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இப்புதிய அரியலூர் மாவட்டம் 23-11-2007 முதல் செயல்பட்டு வருகிறது. பெரம்பலூர் மாவட்டம் பிரிக்கப்பட்ட பிறகு மாநிலத்திலுள்ள மொத்த மாவட்டங்கள் 31 ஆக உயர்ந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செங்கம் வட்டத்தைப் பிரித்து செங்கத்தை தலைமையிடமாகக் கொண்டு செங்கம் வட்டமும், தண்டராம்பட்டை தலைமையிடமாகக் கொண்டு புதிய தண்டராம்பட்டு வட்டமும் உருவாக்கப்பட்டு 31-10-2007 ஆம் நாளிட்ட

அரசாணை (நிலை) எண் 636-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. புதிய தண்டராம்பட்டு வட்டம் 1-11-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள திண்டுக்கல் வட்டத்தைப் பிரித்து, திண்டுக்கல்லை தலைமையிடமாகக் கொண்டு திண்டுக்கல் வட்டமும், ஆத்தூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய ஆத்துார் வட்டமும், உருவாக்கப்பட்டு 31-10-2007 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 637-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. புதிய ஆத்துார் வட்டம் உருவாக்கப்பட்டு 01-11-2007 முதல் செயல்பட்டு வருகிறது. செங்கம் மற்றும் திண்டுக்கல் வட்டங்கள் பிரிக்கப்பட்டதால் மொத்த வட்டங்களின் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளது.

தருமபுரி மாவட்டத்திலுள்ள தருமபுரி வருவாய்க் கோட்டத்தைப் பிரித்து தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு தருமபுரி வருவாய்க் கோட்டமும், அரூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய அரூர் வருவாய்க் கோட்டமும் உருவாக்கப்பட்டு 29-1-2008 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 46-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. புதிய அரூர் வருவாய்க் கோட்டம் 13-2-2008 முதல் செயல்பட்டு வருகிறது. தற்போது மாநிலத்தில் 74 வருவாய்க் கோட்டங்கள் உள்ளன.

2001 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி மாநிலத்தின் மொத்த மக்கட்தொகை 6,21,10,839 ஆகும்.

**2.2. வருவாய்த் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புதல்:-**

அமைச்சுப் பணி உள்ளடக்கிய பணிகளுக்கு நேரடி நியமனத்தின்மூலம் நிரப்பிட முந்தைய அரசால் விதிக்கப்பட்டிருந்த தடையாணை 2001 முதல் 2005 வரை நடைமுறையில் இருந்த காரணத்தால், வருவாய்த் துறையில் அமைச்சுப் பணியில் அடங்கும் உதவியாளர்கள், இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள், சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் போன்ற பதவிகளும் மற்றும் இதரப் பணிகளில் அடங்கும் ஓட்டுநர்கள், அலுவலக உதவியாளர்கள், காவலர்கள் மற்றும் தொலைபேசி இயக்குபவர்கள் போன்ற பணியிடங்களும் நிரப்பப்பட இயலாமல் இருந்தன. பெருமளவு வருவாய்த் துறையில் காலியாக இருந்த பணியிடங்களை, அரசின் நலத் திட்டங்கள் செயலாக்குதல் உள்ளிட்ட முக்கியப் பணிகளை மேற்கொள்வதில் ஏற்பட்ட சிரமங்களைக் கருத்திற்கொண்டு, உதவியாளர் முதல் இரவுக் காவலர் வரையிலான 3,173 பல்வேறு



பணியிடங்களை நிரப்பிட 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளன. இதைத் தொடர்ந்து 224 உதவியாளர்கள், 486 இளநிலை உதவியாளர்கள், 561 தட்டச்சர்கள் மற்றும் 62 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் காலிப் பணியிடங்களை, நேரடி நியமனம் மூலமாக நிரப்பிட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் மாவட்ட ஆட்சியர்களால் கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்புதல் வழங்கப்பட்ட பணியிடங்களை நிரப்பிட, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அண்மையில் போட்டித் தேர்வினை நடத்தி உள்ளது. 2006-2007 ஆம் ஆண்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட மீதமுள்ள காலிப் பணியிடங்களைப் பதவி உயர்வு, கருணையடிப்படையில் பணி நியமனம், வேலைவாய்ப்பகங்கள் மூலம் பணி நியமனம் முதலான வகைகளில் நிரப்பிடும் பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது.

அரசு ஆணை எண் 212, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 29-11-2001 மற்றும் அரசு கடித எண் 67770/P/01-1, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 19-12-2001 ஆகியவற்றின் செயல்பாட்டிலிருந்து வருவாய்த் துறைக்கு அரசாணை (நிலை) எண் 634, வருவாய்த் துறை, நாள் 22-9-2006-ன்மூலம் விலக்களித்து ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி எதிர்பாரா நிகழ்வுகளினால் ஏற்படும் காலியிடங்களையும் கருத்திற்கொண்டு காலியிடப் பட்டியல் தயாரிப்பதற்கு அரசு ஆணையிட்டுள்ளது.

இதற்கேற்ப 559 வட்டாட்சியர் மற்றும் 700 துணை வட்டாட்சியர் பணியிடங்களை நிரப்ப 2007 ஆம் ஆண்டிற்கான பட்டியல்கள் வெளியிட அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் பொது மக்களுக்கு சிறப்பாகச் சேவை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

**2.3 கிராம நிர்வாகம்**

**(i) கிராம நிர்வாக அலுவலர்கள்**

கிராம நிர்வாகம் மாவட்ட நிர்வாகத்தின் அச்சாணி ஆகும். கிராம நிர்வாக அலுவலர்கள் மாவட்ட நிர்வாகத்தின் அடித்தளத்தட்டுப் பணியாளர்களாகத் திகழ்கின்றனர். தமிழகத்திலுள்ள 16,563 வருவாய் கிராமங்களில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர் பணியிடங்கள் உள்ளன. கிராம நிர்வாக அலுவலர்களின் இன்றியமையாத பங்கைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் அண்மையில் 2,500 கிராம நிர்வாக

அலுவலர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள கிராம நிர்வாக அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும்பொருட்டு, ரூ.8,38,500-க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியப் பயனாக வழங்கப்பட்டுவரும் ரூ.928- ரூ.1,130-ஆக 24-1-2008 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 40, வருவாய், நாள் 24-1-2008 மூலம் 24-1-2008 முதல் இதனை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் 5,326 முன்னாள் கிராம அலுவலர்கள் பயன் பெற்றுள்ளனர். மேலும், முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் ரூ.150-லிருந்து ரூ.400- ஆக உயர்த்தி 24-1-2008 முதல் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதனால் 4,169 குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**(ii) கிராம உதவியாளர்கள்**

2006 ஆம் ஆண்டில் நடைமுறையிலிருந்த சில விதிமுறைகளைத் தளர்வு செய்து, 3,674 கிராம உதவியாளர்களை நியமனம் செய்ய அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது தொடர்பாக, இதுவரை 2,095 கிராம உதவியாளர்கள் புதியதாகப் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள பணியிடங்களை, நடைமுறையில் உள்ள விதிகளின்படி, வேலைவாய்ப்பகம்மூலம் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முன்னாள் கிராம உதவியாளர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டு வரும் ரூ.150/- சிறப்பு குடும்ப ஓய்வூதியம் 24-1-2008 முதல் பிற படிகள் ஏதுமின்றி ரூ.400-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த ஆணையின்மூலம் 1,503 குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன் பெற்றுள்ளனர்.

**2.4. இலவச சேலைகள் / வேட்டிகள் வழங்கும் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் பொங்கல் பண்டிகையின்போது வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள ஏழை, எளிய மக்களுக்கு இலவச சேலைகள் / வேட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2008 ஆம் ஆண்டு பொங்கலுக்கு அதிகபட்சமாக, முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்டதைவிட அதிகமாக 159.64 இலட்சம் சேலைகளும், 158.98 இலட்சம் வேட்டிகளும் பயனாளிகளுக்கு





வழங்கப்பட்டுள்ளன. சென்ற சில ஆண்டுகளில் வழங்கப்பட்ட இலவச வேட்டி, சேலைகள் விவரம் பின்வருமாறு:-

| ஆண்டு | வழங்கப்பட்ட எண்ணிக்கை (இலட்சத்தில்) | |
|---|---|---|
| | சேலைகள் | வேட்டிகள் |
| 2002 | இல்லை | |
| 2003 | | |
| 2004 | 105.47 | 104.39 |
| 2005 | 109.75 | 109.08 |
| 2006 | 100.60 | 84.56 |
| 2007 | 155.41 | 155.27 |
| 2008 | 159.64 | 158.98 |

**2.5 மனு நீதித் திட்டம்**

1969 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இத்திட்டத்தின் குறிக்கோள் பொதுமக்களின் குறைகளுக்கு எவ்விதப் பிரச்சினையும் இன்றி விரைவாகத் தீர்வு காண்பதே ஆகும். இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய்க் கோட்டாட்சியர் பல்வேறு துறைத் தலைவர்களுடன் தனது ஆட்சி எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒவ்வொரு மாதம் என கிராமங்களுக்கு சுழற்சி முறையில் சென்று மனுக்களைப் பெற்று அந்தந்த கிராம மக்களின் குறைகளை அந்தந்த இடத்திலேயே தீர்வு செய்கின்றனர்.

இத்திட்டம் பிரதி மாதம் இரண்டாவது புதன்கிழமையன்று நடத்தப்படுகிறது. மூன்றாண்டு காலத்திற்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நடத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இத்திட்டம் சுழற்சி முறையில் செயல்படுத்தப்படுகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 31-12-2007 வரை தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 1,89,877 ஆகும்.

## 2.6 பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள்

இத்திட்டம் மாநிலம் முழுவதும், ஒவ்வொரு திங்கட்கிழமையும், குறைதீர்க்கும் நாளாக 1986 ஆம் வருடம் முதல் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்கள் / கோட்டாட்சியர்கள் / வட்டாட்சியர்கள் தங்களது தலைமையிடத்திலேயே அன்று இருந்து, பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று அவர்களது குறைகளைத் தீர்ப்பதற்கு முறையான துரித நடவடிக்கைகள் எடுக்கின்றனர். பொதுமக்களுக்கு சிறப்பான முறையில் சேவை செய்வதை உறுதிப்படுத்திட, குறைதீர்க்கும் நாளை நடத்துவதற்கான அறிவுரைகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது குறித்த நடைமுறைகள் அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அனைத்து மனுக்கள்மீது துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கான அறிவுரைகளுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மனுக்கள் உடனடியாக அனுப்பப்படுகின்றன. மனுதாரர்களுக்கு அவர்களது மனுக்களைப் பெற்றுக் கொண்டதற்கான ரசீதாக வெள்ளை அட்டை கொடுக்கப்படுகின்றது. 2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 31-12-2007 வரை தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 3,50,636 ஆகும்.

## 2.7 மாண்புமிகு அமைச்சர்கள்/நாடாளுமன்ற உறுப்பினர்கள்/சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள்

மாண்புமிகு அமைச்சர்கள் / நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதிகளுக்குச் செல்லும்போது, பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அனுப்பிவைக்கப்படுகின்றன. அவ்வாறு பெறப்படும் மனுக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், சம்பந்தப்பட்ட சட்டமன்ற / நாடாளுமன்றத் தொகுதிவாரியாகப் பிரிக்கப்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் அந்தந்த தொகுதிக்கான பதிவேட்டில் பதிந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. மனுதாரர்களுக்கும் தங்களது மனுக்களுக்கு அளிக்கப்படும் முடிவு விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.





2007-2008 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 31-12-2007 வரை தீர்வு செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 43,355 ஆகும்.

## 2.8 சான்றுகள்

அனைத்து அரசுத் துறைகளிடையே வருவாய்த் துறையே மற்ற துறைகளையும்விட அதிக அளவில் மக்களுடன் தொடர்பு கொண்டிருப்பதால், பொதுமக்களுக்குத் தேவைப்படும் கீழ்க்கண்ட சான்றிதழ்களை வழங்க வருவாய்த் துறைக்கு அரசு அதிகாரம் அளித்துள்ளது:-

1. வகுப்புச் சான்று
2. பிறப்பிட / இருப்பிடச் சான்று
3. வருமானச் சான்று
4. நாட்டினச் சான்று
5. வாரிசுச் சான்று
6. சொத்து மதிப்புச் சான்று
7. பிறப்பு / இறப்புச் சான்று
8. ஆதரவற்ற குழந்தைச் சான்று
9. ஆதரவற்ற விதவைச் சான்று
10. கலப்புத் திருமணச் சான்று
11. பள்ளிச் சான்றுகள் தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று
12. கணவனால் கைவிடப்பட்டவர் சான்று
13. வேலை வாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற ஒருங்கிணைந்த சான்று
14. பட்டதாரியில்லாத குடும்பச் சான்று
15. வறுமையிலுள்ள குடும்பச் சான்று

[2008 ஏப்ரல் 11

மேற்படிப்புக்காகவும், வேலை வாய்ப்பு பெறவும் வகுப்புச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்கு தேவைப்படுகின்றன. இச்சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டவுடன் உரிய விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்களுக்கு சான்றிதழ் துரிதமாக வழங்கப்படுகின்றன.

**(i) வகுப்புச் சான்று**

1988 ஆம் ஆண்டு முதல், பொதுமக்களின் சிரமங்களைக் குறைக்கும்வண்ணம் அச்சடிக்கப்பட்ட நிரந்தர வகுப்புச் சான்று அட்டைகள் வழங்கும் முறையை அரசு செயல்படுத்தி வருகிறது. இச்சான்று அனைத்துக் கல்வி நிறுவனங்கள் / தொழிற் கல்வி நிறுவனங்களில் சேரவும் மற்றும் வேலைவாய்ப்பு பெறவும் பெரிதும் உதவியாக உள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் வகுப்புச் சான்று அட்டைகள் சென்னை அரசு மைய அச்சகத்தில் அச்சிடப்பட்டு அனைத்து வட்டாட்சியர்கள் அலுவலகங்களின்மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. 2007-2008 ஆம் ஆண்டில் 19,42,000 வகுப்புச் சான்று அட்டைகள் அச்சிடப்பட்டு அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

வகுப்புச் சான்றிதழைப் பெறுவதற்கென வட்டாட்சியர் அலுவலகங்களில் மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறையை 1999 ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த முறையில் 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும் வகுப்புச் சான்று பெறாத மாணவர்களின் விண்ணப்பங்கள், தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன், அவர்கள் பயிலும் பள்ளியிலிருந்தே சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் வருவாய்த் துறை அலுவலர்களின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு மொத்தமாக அனுப்பப்படுகின்றன. இச்சான்றிதழ்கள் பள்ளி மாறுதல் சான்றிதழுடன் (Transfer Certificate) சேர்த்து பள்ளிப் படிப்பை முடிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.



2008 ஏப்ரல் 11]

கடந்த ஆண்டுகளில் வகுப்புச் சான்றுகள் வழங்கப்பட்ட விவரம்:

| ஆண்டு | பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் | மிகவும் பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் | சீர்மரபினர் | ஆதி திராவிட வகுப்பினர் | பழங்குடியின வகுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1999-2000 | 3,20,734 | 1,79,470 | 47,000 | 1,67,783 | 7,641 | 722628 |
| 2000-2001 | 3,26,056 | 1,00,943 | 50,641 | 90,000 | 6,568 | 574208 |
| 2001-2002 | 2,70,376 | 2,00,164 | 50,194 | 1,60,925 | 4,740 | 686399 |
| 2002-2003 | 5,34,846 | 2,57,924 | 68,713 | 3,89,041 | 9,678 | 1260202 |
| 2003-2004 | 5,21,069 | 2,03,165 | 60,396 | 3,26,506 | 9,828 | 1120964 |
| 2004-2005 | 5,34,846 | 2,84,724 | 74,903 | 3,89,041 | 9,674 | 1293188 |
| 2005-2006 | 4,60,442 | 2,32,394 | 55,117 | 3,24,405 | 10,248 | 1082606 |
| 2006-2007 | 6,09,797 | 2,88,710 | 62,477 | 3,63,393 | 13,184 | 1337561 |
| 2007-2008 (31-12-2007 வரை) | 4,92,617 | 2,08,527 | 46,083 | 2,65,466 | 15,545 | 1028238 |

**(ii) பிறப்பிட / இருப்பிடச் சான்று**

பள்ளிகளில் சேரவும், வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும் பிறப்பிட / இருப்பிடச் சான்றிதழ்கள் தேவைப்படுகின்றன. தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஒரே இடத்தில் வசித்திருப்பவர் மட்டுமே பிறப்பிட / இருப்பிடச் சான்றிதழ் பெற தகுதி பெற்றவர் ஆவார். இச்சான்றிதழ்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு கட்டணம் இன்றியும், ஏனையோருக்கு ரூ.10/- கட்டணத்திலும் அளிக்கப்படுகின்றன.

**(iii) வருமானச் சான்று**

கல்வி உதவித் தொகை பெறுவதற்கும், பள்ளி / கல்லூரி மாணவர் விடுதிகளில் சேருவதற்கும், தேவைப்படும் இச்சான்று, வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு இலவசமாகவும், ஏனையோருக்கு ரூ.10/- கட்டணத்திலும் வட்டாட்சியரால் வழங்கப்பட்டு வருகிறது.

**(iv) நாட்டினச் சான்று**

ஒருவர் இந்த நாட்டைச் சார்ந்தவர் என்பதற்கான சான்றாக வட்டாட்சியரால் நாட்டினச் சான்று வழங்கப்படுகிறது. வெளிநாடு செல்ல விரும்பும் பொதுமக்கள் கடவுச் சீட்டு, நுழைவிசைவு ஆகியவை பெறுவதற்காக இச்சான்று தேவைப்படுகிறது. இதற்கான விண்ணப்பங்கள் வருவாய் ஆய்வாளரின் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபின் இச்சான்று அளிக்கப்பட்டு வருகிறது.

**(v) வாரிசுச் சான்று**

ஒரு குடும்பத்தின் தலைவரோ அல்லது அந்த குடும்பத்தில் உள்ள நபர் எவரேனும் காலமாகிவிட்டால், அவரது பெயரில் உள்ள அசையும் / அசையா சொத்துக்களைப் பெயர் மாற்றம் செய்யவும், குடும்ப ஓய்வூதியம் பெறவும், இறந்தவரின் நேரடி வாரிசுதாரர்களான, மனைவி அல்லது கணவர், மகன், மகள், தாய் / தந்தை ஆகியோர் வாரிசு சான்றிதழுக்கு விண்ணப்பிக்கலாம். இச்சான்றிதழ் பெற இறப்புச் சான்றின் அசல் பிரதி மற்றும் ஐந்து ரூபாய்க்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்கவேண்டும். சுற்றுப்புறத்தில் உள்ளவர்களையும் மற்ற கிராமத்தினரையும், கிராம நிர்வாக அலுவலரையும் விசாரித்து வருவாய் ஆய்வாளர் தரும் விசாரணை அறிக்கையின் அடிப்படையில், வாரிசுதாரர்கள் பெயர்களைக் குறிப்பிட்டு இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**(vi) சொத்து மதிப்புச் சான்று**

ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யவும், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலங்களில் பங்கு பெறவும் இச்சான்று தேவைப்படுகிறது. இச்சான்று கோருபவர் ரூ.10/-க்கான கட்டண வில்லையுடன் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கவேண்டும். சான்றிதழ் பெற சொத்து மதிப்பு ரூ.50,000/- வரை ரூ.100/-ம், அதற்கு மேல் ஒவ்வொரு ரூ.50,000-க்கு ரூ.200/- வீதமும் கட்டணமாக கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும்.

**(vii) பிறப்பு / இறப்புச் சான்று**

இச்சான்று கோருபவர் ரூபாய் ஐந்துக்கான கட்டண வில்லையுடன் விண்ணப்பிக்கவேண்டும். வட்டாட்சியர் அலுவலகத்தில் அல்லது கிராம நிர்வாக அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ள விவரங்களின் அடிப்படையில், இச்சான்று, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியரால்





வழங்கப்படுகிறது. நகராட்சிகளில், நகராட்சி ஆணையரின் மூலமும், பேரூராட்சிப் பகுதிகளில் பேரூராட்சி செயல் அலுவலர் மூலமும் இச்சான்று வழங்கப்படுகிறது. மாநகராட்சிகளில், மாநகராட்சி ஆணையரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**(viii) ஆதரவற்ற குழந்தைச் சான்று**

ஆதரவற்ற குழந்தைகள் அனாதை இல்லங்களில் சேர்வதற்கு இச்சான்று தேவைப்படுகிறது. விண்ணப்பத்தின்பேரில், குழந்தையின் தாய் / தந்தையரைப் பற்றிய விவரம், உண்மையில் அந்தக் குழந்தை அனாதைதானா என்ற விவரம், குழந்தை உண்மையில் பாதுகாவலரின் பாதுகாப்பில் உள்ளதா என்ற விவரம் ஆகியவற்றை தீர விசாரித்த பின்னர், இச்சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**(ix) ஆதரவற்ற விதவைச் சான்று**

வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறுவதற்காக விதவைகளுக்கு இச்சான்று வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரருடைய கணவரின் இறப்பு விவரம் மற்றும் விண்ணப்பதாரர் மறுமணம் புரிந்துள்ளாரா, விண்ணப்பதாரர் உறவினர் ஆதரவு உள்ளவரா போன்ற விவரங்களை விசாரித்த பின்னர் வட்டாட்சியரின் அறிக்கையின் அடிப்படையில் வருவாய்க் கோட்ட அலுவலரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**(x) கலப்புத் திருமணச் சான்று**

இரண்டு மாறுபட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் (ஒருவர் ஆதி திராவிட/பழங்குடியினர் இனமாகவும் மற்றொருவர் வேறு இனத்தைச் சார்ந்தவராகவும் இருந்து) புரிந்துகொள்ளும் திருமணம் கலப்புத் திருமணம் ஆகும். வேலைவாய்ப்பில் முன்னுரிமை பெறவும், அவர்தம் குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்கவும், அரசின் சலுகைகளைப் பெறவும் இச்சான்று உரிய விசாரணைக்குப்பின் வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது.

**(xi) பள்ளிச் சான்று தொலைந்ததற்காக வழங்கப்படும் சான்று**

பள்ளி, கல்லூரிகளில் வழங்கப்படும் அசல் சான்று தொலைந்து விட்டால், அச்சான்றின் நகலினைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட துறைக்கு விண்ணப்பிக்க வேண்டி, மேற்படி சான்று தொலைந்தது உண்மை என்ற சான்று வட்டாட்சியரால் வழங்கப்படுகிறது. இச்சான்றிதழ் பெற காவல் நிலையங்களில் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் பிரதி மற்றும் இச்சான்று

[2008 ஏப்ரல் 11

கிடைக்கப்பெறவில்லையென்ற காவல் நிலையத்தின் அறிக்கையுடனும் வட்டாட்சியருக்கு விண்ணப்பிக்கவேண்டும். விண்ணப்பதாரர் மற்றும் அருகில் உள்ளவர்களை விசாரித்த பின்னர், வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது.

**(xii) கணவனால் கைவிடப்பட்டவர் சான்று**

கணவனால் புறக்கணிக்கப்பட்ட திருமணமான பெண், அவரது கணவரை விட்டுப்பிரிந்து, அவருடன் எவ்விதத் தொடர்பும் இன்றி தொடர்ந்து ஐந்து ஆண்டிற்கும் மேலாக தனித்து வாழ்ந்து வந்தால், அவர் கணவனால் கைவிடப்பட்டவராகக் கருதப்படுகிறார். விண்ணப்பதாரர் தனது கணவரை நிலையாகப் பிரிந்து தனித்து வாழ்கிறாரா அல்லது தற்காலிகமாகத் தனித்து வாழ்கிறாரா என விசாரித்த பின்னர் வட்டாட்சியரால் இச்சான்று வழங்கப்படுகிறது. அரசின் சலுகைகளைப் பெற இச்சான்று உதவுகிறது.

**(xiii) வேலை வாய்ப்பற்றோர் உதவித்தொகை பெற ஒருங்கிணைந்த சான்று**

படித்து வேலை வேண்டி தமிழ்நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை அரசு 2006 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பத்தாம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் 150/- ரூபாயும், மேல்நிலைப் பள்ளிப் படிப்பு நிறைவு செய்தவர்களுக்கு மாதம் 200/- ரூபாயும், பட்டதாரிகளுக்கு மாதம் 300/- ரூபாயும் உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறுவதற்கென வருமானம், வேலையில் இல்லாமை, தமிழ்நாட்டிலேயே கல்வி கற்றிருத்தல், பெற்றோர் அல்லது பாதுகாவலர், கணவன் அல்லது மனைவி தமிழ்நாட்டில் குடியிருத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய சான்றுகள் வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

**(xiv) பட்டதாரியில்லாத குடும்பச் சான்று**

அரசுப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் இடம் பெறுவதற்கு ஏதுவாக குடும்ப உறுப்பினர் எவரும் பட்டதாரியாக இல்லாத குடும்பங்களைச் சார்ந்தவர்களுக்கு இச்சான்று வழங்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 11]

**(xv) வறுமையிலுள்ள குடும்பச் சான்று**

வறுமையில் உழலும் ஏழை, எளிய மக்கள், அரசின் பல்வேறு நலத் திட்டங்களைப் பெற்று பயனடைவதற்கு உதவியாக இச்சான்று வழங்கப்படுகிறது.

**2.9 கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகத்திற்குத் தளவாடங்கள்**

மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்களின் அலுவலகங்கள் உள்ளன. அரசு, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அறைகலன்களை பல்வேறு கட்டங்களில் வழங்கத் திட்டமிட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக ஒவ்வொரு கிராம நிர்வாக அலுவலகத்திற்கு ரூ.10,000/- வீதம் 3,000 கிராம நிர்வாக அலுவலகங்களுக்கு அறைகலன்கள் (மேசை, நாற்காலி) வாங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**2.10 வாகனங்கள் வழங்குதல்**

முதியோர் உதவித்தொகை வழங்குதல், ஆதரவற்ற மற்றும் கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர், ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் பொருள் ஈட்டும் குடும்பக் காப்பாளர் மரணமடைந்தால் அவருடைய குடும்பத்தினருக்கு நிதி உதவி வழங்குதல் போன்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் தனி வட்டாட்சியரின் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பங்கு மிக முக்கியமானது. இத்திட்டத்தை செவ்வனே நிறைவேற்ற அவர்கள் கிராமந்தோறும் சென்று விசாரணைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், பொது விநியோகத் திட்டத்தை செம்மையாகச் செயல்படுத்திட வட்ட வழங்கல் அலுவலர்களுக்கு வாகனங்கள் தேவைப்படுவதால் 201 வட்டாட்சியர்களுக்கு மேற்கண்ட பணிகளை விரைவாகச் செய்து முடிக்க வாகனங்களை வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

**2.11 வருவாய் அலுவலர்களுக்கு செல்லிடத் தொலைபேசி (சிம் கார்டு) வழங்குதல்**

73 வருவாய்க் கோட்டாட்சியர்கள் மற்றும் 206 வட்டாட்சியர்கள் ஆகியோருக்கு ரூ.19.53 இலட்சம் செலவில் செல்லிடத் தொலைபேசியின் சிம் கார்டு வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1-3-2007 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் அலுவலர்களுக்கிடையே விரைவான தகவல் பரிமாற்றம் மேற்கொள்ள உதவுகிறது.

2007-2008 ஆம் ஆண்டில் 370 மண்டல துணை வட்டாட்சியர்கள் மற்றும் 1,120 வருவாய் ஆய்வாளர்கள் ஆகியோர்களுக்கு செல்லிடத் தொலைபேசி (Cell Phone) சிம் கார்டு (Sim Card) வழங்க ரூ.40.23 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தத் திட்டம் அலுவலர்களுக்கிடையே விரைவான தகவல் பரிமாற்றம் மேற்கொள்ள உதவுகிறது.

## 2.12 வருவாய்த் துறை கட்டடங்கள்

### (அ) அலுவலகக் கட்டடங்கள்

மாவட்ட நிர்வாகத்தில் வருவாய்த் துறையின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததால், கட்டடங்கள் கட்டுவது, உள்கட்டமைப்பு வசதி, வாகனங்கள் வழங்குவது போன்றவற்றுக்கு அரசால் முன்னுரிமை வழங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், வருவாய்க் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள், வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் ஆகியோருக்கான குடியிருப்பு மற்றும் அலுவலகக் கட்டடங்கள், கால்நடைப் பட்டி மற்றும் கிராமச் சாவடிகள் ஆகியன வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளவையாகும். ஆண்டுதோறும் மாவட்ட நிர்வாகத்திற்குத் தேவையான புதிய/கூடுதல் அலுவலகம்/குடியிருப்புகளுக்கான இடம் ம்ற்றும் உள்கட்டமைப்பு மற்றும் பேணுகைப் பராமரிப்பு/வருவாய் கட்டடங்களைச் செப்பனிடுதல் போன்றவற்றுக்குப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

#### (i) மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்

மாநிலத்தில் 31 மாவட்டங்கள் உள்ளன. அவற்றில் 30 மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் தற்போது அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் கட்டுவதற்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன. சேலத்தில், புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் இதர அரசு அலுவலகங்களுக்கான அடுக்கு மாடிக் கட்டடம் கட்ட அரசு நிர்வாக அனுமதி வழங்கி ரூ. 25/- கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.



#### (ii) வருவாய்க் கோட்ட அலுவலகங்கள்

மாநிலத்தில் 74 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் உள்ளன. அவற்றில் 73 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசு கட்டடங்களில் இயங்கி வருகின்றன. புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அரூர் வருவாய்க் கோட்ட அலுவலகத்திற்கான கட்டடம் 2008-2009 ஆம் ஆண்டில் கட்ட விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

#### (iii) வட்டாட்சியர் அலுவலகங்கள்

மாநிலத்தில் உள்ள 208 வட்டாட்சியர் அலுவலகங்களில், 188 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. 2005-2006 ஆம் ஆண்டில் பகுதி-2 திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களில் எடப்பாடி மற்றும் எட்டையபுரம் வட்டாட்சியர் அலுவலகப் பணிகள் நிறைவடைந்துள்ளன. மீதமுள்ள 17 வட்டாட்சியர் அலுவலகங்களில் 2006-2007 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் 7 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும், 2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் 8 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும், கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள, திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள, ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள தண்டராம்பட்டு வட்டாட்சியர் அலுவலகம் ஆகியவற்றிற்கு கட்டடங்கள் விரைவில் கட்டப்படவுள்ளன.

#### (iv) கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள்

மாநிலத்தில் உள்ள 12,506 கிராம நிர்வாக அலுவலர்களில், 226 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகளும், 12,074 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 206 கிராம நிர்வாக அலுவலர்களுக்கான கட்டடங்கள் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

**(ஆ) குடியிருப்புக் கட்டடங்கள்**

**(i) மாவட்ட ஆட்சியர்களுக்கான முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

மாநிலத்திலுள்ள 31 மாவட்டங்களில் 28 மாவட்ட ஆட்சியர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் உள்ளன. அரியலூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புக் கட்டடம் கட்டும் பணி 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**(ii) மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

31 மாவட்ட வருவாய் அலுவலர்களில், 26 மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. நாகப்பட்டினம், நீலகிரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்ட 2007-2008 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கி அரசு உத்தரவிட்டுள்ளது. அரியலூர் மாவட்ட வருவாய் அலுவலருக்கு முகாம் அலுவலகத்துடன் கூடிய குடியிருப்பு கட்ட 2008-2009 ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**(iii) வருவாய்க் கோட்ட அலுவலர்களின் குடியிருப்புக் கட்டடங்கள்**

74 வருவாய்க் கோட்ட அலுவலர்களில் 66 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. 7 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்ட 2007-2008 ஆம் ஆண்டின் பகுதி-2 திட்டத்தின்கீழ் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள அரூர் வருவாய்க் கோட்ட அலுவலருக்கான குடியிருப்பு விரைவில் கட்டப்படும்.

**(iv) வட்டாட்சியர்களுக்கான குடியிருப்புகள்**

208 வட்டாட்சியர்களில், 179 வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள 29 வட்டாட்சியர்களுக்கு குடியிருப்புகள் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.



**(v) வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

வருவாய்த் துறையின் 1,120 வருவாய் ஆய்வாளர்களில், 1,084 வருவாய் ஆய்வாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. மீதமுள்ள வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

**2.13 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டம்**

தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தினை நிறைவேற்றிடும் வகையில் 2006 ஆம் ஆண்டில் அரசால் இது அறிமுகம் செய்யப்பட்டது. மக்களின், குறிப்பாக மகளிரின் பொது அறிவை வளர்த்திடவும் மற்றும் பொழுதுபோக்கிற்காகவும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஏழைக் குடும்பங்களுக்கு அவற்றை வழங்கி இத்திட்டம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக 15-09-2006 அன்று தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்திலும் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் மலைவாழ் குடும்பங்களுக்கும், சென்னையில் தென்சென்னை மற்றும் வடசென்னை குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளிலும் உள்ள 30,000 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. இரண்டாவது கட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் 25,00,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டன. 2008 ஆம் ஆண்டில் மூன்றாவது கட்டமாக 34.25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பயனாளிகளுக்கு வழங்க அரசால் உத்தரவு வழங்கப்பட்டு 31-3-2008 வரையில் 5,21,514 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பயனாளிகளுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டன.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தினை செவ்வனே நடைமுறைப்படுத்தவேண்டி தனித் துணை ஆட்சியர் மற்றும் சார்நிலைப் பணியாளர்கள் ஆகிய புதிய பணியிடங்களுக்கு அங்கீகரிப்பு வழங்கப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் அனைத்து தனித் துணை ஆட்சியர்கள் மற்றும் வட்டாட்சியர்களுக்கு ஊர்திகள் வழங்கப்பட்டுள்ளன.

[2008 ஏப்ரல் 11

**2.14 நில வருவாய்**

ஒரு நிலத்தின் மண் வளம், தரம் மற்றும் நீர்வள ஆதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் அடிப்படைத் தீர்வை நிர்ணயிக்கப்படுகிறது. அவ்வாறு நிர்ணயிக்கப்படும் அடிப்படைத் தீர்வையை ஆதாரமாகக் கொண்டு தல வரி, தல மேல்வரி, கூடுதல் மேல்வரி, தண்ணீர்த் தீர்வை மற்றும் கூடுதல் தண்ணீர்த் தீர்வை போன்றவை கணக்கிடப்படுகின்றன. நில வரி, பட்டாதாரர்களிடமிருந்து, எவ்வித கடுமையான நடவடிக்கையும் இல்லாமல் வசூலிக்கப்பட்டு வருகிறது.

பசலி 1417-ல் (1-7-2007 முதல் 30-6-2008 வரை) வசூலிக்கப்படவேண்டிய மொத்த நில வரி நிலுவைத் தொகையாகிய ரூ.48,24,14,929/-ல், 30-11-2007 வரை ரூ.11,76,41,397/- வசூலிக்கப்பட்டுள்ளது. பசலி 1417-க்கு ரூ.53,35,14,540/-க்கான தற்காலிகக் கேட்பு எழுப்பப்பட்டுள்ளது.

**2.15 இயற்கை இடர்ப்பாடுகள்**

இடர்ப்பாடுகள், பொதுவாக இயற்கை இடர்ப்பாடுகள் எனவும், விபத்து மற்றும் மனிதனால் ஏற்படும் இடர்ப்பாடுகள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. இயற்கை இன்னல்களை மனிதனின் பாதுகாப்பின்மை சந்திக்கும்போது ஏற்படும் விளைவே இயற்கை இடர்ப்பாடு ஆகும். இதனால் நிதி இழப்பு, கட்டமைப்புகளுக்கு சேதங்கள் மற்றும் உயிரிழப்பு ஆகியவை ஏற்படுகின்றன. புயல், வெள்ளம், வறட்சி, நில நடுக்கம், நிலச்சரிவு, சுனாமி முதலியவை இந்திய துணைக் கண்டம் சமீப காலத்தில் சந்தித்த சில இயற்கை இடர்ப்பாடுகளாகும். தீ விபத்து, குண்டு வெடிப்புகள், இரயில் விபத்துகள், படகு கவிழ்தல், தொழிற்சாலைகளில் ஏற்படும் இரசாயனக் கசிவுகள் மற்றும் கடலில் எண்ணெய் கலத்தல் போன்ற அசாதாரண நிகழ்வுகள் விபத்து மற்றும் மனிதனால் ஏற்படுத்தப்படும் இடர்ப்பாடுகளுக்கான சில உதாரணங்களாகும். இயற்கை இடர்ப்பாடுகளை, இடர்ப்பாடு தணிக்கும் வழிமுறைகள் மற்றும் திட்டமிடலின் மூலமாக பெருமளவில் மேலாண்மை செய்யலாம். மனிதனால் ஏற்படும் இடர்ப்பாடுகளோ, மனித நோக்கம் மற்றும் கவனக் குறைவின் காரணமாக உருவாக்கப்பட்டு மனித சமுதாயத்திற்கு பெரும் இன்னல்களை விளைவிக்கின்றன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுப்பதன் மூலமாகவும், பேரிடர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிப்பதன் மூலமாகவும், இயற்கை இடர்ப்பாடுகளைத் தணிப்பது அரசினுடைய முதற் கடமையாகும். இயற்கை இடர்ப்பாடுகளால் ஏற்படும் பேரிடர்களை மேலாண்மை செய்வதில் முக்கியப் பங்கு வகிப்பதாலும், அரசினால் திட்டமிடப்படும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், நிவாரண மற்றும் மறுவாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றிருப்பதாலும், இத்துறையின் பெயர் வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறை என மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், மாநில நிவாரண ஆணையர் என அழைக்கப்படுகிறார்.



2008 ஏப்ரல் 11]

மாநிலம் எதிர்கொள்ளும் இடர்ப்பாடுகளை மேலாண்மை செய்யும் பணிகள் மாண்புமிகு முதலமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், தலைமைச் செயலர், வருவாய்த் துறைச் செயலர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் ஆகியோரின் நேரடி மேற்பார்வையில் செயல்படுத்தப்படுகின்றன. நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளின் செயல்பாடு மற்றும் கண்காணிப்பு, மாநில நிவாரண ஆணையரால், மாநில அளவில் இணை ஆணையர் (நில வருவாய்) அவர்களின் துணையுடனும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களின் உதவியுடனும் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) பருவ காலம்**

ஒவ்வோர் ஆண்டும் மாநிலத்தால் பெறப்படும் மழை அளவான 977 மி.மீ.-ல், தோராயமாக 33 சதவிகிதம் தென்மேற்கு பருவமழைக் காலத்திலும், 48 சதவிகிதம் வடகிழக்கு பருவமழைக் காலத்திலும் பெறப்படுகிறது.

தென்மேற்கு பருவமழைக் காலம் வழக்கமாக, ஒவ்வொரு வருடமும் மே 31 அல்லது ஜூன் முதல் தேதியில் தொடங்கி, செப்டம்பர் 30 வரை நீடிக்கிறது. சில வருடங்களில் இப்பருவக் காலம் அக்டோபர் மாதம் வரை நீடிக்கிறது. நீலகிரி, தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் தென்மேற்கு பருவமழைக் காலத்தில் அதிக அளவு மழை பெறுகின்றன.

பொதுவாக, வடகிழக்குப் பருவமழைக் காலம், தென்மேற்கு பருவமழைக் காலம் முடிந்தபின், அக்டோபர் மூன்றாவது வாரம் தொடங்கி, தென் வங்காள விரிகுடாவில் ஏற்படும் காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மற்றும் புயல் ஆகியவற்றின் விளைவாக, இம்மாநிலம் மழை பெற்று வருகிறது. வடகிழக்குப் பருவமழைக்

காலத்தில், மாநிலம் போதிய மழையைப் பெற்றாலும், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் புயல், வெள்ளத் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய பெரும் அபாயத்தில் உள்ளன.

தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் மாநிலத்தில் மழை இருந்த போதிலும், தென்மேற்கு பருவக் காற்றினால் கிடைக்கக்கூடிய மழையளவு மேற்குத் தொடர்ச்சி மலைகளால் பெரிதும் தடுக்கப்படுவதால், மாநிலத்தின் விவசாயம், வடகிழக்குப் பருவமழையையே பெரிதும் நம்பியுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலைகளால் ஏற்பட்டுள்ள பூகோள ரீதியான முழுமையான தடைவேலி, கேரள மாநிலத்தின் வழியாக வரும் தென்மேற்குப் பருவக் காற்றை தமிழகத்திற்குள் வரவிடாமல் தடுக்கிறது. நாட்டின் பெரும்பாலான பகுதிகள், தென்மேற்கு பருவமழைமூலம் பெருமளவில் மழையைப் பெற்றாலும், தமிழகத்திற்கு இந்த அனுகூலம் கிடைக்கப் பெறாமல், தென்மேற்கு பருவமழைக் காலத்தில் மூன்றில் ஒரு பங்கு மழை மட்டுமே தமிழகத்தால் பெறப்படுகிறது. வடகிழக்குப் பருவமழை தமிழகம் பெறும் மழையளவில் பெரும் பகுதியை அளிக்கிறது. முக்கிய விவசாயப் பருவங்களான சம்பா, தாளடி, நவரை போன்றவை வடகிழக்குப் பருவமழையையே முழுவதும், நம்பியுள்ளன. எனவே, அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான மழை அளவே, மாநிலத்தின் விவசாயப் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

### (ii) பருவமழைக் காலங்களுக்கு முன்னதான முன்னேற்பாட்டு நடவடிக்கைகள்

கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளம், புயல் ஆகியவற்றைக் கையாண்ட அனுபவங்களின் அடிப்படையில், வடகிழக்குப் பருவமழைக் காலம் தொடங்குவதற்கு மிக முன்னதாகவே எடுக்கப்படவேண்டிய அனைத்துத் தடுப்பு நடவடிக்கைகளையும் மாநில அரசு வகுத்துள்ளது. எதிர்பாரா பேரிடர் தணிக்கும் திட்டங்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் தயாரிக்கப்பட்டு, முறையான காப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் பருவமழைக் காலத்திற்கு மிக முன்னதாகவே தொடங்கப்பட்டு, பெருமளவில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



ஒவ்வொரு வருடமும், வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் வங்கக் கடலில் ஏற்படும் புயல் மற்றும் குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்களால், தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்கள் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகின்றன. வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் ஏற்படும் மழை, வெள்ளம் மற்றும் புயல் போன்ற பேரிடர்களால் உண்டாகும் பாதிப்புகளைத் தடுப்பதற்கென அனைத்து மாவட்டங்களிலும் பேரிடர் தவிர்க்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு முறையாக இன்றைய நிலைக்கேற்ப மாற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஒவ்வொரு வருடமும், பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக, மாவட்டத்திற்கான எதிர்பாரா பேரிடர் திட்டத்தினை நன்கு தெரிந்துகொள்வதுடன், தேவையான ஒத்திகைகளை மேற்கொண்டு அனைத்து நிகழ்வுகளையும் எதிர்கொள்ளத் தயாராகிக்கொள்ளும்படி, கடலோர மாவட்டங்களின் ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். அவசர காலங்களில், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களைத் தங்க வைப்பதற்கென, கடலோரப் பகுதிகளில் உள்ள அரசுப் பள்ளிகளைத் தயார் நிலையில் வைத்திருக்கும்படியும், அம்மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேற்கண்டவை தவிர, வெள்ளக் காலங்களில் பாதிப்புக்குள்ளாகி கரைகள் உடையும் அபாயமுள்ள குளங்கள் எவையெனக் கண்டறிந்து, அப்படிப்பட்ட பாதிப்புகளைத் தாங்கக்கூடிய நல்ல நிலையில் அவற்றை வைத்திருக்குமாறும் மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலும், வெள்ள நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கென மாவட்ட ஆட்சியர்களின் கட்டுப்பாட்டில் உள்ள வாகனங்களைப் பராமரித்து தயார் நிலையில் வைக்குமாறு மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். பருவமழைக் காலங்கள் தொடங்குவதற்கு முன்பாகவே, இயற்கை இடர்ப்பாடுகளைத் தணிக்கும் பணியில் உபயோகப்படுத்தப்படும் அனைத்து சாதனங்களையும் சோதனை செய்து தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறு, குறிப்பான அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

ஒவ்வோர் ஆண்டும் வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பாக, சம்பந்தப்பட்ட அரசுத் துறைகள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையம், பாதுகாப்புப் படையினர் ஆகியோர் அடங்கிய பருவமழைக் காலத்திற்கு முந்தைய முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் கூட்டம் தலைமைச் செயலர் தலைமையில் கூட்டப்பட்டு அதனடிப்படையில் மாவட்டாட்சியர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

மேலும், மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட துறையினருடன் மாவட்டாட்சியர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல் தொடர்பாக நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டுகளில் இயற்கைச் சீற்றங்களைச் சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்மூலம் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், மேம்படுத்தப்பட்ட மாவட்ட அவசரகாலத் திட்டம் மாவட்ட ஆட்சியர்களால் தயாரிக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில், வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் மேற்கொள்ளப்படும் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிட, ஒரு நிவாரணக் குழுவினை ஏற்படுத்தி அரசாணை (நிலை) எண் 472, வருவாய்த் துறை, நாள் 6-11-2002-ன்மூலம், அரசு ஆணையிட்டுள்ளது.

2005 முதல் 2010 வரையிலான காலத்தில், பேரிடர் நிவாரண நிதி மற்றும் தேசிய எதிர்பாராச் செலவின நிதி ஆகியவற்றிலிருந்து உதவி பெறுவதற்குத் தகுதிபெறும் இழப்புகள் மற்றும் அதற்கான விதிமுறைகள், மத்திய அரசால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அரசாணை (நிலை) எண் 630, வருவாய்த் துறை, நாள் 29-10-2007-ல் இந்திய அரசால் இயற்கை இடர்ப்பாடுகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூடுதலாக நிவாரணம் வழங்கும் வகையில் திருத்தியமைக்கப்பட்டுள்ள இடர்ப்பாடுகள் நிவாரண நிதியுதவி பெறுவதற்கான விதிமுறைகளின்படி 29-10-2007 முதல் நிவாரணம் வழங்க, மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

இயற்கை இடர்ப்பாடுகளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக, மாவட்ட ஆட்சியர்களுக்கு கீழ்க்கண்டவாறு நிவாரண உதவி ஒப்பளிப்பு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

(அ) இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் உடனடி நிவாரணம்.

(ஆ) பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு ரூ.2,000மும் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்ட முழுவதும் பாதிக்கப்பட்ட/ஒரு வாரத்திற்கும் மேலாக நீரினால் சூழப்பட்ட குடிசைகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு உடைகளுக்காக தலா ரூ.1,000மும் முழுவதும் சேதமடைந்த குடிசைகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு பாத்திரம், வீட்டு உடைமைப் பொருட்க... இழப்பிற்காக ரூ.1,000 ஆகிய நிவாரண உதவிகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒரு வேட்டி, ஒரு சேலை, 5 கிலோ அரிசி மற்றும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவையும் வழங்கப்படுகின்றன.





(இ) இறந்த ஒவ்வொரு பசு, எருமை மற்றும் காளைக்கு ரூ.10,000/-, இறந்த ஒவ்வொரு பசுங்கன்று, எருமைக் கன்றுக்கு ரூ.5,000/-, இறந்த ஒவ்வொரு ஆடு மற்றும் கிடாவிற்கு ரூ.1,000/- என சில நிபந்தனைகளுடன் வழங்கப்படுகிறது.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதியை உடனடியாக வழங்க, மாவட்ட ஆட்சியர்களுக்கு கருவூல விதி 27-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகளின், வெள்ளம்/புயலினால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு, இந்திய அரசால் வரையறுக்கப்பட்டபடி கீழ்க்கண்டவாறு நிவாரண உதவி வழங்கப்படுகிறது:-

| சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கான நிவாரண உதவி | |
|---|---|
| பயிர்ச் சேதம் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் இருப்பின் விவசாயத்திற்கான மானியம். | மழையால் நீர் பெறும் பகுதிகளில் ஒரு எக்டேருக்கு ரூ.2,000/- பாசனப் பகுதிகளில் ஒரு எக்டேருக்கு ரூ.4,000/- |
| விவசாயப் பயிர், தோட்டக்கலைப் பயிர் மற்றும் ஆண்டுப் பயிர்களுக்கு. | |
| நீண்ட காலப் பயிர்களுக்கு | ஒரு எக்டேருக்கு ரூ.6,000/- |

**(iii) பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சி**

வடகிழக்குப் பருவமழைக் காலம் தொடங்குவதற்கு முன்பாக, வருவாய், காவல், தீயணைப்பு, பாசனம், நெடுஞ்சாலை ஆகிய துறைகள் மற்றும் தொழில்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள், சம்பந்தப்பட்ட பிற துறைகள் ஆகியவற்றைச் சார்ந்த அலுவலர்களுக்கு அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம், மாநில ஊரக வளர்ச்சி

பயிற்சி நிலையம் போன்ற மாநில அளவிலான பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிற மாநிலங்களில் நடத்தப்படும் பேரிடர் மேலாண்மையின் பல்வேறு பரிமாணங்களை விளக்கும் கருத்தரங்குகளுக்கும் மேற்கண்ட அலுவலர்கள் அனுப்பப்படுகின்றனர். மாநில பயிற்சி மையங்கள்மூலம் பேரிடர் மேலாண்மை தொடர்பான பயிற்சித் திட்டங்களை அளிப்பதற்கென, ஆண்டுதோறும் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து அரசு கணிசமாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது.

### (iv) கட்டுப்பாட்டு அறைகள்

கடலோர மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் தொடர்புகொள்ள ஏதுவாக, இருவழி தொலைத்தொடர்பு வசதி உள்ளிட்ட தேவையான அனைத்து வசதிகளுடன்கூடிய, நிரந்தரக் கட்டுப்பாட்டு அறை ஒன்று, மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பேரழிவுகள் குறித்து பொதுமக்களிடமிருந்து தகவல் பெறுவதற்கென 1070 என்ற கட்டணமில்லா பொது உபயோகத் தொலைபேசி நிறுவப்பட்டுள்ளது. மேற்கண்டவை தவிர, 28593990 என்ற நிரந்தரத் தொலைபேசி எண்ணும், 28410577 என்ற நிகரி எண்ணும் மாநிலக் கட்டுப்பாட்டு அறையில் நிறுவப்பட்டுள்ளது. வடகிழக்குப் பருவமழைக் காலங்களில், கட்டுப்பாட்டு அறையில் 24 மணி நேரமும் மற்றும் தேவைப்படும் இதர காலங்களிலும் பணிபுரிய அலுவலர்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று, அனைத்து மாவட்டங்களிலும், கட்டுப்பாட்டு அறைகளை நிறுவனம் செய்து வடகிழக்குப் பருவமழைக் கால நடவடிக்கைகளை 24 மணி நேரமும் கண்காணிக்க அதற்குரிய அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மாநில கட்டுப்பாட்டு அறை, சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்/மாநில நிவாரண ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இணை ஆணையர் (நில வருவாய்) அவர்களின் பொறுப்பில் இயங்கி வருகிறது. 2007 ஆம் வருடத்திலிருந்து பருவமழைக் காலங்களில் நிலைமைகளைத் திறம்படக் கண்காணிப்பதற்காக மாநில கட்டுப்பாட்டு அறையில் கண்காணிப்பாளர் நிலைக்கு மேலான நிலையில் உள்ள அலுவலர்கள் பணி அமர்த்தப்படுகின்றனர். இது தவிர, பேரிடர் காலங்களில் நிலைமையைக் கூர்ந்து கண்காணிக்க, உதவி ஆணையர் நிலையில் உள்ள அலுவலர்கள் பணி அமர்த்தப்படுகின்றனர்.



மாநில கட்டுப்பாட்டு. அறை தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும், பேரழிவுகள் குறித்த தகவல்களைப் பொதுமக்கள் கட்டணமின்றித் தெரிவிக்க/அறிந்துகொள்ள ஏதுவாக 1077 என்ற இலக்கம் கொண்ட தொலைபேசியுடன் கட்டுப்பாட்டு அறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டுப்பாட்டு அறைகள் மாவட்ட ஆட்சியரின் நேரடிக் கண்காணிப்பில், அவரது நேர்முக உதவியாளர் (பொது) பொறுப்பில் இயங்கி வருகின்றன. பேரழிவுகளின்போது, குறிப்பாக வடகிழக்குப் பருவமழைக் காலங்களில், 'இக்கட்டுப்பாட்டு அறைகளில் 24 மணி நேரமும் அலுவலர்கள் பணிபுரிய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாட்டு அறைகள், இந்திய அரசின் உள் துறை அமைச்சகத்தைச் சார்ந்த இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திடமிருந்தும் மற்றும் இதர மையங்களிலிருந்தும் பெறப்படும் தகவல்களின் அடிப்படையில், எடுக்கப்படும் முன்னேற்பாடு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பாக விளங்குகின்றன.

### (v) அதி உயர் அலைவெண்/உயர் அலைவெண் இருவழித் தொலைத் தொடர்பு

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 13 கடலோர மாவட்டங்களிலும், மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்திலும், அதி உயர் அலைவெண் மற்றும் உயர் அலைவெண் இருவழித் தகவல் தொடர்புகொள்ளும் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளன. வடகிழக்குப் பருவமழைக் காலங்களில் இவ்வசதியினைச் சிறப்பாக பயன்படுத்திக்கொள்ளுமாறு, அனைத்து கடலோர மாவட்டங்களின் ஆட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதி உயர் அலைவெண் தகவல் தொடர்பு சாதனங்கள், வருவாய்க் கோட்டம் மற்றும் வட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

### (vi) இந்திய வானிலை ஆராய்ச்சி மையம்

காற்றழுத்தத் தாழ்வு நிலைகள், தாழ்வு மண்டலங்கள் மற்றும் புயல் சின்னங்கள் ஆகியவை குறித்த தகவல்களை, இந்திய வானிலை ஆராய்ச்சி மையம், நிகரி மற்றும் உடனடி வழி (ஹாட் லைன்) தொலைபேசி மூலமாக சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகக் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்புகிறது. இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திடமிருந்து பெறப்படும்

தகவல்களின் அடிப்படையில், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்திலிருந்து, மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. இது மட்டுமல்லாமல், மாநில அரசு மற்றும் இந்திய அரசுக்கும், இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திடமிருந்து பெறப்படும் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. வெள்ளம் மற்றும் புயலின்போது, இயற்கைப் பேரழிவுகளின் விளைவுகள் கடுமையாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் காலங்களில், இதுகுறித்த தகவல்கள், இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தால் நேரடியாக மாநில அரசுக்கும், மைய அரசின் உள் துறை அமைச்சகம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் தொலைபேசி மற்றும் நிகரி வழியாக அனுப்பி வைக்கப்படுகின்றன.

**(vii) மழைமானி**

தமிழ்நாட்டில் 378 மழைமானி நிலையங்கள் உள்ளன. இந்த மழைமானி நிலையங்கள், மாநிலம் முழுவதும் பரவலாக அமைந்துள்ளன. அநேகமாக அனைத்து மழைமானி நிலையங்களும், இழை வலுவூட்டிய பிளாஸ்டிக்கால் ஆனவை. மழையளவைத் துல்லியமாகக் கணக்கிடுவதை உறுதிப்படுத்துவதெற்கென, இந்த மழைமானி நிலையங்கள் காலமுறைதோறும் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்தினரால் ஆய்வு செய்யப்பட்டு, ஆய்வின்போது சுட்டிக்காட்டப்படும் குறைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**(viii) தினசரி நிலை அறிக்கை**

தமிழ்நாட்டில், ஆண்டு முழுவதும் மழை விவர அறிக்கை சேகரிக்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர்கள், தினசரி மழைப் புள்ளி விவரங்களை வட்டாட்சியர்களிடமிருந்து காலை 8-30 மணிக்குள் பெறுகின்றனர். அவ்வாறு சேகரிக்கப்பட்ட மழைப் புள்ளி விவரங்கள் மாநில நிவாரண ஆணையர் அலுவலகத்திற்கு காலை 9-30 மணிக்குள் http:/intra.tn.nic.in/revenue என்ற இணையதளம்மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. பெய்த மழையின் அளவு, உயிரிழப்பு/ கால்நடைகள் இழப்பு, குடியிருப்புகளுக்கு ஏற்படும் சேதாரங்கள் ஆகியவை குறித்த தகவல்கள், மேற்கண்ட இணையதளம் வழியாக மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்து உடனுக்குடன் பெறப்படுகின்றன. மாநில நிவாரண ஆணையர் அலுவலகம் இந்திய வானிலை ஆராய்ச்சி மையத்திற்கும், அரசுக்கும், பெறப்பட்ட மழையின் அளவு குறித்த விவரங்களை, தினந்தோறும் காலை 10-00 மணி அளவில் அனுப்பி வைக்கிறது. தினசரி நிலவர அறிக்கையின் அடிப்படையில் மாநில



நிவாரண ஆணையர், நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளை, நாள்தோறும் கண்காணிக்கிறார்.

**(ix) புயல் பாதுகாப்பு இல்லங்கள்**

தமிழ்நாட்டில் 124 புயல் பாதுகாப்பு இல்லங்கள் உள்ளன. அரசு ஆணையின்படி 114 புயல் பாதுகாப்பு இல்லங்கள், ரூ.251.05 இலட்சம் செலவில் பொதுப் பணித் துறையின்மூலம் புதுப்பிக்க/ பழுதுபார்க்கப்பட்டுள்ளன.

**(x) பேரிடர் நிவாரண நிதி**

2005 முதல் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு 12-வது நிதிக் குழுவால் தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டபடி, இந்திய அரசு மற்றும் தமிழக அரசினால், பேரிடர் நிவாரண நிதிக்கு அளிக்கப்படவேண்டிய பங்களிப்புகள் கீழ்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | மைய அரசின் பங்கு (75 விழுக்காடு) | மாநில அரசின் பங்கு (25 விழுக்காடு) | மொத்தம் |
|---|---|---|---|
| 2005-2006 | 156.81 | 52.27 | 209.08 |
| 2006-2007 | 164.65 | 54.88 | 219.53 |
| 2007-2008 | 172.88 | 57.63 | 230.51 |
| 2008-2009 | 181.52 | 60.51 | 242.03 |
| 2009-2010 | 190.60 | 63.53 | 254.13 |
| **மொத்தம்** | **866.46** | **288.82** | **1155.28** |

ஒவ்வொரு நிதியாண்டும் பேரிடர் நிவாரண நிதிக்கு அளிக்கப்படவேண்டிய மொத்த பங்களிப்பில் 75 சதவிகிதத்தை திட்டத்தில் சேராத மானியமாக மைய அரசும், எஞ்சிய 25 சதவிகிதத்தை மாநில அரசும் அளித்து வருகின்றன.

**(xi) தேசிய பேரிடர் எதிர்பாராச் செலவின நிதி**

புயல், வெள்ளம், நில நடுக்கம், ஆலங்கட்டி மழை, நிலச்சரிவு, வறட்சி மற்றும் தீ விபத்துகள் ஆகியவற்றால் மிகக் கடுமையான

பாதிப்புகள் ஏற்படும்போது, பாதிக்கப்பட்ட உள்கட்டமைப்புகளை சீர்படுத்த/பழுதுபார்க்க மற்றும் நிவாரண உதவிகள் வழங்குவதற்கான செலவினத்தை மேற்கொள்ள பேரிடர் நிவாரண நிதியில் போதுமான அளவு நிதியில்லாத நிலையில், மத்திய அரசு, தேசிய பேரிடர் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து, நிவாரண/மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள, நிதி வழங்குகிறது. இந்த நிதி, மத்திய அரசின் நிதி மற்றும் செலவின அமைச்சகத்தினால் தனிப்பட நிர்வகிக்கப்படுகிறது.

### (xii) பேரிடர் நிவாரண நிதிக்கான மாநில அளவிலான குழு

பேரிடர் நிவாரண நிதியை நிர்வகிக்கவென 1997 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மாநில அளவிலான குழு, தலைமைச் செயலரைத் தலைவராகவும், வருவாய்த் துறைச் செயலரை உறுப்பினர்-செயலராகவும், நிதித் துறை, பொதுப் பணித் துறை, வேளாண்மைத் துறை, நெடுஞ்சாலைத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் செயலர்கள், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் அண்ணா மேலாண்மை நிலைய இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டதாக 2000 ஆம் ஆண்டில் திருத்தி அமைக்கப்பட்டது. மாநில அளவிலான குழுவின் பணிகள் பின்வருமாறு:-

- இக்குழு நிவாரணத்திற்கான செலவினத் தொகைக்குத் தேவையான நிதிப் பங்களிப்பு குறித்த அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும்.
- இக்குழு மைய மற்றும் மாநில அரசுகளின் பங்களிப்புகளைப் பெற்று நிதியை நிர்வகிப்பதுடன், இதில் மிகுதியான நிதியை மைய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மாதிரிகளின்படி அவ்வப்போது முதலீடு செய்துவரும்.
- பேரிடர் நிவாரண நிதியிலிருந்து எந்தக் காரணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோ அதே காரணத்திற்காக அத்தொகை செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு இக்குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது.
- பேரிடர் நிவாரண நிதியை நிர்வகிக்கும் பொறுப்பு, மாநில அளவிலான குழுவைச் சார்ந்தது. பேரிடர் நிவாரண நிதித் திட்டத்தை செவ்வனே செயல்படுத்த மைய அரசு வழங்கும் அறிவுரைகளின்படி, அவ்வப்போது, இதர பணிகளும் இக்குழுவிற்கு அளிக்கப்படும்.



- பேரிடர் நிவாரண நிதியை அமைத்து நிர்வகித்தல் மற்றும் அதை முதலீடு செய்தல் தொடர்பாக மைய அரசினால் தெரிவிக்கப்பட்ட திட்டம் மற்றும் முதலீடு செய்தல் ஆகியவை மாநில அளவிலான குழுவால் முழுமையாக ஏற்கப்பட்டு பின்பற்றப்படுகிறது.

### (xiii) வடகிழக்குப் பருவமழை 2007

2007 ஆம் ஆண்டு, இம்மாநிலத்தில் வடகிழக்குப் பருவமழை 22-10-2007 அன்று தொடங்கியது. இவ்வாண்டு, 535.9 மி.மீ. மழையை இம்மாநிலம் பெற்றது. இது இயல்பான மழையளவான 459.22 மி.மீ.-ஐக் காட்டிலும் 17 சதவிகிதம் அதிகமாகும். மாநிலத்திலுள்ள பெரும்பான்மையான மாவட்டங்கள் மிக அதிகமான மழையைப் பெற்று கடுமையான சேதங்களைச் சந்தித்தன. 2007 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் சென்னை மாவட்டத்தில் மட்டுமே குறைவான மழையளவு பதிவாகியது.

இழப்புகளை விளக்கி, தேசிய பேரிடர் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து ரூ.1531.89 கோடி நிதியை (ரூ.566.14 கோடி தற்காலிக சீரமைப்பு மற்றும் ரூ.965.75 கோடி நிரந்தர சீரமைப்பு) அளிக்குமாறு விரிவான கோரிக்கை மனு மைய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புது டில்லி, மத்திய உள் துறை அமைச்சகத்தின் இணைச் செயலர் தலைமையிலான மத்தியக் குழு, மாவட்டங்களிலுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளை 10-1-2008 முதல் 12-1-2008 வரையிலான காலத்தில் பார்வையிட்டது. மைய அரசின் நிதி ஒதுக்கத்தினை எதிர்பார்த்து காத்திராமல், பாதிக்கப்பட்ட மக்களின் உடனடி நிவாரணம் மற்றும் புனரமைப்புப் பணிகளுக்காக மாநில அரசு ரூ.200 கோடியினை 24-12-2007 அன்று வழங்கியுள்ளது.

2007 ஆம் வருடத்திய வடகிழக்குப் பருவமழைக் காலத்தில், 150 நபர்கள் உயிரிழந்தனர். உயிரிழந்த ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும், தலா ரூ.1 இலட்சம் நிவாரணமாக அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 859 கால்நடைகளை இழந்த கால்நடை உரிமையாளர்களுக்கும் மற்றும் முழுவதுமாக அல்லது பகுதியளவில் சேதமடைந்த 31,887 குடிசைகளுக்கும், 1,60,139.49 எக்டேர் பயிர் சேதத்திற்காகவும் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

## (xiv) மார்ச் 2008 பெய்த பெருமழை-நிவாரணப் பணி

2008 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பெய்த எதிர்பாராத பெருமழை காரணமாக மாநிலம் முழுவதும் மீண்டும் விவசாயப் பயிர்கள் சேதமும், உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளன. இம்மழையினால் ஏறக்குறைய 47,000 எக்டேரில் நெற்பயிர் மற்றும் இதர பயிர்களும் சேதமடைந்ததுடன் 24 நபர்கள் மற்றும் 800-க்கும் மேற்பட்ட கால்நடைகளின் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது. இப்பெருமழையினால் ஏற்பட்ட சேதங்கள் குறித்த மதிப்பீடுகள் (ரூ.449.91 கோடி தற்காலிகச் சீரமைப்பு மற்றும் ரூ. 689.87 கோடி நிரந்தரச் சீரமைப்பு, மொத்தம் 1,139.78 கோடி) அடங்கிய அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அரசின் கோரிக்கையின் அடிப்படையில், பாதிப்படைந்த பகுதிகளைப் பார்வையிட்டு, தேசிய பேரிடர் எதிர்பாராச் செலவின நிதி / பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உரிய உதவி வழங்குவதற்கு பரிந்துரை செய்வதற்காக ஒரு மத்தியக் குழுவினை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளது. இதற்கிடையே பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.175 கோடி வழங்கி இவ்வரசு ஆணையிட்டுள்ளது. மேலும், இப்பெருமழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவிடும்பொருட்டு சேதமடைந்த நெற்பயிருக்கு ஒரு எக்டேருக்கு ரூ.4,000/- என்று தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத் தொகையினை ரூ.7,500/- என உயர்த்தி வழங்கவும், 2 எக்டேர் அளவிற்குத்தான் வழங்கவேண்டும் என, தற்பொழுதுள்ள வரம்பினைத் தளர்த்தி பாதிக்கப்பட்ட நிலம் எத்தனை எக்டேராக இருந்தாலும் அத்தனை எக்டேர் நிலத்திற்கும், அனைத்துப் பயிர்களுக்கும் நிவாரண உதவி அளித்திடவும் அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், கால்நடைகள் இழப்பிற்கு நிவாரணம் வழங்க தற்பொழுது நடைமுறையில் உள்ள எண்ணிக்கை குறித்த உச்சவரம்பினைத் தளர்த்தி இறந்துபோன அனைத்து கால்நடைகளுக்காகவும் நிவாரணம் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

## 2.16 சுனாமி மறுவாழ்வு மற்றும் சீரமைப்பு

கடந்த 26-12-2004 அன்று கடலோரப் பகுதிகளில் ஏற்பட்ட ஆழிப் பேரலையின் (சுனாமி) தாக்குதல், காலத்திலும், அளவிலும், சீற்றத்திலும் தமிழகம் இதுவரை கண்டிராத ஒரு பேரிடராகும். சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீனவர்களின் வாழ்வாதாரங்கள், விவசாயம் மற்றும் இதர துறைகளை இயல்பு நிலைமைக்குக்



கொண்டுவர உடனடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அளவிலான இயற்கைப் பேரிடர் காலத்தில் மேற்கொள்ளப்படும் மறுவாழ்வுப் பணிகளில், வீடுகளை இழந்தோருக்கு புதிய வீடுகளைக் கட்டித் தருவதே மிகவும் சவாலான பணியாகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 24-6-2006 அன்று கடலோர மாவட்ட ஆட்சியர்கள் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் உயர் அலுவலர்கள் ஆகியோருடன் சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள். அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் பின்வருமாறு:-

- அரசுசாரா நிறுவனங்கள்மூலம் கட்டித்தரும் வீடுகளை அனைத்து வசதிகளுடன் விரைந்து முடித்துத்தர விரைவுபடுத்துதல்
- அரசுசாரா நிறுவனங்களால் கட்டுமானம் செய்ய இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள வீடுகளை அரசின் நிதியுதவியுடன் கட்டித்தருதல்
- இனி வருங்காலங்களில், கடலோரப் பகுதிகளில் பேரிடர்களால் பாதிக்கப்படும் எனக் கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் குடிசை வீடுகள் மற்றும் பழுதடைந்துள்ள வீடுகளை மாவட்ட ஆட்சியர்கள் மூலமாகக் கணக்கெடுப்பு செய்து தேவையான வீடுகளை மீண்டும் கட்டித்தருதல்
- மீனவர்களுக்கு அரசு மற்றும் தொண்டு நிறுவனங்களால் வழங்கப்பட்டுள்ள உதவிகளோடு கூடுதலாக மீன்பிடி வலைகள், உயிர்காக்கும் கவச உடைகள், ஐஸ் பெட்டிகள், திறன்வாய்ந்த ஒளி விளக்குகள் மற்றும் அதிக பளு ஏற்றத்தக்க மிதிவண்டிகள் ஆகியவற்றைக் கூடுதலாக வழங்குதல்
- வீடுகளின் கட்டுமானப் பணிகளுக்கான சுற்றுச்சூழல் மற்றும் நகரமைப்பு அனுமதியினை விரைவுபடுத்துதல்
- சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சார்ந்த மாணவர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வருகின்ற பள்ளிக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்கள் ஆகியவற்றை மேலும் ஒரு கல்வியாண்டு வரையில் நீட்டித்தல்

### (i) வீட்டு வசதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்பணியினைக் கடந்த 24-6-2006 அன்று ஆய்வு செய்தபோது, கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 8,406 ஆகும். 29-2-2008 அன்று வரையில் கட்டப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 35,268 ஆகும். இதில் அரசுசாரா தொண்டு நிறுவனங்களால் 28,064 வீடுகளும், அரசின் சார்பில் 7,204 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. இவைதவிர, கூடுதலாக கடலூர் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்படாத ஏழை மக்களுக்கு (இருளர் இன மக்களையும் சேர்த்து) 6,019 வீடுகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலுக்கு அருகில் வசிக்கும் மக்களுக்காக 5,580 வீடுகளும் 29-2-2008 வரையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

குடியிருப்புப் பகுதிகளில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, தெரு விளக்குகள், இணைப்புச் சாலைகள், உட்புறச் சாலைகள், சுகாதார வசதி, ஒவ்வொரு வீட்டிற்கும் மின் இணைப்பு வசதி ஆகியவற்றினை ஏற்படுத்திடும் பொருட்டு, அரசின் சார்பில் 82.56 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசுசாரா தொண்டு நிறுவனங்களால் கட்டித்தர இயலாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள 3,912 வீடுகளை அரசின் சார்பில் கட்டித்தர 84.72 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் சார்பில் 2,695 வீடுகளும் நகரப் பகுதிகளில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் சார்பில் 1,217 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இவைதவிர, சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் ஏறத்தாழ 13,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் கட்டத் திட்டமிட்டு, அதற்கான பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### (ii) கடலோரப் பகுதிகளில் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய பகுதிகளில் உள்ள வீடுகளைப் புதுப்பித்தல்

இனிவரும் காலங்களில், கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பற்ற வீடுகளில் வாழும் மக்களுக்கு அனைத்து வகையான பேரிடர்களையும் தாங்கிடக்கூடிய வகையிலான வீடுகளைக் கட்டித்தருவதும் இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். அதனடிப்படையில்,



- கடலோரப் பகுதிகளில் 0-200 மீட்டர் உயர்மட்ட அலைப் பகுதிக்குட்பட்ட பகுதிகளில் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் 25,234 வீடுகள் கட்டப்படவுள்ளன. இவற்றில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் போன்றவற்றின்கீழ் கடந்த 10 ஆண்டுகட்கு முன்பு அதாவது 1-1-2006 அன்றைய தேதியில் கட்டப்பட்டுள்ள 9,640 வீடுகளும் அடங்கும்.
- கடலோரப் பகுதிகளில் 201-1000 மீட்டர் உயர்மட்ட அலைப் பகுதிக்குட்பட்ட பகுதிகளில், உலக வங்கியின் நிதியுதவியோடு, அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டத்தின்கீழ் இரண்டாம் கட்டமாக 29,834 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளன. தவிர,
- 150 கிலோ மீட்டர் நீளமுள்ள இயற்கைச் சீற்ற காலங்களில் வெளியேறுவதற்கான வழித்தடங்களை ஏற்படுத்துதல்.
- 78 பாதுகாப்பு மையங்கள் ஒவ்வொன்றும் தலா 1.50 கோடி ரூபாய் செலவில் அமைத்தல்.
- கடலோர குடியிருப்புகளில் 997 முன்னெச்சரிக்கை அறிவிப்பொலி கருவிகள் அமைத்தல்

ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடலோர மாவட்டங்களில் இரண்டாம் கட்டமாக கட்டப்படவுள்ள வீடுகளின் இக்கணக்கெடுப்புப் பணி மற்றும் தேவைப்படும் இடங்களில் நிலம் கையகப்படுத்துதல் ஆகிய பணிகளுக்காகத் தமிழக அரசின் சார்பில் 30.12 கோடி ரூபாய் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு நிதி உதவியுடன் 11 மாவட்டங்களில் 552 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22,000 வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் சார்பிலும், நகர்ப்புறங்களில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பிலும், வீடுகள் கட்டப்பட உள்ளன. மார்ச் 2008 வரையில் வீடுகள் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ் துறையின் சார்பில் 14,880 வீடுகளும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் 2,556 வீடுகளின் கட்டுமானப். பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

**(iii) சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கான நில எடுப்பு**

முதற்கட்டமாக கட்டப்பட்டு வரும் வீடுகளுக்குத் தேவையான 460 எக்டேர் நிலம் 40.029 கோடி ரூபாய் செலவில் தனியாரிடமிருந்து சந்தை மதிப்பில் ஒப்பந்தத்தினடிப்படையில் வாங்கப்பட்டுள்ளது.

**(iv) மீன் வளம்**

அரசின் சார்பில் வழங்கப்பட்டுள்ள பல்வேறு நிவாரண உதவிகள் தவிர கூடுதலாக 110.36 கோடி ரூபாய் செலவில் கூடுதல் மீன்பிடி வலைகள், உயிர் காக்கும் கவச உடைகள், ஐஸ் பெட்டிகள், திறன் வாய்ந்த ஒளி விளக்குகள் மற்றும் அதிக பளு ஏற்றத்தக்க மிதி வண்டிகள் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன.

**(v) மேற்கொள்ளப்பட்டு வரும் இதர உட்கட்டமைப்புப் பணிகள்**

- கடலூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் சுனாமியினால் பாதிப்படைந்த சிறிய துறைமுகங்களில் உட்கட்டமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், கடலூர் மாவட்டத்தில் இரண்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் இரண்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் ஒன்று என ஆறுகளின் குறுக்கே ஐந்து உயர்மட்ட பாலங்களின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. இனிவரும் காலங்களில் பேரிடர்கள் நிகழ்ந்தால், அப்பகுதிவாழ் மக்கள் இப்பாலங்களையே பாதுகாப்பு வழித்தடங்களாக பயன்படுத்திடும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- 41 குடிநீர் விநியோகம் மற்றும் மறு சீரமைப்புத் திட்டப் பணிகள்.
- 1,050 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் வடிகால்களை சீரமைத்தல்.
- பழுதடைந்த 6 மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் 6 மீன் இறங்கு தளங்களைப் புனரமைத்தல், 263 பொதுக் கட்டடங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் மறு கட்டுமானம் செய்தல்.





- 17 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தினை மேம்படுத்துதல்
- 114 புயல் பாதுகாப்பு மையங்கள், 5 அரசுக் கட்டடங்கள், 2 நினைவிடங்கள், 113 கால்நடை மருத்துவமனைகள், மருந்தகங்கள், தீவன சேமிப்புக் கிடங்குகள், கால்நடைத் துறைக்குச் சொந்தமான கட்டடங்கள் ஆகியவற்றைச் சீரமைத்தல், 71 பொதுச் சுகாதார நிலையங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், 33 அரசு உயர்நிலைப் பள்ளி / மேல்நிலைப் பள்ளி/ ஆரம்பப் பள்ளி கட்டடங்களை சீரமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மேலும், 8175.35 எக்டேர் வேளாண் விளை நிலங்களும், 669 எக்டேர் தோட்டக்கலை விளை நிலங்களும் சீரமைக்கப்பட்டு, 4,800 எக்டேர் நிலப்பரப்பில் கரையோர காடுகளும், 2,250 எக்டேர் நிலப்பரப்பில் சதுப்பு நிலக் காடுகளும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மாவட்டங்களில் சீரமைக்கப்பட்டுள்ளன.

**(vi) வாழ்வாதாரம்**

இந்த அரசு பதவி ஏற்றவுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர் மற்றும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்தி புனரமைத்திட பல்வேறு சிறப்புத் திட்டங்களையும், சிறப்பு கூடுதல் சலுகைகளையும் வழங்கிவருகிறது. அதுமட்டுமின்றி ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதியுதவியோடு, பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த மக்களின் வாழ்வாதாரங்களை மாற்றியமைத்திடும் வகையில் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அவர்களுக்கு சுழல் நிதியுதவி, பொருளாதார நிதியுதவி, பலதரப்பட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 28-2-2008 வரையில், 38,195 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 102.36 கோடி ரூபாயும், 4,305 சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார உதவியாக 39.40 கோடி ரூபாயும், 35,725 உடல் ஊனமுற்றோருக்கு நிதியுதவியாக 35.73 கோடி ரூபாயும், 1,55,420 தனி நபர்களுக்கு திறன் சார்ந்த பயிற்சியானது 6.45 கோடி ரூபாய் செலவிலும் அளிக்கப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 11

## 2.17 சுனாமி நிவாரணம் மற்றும் மறுவாழ்வுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்

### (i) இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மத்திய அரசின் இராஜீவ் காந்தி மறுவாழ்வுத் திட்டத்தின் மூலமாக 2,347.19 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் வங்கிகளின் சார்பில் உடனடி நிவாரணமாக மீனவர்களுக்கு நேரிடையாக வழங்கப்பட்டுள்ள கடன் தொகையான 566.47 கோடி ரூபாயும் அடங்கும். தவிர, விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர் வழங்கும் திட்டம், சம்பூரண கிராமின் ரோஜ்கர் யோஜனா கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், மீனவர்களுக்கான மானிய உதவித்தொகை, வங்கிகளிடமிருந்து கடனுதவி, மீன்பிடித் துறைமுகங்களைப் பழுதுபார்ப்பதற்கான மானியம் மற்றும் ஆழிப்பேரலையால் தாக்கப்பட்ட குடும்பங்களுக்கான வீடுகளின் கட்டுமானப் பணி உள்ளிட்ட பணிகளும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### (ii) உலக வங்கி / அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அவசர சுனாமி மறுசீரமைப்புத் திட்டப் பணிகளை மேற்கொள்ள கடந்த 2005 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் உலக வங்கியுடனான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. கடந்த 9-8-2005 முதல் செயலாக்கத்தில் உள்ள இத்திட்டத்தை 31-12-2010 வரை நீட்டிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதிக்கு வட்டி ஏதும் இல்லை. எனினும், ஆண்டு ஒன்றுக்கு சேவை வரியாக 0.75 விழுக்காடு தமிழக அரசால் உலக வங்கிக்கு செலுத்தப்படவேண்டும். இத்திட்டத்தின்கீழ், பெறப்பட்ட தொகை 2015 ஆம் ஆண்டு முதல் 2040 ஆம் வரையிலான 25 ஆண்டுகளுக்குள்ளாக அரையாண்டுத் தவணை முறையில் திரும்ப செலுத்தப்படவேண்டும்.

உலக வங்கி பின்வரும் பணிகளுக்காக 1,852.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது (423 மில்லியன் அமெரிக்க டாலர்).

- தற்காலிகக் குடியிருப்புகளை மேம்படுத்துவது, நிரந்தர வீடுகள் கட்டும்போது தங்குவதற்குத் தேவையான குடியிருப்புகள், புதிய வீடுகள் கட்டுதல், அக்குடியிருப்புகளை 10 ஆண்டுக்



2008 ஏப்ரல் 11]

காலத்திற்கு காப்பீடு செய்தல் மற்றும் குடிநீர் வசதி, தெரு விளக்குகள், சாலை வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட 1,551.40 கோடி ரூபாய்.

- வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றில் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு உதவி செய்தல், சுனாமியால் பாதிக்கப்பட்ட விவசாய மற்றும் தோட்டக்கலை விளை நிலங்கள், மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் படகு நிறுத்தும் இடங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தல் ஆகிய பணிகளுக்காக 122.20 கோடி ரூபாய்.
- மருத்துவமனைகள், துணை மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், புயல் பாதுகாப்பு மையங்கள், நினைவகங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்து மேம்பாடு செய்தல், ஆறுகளின் கரைகள் மற்றும் வடிகால்களைச் செப்பனிடுதல் மற்றும் கடலோர 4,800 எக்டேர் தொடர் காடுகள், 2,250 எக்டேர் சதுப்பு நிலக் காடுகள் ஆகியன அமைத்திட 85.41 கோடி ரூபாய்.
- மாநில அரசின் சார்பில் பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து பணிகள் மேற்கொள்ளுதல், பல்வேறு ஆய்வுகள், தொழில்நுட்ப ஆராய்ச்சிகள், கலந்தாய்வுகள் மற்றும் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் அளிக்கப்படும் பயிற்சிகள் ஆகியவற்றுக்கு 41.17 கோடி ரூபாய்.
- உலக வங்கித் திட்டங்களைத் திறம்பட ஒருங்கிணைத்து மேலாண்மை மற்றும் கண்காணிப்பு செய்தல், தேவையான தொழில்நுட்பம், நிதித் தணிக்கை, தரக் கட்டுப்பாடு, சிறப்பு வல்லுநர்களை நியமித்தல், தேவையான பணியாளர்கள், தளவாடங்கள், வாகனங்கள் மற்றும் அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கு 52.56 கோடி ரூபாய்.

அரசின் பல துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் இப்பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 525.70 கோடி ரூபாயில் 29-2-2008 வரையில் 148.11 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், கடலோரப் பகுதிகளில் வாழும் மக்கள் எதிர்கொள்ளும் பேரிடர்களைக் குறைத்திடும் வகையில் 1,087.82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு உலக வங்கிக்கு அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்நோக்கப்படுகிறது.

### (iii) ஆசிய வளர்ச்சி வங்கி - சுனாமி அவசர உதவித் திட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுனாமி அவசர உதவித் திட்டப் பணிகளை மேற்கொள்ள கடந்த 2005 ஆம் ஆண்டு மே திங்கள் 12 ஆம் நாள் ஆசிய வளர்ச்சி வங்கியுடனான ஒப்பந்தத்தில் தமிழக அரசாலும் மற்றும் மத்திய அரசாலும் கையெழுத்திடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக 629.64 கோடி ரூபாய் ஆசிய வளர்ச்சி வங்கியால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 629.64 கோடி ரூபாயில், 295.88 கோடி ரூபாய் கடன் தொகையாகும். எஞ்சியுள்ள 333.76 கோடி ரூபாய் மானிய உதவியாகும். கடன் தொகை வரும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2037 ஆம் ஆண்டுக்குள்ளாக திரும்பச் செலுத்தப்படவேண்டும். ஏப்ரல் 2008 வரையில் செயலாக்கத்தில் உள்ள இத்திட்டமானது வரும் 31-10-2009 வரை நீட்டிக்கப்பட கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

ஆசிய வளர்ச்சி வங்கியின் சார்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் பின்வருமாறு:

- பாதிக்கப்பட்ட ஏழை, எளிய குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்திட 218.96 கோடி ரூபாய்.
- பழுதடைந்த குடிநீர் மற்றும் வடிகால்களைச் சீரமைக்கவும் புதிய குடிநீர்த் திட்டங்கள் மற்றும் குடிநீர் ஆதாரங்களைக் கண்டறிதல் ஆகிய பணிகளுக்கு 100.74 கோடி ரூபாய்.
- திட்டங்களை வடிவமைத்தல், கட்டுமானப் பணிகளைக் கண்காணித்தல் ஆகிய பணிகளுக்கு 9.68 கோடி ரூபாய், மேலாண்மை செலவினப் பணிக்கு 4.38 கோடி ரூபாய்.
- பழுதடைந்த சாலைகள், கழிவு நீர் வாய்க்கால்கள் மற்றும் பாலங்களைச் சீரமைத்திட 39.86 கோடி ரூபாய்.
- நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள சிறிய துறைமுகங்கள், கடலோர மாவட்டங்களில் 12 மீன்பிடித் துறைமுகங்கள் ஆகியவற்றைச் செப்பனிட்டுத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 77.53 கோடி ரூபாய்.



- நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சாலைகள், பொதுக் கட்டடங்கள் மற்றும் துப்புரவுப் பணிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 35.04 கோடி ரூபாய்.
- கிராமப்புற பகுதிகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளைச் சரிசெய்து மேம்படுத்திடும் பணிகளுக்கு 143.45 கோடி ரூபாய்.

அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் இப்பணிகளுக்கென 633.67 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 29-2-2008 வரையில் 408.26 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

### (iv) பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி நிறுவனம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மறுவாழ்வு மற்றும் வாழ்வாதாரத் திட்டப் பணிகளுக்காக 67.50 கோடி ரூபாய் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிறுவனத்தின் சார்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டமானது காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஆறு மாவட்டங்களில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பெறப்படும் தொகைக்கு சேவைக் கட்டணமாக ஆண்டுக்கு 0.75 விழுக்காடு மட்டுமே செலுத்தப்படவேண்டும். இத்திட்டம் 8 ஆண்டுகளுக்குள்ளாகச் செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தமானது கடந்த 11-11-2005 அன்று கையெழுத்திடப்பட்டுள்ளது. இக்கடன் தொகை அக்டோபர் 15, 2015-ல் தொடங்கி, ஏப்ரல் 15, 2045-க்குள்ளாக திரும்பச் செலுத்தப்படவேண்டும்.

### (v) வறுமைக் குறைப்பிற்கான ஜப்பான் நிதி (ஆசிய வளர்ச்சி வங்கியின் மூலமாக)

தமிழகத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட ஏழை மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரமைத்து மேம்படுத்துவதோடு, புதிய வாழ்வாதாரங்களை உருவாக்கிடும் நோக்கத்தில், ஜப்பான் அரசு நிதி உதவியினை ஆசிய வளர்ச்சி

வங்கியின் வாயிலாக 16.70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதி உதவிமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களானது நான்கு ஆண்டுகளில் அதாவது, வரும் அக்டோபர் 2010 வரை செயல்படுத்தப்படும். இதற்கான ஒப்பந்தமானது கடந்த 27-9-2006 அன்று தமிழக அரசால் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதே ஒப்பந்தத்தில் மத்திய அரசும் கடந்த 4-10-2006-ல் கூட்டாகக் கையொப்பமிட்டுள்ளது. வருவாய்த் துறையின் சார்பில் இதற்கான நிர்வாக அனுமதியும் வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

*(அரசாணை நிலை எண் 118, வருவாய்த் துறை, நாள் 8-3-2007)*

**2.18 மத்திய அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பின் ஆதரவுடனான பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம்**

பல்வேறு இன்னல்களுக்கு உள்ளாகும் தன்மை கொண்ட பகுதிகளில் மக்கள் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய தன்மையைக் குறைக்கும் நோக்குடன் மத்திய அரசும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பும் பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டம் என்ற திட்டத்தைப் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டம் தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பல்வேறு இன்னல்களுக்கு உட்படும் இம்மாவட்டங்களில் இயற்கை இன்னல்களை முடிந்தவரைக் குறைப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். விழிப்புணர்வு, கல்வி, பயிற்சி, பேரிடர் மேலாண்மை, ஆயத்த நிலை மற்றும் இன்னல்களிலிருந்து மீளுதல் ஆகியவற்றில் மாநிலம், மாவட்டம், சமுதாயம் ஆகிய நிலைகளில் சமுதாயத்தின் திறன் வளர்த்தல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் முழுமைக்கும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பு நிதி வழங்குகிறது மொத்த நிதி அளிப்பு ரூ.6.71 கோடியாகும். (14,75,022 அமெரிக்க டாலர்கள்) இத்திட்டம் டிசம்பர் 2008 மாதத்திற்குள் முடிக்கப்படும். இத்திட்டத்தின்மூலம் பல்வேறு அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்பு உறுப்பினர்கள் மற்றும் அரசுசாரா அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோருக்கு கூர் உணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது.



இவர்களது எண்ணிக்கை சுமார் 27,000 ஆகும். மேலும் சுமார் 51,000 கிராம தன்னார்வத் தொண்டர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 4,152 ஆசிரியர்களுக்கும் மற்றும் 37,200 நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஊரக மற்றும் கிராம அளவில் 6,511 பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. வட்டார அளவில் 55 வட்டாரங்களிலும், 6 மாவட்டங்களில் மாவட்ட அளவிலும் பேரிடர் மேலாண்மைத் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் அவசரகால பேரிடர் மையங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. நீலகிரி மாவட்டம் மற்றும் மாநில அளவிலான அவசர கால பேரிடர் மையங்களின் கட்டுமானப் பணிகள் முன்னேறிய நிலையில் உள்ளன. மத்திய அரசும் மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பும் விழுப்புரம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி ஆகிய கடலோர மாவட்டங்களைப் பேரிடர் இன்னல் மேலாண்மைத் திட்டத்தில் சேர்க்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 3

## நில நிர்வாகத் துறை

பல்வேறு துறைகள் வசம் உள்ள அரசு நிலங்கள் உட்பட தமிழகத்தில் உள்ள அனைத்து நிலங்களும் வருவாய்த் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

வருவாய்த் துறை சம்பந்தப்பட்ட முக்கியப் பொருட்களான ஒப்படை (வீட்டுமனை/விவசாய நிலம்), குத்தகை நில உரிமை மாற்றம், நில மாற்றம், நில எடுப்பு, ஜமீன்/ இனாம் ஒழிப்புச் சட்டம், திரையரங்குச் சட்டம் (உள் துறையின் கீழ்), ஆக்கிரமணங்களை அகற்றுதல் மற்றும் பாசனச் சட்டங்கள் ஆகியவை நில நிர்வாகத் துறையால் நிர்வகிக்கப்படுகின்றன.

அரசு நிலங்கள், தனியாருக்கும், அரசுத் துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் குத்தகை, நில மாற்றம், நில உரிமை மாற்றம், நில எடுப்பு மற்றும் ஒப்படை மூலம் வழங்கப்படுகின்றன.

### 3.2 நில ஒப்படை

அரசு நிலங்கள் வீட்டுமனைக்காகவும், விவசாயம் செய்வதற்காகவும் ஒப்படை செய்யப்படுகின்றன.

**(i) வீட்டுமனை நில ஒப்படை:—**

வீடற்ற ஏழை, எளிய மக்களுக்கு இலவச வீட்டுமனை ஒப்படை வழங்குவது அரசின் தலையாய கொள்கையாகும். சமுதாயத்தில் நலிந்த பிரிவினரின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, குடும்பத்தின் ஆண்டு வருமானம் ஊரகப் பகுதியில் ரூ.16,000/-க்கு குறைவாக உள்ளவர்களுக்கும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரையில், ரூ.24,000/-க்கு குறைவாக உள்ளவர்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மகளிருக்கு சமூக அந்தஸ்து வழங்கவும், மகளிரை மேம்படுத்தும் விதத்திலும், மனைவியின் பெயரில் அல்லது குடும்பத்தில் உள்ள பெண் உறுப்பினர் பெயரில் மட்டுமே வீட்டுமனைகள் வழங்கப்படுகின்றன. தற்போது கிராமங்களில் மூன்று சென்ட் அளவிலும், நகராட்சி எல்லைக்குள் ஒன்றரை சென்ட் அளவிலும், மாநகராட்சி எல்லைக்குள் ஒரு சென்ட் என்ற அளவிலும், வீட்டுமனைக்காக நிலம் வருவாய் நிலை ஆணை எண் 21-ன்கீழ் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனைப் பட்டாக்கள் ஒப்படை செய்யப்படும்போது சிறப்பு நிபந்தனைகளின்



அடிப்படையில் ஒப்படை வழங்கப்பட்ட நிலத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் வீடு கட்டப்படவேண்டும் எனவும், ஒப்படைப் பெற்ற வீட்டுமனையை 10 வருடங்களுக்கு விற்கவோ உரிமை மாற்றம் செய்யவோ கூடாது எனவும் நிபந்தனை விதிக்கப்படுகிறது.

"இந்திரா அவாஸ் யோஜ்னா", "பிரதம மந்திரி கிராமோதய யோஜ்னா" போன்ற கடன் மற்றும் மானியம் சார்ந்த கிராமப்புற வீடுகட்டும் திட்டங்களின்கீழ் ஒப்படை செய்யப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அடமானம் வைத்து, கடன் உதவி பெற்று வீடு கட்டுவதற்கு ஒப்படைதாரர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

வீட்டுமனை ஒப்படை செய்யப்படுவதில் கீழ்க்கண்டவாறு முன்னுரிமை பின்பற்றப்படுகிறது:—

1. எல்லைப்புற பாதுகாப்புப் படை மற்றும் இராணுவப் படை உட்பட பாதுகாப்புப் படை வீரர்கள் பணியில் இருந்தபோது உயிரிழந்தவர்கள் அல்லது செயலிழந்தவர்களின் குடும்பங்கள்
2. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்
3. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகள்
4. முன்னாள் இராணுவத்தினர்
5. நிலமற்ற ஏழை மக்கள்

ஒப்படை செய்வதன் பலன் ஏழை மக்களுக்கு விரைவில் சென்றடையும் வகையில், பல்வேறு நிலையிலுள்ள வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு கீழ்க்கண்ட நிதி அதிகார வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | அலுவலர்கள் | நிதி வரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர் | ரூ.10,000/- |
| 2 | கோட்டாட்சியர் | ரூ.20,000/- |
| 3 | மாவட்ட வருவாய் அலுவலர் | ரூ.50,000/- |
| 4 | மாவட்ட ஆட்சித் தலைவர் | ரூ.2,00,000/- |
| 5 | நில நிர்வாக ஆணையர் | ரூ.2,50,000/- |
| 6 | அரசு | ரூ.2,50,000/-க்கு மேல் |

2007-2008 ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, மாநிலம் முழுவதும் 3,00,000 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி 17-3-2008 வரை 3,98,668 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(ii) ஆக்கிரமணங்களை வரன்முறைப்படுத்துதல்:-**

ஆட்சேபகரமான அரசுப் புறம்போக்கு நிலங்களில், பத்து வருடங்களுக்கு மேலாக ஆக்ரமணம் செய்து வீடுகள் கட்டிக் குடியிருந்து வரும் ஏழை மற்றும் அடித்தள மக்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, அவ்வாக்கிரமணங்களை வரன்முறைப்படுத்த அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஒரு முறை சிறப்புத் திட்டத்திற்கு ஆணையிடப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு, பத்து வருடங்களுக்கு மேலாக ஆட்சேபணையற்ற அரசுப் புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டிக் குடியிருப்பவர்கள், அதற்கான ஆதாரங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் அவ்வாக்கிரமணங்களை வரன்முறைப் படுத்தலாம். இத்திட்டம் முதலாவதாக 2007 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் செயலாக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்டு, பின்னர் இத்திட்டம் 31-3-2008 வரை நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தும் பொருட்டு, மாவட்ட ஆட்சியர்களுக்கு சில அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

(அ) ஒருமுறை வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்களுக்கு நில மதிப்பில் அதிகார உச்சவரம்பு எதுவுமில்லை. முறையான திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சியர்களின் அதிகார வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு முறை வரன்முறைப்படுத்தும் சிறப்புத் திட்டம் மற்றும் முறையான வீட்டுமனை வழங்கும் திட்டத்தின்கீழ், தடையாணைப் புத்தகத்தில் பதியப்பட்ட இனங்களை நீக்கியும், புறம்போக்கு என்ற வகைப்பாட்டை வீட்டுமனைகளுக்குரிய நத்தம் என்ற வகைப்பாடாக மாற்றும் வகையில் மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



இலவச ஒப்படை பெறுவதற்கான வருமான உச்சவரம்பு நீக்கப்பட்டு, மேலும் ஊரகப் பகுதிகளில் 4 சென்ட், நகராட்சிப் பகுதிகளில் 2-1/2 சென்ட் மற்றும் மாநகராட்சிப் பகுதிகளில் 2 சென்ட் என்ற அளவில் இச்சிறப்புத் திட்டத்தின்கீழ் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்றும், 30-12-2006 முதல் நிலக்கிரயம் செலுத்தி வீட்டுமனைப் பட்டா பெற்றவர்களுக்கு அவர்கள் செலுத்திய தொகை திரும்பவும் அளிக்கப்படும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 34, வருவாய்த் துறை, நாள் 23-1-2008-ல் இத்திட்டம் அரசு நிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு மேல் வீடு கட்டிக் குடியிருப்பவர்களுக்கும் பொருந்தும் என ஆணையிடப்பட்டுள்ளது.

**(iii) விவசாய நில ஒப்படை :-**

கிராமங்களில் வாழும் ஏழை மற்றும் சமுதாயத்தில் நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் பொருட்டு நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசு நிலம் ஒதுக்கீடு செய்து வருகிறது. விவசாய நிலம் வருவாய் நிலையாணை 15-ன்கீழ் ஒப்படை செய்யப்படுகிறது. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கையை கருத்தில் எடுத்துக் கொள்ளாமல் குடும்பத்தின் ஆண்டு வருமானம் கிராமப்புறத்தில் ரூ.16,000/-க்கும், நகர்ப்புறத்தில் ரூ.24,000/-க்கும், குறைவாக இருப்பவர்களுக்கு இலவசமாக நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. வீட்டுமனை ஒப்படை செய்வதற்குப் பின்பற்றப்படும் அதே முன்னுரிமை வரிசை, விவசாய நில ஒப்படைக்கும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

**3.3. நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தலா 2 ஏக்கர் வீதம் நிலம் வழங்கும் திட்டம் [அரசாணை (நிலை) எண் 555, வருவாய்த் துறை, நாள் 26-8-2006]**

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலம் வழங்கும் அரசின் சிறப்புத் திட்டம் கீழ்க்கண்ட மூன்று வகைகளில் செயலாக்கப்படுகிறது.

1. எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாத அரசு தரிசுப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல்
2. சிறு மற்றும் குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்தல்

[2008 ஏப்ரல் 11

3. சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குச் சொந்தமான தரிசுப் பட்டா நிலங்களை பண்படுத்துதல்/மேம்பாடு செய்தல்.

இத்திட்டத்தில், பயனாளிகளைத் தேர்வு செய்வது ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக இருக்கும்பொருட்டு, கிராம அளவிலான குழு மற்றும் கிராம சபைகள்மூலம் பயனாளிகளைத் தேர்வு செய்ய சில சிறப்பு விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. மேலும், இத்திட்டத்தின் கீழ்வரும் நிலங்கள் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளின் திட்டங்கள்மூலம் பண்படுத்தப்பட்டு விவசாயத்திற்குத் தகுதியானவையாக மேம்படுத்தப்பட்ட பின்னரே பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன.

இத்திட்டம் 17-9-2006 ஆம் நாளன்று திருவள்ளூரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களாலும், இதர மாவட்டங்களில் பிற அமைச்சர்களாலும் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நாள் வரை இத்திட்டம் 6 கட்டங்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திருவள்ளூரில் 17-9-2006 அன்றும், விழுப்புரத்தில் 17-12-2006 அன்றும், திருவண்ணாமலையில் 17-3-2007 அன்றும், திருநெல்வேலியில் 17-6-2007 அன்றும், ஈரோட்டில் 29-12-2007 அன்றும் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த இலவச நில விநியோகம் இதுவரை வழங்கப்பட்டது பற்றிய புள்ளி விவரங்கள் பின்வருமாறு:-

| விநியோக நிலைகள் | பயனாளிகள் | வழங்கப்பட்ட நிலப் பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| முதல் கட்டம் (17-09-2006) | 23,440 | 24,271.14 |
| மதுரை (11-11-2006) | 918 | 1,010.97 |
| இரண்டாம் கட்டம் (17-12-2006) | 26,749 | 25,805.53 |
| மூன்றாம் கட்டம் (17-03-2007) | 20,648 | 26,029.61 |
| நான்காம் கட்டம் (17-06-2007) | 19,821 | 24,505.86 |
| ஐந்தாம் கட்டம் (17-09-2007) | 24,932 | 32,065.61 |
| ஆறாம் கட்டம் (29-12-2007) | 21,486 | 26,982.62 |
| 30-12-2007 முதல் 17-03-2008 வரை வழங்கப்பட்ட அளவு | 13,270 | 18,040.14 |
| மொத்தம் | 1,51,264 | 1,78,711.48 |



2008 ஏப்ரல் 11]

2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான ஐந்தாண்டு காலகட்டத்தில், 51,509 நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 29,074 ஏக்கர் விவசாய நிலம் மட்டுமே வழங்கப்பட்ட நிலையில், இந்த அரசு கடந்த 17-9-2006 முதல் 17-3-2008 முடிய 1,51,264 ஏழை நிலமற்ற விவசாயிகளுக்கு 1,78,711.48 ஏக்கர் விவசாய நிலம் ஒப்படை செய்தும் மேம்படுத்தியும் வழங்கியுள்ளது.

**3.4 நிலக் குத்தகை**

தனி நபர்கள், தனியார் அமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள், கழகங்கள், நம்பகங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வேளாண்மை அல்லாத பிற நோக்கங்களுக்காக அரசு நிலத்தை குத்தகைக்கு கோரும்போது ஒரு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு, குறைந்தபட்சமாக 3 ஆண்டுகளுக்கும், அதிகபட்சமாக 30 ஆண்டுகளுக்கும் வருவாய் நிலையாணை 24-A-ன்கீழ் அரசு நிலங்கள் குத்தகைக்கு தரப்படுகின்றன.

வணிக மற்றும் வணிகமற்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு, நில மதிப்பில் ஆண்டுக் குத்தகைத் தொகை நிர்ணயம் செய்யப்படுகிறது.

ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தின் வரம்பிற்குள் வரும் நிலங்களுக்கு நடைமுறையில் உள்ள ஆண்டுக் குத்தகை விகிதங்கள் (நில மதிப்பின் விழுக்காடாக) பின் வருமாறு:-

| நோக்கம் | ஆண்டுக் குத்தகை (நில மதிப்பில்) | தலவரி (நில மதிப்பில்) | தல மேல்வரி (நில மதிப்பில்) | மொத்தம் |
|---|---|---|---|---|
| வணிகமற்ற நோக்கம் | 1% | 1% | 5% | 7% |
| வணிக நோக்கம் | 2% | 2% | 10% | 14% |

மாநகராட்சி மற்றும் நகராட்சி வரம்பிற்குள் வரும் நிலங்களுக்கு நடைமுறையில் உள்ள ஆண்டுக் குத்தகை விகிதங்கள் பின்வருமாறு:-

(i) வணிகமற்ற நோக்கத்திற்கு நில மதிப்பில் 7% (கூடுதல் மேல்வரி உட்பட)

(ii) வணிக நோக்கத்திற்கு நில மதிப்பில் 14% (கூடுதல் மேல்வரி உட்பட)

ஆண்டுக் குத்தகைத் தொகை, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றியமைக்கப்படும் என்கிற நிபந்தனைக்கு உட்பட்டது.

மேற்குறிப்பிட்ட ஆண்டுக் குத்தகை விகிதங்கள் தவிர, சில சிறப்பு இனங்களில் பெயரளவு ஆண்டுக் குத்தகைத் தொகை, தகுதியின் அடிப்படையில் அரசால் நிர்ணயம் செய்யப்படுகின்றது.

வருவாய் நிலையாணை 24-A-ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள குத்தகை ஒப்பாவணத்தில் கண்டுள்ள நிபந்தனைகளை மீறும்போது, குத்தகை நிலம் அரசால் மீளப் பெறப்படும்.

2007-2008 ஆம் ஆண்டில் தனி நபர்கள், நம்பகங்கள், கழகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் நிறுமங்கள் ஆகியவைகளுக்கு ஏறத்தாழ 80 ஏக்கர் நிலம் வருவாய் நிலையாணை எண் 24-A-ன்கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 3.5 நில மாற்றம்

அரசுப் புறம்போக்கு நிலங்கள், மைய அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலையாணை எண் 23-ன்கீழ் சந்தை மதிப்பினை வசூலித்த பின்னர் நில மாற்றம் செய்யப்படுகின்றன. மாநில அரசுத் துறைகளுக்கு, வருவாய் நிலை ஆணை எண் 23(A)ன்கீழ், பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் போன்ற வணிக நோக்கமில்லாத பயன்பாட்டிற்காக நிலக் கிரயம் வசூலிக்கப்படாமல் இலவசமாக நில மாற்றம் செய்யப்படுகிறது. வணிக நோக்கங்களுக்காக நிலங்கள் கோரப்படும்பொழுது, நில மாற்றம் செய்வதற்கு வருவாய் நிலையாணை எண் 24-ன்படி நிலமதிப்பு வசூலிக்கப்படுகிறது.

போக்குவரத்து, சுகாதாரம், கல்வி மற்றும் காவல் துறை போன்ற அரசுத் துறைகளின் பயன்பாட்டிற்கான ஆட்சேபணையற்ற, குறைந்தபட்ச அளவு அரசுப் புறம்போக்கு நிலங்களை நில மாற்றம் செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நில மாற்றம் எந்நோக்கத்திற்காகச் செய்யப்பட்டதோ, அவற்றிற்காக நிலங்களை முழுமையாகப் பயன்படுத்தப்படாத நிலையில், அத்தகைய நிலங்கள் மீளப் பெறப்பட்டு தேவைப்படும் பிற துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.





மேய்க்கால், மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்களை மாற்றம் செய்யும்போது, இந்நிலங்களின் பரப்பளவுள்ள மாற்று நிலத்தினை மேய்க்கால் நிலமாக மாற்ற தேர்வு செய்தும், ஏக்கருக்கு ரூ.6000/- அல்லது எக்டேருக்கு ரூ.15,000/- என்ற அடிப்படையில் நில மாற்ற புலங்களுக்கு நில மேம்பாட்டுப் பணிக்கான தொகையினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பிறகே மேய்க்கால், மந்தைவெளிப் புறம்போக்கு நிலங்கள் வேறு அரசுத் துறைகளுக்கு நில மாற்றம் செய்யப்படுகிறது.

ஏப்ரல் 2007 முதல் மார்ச் 2008 வரையிலான காலத்தில் நில மாற்றம் மற்றும் முன் நுழைவு அனுமதி ஆகியவற்றின்மூலம் பல்வேறு துறைகளுக்கு வழங்கப்பட்ட நிலங்களின், விவரம் பின்வருமாறு:-

| | | | பரப்பு (எக்டேரில்) | மொத்தம் (எக்டேரில்) |
|---|---|---|---|---|
| 1. | நில மாற்றம் | மாநில அரசுத் துறைகள் | 260.94.80 | 573.45.03 |
| | | மத்திய அரசு நிறுவனங்கள் | 312.50.23 | |
| 2. | முன் நுழைவு அனுமதி | மாநில அரசுத் துறைகள் | 1.00.00 | 3.32.40 |
| | | மத்திய அரசு நிறுவனங்கள் | 2.32.40 | |

### 3.6 நில உரிமை மாற்றம்

பொது நோக்கங்களுக்காகவும், சமூக மற்றும் பொருளாதார நலனை முன்னேற்றுவதற்காகவும், வருவாய் நிலையாணை 24-ன்கீழ் அரசுப் புறம்போக்கு நிலங்கள், அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு, உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, குடிசைவாழ் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்காக நிலக் கிரயமின்றியும், இதர காரியங்களுக்கு மனை ஒன்றுக்கு பெயரளவு நிலக் கிரயமாக ரூ.5000/- வசூலித்த பின்னர் அரசு நிலங்கள் வாரியத்திற்கு உரிமை

மாற்றம் செய்யப்படுகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கும், சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கும் இலவசமாக நிலங்கள் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றன. இதர கேட்பு நிறுவனங்களுக்கும் மற்றும் இதர காரியங்களுக்கும், சந்தை மதிப்பு அல்லது அதற்கு மேல், நிலக் கிரயம் வசூலிக்கப்பட்டு நிலம் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு பேருந்து முனையம் மற்றும் பயணியர் பேருந்து நிறுத்துமிடங்கள் அமைக்கத் தேவைப்படும் நிலத்தின் சந்தை மதிப்பில் 50% நிலக் கிரயம் வசூலித்த பின்னர் உரிமை மாற்றம் செய்யப்படுகின்றது. உரிமை மாற்ற நிபந்தனைகள் மீறப்படின் எந்தவிதமான இழப்பீட்டுத் தொகையும் வழங்காமல் நிலங்கள் அரசால் மீளப் பெறப்படுகின்றன.

அரசு கடித (நிலை) எண் 477, வருவாய்த் துறை, நாள்: 23-8-2007-ல், இனி வரும் காலங்களில் சிப்காட் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்யும் நேர்வுகளில் ஒரு மடங்கு நிலக் கிரயம் வசூலிக்கலாமென அரசு ஆணையிட்டுள்ளது.

அரசு கடித (நிலை) எண் 732, வருவாய்த் துறை நி.மு.5(1), நாள்: 13-12-2007-ல், துணை மின் நிலையம் அமைப்பது போன்ற பணிகளுக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்படும் நிலங்களுக்கு ஒரு மடங்கு நிலக் கிரயம் வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

2007-ஆம் ஆண்டில் (ஜனவரி-டிசம்பர்) ஏறத்தாழ 1,435 ஏக்கர் அரசுப் புறம்போக்கு நிலங்கள் எல்காட் / சிப்காட் / தமிழ்நாடு மின் வாரியம் போன்ற நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் / முன் நுழைவு அனுமதி ஆகியவற்றின்மூலம் வழங்கப்பட்டுள்ளது.

### 3.7 ஆக்கிரமணங்கள் அகற்றுதல்

1905 ஆம் ஆண்டு ஆக்கிரமிப்புகள் அகற்றுதல் சட்டப்படி அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்தல் சட்டப்படி குற்றமாகும். எனவே, தமிழ்நாடு நில ஆக்கிரமிப்புச் சட்டம் 1905-இல் உள்ள சட்டத்தின் பிரிவுகளைப் பயன்படுத்தி, ஆக்கிரமிப்புதாரர்களை உடனடியாக அகற்றுதல் வருவாய்த் துறை அதிகாரிகளின் முக்கியக் கடமைகளில் ஒன்றாகும்.

முக்கியமாக அரசு சாலையோரங்கள், குளங்கள், குட்டைகள், ஏரி மற்றும் இதர நீர்நிலை ஆதாரங்களில் ஆக்கிரமிப்பு செய்யும் செயல்கள்



அதிகரித்து வருகின்றன. இந்த ஆக்கிரமிப்புகளால் பாசன ஆதாரங்களின் கொள்ளளவு பெருமளவு குறைந்து, உணவு உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகிறது. மேலும், பாசன ஆதாரங்களில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய இடையூறாக உள்ளது. மாவட்டங்களில், நில உரிமைத் துறைகளான பொதுப் பணித் துறை, வனத் துறை, காவல் துறை ஆகியவற்றின் அதிகாரிகளை உள்ளடக்கிய கூட்டங்களைக் கூட்டவும், அதன் முன்னேற்றத்தை ஆய்வு செய்யவும் மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1905 ஆம் ஆண்டின் நில ஆக்கிரமணச் சட்டக் கூறுகளை பின்பற்றி மாவட்டங்களிலுள்ள ஆக்கிரமணங்களை அகற்ற அறிவுரைகள் வழங்கப்படுகின்றன. வருவாய்த் துறை மற்றும் வீட்டு வசதி அமைச்சர் தலைமையின்கீழ் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் தலைமைச் செயலாளர், சம்பந்தப்பட்ட துறைச் செயலர்கள், சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், ஆகியோர் அலுவல்சார் உறுப்பினர்களாகவும் இரண்டு சட்டமன்ற உறுப்பினர்கள், ஆறு மாநகராட்சிகளிலிருந்து ஆறு உறுப்பினர்கள் மற்றும் இரண்டு நகராட்சிகளிலிருந்து இரண்டு உறுப்பினர்கள் ஆகியோர் அலுவல்சாரா உறுப்பினர்களாகவும் உள்ளனர். மாண்புமிகு அமைச்சர் (வருவாய் மற்றும் வீட்டு வசதி) அவர்களின் தலைமையிலான உயர்மட்டக் குழு ஆக்கிரமணங்களை அகற்றுதல் மற்றும் கண்காணித்தல் பணிகளின் முன்னேற்றத்தினை 19-12-2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் ஆய்வு செய்தது.

15-03-2008 முடிய அரசுப் புறம்போக்கு நிலங்களிலிருந்து 1,36,046 ஆக்கிரமணங்கள் அகற்றப்பட்டுள்ளன.

### 3.8. மரப் பட்டா திட்டம்

"2சி பட்டா" என அழைக்கப்படும் மரப் பட்டா வழங்கும் திட்டம், மாநிலத்தில் பல ஆண்டுகளாக செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ், அரசுப் புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்களின் இலைகள், கனிகள் மற்றும் இதர பயன்படும் பொருட்களின் பலன்களை மட்டும் அனுபவிக்கும் உரிமை அருகில் உள்ள நில உரிமையாளருக்கோ அல்லது அம்மரங்களைப் பராமரிக்கக்கூடிய பிறருக்கோ வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும், அரசு நிலங்கள் மற்றும் அவற்றில் நிற்கும் மரங்களின் மீதான உரிமை அரசிடமே தொடர்ந்து இருக்கும். மரப் பட்டா வழங்குவதில், நலிந்த பிரிவினைச் சார்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.

[2008 ஏப்ரல் 11

புதிய சமூக மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள ஊரக நிலமற்ற ஏழைப் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கி இத்திட்டத்தின்மூலம் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களில் மரம் வளர்ப்பதற்கு இரண்டு ஆண்டு காலத்திற்குள் அவர்கள் மரங்களை நடுதல் வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கு மரம் நடுவதற்கான உரிமம் வழங்கப்படுகிறது. உரிமம் வழங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்குப் பின், மரம் நடப்பட்டுள்ளதா என சரிபார்க்கப்பட்டு, இவ்வுரிமைதாரர்களுக்கு மரப் பட்டா வழங்கப்படுகிறது.

### 3.9. நில எடுப்பு

மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களுக்காகத் தேவைப்படும் நிலங்கள் நில எடுப்புச் சட்டம், *1894*, தமிழ்நாடு ஆதி திராவிடர் நலத் திட்டங்களுக்கான, நிலம் கையகப்படுத்தும் சட்டம், *1978* (சட்டம் *31/1978*), தமிழ்நாடு நெடுஞ்சாலைகள் சட்டம், *34/2002* மற்றும் தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம், *10/1999* ஆகியவற்றின்கீழ் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன.

### நில எடுப்புச் சட்டம்

தொழிற்சாலை, நீர்ப்பாசனக் குளம், அணை போன்றவற்றை உருவாக்கத் தேவையான நிலத்தையும், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள வீட்டுமனையற்ற, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களுக்கு வீட்டுமனை வசதிக்காகவும், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. தொழிலியல் நோக்கச் சட்டத்தின்கீழ் படித்த வேலையற்ற இளைஞர்கள்/தொழில்நுட்பத் திறனாளர்களுக்கு நேரிடையாகவும்/ மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் அதேவேளையில், அந்தப் பகுதிகள் பன்முக வளர்ச்சிகள் பெறுவதற்கு ஏதுவாக தொழிற்சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. இதைத்தவிர, பாலங்கள் கட்டுவதற்கும், சாலைகள் விரிவுபடுத்தவும், மேம்பாலங்கள் அமைக்கவும், இரயில்வே மேம்பாலங்கள் மற்றும் இரயில்வே சுரங்கப் பாதைகள் அமைக்கவும் நிலங்கள் கையகப்படுத்தப்படுகின்றன. மேற்சொன்ன சட்டங்களின்கீழ் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளும் வழிகாட்டுதல்களும் மிகக் கவனமாகக் கடைப்பிடிக்கப்பட்டு நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.



2008 ஏப்ரல் 11]

**நில எடுப்பு தீர்வாணைகளை ஒப்புதல் செய்வதற்கான நிதி அதிகார வரம்பு**

| வ. எண் | அலுவலர்கள் | தற்போதுள்ள நிதி வரம்பு |
|---|---|---|
| 1 | வட்டாட்சியர்கள்/ தனி வட்டாட்சியர்கள் | ரூ. 2,50,000/- வரை (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) |
| 2 | கோட்டாட்சியர்கள்/ துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்கள் | ரூ. 2,50,000/-க்கு மேல் ரூ. 7,50,000/- வரை (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேல் ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை) |
| 3 | மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/ கூடுதல் மாவட்ட ஆட்சியர்கள்/ மாவட்ட வருவாய் அலுவலர்கள் | ரூ.7,50,000/-க்கு மேல் ரூ. 20,00,000/- வரை (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு மேல் ரூபாய் இருபது இலட்சம் வரை) |
| 4 | நில நிர்வாக ஆணையர் | ரூ. 20,00,000/-க்கு மேல் (ரூபாய் இருபது இலட்சத்துக்கு மேல்) |

இதுமாதிரியான நில எடுப்புப் பணிகளைச் செய்வதற்கான சிறப்பு பணியாளர்களை நியமித்து பணிகளை விரைவாக முடிக்க அரசாணை (பல்வகை) எண் *2556*, வருவாய்த் துறை, நாள் *10-12-1975*, அரசாணை பல்வகை எண் *205*, வருவாய்த் துறை, நாள்: *10-3-1993*, அரசாணை பல்வகை எண் *285* வருவாய்த் துறை, நாள்: *10-2-1996* ஆகியவற்றில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும் அரசாணை பல்வகை எண் *885*, வருவாய்த் துறை, நாள்: *21-9-1995* மற்றும் பல்வகை எண் *1246*, வருவாய்த் துறை, நாள்: *22-11-1996*-ல் தனியார் நிலங்களை, நேரடியாக கிரயம் செய்ய மாவட்ட மற்றும் மாநில அளவிலான தனியார் பேச்சுவார்த்தைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கண்ட அரசாணைகளில் வகுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளின்படி, பேச்சுவார்த்தையில் ஒப்புக்கொள்ளப்பட்ட தொகை ரூ.*20* இலட்சத்திற்கு உட்பட்டும், வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பில் எது குறைவோ அதற்கு *150%*-க்கு உட்பட்ட இனங்களில் மாவட்ட அளவிலான பேச்சுவார்த்தைக் குழுவும், மதிப்பு

ரூ. 20 இலட்சத்திற்கு அதிகமாகவும் வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பு இதில் எது குறைவோ அதில் 150%-க்கு உட்பட்டும் இருப்பின் மாநில அளவிலான பேச்சுவார்த்தைக் குழுவும் நிலங்களை வாங்குவதற்கு அதிகாரம் பெற்றுள்ளன. ஒப்புக்கொள்ளப்பட்ட தொகை ரூ.20 இலட்சத்திற்கு அதிகமாகவும் வழிகாட்டி மதிப்பு அல்லது சந்தை மதிப்பில் எது குறைவோ அதில் 150%-க்கு அதிகமாகவும் இருப்பின் அரசின் ஆணைகளைப் பெற்று நிலம் கிரயம் செய்யப்படுகிறது. இவ்வாறு பேச்சுவார்த்தைமூலம் கிரயம் பெறுவதால் ஏற்படும் நன்மைகள் பின்வருமாறு:—

1. கிரயம் செய்யப்படும் நிலம் உடனடியாகக் கைப்பற்றுக்கு வருவதோடு திட்டத்தினை உடனடியாகத் துவக்க இயலும்.

2. நில எடுப்பு நடவடிக்கைகளில் அறியப்படும் தாமதமும், அதனையொட்டிய காலவிரயம் மற்றும் மதிப்பு ஏற்றமும் தவிர்க்கப்படுகிறது.

3. வரைவு அறிவிக்கை, வரைவு விளம்பல் ஆகியவற்றை பிரசுரம் செய்வதற்கு ஆகக்கூடிய செலவு தவிர்க்கப்படும்.

4. நில எடுப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக, தொடரப்படும் வழக்குகளும் கூடுதல் இழப்பீடு கோரிய வழக்குகளும் தவிர்க்கப்படுவதுடன் கால விரயமும் கூடுதல் இழப்பீட்டுத் தொகை வழங்குவதும் பெருமளவு தவிர்க்கப்படுகிறது.

நில எடுப்பால் பாதிக்கப்படும் மக்களின் குறைகளைக் களையும் நோக்கத்துடன், மத்திய அரசால் வகுக்கப்பட்டுள்ள தேசிய மறுவாழ்வுக் கொள்கை 2007-ஐ தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கலாம் என்ற பிரேரணையை அரசு சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையருடன் கலந்து ஆய்வு செய்து வருகின்றது.





## அத்தியாயம் - 4

## நில அளவை மற்றும் நில வரித் திட்டம்

மாநிலத்தில் உள்ள அனைத்துப் பகுதிகளையும் நில அளவை செய்யும் மற்றும் நிலப் புலப்படங்கள் தயார் செய்யும் அதிகாரங்கள் இத்துறையைச் சார்ந்ததாகும். இம்மாநிலத்தின் துல்லியமான மற்றும் முறையான நில அளவை கி.பி.1002 ஆம் வருடத்திலேயே சோழப் பேரரசின் மாமன்னர் முதலாம் இராஜராஜன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. அதன்பின்னர், தற்காலத்தில் 1857 ஆம் வருடத்தில் 'மெட்ராஸ் சர்வே' துவக்கப்பட்டு, 1858-ல் நில அளவை தொடங்கப்பட்டது. இதனை நினைவுகூரும் முகமாகக் கடந்த ஆண்டு இத்துறை தனது 150-வது ஆண்டு விழாவினைக் கொண்டாடியது. முன்னேற்றத்தில் இருக்கும் பல்வேறு திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு:

### 4.2. நில அளவைத் திட்டங்கள்

### (i) நகர நில அளவை

நகரளவைத் திட்டத்தின்கீழ் இதுவரை 1779 ச.கி.மீ. பரப்பளவு நில அளவை செய்யப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | நகராட்சிகள் | மாநகராட்சிகள் |
|---|---|---|---|
| 1. | மொத்த நகரங்கள் / மாநகரங்கள் | 150 | 8 |
| 2. | நில அளவைப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவை | 83 | 7 |
| 3. | பணி முடிவுற்றவை | 81 | 5 |
| 4. | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 2** | 2** |
| 5. | பணிக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டியவை | 67 | 1* |

* திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய இரு நகராட்சிகளும் அண்மையில் மாநகராட்சிகளாக நிலை மேம்படுத்தப்பட்டுள்ளன. திருப்பூர் மாநகராட்சியில் நகரளவைப் பணி நடைபெற்று வருகிறது. நில அளவைப் பணி நடைபெற்று வரும் இரண்டு நகராட்சிகள்

[2008 ஏப்ரல் 11

மற்றும் இரண்டு மாநகராட்சிகளில் நவீன நில அளவை உபகரணங்களைக் கொண்டு அளவைப் பணி நடைபெற்று வருகிறது.

** நகராட்சிகள்- திருவள்ளூர் மாவட்டத்தில் கத்திவாக்கம்

தேனி மாவட்டத்தில் கம்பம்

மாநகராட்சிகள்- சென்னை மற்றும் திருப்பூர்

**(ii) நத்தம் நில அளவை:** நத்தம் நில அளவைப் பணி முடிவுற்ற விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பணி விவரம் | வட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மொத்த வட்டங்கள் | 208 |
| 2. | பணி முடிக்கப்பட்டவை | 200 |
| 3. | பணி முன்னேற்றத்தில் உள்ளவை | 2* |
| 4. | மீதமுள்ளவை | 6** |

* திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டத்திலும், காஞ்சிபுரம் மாவட்டம் தாம்பரம் வட்டத்திலும் நத்தம் நில அளவைப் பணி நடைபெற்று வருகிறது.

** பணிக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டிய 6 வட்டங்களில் 5 வட்டங்கள் சென்னை மாவட்டத்திற்குட்பட்டதாகும். மற்றொரு வட்டமாகிய செங்கோட்டை வட்டத்தில் (திருநெல்வேலி மாவட்டம்) மனை வரி அளவை முடிக்கப்பட்டுள்ளது.

**(iii) மறு நில அளவை**

- மறு நில அளவைப் பணி மாநிலத்தில் கடைசியாக கடந்த 1958 ஆம் வருடம் மரபுவாய்ந்த சங்கிலி, தியோடலைட், கிராஸ் ஸ்டாப் ஆகிய நில அளவைக் கருவிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.
- நவீன நில அளவை உபகரணங்களாகிய பூகோள நிலை காட்டும் முறை (ஜி.பி.எஸ்) மற்றும் டோட்டல் ஸ்டேஷன் கருவிகளைக் கொண்டு பல்வேறு கட்டங்களில் மாநிலம் முழுவதும், மறு நில அளவைப் பணிகளை, வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களின்கீழ் மேற்கொள்ள மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதி ஒதுக்கீடு செய்துள்ளன. இதற்கான அறிவிப்பு மாநில அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி முதற்கட்டமாக இம்மறு நில அளவைப் பணி கோயம்புத்தூர், திண்டுக்கல், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களில் துவங்கப்பட்டுள்ளது.



/08 ஏப்ரல் 11]

**4.3. நில ஆவணங்களைக் கணினிமயமாக்கும் திட்டம்**

**(i) கிராம ஆவணங்களைக் கணினிமயமாக்குதல்**

- இத்திட்டம் மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் நடைபெற்று வருகிறது.
- வட்ட அலுவலகங்கள், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆணையரகம் ஆகிய அனைத்து அலுவலகங்களுக்கும் போதிய கணினி மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- 'அ' பதிவேடு மற்றும் 10(1) சிட்டா பதிவேடுகள் அனைத்து கிராமப்புற பகுதிகளிலும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் பயன்பாட்டிற்காக 127 வட்டங்களில் தொடுதிரைக் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. கணினி மயமாக்கப்பட்ட நில ஆவண நறுக்குகள் வழங்கப்பட்டதன் வாயிலாக ரூ.21.17 கோடி தொகை வசூலாகியுள்ளது.
- அனைத்து மாவட்டங்களிலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) அடங்கல் பதிவேடுகளும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.
- சென்னை மாவட்டத்தின் நகர்ப்புற நில ஆவணங்களை கணினி மயமாக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. மாநிலத்தின் இதர நகர்ப்புற பகுதிகளுக்கும் இப்பணி விரிவுபடுத்தப்படும்.

**(ii) புலப்படங்களை கணினிமயமாக்குதல்**

- தனியார் நிறுவனம்மூலம் புலப்படங்களை கணினிமயமாக்க மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மிகத் துல்லியமாக

இப்பணியைச் செய்வதை உறுதிசெய்யும் முகமாக இத்திட்டத்தினை துறைப் பணியாளர்களைக் கொண்டு செயல்படுத்த மாநில அரசு ஆணையிட்டுள்ளது.

- தேசிய தகவலியல் மையத்தினால் உருவாக்கப்பட்ட 'கொலாப்லேண்ட்' எனும் மென்பொருள் இத்திட்டத்தினை அமல்படுத்த பயன்படுத்தப்பட உள்ளது.
- கணினி மையங்களை நிறுவுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) சுமார் 1,000 சதுர அடி கொண்ட இடம் கண்டறியப்பட்டு பணியிடம் உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 20 கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
- திறன் வாய்ந்த கணினிகள் மற்றும் TNSWAN ஆகியவற்றைக் கொண்டு மாநில-மாவட்டங்களுக்கிடையே கணினித் தொடர்பை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- இப்பணி விரைவில் துவங்கப்பட்டு, சுமார் 2½ ஆண்டு காலத்திற்குள் முடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**4.4 விரிவான திட்ட அறிக்கை (நில ஆவணங்களைக் கணினிமயமாக்கல்)**

தேசிய மின்னணு நிர்வாக செயல் திட்டத்தின்கீழ் மாநில உயர்மட்டக் குழு மற்றும் மாநில மின்னணு நிர்வாகக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டதன் விளைவாக நில ஆவணங்களை இணையதளத்தின்மூலம் பராமரிக்க ரூ.50.90 கோடி மதிப்புடைய விரிவான முன்மொழிவுகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நிதி ஒதுக்கீடு எதிர்நோக்கப்படுகிறது. இதற்கிடையில் நில ஆவணங்களைப் பராமரிப்பதற்காக எல்காட் நிறுவனம்மூலம் இணையதளம் சார்ந்த செயல்பாட்டு முறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**4.5 துறையினை நவீனமயமாக்குதல்**

- மத்திய நில அளவை அலுவலகத்தில் கணினிமயமாக்கப்பட்ட புல வரைபட மையம் இயங்கி வருகிறது.
- இக்கணினி வரைபட மையத்தினை நவீனமயமாக்க 2006-2007 ஆம் ஆண்டில் மாநில அரசால் ரூ.34.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிதியைக் கொண்டு திறன் கொண்ட கணினிகள், இதர உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டு புல வரைபட மையம் நவீனமயமாக்கப்பட்டுள்ளது. மேலும், இதர உபகரணங்களாகிய வரைபட மென்பொருள் AO அளவு வரையும் கருவி ஆகியவையும் வழங்கப்படவுள்ளன.



- வருவாய் நிர்வாகத்தை வலுப்படுத்துதல் மற்றும் நில ஆவணங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்களின்கீழ் வழங்கப்பட்ட மத்திய, மாநில அரசுகளின் நிதி உதவியைக் கொண்டு அனைத்து கிராம வரைபடங்களும் ஒளிப்பதிவு (Scan) எடுத்து பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மாநில ஆவணக் காப்பகத்தில் உள்ள நில அளவை மற்றும் நில வரித் திட்ட ஆவணங்களையும் ஒளிப்பதிவு (Scan) எடுத்து பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- பல்வேறு வகையான வரைபடங்களும் கணினிமயமாக்கப்பட்ட புல வரைபட மையத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்த வரைபடங்கள் பொதுமக்களின் தேவைக்காக விற்பனை செய்யப்பட்டதன் வாயிலாக சுமார் ரூ.29.40 இலட்சம் வசூலாகியுள்ளது.
- 2008-2009 ஆம் ஆண்டு மாநில அரசிடமிருந்து எதிர்நோக்கப்படும் நிதி உதவியைக் கொண்டு நில அளவை மத்திய அலுவலகம் கணினிமயமாக்கப்படவுள்ளது.
- ஒவ்வொரு மாவட்டத்தின் நில அளவை மையங்களுக்கும் தலா ஒரு AO அளவு வண்ண வரை கருவி வழங்க மாநில அரசு ரூ.136.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. மாவட்ட நில அளவை மையங்களிலேயே வரைபடம் தயார் செய்யவும், பொதுமக்களுக்கு வழங்கவும் இது வழிவகை செய்கிறது. பொதுமக்கள் மாவட்டங்களிலிருந்து தொலைதூரம் பயணம் செய்து மாநில மையத்திற்கு வந்து இம்மாதிரியான வரைபடங்களைப் பெறவேண்டிய சிரமத்தை இது குறைத்துள்ளது.
- துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் அனைத்துத் திட்டங்களையும் செம்மையாகச் செயல்படுத்தவும், கூர்ந்து கண்காணிக்கவும் நில அளவை மற்றும் நில வரித் திட்ட

[2008 ஏப்ரல் 11

ஆணையரகத்தினை கணினிமயம் ஆக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- 30 மாவட்ட நில அளவை அலுவலகங்களுக்கும் தலா ஒரு நகல் பெருக்கி இயந்திரமும் நிகரி இயந்திரமும் வழங்க மாநில அரசு நிதி ரூ.30 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

**4.6 பயிற்சி மற்றும் திறன் அமைப்பு**

- பணியாளர்களுக்கு பயிற்சி வழங்க மத்திய அரசு ரூ.171.36 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது.
- வருவாய்த் துறை மற்றும் நில அளவைப் பதிவேடுகள் துறையைச் சார்ந்த சுமார் 8,521 பணியாளர்களுக்கு கணினி அடிப்படைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- வட்டாட்சியர் மற்றும் துணை வட்டாட்சியர்களுக்கு நில ஆவணங்கள் செயல்படுத்துதல் மென்பொருள் சம்பந்தப்பட்ட பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- நவீன நில அளவை உபகரணங்களைக் கையாள 1,004 நில அளவைப் பணியாளர்களுக்கு 'நில அளவைப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்' மூலம் சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.
- அனைத்து மாவட்டங்களிலுள்ள நில அளவைப் பணியாளர்களுக்கு கணினிமயமாக்குதல் மென்பொருள்களை கையாளப் பயிற்சி விரைவில் வழங்கப்படும்.
- மறு நில அளவைப் பணிகளை மேற்கொள்ள களநிலைப் பணியாளர்களுக்கு கூடுதல் சிறப்புப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

**4.7 மற்றவை**

- 2007-2008 ஆம் ஆண்டில் கருணை அடிப்படை நியமனங்கள் தகுதிவாய்ந்த 108 நபர்களுக்கு மேலும், தகுதி வாய்ந்த 59 புல உதவியாளர்களுக்கு பணி மாறுதல் மற்றும் பதவி உயர்வு அடிப்படையில் நில அளவர்களாக நியமனங்களும் வழங்கப்பட்டுள்ளன.



2008 ஏப்ரல் 11]

- நில அளவைத் துறைக்கு 2008-2009 ஆம் ஆண்டில் 16 புதிய ஈப்புகளும் மற்றும் ஒரு சிருந்தும் வழங்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4.8 நில வரித் திட்டம்**

இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர், தமிழக அரசு வேளாண்மை சீர்திருத்தத்தினை பெருமளவில், அறிமுகப்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு நில வரித் திட்ட சட்டங்களை இயற்றி அரசுக்கும் ரயத்துகளுக்கும் இடையே இருந்த இடைத்தரகர்களை நீக்கி அந்த எஸ்டேட்டுகளில் ரயத்துவாரி நில வரித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. பல்வேறு நில வரித் திட்ட சட்டங்களின்கீழ், ரயத்துவாரி நில வரித் திட்டம் அறிமுகப்படுத்தப்படவேண்டிய கிராமங்களில், தமிழ்நாடு சட்டங்கள், 26/1963, 30/1963, 24/1969 ஆகியவற்றின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட கிராமங்களைத் தவிர, இதர கிராமங்களில் நில வரித் திட்டம் முடிக்கப்பட்டுவிட்டது.

தமிழ்நாடு சட்டங்கள் 26/1963 மற்றும் 30/1963 ஆகியவற்றின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ள மொத்த கிராமங்களில், பணி நிலுவையிலுள்ள பதினைந்து கிராமங்களில், இரண்டு கிராமங்களில் நில வரித் திட்டப் பணிகளும் மூன்று கிராமங்களில் நில அளவைப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாடு சட்டம் 24/1969-ன்கீழ் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்ட 80,087.74 ஏக்கர் பரப்பளவுள்ள ஜென்மம் நிலங்களில், 28,087.03 ஏக்கர் பரப்பு நிலங்களுக்கு நிலவரித் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சில ஜென்மிகள் மற்றும் நிலக் குத்தகைதாரர்கள் புது தில்லி உச்ச நீதிமன்றத்தின்முன் உரிமையியல் மேல்முறையீடுகள் தாக்கல் செய்தனர். அவர்களில் சிலர் மேல்முறையீட்டு மனுக்களைத் திரும்பப்பெற்றுக் கொண்டதனால் அவர்களது மனுக்களைத் தள்ளுபடி செய்தும், அவர்களது கோரிக்கைகள் குறித்து மேற்படி சட்டத்தின் பிரிவு 9 அல்லது 17-ல் தக்க ஆணை பிறப்பிக்கும்படியும் உச்ச நீதி மன்றம் அரசுக்கு உத்திரவிட்டது. மேலும், சில உரிமையியல் மேல் முறையீடுகள் மற்றும் ஒரு நீதிப் பேராணை மனு தொடர்பான வழக்குகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 9-வது இணைப்பில் சேர்க்கப்பட்டதன் செல்லத்தக்க தன்மையினைப் பரிசீலிக்க 9 நீதிபதிகள் அடங்கிய குழுவிற்கு அனுப்பி வைத்தது. மேலும், நிலாம்பூர் கோவிலகம் என்ற ஜென்மியால் தாக்கல்

செய்யப்பட்ட மற்றொரு நீதிப் பேராணை மனு எண் 408/2003 உச்ச நீதிமன்றத்தின்முன் நிலுவையிலுள்ளது. 9 நீதிபதிகள் அடங்கிய குழு 11-01-2007 தேதிய தீர்ப்பில் அரசியலமைப்பின் 9-வது அட்டவணையில் இச்சட்டங்கள் சேர்க்கப்பட்டதன் செல்லும் தன்மை குறித்து 3 நீதிபதிகள் அடங்கிய உச்சநீதிமன்றக் குழு முடிவு செய்யும் என உத்தரவிட்டுள்ளது. அவ்வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன.

நிலுவையிலுள்ள நில வரித் திட்டப் பணிகளைச் செயல்படுத்த மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் ஒரு நில வரித் திட்ட அலுவலர் உதகமண்டலத்தில் நியமிக்கப்பட்டுள்ளார். கூடலூர் ஜென்மங்களுக்கான நில வரித் திட்ட அலுவலர் 2007-2008 ஆம் ஆண்டில் விசாரணைகள் மேற்கொண்டு 42,752.62 ஏக்கர் நிலங்களை அரசுக்கு மீட்சி செய்து உத்தரவு பிறப்பித்துள்ளார். கூடலூர் ஜென்மம் நிலங்களுக்கான நில அளவை மற்றும் நில வரித் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஒரு கூடுதல் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் இரண்டு வட்டாட்சியர்கள் உள்ளிட்ட இருபத்தைந்து பணியிடங்களை அரசாணை (நிலை) எண் 772, வருவாய் (எஸ்.எஸ்.1-1), நாள்: 27-12-2007-ல் அரசால் ஒப்பளிப்பு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண் 1971 (வருவாய்த் துறை), நாள்: 14-10-1988-ன்படி, நத்தம் நில வரித் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் எடுத்துக்கொள்ளப்பட்டு 188 வட்டங்களில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம், தோவாளை, விளவங்கோடு, கல்குளம் ஆகிய வட்டங்களிலும், நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலம், குன்னூர், கோத்தகிரி, குந்தா, கூடலூர் மற்றும் பந்தலூர் வட்டங்களிலும் நத்தம் நில வரித் திட்டப் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

அரசாணை (நிலை) எண் 113, வருவாய்த் துறை, நாள் 2-2-1995 மற்றும் அரசு கடித எண் 67854/எஸ்.எஸ்.II(1)/98-21 & 22, நாள்: 5-2-2004 ஆகியவற்றின்படி 67 மலைக் கிராமங்களில் வருவாய்ப் பின் தொடர்பணி தொடங்கப்பட்டு இதுவரை 58 கிராமங்களில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 9 கிராமங்களில் பணி நடைபெற்று வருகிறது.

ஆறு மாநகராட்சிகள் (பழைய சென்னை நகரம் நீங்கலாக) மற்றும் அனைத்து நகராட்சிகளிலும் வருவாய்ப் பின் தொடர்ப் பணிகளை அறிமுகப்படுத்த அரசாணை 1 (டி) எண் 103, வருவாய்த் (எஸ்.எஸ்.II)



துறை, நாள்: 1-3-2007-ல் அரசு உத்தரவிட்டது. அதன்படி முதற்கட்டமாக கீழ்க்காணும் 10 நகரங்களில் வருவாய்ப் பின் தொடர்ப் பணிகள் 1-7-2007 முதல் துவங்கப்பட்டுள்ளன:

1. வாலாஜா (வேலூர் மாவட்டம்)
2. ஆரணி (திருவண்ணாமலை மாவட்டம்)
3. பண்ருட்டி (கடலூர் மாவட்டம்)
4. அறந்தாங்கி (புதுக்கோட்டை மாவட்டம்)
5. துறையூர் (திருச்சி மாவட்டம்)
6. பெரியகுளம் (தேனி மாவட்டம்)
7. பழனி (திண்டுக்கல் மாவட்டம்)
8. தூத்துக்குடி (தூத்துக்குடி மாவட்டம்)
9. பவானி (ஈரோடு மாவட்டம்)
10. ராசிபுரம் (நாமக்கல் மாவட்டம்).

வக்ஃப் சொத்துக்களை கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2008 ஏப்ரல் 11

## அத்தியாயம் 5

## நிலச் சீர்திருத்தம்

வேளாண்மை நில உடைமைகளில் ஏற்றத் தாழ்வுகளைப் போக்கிடும் நோக்கத்துடன் நில உடைமைக்கு ஓர் உச்சவரம்பு நிர்ணயித்து, உச்சவரம்பிற்கு மேல் உபரியாக உள்ள நிலங்களை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு வழங்கும் நோக்கத்துடன் 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 58/61) இயற்றப்பட்டது.

ஆரம்பத்தில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட குடும்பத்திற்கு 30 தர ஏக்கரும், ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் கூடுதலாக ஐந்து தர ஏக்கரும், ஆனால் ஒரு குடும்பத்திற்கு மொத்தம் 60 தர ஏக்கர் என உச்சவரம்பாக நிர்ணயிக்கப்பட்டது. அதுதவிர, குடும்பத்தின் பெண் உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் சீதன நில உச்சவரம்பாக 10 ஏக்கரும் நிர்ணயிக்கப்பட்டது, முதன்மைச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பு அளவு மற்றும் விதிமுறைகளில் நாளடைவில் பல்வேறு மாறுதல்கள் செய்யப்பட்டு சீர்படுத்தப்பட்டது.

1970 ஆம் ஆண்டில் திருத்தச் சட்டம், 1970-ன்படி (தமிழ்நாடு சட்டம் 17/70) ஒரு குடும்பம் வைத்திருக்கக்கூடிய நில உச்சவரம்பு 30 தர ஏக்கரிலிருந்து 15 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது. மேலும், முதன்மைச் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 58/61) ஒரு குடும்பத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட ஒட்டுமொத்த உச்சவரம்பான 60 தர ஏக்கர் அளவு, தமிழ்நாடு சட்டம் 20/72-ன்மூலம் 40 தர ஏக்கராகக் குறைக்கப்பட்டது. பின்னர் இந்த அளவு, தமிழ்நாடு சட்டம் 39/72-ன்மூலம் மேலும் குறைக்கபட்டு, 30 தர ஏக்கராக மாற்றப்பட்டது.

இன்றைய தேதியில் நடைமுறையில் உள்ள உச்சவரம்பு அளவு பின்வருமாறு:—

| வ. எண் | வகைபாடு | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | ஐந்து நபர் கொண்ட ஒரு குடும்பத்திற்கு | 15 தர ஏக்கர் |
| | (i) ஒவ்வொரு கூடுதல் உறுப்பினருக்கு | 5 தர ஏக்கர் |
| | (ii) மொத்த உச்சவரம்பு | 30 தர ஏக்கர் |



08 ஏப்ரல் 11]

| | | |
|---|---|---|
| 2. | 1-3-1972–ல் இருந்த தர்மஸ்தாபன நம்பகங்களுக்கு | 5 தர ஏக்கர் |
| 3. | 1-3-1972-க்குப் பிறகு எந்த நம்பகமும் விவசாய நிலங்கள் பெறுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. | - |

1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்த்திருத்த (நில உச்சவரம்பு ர்ணயித்தல்) சட்டத்தின்கீழ் (திருத்தப்பட்டவாறு) அரசு கயகப்படுத்தும் மிகை நிலங்கள், 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு லச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின்கீழ் முன்னுரிமை டிப்படையில் தகுதியுடைய நிலமற்ற நபர்களுக்கு ஒப்படை சய்யப்படுகிறது.

மிகை நிலமென அறிவிப்பு செய்யப்பட்ட மொத்த பரப்பின் வரம், அதில் ஒப்படை செய்யப்பட்ட நிலம், பயனாளிகளின் ண்ணிக்கை மற்றும் நிலச் சீர்திருத்தச் சட்டம் தோற்றுவிக்கப்பட்ட ாளிலிருந்து 31-3-2008 வரையில் நிலுவையிலுள்ள நீதிமன்ற ழக்குகளில் நிலப்பரப்பு மற்றும் ஒப்படை வழங்கப்படவுள்ள தமுள்ள நிலப்பரப்பு ஆகியவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

**கை நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு, ஒப்படை செய்யப்பட்ட லப்பரப்பு மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை குறித்த விவரப் பட்டியல் 1-3-2008-ன்படி)**

| வ. எண் | இனம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மிகை வெற்று நிலமென அறிவிக்கப்பட்ட மொத்த நிலங்கள் | 2,08,207 |
| 2. | ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் | 1,99,904 |
| 3. | பயனாளிகளின் எண்ணிக்கை | 1,50,159 |

[2008 ஏப்ரல் 11

**உபரிநிலம் ஒப்படை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை விவரப் பட்டியல் (31-3-2008 வரை)**

| பயனடைந்தோர் (இனவாரியாக) | நபர்கள் | விழுக்காடு | ஒப்படை செய்யப்பட்ட பரப்பு (ஏக்கரில்) | விழுக்காடு |
|---|---|---|---|---|
| ஆதி திராவிடர் | 66,333 | 44.18 | 71,192 | 37.53 |
| பழங்குடியினர் | 236 | 0.16 | 320 | 0.17 |
| மற்றவர்கள் | 83,590 | 55.66 | 1,18,207 | 62.30 |
| மொத்தம் | 1,50,159 | 100 | 1,89,719 | 100 |

**ஒப்படை வழங்கப்படவேண்டிய மீதமுள்ள நிலங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகளுக்குட்பட்ட நிலப்பரப்புகள் விவரப் பட்டியல்:—**

| வ. எண் | இனம் | நிலப்பரப்பு (ஏக்கரில்) |
|---|---|---|
| 1. | மிகை நிலமாக அறிவிக்கப்பட்ட நிலப்பரப்பு | 2,08,207 |
| 2. | நிலமற்ற ஏழைகளுக்கு ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு | 1,89,719 (இனம் ஒன்றில் உள்ளதில் 91 விழுக்காடு) |
| 3. | 1965 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (மிகை நில விநியோகம்) விதிகளின் விதி 13-ன்கீழ் பொது நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலப்பரப்பு | 10,185 (இனம் ஒன்றில் உள்ளதில் 4.9 விழுக்காடு) |
| 4. | நிலுவை | 8,303 (இனம் ஒன்றில் உள்ளதில் 4 விழுக்காடு) |
| 5. | உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம், நில ஆணையர், நிலத் தீர்ப்பாயம் மற்றும் சார் நீதிமன்றங்கள் ஆகியவை பிறப்பித்துள்ள தடையாணைக்குட்பட்ட பரப்பு | 8,044 (இனம் ஒன்றில் உள்ளதில் 3.9 விழுக்காடு) |
| 6. | ஒப்படை செய்யப்படவேண்டிய பரப்பு | 259 |



2008 ஏப்ரல் 11]

*1-4-2007 முதல் 31-3-2008 வரை 600 நபர்களுக்கு 659 ஏக்கர் மிகை நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டுள்ளன. இதில் 229 ஆதி திராவிட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 193 ஏக்கர் நிலமும் அடங்கும்.*

**5.2 குடியிருப்புச் சட்டங்கள்**

**(i) 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 25/59)**

இச்சட்டம் குத்தகைதாரர்களை குத்தகை பாக்கி நிலுவை நிலத்திற்கோ அல்லது அந்நிலத்தில் விளையும் பயிர்களுக்கோ பாதிப்பு ஏற்படும் வகையில் செயல்படுதல், நிலத்தில் பயிர் விளைவிக்காமல் இருத்தல், வேளாண்மை அல்லது தோட்டப்பயிர் அல்லாத காரணத்திற்காக நிலத்தினை உபயோகித்தல், நில உரிமையாளரின் உரிமையைப் பறித்தல் தவிர வேறு காரணங்களுக்காக அவர்கள் குத்தகை சாகுபடி செய்யும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படுவதைத் தடை செய்து பாதுகாப்பு அளிக்கிறது. வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் குத்தகைதாரர்கள் பாதிக்கப்படும்பொழுது, குத்தகை பாக்கித் தொகையை வசூலிப்பதை தனிச் சட்டம்மூலம் அவ்வப்போது தள்ளி வைத்து நிவாரணம் வழங்கப்படுகிறது.

**(ii) 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 24/56)**

இச்சட்டம் தற்போது ஆண்டொன்றிற்கு நிலச் சொந்தக்காரருக்கோ அல்லது நம்பகங்களுக்கோ (Trust) பயிரிடும் குத்தகைதாரர்களால் செலுத்தப்படவேண்டிய குத்தகைத் தொகையை மொத்த விளைச்சலில் 25 விழுக்காடு என நிர்ணயிக்க வகை செய்கிறது. குத்தகையைப் பணமாகவோ, விளைபொருளாகவோ செலுத்தலாம். நில உரிமையாளர்கள் நில வரி போன்ற இதர வரிகளைச் செலுத்தவேண்டும். பயிரிடுவதற்கான செலவுகள் முழுவதையும் குத்தகைதாரர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**(iii) 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு பொது நம்பகங்கள் (வேளாண்மை நிலங்களின் நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 57/61)**

பொது நம்பகங்கள் தங்களுடைய சொந்த சாகுபடிக்கு அதிகபட்சமாக 20 தர ஏக்கர் நிலம் வரை வைத்துக்கொள்ளவும்,

[2008 ஏப்ரல் 11

அதற்கு மேலுள்ள நிலத்தை கட்டாயமாகப் பிறருக்கு குத்தகைக்கு விடவும் இச்சட்டத்தின்மூலம் வகை செய்யப்பட்டுள்ளது.

**(iv) 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர்கள் நியாய ஊதியங்கள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 19/69)**

இச்சட்டத்தில் நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு பல்வேறு விவசாயப் பணிகளுக்கான நியாய ஊதியம் நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலை செய்யும் ஆண் தொழிலாளருக்கு ஊதியம் ரூ.54/- முதல் ரூ.100/- வரை எனவும், நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலை செய்யும் பெண் தொழிலாளர்களுக்கு ரூ. 45/- எனவும், வழங்க உறுதி செய்யப்பட்டுள்ளது.

**(v) 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமைகள் ஆவணம்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 10/69)**

இச்சட்டத்தில் பயிரிடும் குத்தகைதாரர்கள் தங்களைக் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்து கொள்வதன்மூலம் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க முடிகிறது. வருவாய் வட்டாட்சியர்கள் இச்சட்டத்தின்கீழ் பதிவு அலுவலர்களாகச் செயல்படுவர். அவர்களுக்கு உதவி புரிய அலுவல் சார்பற்றவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. 31-3-2008 நிலவரப்படி, 2,59,575 நபர்கள் குத்தகைதாரர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**(vi) 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உடைமை உரிமை வழங்குதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 40/71) திருத்தியவாறு**

இச்சட்டத்தில் 19-6-1971 அன்று சொந்த வீட்டுமனை இல்லாத, ஆனால் பிறர் நிலங்களில் குடியிருப்பு அமைத்து அனுபவித்து வருபவர்களுக்குக் குடியிருப்பு உரிமை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. 1976 ஆம் ஆண்டைய தமிழ்நாடு கிராமப்புற கைவினைஞர்கள் (குடியிருப்பு அனுபோக உரிமை வழங்குதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 38/76) 1-7-1975-ல் குடியிருப்புகளை அனுபோகத்தில் வைத்துள்ள சொந்த வீட்டுமனை இல்லாத கிராமப்புற கைவினைஞர்களுக்கும் இச்சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இரு சட்டங்களின்கீழும் 1-4-1990 வரை குடியிருப்பு கால அளவை நீட்டிக்க சட்டம் 39/90-ன்கீழ் வகை



2008 ஏப்ரல் 11]

செய்யப்பட்டுள்ளது. 31-3-2008 வரையில் உடைமை உரிமை வழங்கப்பெற்ற குடியிருப்பு அனுபோகதாரர்களின் மொத்த எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு:—

| வ. எண் | இனம் | நபர்களின் எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | | சட்டம் 40/71 | சட்டம் 38/76 | சட்டம் 39/90 | |
| 1. | ஆதி திராவிடர் | 1,00,218 (54.9%) | 62 (14.00%) | 1,038 (59.72%) | 1,01,318 (54.84%) |
| 2. | பழங்குடியினர் | 2,317 (1.27%) | 17 (3.85%) | 412 (23.7%) | 2,746 (1.49%) |
| 3. | ஏனையோர் | 80,022 (43.83%) | 363 (82.15%) | 288 (16.58%) | 80,673 (43.67%) |
| 4. | மொத்தம் | 1,82,557 (100.00%) | 442 (100.00%) | 1,738 (100.00%) | 1,84,737 (100.00%) |

**5.3 நிலத் தீர்ப்பாயங்கள்:**

சார்பு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நிலச் சீர்திருத்த வழக்குகளை விரைந்து முடிவு செய்வதற்காக 1980 ஆம் ஆண்டில் மாவட்ட வருவாய் அலுவலரின் தலைமையில் நிலத் தீர்ப்பாயம் நிறுவப்பட்டது. இத்தீர்ப்பாயத்திற்கான மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடம் 14-08-2007 முதல் கலைக்கப்பட்டுவிட்டது. நிலத் தீர்ப்பாயத்தின் அதிகாரத்தினை நிலச் சீர்திருத்த ஆணையருக்கு வழங்குவது குறித்து கருத்துரு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

**5.4 வருவாய் நீதிமன்றங்கள்:**

தற்போது மாநிலம் முழுவதும் 6 வருவாய் நீதிமன்றங்கள் முறையே கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தனித் துணை ஆட்சியர்களின்கீழ் செயல்பட்டு வருகின்றன. வருவாய் நீதிமன்ற தனித் துணை ஆட்சியர்கள் 1969 ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை உரிமை ஆவணச்) சட்டத்தின் கீழான வட்டாட்சியர்களின் ஆணைக்கு எதிராகத் தொடரப்படும் வழக்கு மனுக்களை விசாரணை செய்யும் பணியில் மேல்முறையீட்டு அதிகாரிகளாகச்

[2008 ஏப்ரல் 11

செயல்படுகின்றனர். மேலும், மேலே குறிப்பிட்டுள்ள பல்வேறு குடிவாரச் சட்டங்களையும் அவர்கள் கவனித்து வருகின்றனர்.

**5.5 தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம்:**

பதிமூன்றாவது சட்டப் பேரவையில் மேதகு ஆளுநரின் உரையில் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 509, வருவாய் [நி.சீ.1(2)] துறை, நாள் 7-8-2006-ன்படி தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்திற்குப் பதிலாக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம் திட்டம், 2006 என்ற புதிய திட்டத்தைச் செயல்படுத்த உத்தரவிடப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம், 2006 தமிழ்நாடு அரசிதழ் எண் 265, சிறப்பு வெளியீடு, நாள் 20-9-2006-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட சட்டத்திற்கான விதி, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் - விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) திட்டம் மற்றும் தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைத்தல் ஆகியவற்றிற்கான ஆணைகள் முறையே அரசாணை (நிலை) எண் 852, வருவாய்த் [நி.சீ.1(2)] துறை, நாள் 29-12-2006, அரசாணை (நிலை) எண் 853, வருவாய்த் [நி.சீ.1(2)] துறை, நாள் 29-12-2006 மற்றும் அரசாணை (நிலை) எண் 42, வருவாய்த் [நி.சீ.1(2)] துறை, நாள் 18-1-2007 ஆகியவற்றில் வெளியிடப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் 22-12-2006 முதல் அமலுக்கு வந்துள்ளது.

**(ii) தகுதிகள்:**

2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5.0 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் வைத்துக் கொண்டு, நேரடியாக அந்நிலத்தில் சாகுபடி செய்யும் 18 வயது நிரம்பிய ஆனால் 65 வயது நிரம்பாத யாதொரு விவசாயத் தொழிலாளர் அல்லது விவசாயி (பயிரிடும் குத்தகைதாரர் உட்பட) இத்திட்டத்தில் உறுப்பினராகச் சேர்வதற்குத் தன் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம்.

**(iii) நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள்:**

மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையின்கீழ் வட்ட அளவில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) இத்திட்டத்தைச்



2008 ஏப்ரல் 11]

செயல்படுத்துவார். மாநில அளவில் நிலச் சீர்திருத்த ஆணையர், உறுப்பினர்-செயலர், தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் என்கிற அளவில் இத்திட்டத்தின் செயலாக்கத்தைக் கண்காணிப்பார். கல்வி மற்றும் மகப்பேறு / கருச்சிதைவு / கருக்கலைப்பு ஆகிய உதவிகளைப் பொறுத்தவரை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் செயல்படுத்துகிறார்கள்.

**(iv) அளிக்கப்படும் உதவிகள்**

இத்திட்டத்தின்கீழ் உறுப்பினர்களுக்கு, தகுதியின் அடிப்படையில், திருமணம், மகப்பேறு, கருச்சிதைவு மற்றும் கருக்கலைப்பு, விபத்து மரணத்திற்கு வாரிசுதாரர்களுக்கு நிதியுதவி, விபத்தால் உடல் உறுப்புகள் இழப்பு, இயற்கை மரணம், ஈமச்சடங்கு முதலியவற்றிற்கான உதவித் தொகையும், 60 வயதை அடைந்த உறுப்பினர்களுக்கு ஓய்வூதியமும் வழங்கப்படுகிறது. உறுப்பினர்களைச் சார்ந்தவர்களுக்கு திருமணம் மற்றும் 10 ஆம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு, தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில் கல்வி வரை கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

**(v) செயலாக்கம்**

இத்திட்டம் துவங்கிய 22-12-2006 முதல் 31-3-2007 வரையிலான காலத்தில் இத்திட்டத்தின்கீழ் 25,618 பயனாளிகளுக்கு ரூ.7.63 கோடி நிதியுதவி வழங்கப்பட்டது. திட்டத் துவக்கம் முதல் 28-3-2008 வரை 2,45,420 பயனாளிகளுக்கு ரூ.130.55 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் அதன் உறுப்பினர்களுக்கு 72,85,323 குடும்ப அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு அதன்மூலம் 1,66,50,318 உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

**5.6 தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம், 1966**

அரசிற்கு வருவாயை அதிகப்படுத்தும் நோக்கத்துடனும், அதிக நிலங்கள் சிலர்வசம் குவிந்து சேர்வதைத் தடுக்கும் முகமாகவும் தமிழ்நாடு நகர்ப்புற நில வரிச் சட்டம், 1966, முதன் முதலில் 1-7-1963 முதல் சென்னை நகரில் அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின்கீழ் எல்லா நகர்ப்புற நிலங்களுக்கும் சந்தை மதிப்பில், 0.4 சதவிகிதம் நகர்ப்புற நில வரியாக விதிக்கப்பட்டது. மதுரை, கோயம்புத்தூர், சேலம், மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களுக்கு 1-7-1971 முதல் இச்சட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இச்சட்டத்தில் 1975 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டு, 1-7-1975 முதல் சென்னை நகர

[2008 ஏப்ரல் 11

எல்லையிலிருந்து 16 கி.மீட்டருக்கு உட்பட்ட புறநகர்ப்பகுதிக்கு நீட்டிக்கப்பட்டது. பின்னர் இச்சட்டம் திருநெல்வேலி மாநகராட்சிப் பகுதிக்கு 1-7-1981 முதலும், மேலும் 23 நகராட்சிகளுக்கு 1-7-1991 முதலும் விரிவுபடுத்தப்பட்டது. நகர்ப்புற நில வரிச் சட்டம் அமலில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் 1-7-1981 நாளைய சந்தை மதிப்பை அடிப்படையாகக் கொண்டு 1-7-1991 முதல் வரி விதிக்கப்படுகிறது.

**வரி விதிப்பு விகிதங்கள் பின்வருமாறு:—**

| வ. எண் | சென்னை புறநகர்ப்பகுதி தவிர்த்த ஏனைய நகர்ப்புற நிலங்கள் | | சென்னை புறநகர்ப்பகுதியில் உள்ள நிலங்கள் | |
|---|---|---|---|---|
| 1. | முதல் 2 மனைகள் | வரி இல்லை | முதல் 3 மனைகள் | வரி இல்லை |
| 2. | 2 மனைக்கு மேல் 5 மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவிகிதம் | 3 மனைக்கு மேல் 7 மனைக்குள் | சந்தை மதிப்பில் 0.7 சதவிகிதம் |
| 3. | 5 மனைக்கு மேல் 10 மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவிகிதம் | 7 மனைக்கு மேல் 10 மனைக்குள் | சந்தை மதிப்பில் 1 சதவிகிதம் |
| 4. | 10 மனைக்கு மேல் 20 மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவிகிதம் | 10 மனைக்கு மேல் 20 மனைக்குள் | சந்தை மதிப்பில் 1.5 சதவிகிதம் |
| 5. | 20 மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவிகிதம் | 20 மனைக்கு மேல் | சந்தை மதிப்பில் 2 சதவிகிதம் |

இந்தச் சட்டத்தின் பிரிவு 29-ன்கீழ் மத்திய, மாநில அரசு நிலங்கள், மாநில அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனை நிலங்கள், மயான பூமி நிலங்கள், பொதுச் சாலைகளாகப் பயன்படும் நிலங்கள், பொதுப் பூங்காக்கள், நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் அமைந்துள்ள நிலங்கள், ஆதரவற்றோர் மற்றும் அனாதை விடுதிகள் அமைந்துள்ள நிலங்கள் ஆகியனவற்றுக்கு நகர்ப்புற நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. பொது வழிபாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் நிலங்கள், குடிசைப் பகுதி என அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்கள் மற்றும் தமிழக அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளி, கல்லூரி மற்றும் பல்கலைக்கழகம் அமைந்துள்ள நிலங்கள் ஆகியவற்றுக்கும் நகர்ப்புற நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது.



2008 ஏப்ரல் 11]

அறக்கட்டளைகள், மத சம்பந்தமான நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்கள் நகர்ப்புற நில வரி செலுத்துவதன் காரணமாக மிகப் பெரிய சிரமங்களை சந்திக்கும்போது அந்த நிறுவனங்கள் மனுச் செய்து கொண்டால், அவை பரிசீலனை செய்யப்பட்டு உரிய இனங்களில் அரசு பிரிவு 27(1)-ன்கீழ் தகுதி அடிப்படையில் வரி விலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும்

(i) சொந்தக் குடியிருப்பு வீடுகள் உள்ள நிலங்களுக்கும், இசை அரங்குகள், பொழுதுபோக்குக் கூடங்கள் மற்றும் திரைப்பட படப்பிடிப்பு நிலையங்கள் அமைந்துள்ள நிலங்கள் ஆகியவற்றிற்கு 50 சதவிகிதம் வரிச் சலுகையும் வழங்கப்படுகிறது.

(ii) சிறு தொழில் சான்று பெற்ற நில உரிமையாளர் நடத்தும் தொழிற்சாலை நிலங்களுக்கு 25 சதவிகிதம் வரிச் சலுகை வழங்கப்படுகிறது.

(iii) திரை அரங்குகளுக்கும் மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கும் 10 சதவிகிதம் வரிச் சலுகை வழங்கப்படுகிறது.

இம்மாநிலத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நில வரி திருத்தச் சட்டம் 1991-ன்கீழ் 29-2-2008 வரை 1,81,676 இனங்களில் ரூ.39.75 கோடி நகர்ப்புற நில வரியாக வரிவிதிப்பு செய்யப்பட்டது. இவற்றில் பல பிரிவுகளில் விலக்களிக்கப்பட்ட இனங்கள் தவிர நடப்பு ஆண்டு வரித் தொகை ரூ.18.35 கோடி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 2007 முதல் பிப்ரவரி 2008 வரை ரூ.14.20 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. 1-3-2008 நாள் நிலவரப்படி வசூல் செய்யப்படவேண்டிய நிலுவைத் தொகை ரூ.80.56 கோடி ஆகும்.

**தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978.**

நகர்ப்புற கூட்டுப் பகுதிகளில் நகர்ப்புற நிலம் ஒரு சிலரிடம் குவிந்து கிடந்து அவர்கள் இலாப நோக்கத்துடன் வாங்குவது மற்றும் விற்பதைத் தடுத்து நிறுத்தும் வகையில் நகர்ப்புற வெற்று நிலங்களுக்கான உச்சவரம்பை நிர்ணயிக்கும் நோக்குடன் தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1978-ல் (தமிழ்நாடு சட்டம் 24/1978) (1976 ஆம் ஆண்டின் மைய அரசுச் சட்டம் 24-ஐ அடிப்படையாகக் கொண்டு) இயற்றப்பட்டது.

2008 ஏப்ரல் 11]

இந்த முதன்மைச் சட்டம், தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு (ம) முறைப்படுத்துதல்) நீக்கறவுச் சட்டம் 1999 (தமிழ்நாடு சட்டம் 20/1999)-ன் மூலமாக 16-6-1999 முதல் நீக்கறவுச் செய்யப்பட்டது. ஆனால், 16-6-1999 வரை ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்டு அரசு வசம் சுவாதீனம் பெறப்பட்ட நிலங்களுக்கு இந்நீக்கறவுச் சட்டம்மூலம் காப்புக்கூறு வழங்கப்பட்டுள்ளது.

முதன்மைச் சட்டத்தின்கீழ் இச்சட்டம் இயற்றப்பட்ட நாள் முதல் இதுவரை 2,472 ஹெக்டேர் மிகை வெற்று நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில், 1,168 ஹெக்டேர் மிகை வெற்று நிலம் ஒதுக்கீடு செய்வதற்காக கைவசம் உள்ளது.



2008 ஏப்ரல் 11]

## இணைப்பு III

*(135 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 26 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2008-2009

### 1. முன்னுரை

### 1.1 உறைவிடங்களின் தொடக்க நிலையும் வளர்ச்சியும்:

கற்கால மனிதன் படிப்படியாக குகைகளைச் சீர்திருத்தி அவற்றைத் தான் வாழ்வதற்கு ஏற்ற இடமாக மாற்றி வந்திருக்கிறான். இத்தகைய முயற்சிகளிலிருந்து கற்காலத்திலிருந்தே மனிதன் உறைவிடத்தின் பெரும் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறான் என்பது நமக்குத் தெளிவாகிறது. தன்னுடைய வாழ்விடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற உள்ளார்ந்த ஆர்வம் மனிதனிடையே இருந்த காரணத்தினால் மரம், கற்கள், கூரை வேய்வதற்கு பயன்படுத்தக்கூடிய இலைகள், புற்கள் மற்றும் பனையோலை ஆகியவற்றைக் கொண்டு வீடுகள் அமைத்துக் கொள்ளும் முறை பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. தன்னுடைய உறைவிடத்தை மேன்மேலும் மேம்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற வேட்கையானது மனிதனிடத்தில் நாளுக்குநாள் மேலோங்கி நின்றதால் வீட்டினை அமைத்துக்கொள்ளும்போது, அதனுடைய அமைப்பின் கூறுபாடுகள், வசதியளிக்கும் தன்மை, இயற்கையின் இடர்ப்பாடுகளிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றைப் பற்றிச் சிந்தித்து செயல்படத் தொடங்கினான்.

### 1.2 கட்டுமானத் திறன் வளர்ச்சியும் உறைவிட மேம்பாடும்:

பறவைகள்கூடத் தங்களுக்காகக் கூடுகளை அமைத்துக் கொள்ளவேண்டுமென்ற இயற்கையான உணர்வு கொண்டவை என்பதை இத்தருணத்தில் குறிப்பிட்டால் அது சாலப் பொருந்தும். சின்னஞ்சிறு குச்சிகள், உலர்ந்த வைக்கோல் போன்றவற்றை மட்டுமே எடுத்துச் செல்வதற்கு ஏற்றவாறு தாம் பெற்றுள்ள சிறிதளவு ஆற்றலைக் கொண்டே அவை ஒழுங்கான முறையில் கூடுகளை அமைத்துக்கொள்கின்றன. மேலும், தம்முடைய அனுபவத்திலிருந்து கூட்டினுடைய அமைப்பினை ஏற்படுத்திக்கொள்வதோடு, காற்று,

மழை போன்ற இயற்கையின் அனுகூலமற்ற சக்திகளிலிருந்து தங்களுக்குச் சிறந்த பாதுகாப்பு கிடைக்கும்வகையில் கூடுகளைக் கட்டிக்கொள்கின்றன. மனிதன் தன்னுடைய முன்னோர்களின் அனுபவத்திலிருந்து சிறந்த முறைகளைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறான். மேலும், கட்டுமானத் திறன் தலைமுறை தலைமுறையாக பயிற்றுவிக்கப்பட்டு வளர்ந்து வருவதால், மரம், கற்கள் ஆகியவற்றை வடிவமைத்துக் கொள்வதற்கான கருவிகளைப் பயன்படுத்தத் தொடங்கியதோடு தங்களுக்கும் நாளுக்குநாள் வீடுகளின் பயன்பாடு கூடிக்கொண்டே இருக்குமாறு வீட்டினைக் கட்டிக்கொண்டனர். மேலும், பொதுவாக பாதுகாப்பான வாழ்விற்கு ஊறு விளைவிக்கக்கூடிய அச்சுறுத்தும் சக்திகளிலிருந்தும் குறிப்பாக சமூக விரோதிகள் மற்றும் தீயவர்களால் ஏற்படக்கூடிய திருட்டு, வன்முறைத் தாக்குதல் ஆகியவற்றிலிருந்தும் சிறந்த பாதுகாப்பு அளிக்கக்கூடிய உறைவிடத்தினை தங்களுடைய குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர்களுக்கும் ஏற்படுத்திக் கொடுக்க முற்பட்டனர். மனிதன் வாழ்வதற்கு உறைவிடம் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதப்பட்டதை நம்முடைய கடந்தகால அனுபவத்திலிருந்து தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. ஆகையினால் உணவு, உடைக்கு அடுத்தபடியாக அமைதியான வாழ்விற்கு உறைவிடம் இன்றியமையாததாக இருப்பதால் மனிதனுடைய அத்தியாவசியத் தேவைகளில் உறைவிடத்திற்கு மிகுந்த முன்னுரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

### 1.3 மனிதக் குடியிருப்புகள் (Human Settlements):

மனித நாகரிகம் முன்னேற்றம் அடையத் தொடங்கிய பிறகு மக்கள் தங்களுடைய உறைவிடங்களை ஒழுங்கான முறையில் அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதை உணர முற்பட்டனர். ஏனெனில், அப்பொழுதுதான் தங்களுடைய வாழ்க்கைக்கு எந்த விதமான தீங்கும் நேராவண்ணம் சிறந்த வசதியினை அளிக்கக்கூடிய இடங்களில் குடியேறி வாழமுடியும் என்பதை உணர்ந்தனர். பெரும் அளவிலான குடும்பங்கள் சில இடங்களில் குடியமர்ந்த பிறகு இத்தகைய ஒவ்வொரு இடமும் குடியிருப்பாக வளரத் தொடங்கியது. ஆண்களும், பெண்களும் தங்களுடைய சுற்றத்தினருடன் குடியமர்ந்து வாழும் இடங்கள், "மனிதக் குடியிருப்புகள்" (Human settlements) என்று பெயர் பெற்றன. இவ்விடங்களில் மனிதர்கள் தங்களுக்குத் தேவையான





பொருளாதார நலன், சமூக இணக்கம், வாழ்வின் சீர்மை மற்றும் வளமை ஆகியவற்றை எதிர்நோக்கி தங்களுடைய குடியிருப்புப் பகுதிகளை ஏற்படுத்திக் கொண்டனர். சில குடும்பங்கள் மட்டும் வாழ்வதற்கான சிறிய, சிறிய குடியிருப்புப் பகுதிகள், சேர்ந்து கூட்டாக வாழும் தன்மை மற்றும் பொதுவான நன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரிய குடியிருப்புகளாக நாளடைவில் வளரத் தொடங்கின. இத்தகைய குடியிருப்புப் பகுதிகள் ஒவ்வொன்றும் தனித்தனி பெயர்கொண்டு ஊர்கள் என்ற நிலையில் சிறப்புப் பெற்றன. மக்கள் வாழும் பகுதிகள் தமிழில் 'நத்தம்' என்றழைக்கப்பட்டன. மழைநீர் வடிகால், நன்கு அமையப்பெற்ற தெருக்கள், பொதுமக்கள் அனைவருக்கும் பயனளிக்கும் பொது வசதிகள் ஆகியவற்றை 'நத்தம்' என்றழைக்கப்படும் பகுதிகளில் ஏற்படுத்திக் கொண்டனர். அறிவு வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலையுடன் ஆரோக்கியமும், மகிழ்ச்சியும் நிறைந்த வாழ்விற்குத் தேவையான வசதிகளுடன் அமைந்த பகுதி என்பதே நத்தம் என்ற சொல்லின் தெளிவான பொருளாகும்.

### 1.4 கூடிவாழும் நெறியும் நகரங்களின் தோற்றமும்:

நீடித்து நிற்கும் உறுதிப்பாட்டுடன் உறைவிடங்களை உருவாக்கிக் கொள்ளும் முறை வளரத் தொடங்கியபின் பொதுவான வசதிகளுடன் குடியிருப்புப் பகுதிகளை அமைத்து வாழ்வதுதான் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக அமைகிறது என்பதை மக்கள் உணர முற்பட்டனர். மேலும், இத்தகைய அமைப்புமுறையே, கூட்டுமுயற்சிகளின் வாயிலாக அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு தங்களுடைய உடல் உழைப்பு பிற ஆதாரங்கள் ஆகியவற்றை கூட்டாகப் பகிர்ந்துகொண்டு நன்மை பெறுவதற்கு ஏற்ற வழிமுறை என்பதையும் அறிந்து கொண்டனர். இத்தகைய குடியிருப்புப் பகுதிகள்தான், பொதுமக்களால் உருவாக்கப்பட்டு பேணிப் பயன்படுத்தப்படும் குடிநீர் போன்ற வசதிகளுடன் வீடுகள் செவ்வனே அமையப்பெற்ற பகுதிகளாக வளர்ச்சி அடைகின்றன. மக்கள்தொகை இப்பகுதிகளில் கணிசமான அளவிற்குப் பெருகும்போது இவை சாலைகளின் தொகுப்பு, பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் போன்ற பொது இடங்கள் நிறைந்த உள்கட்டமைப்பு வசதிகளைப் பெற்றுள்ள சிறு நகரங்களாக வளர்ச்சி பெறுகின்றன.

## 1.5 நகரங்களின் வளர்ச்சியும் உலகளாவிய நகர்மயமாதலும்:

காலப்போக்கில் பொருளாதாரம் மற்றும் வணிகம் ஆகியவற்றாலும் அரசியல், சமுதாயம் மற்றும் கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சிகளாலும் சில நகரங்கள் பெரிதும் முக்கியத்துவம் பெற்றன. அதன் காரணமாக நகரங்களுக்கு அண்மையில் உள்ள பகுதிகளில் வாழ்ந்த மக்கள் இந்த நகரங்களோடு நெருங்கிய தொடர்புகொள்ள நேர்ந்ததால் அவற்றால் பெரிதும் ஈர்க்கப்பெற்றனர். இத்தகைய குடிபெயரும் நிகழ்வால் நகர மையங்கள் தோன்றலாயின. தொடக்க நிலையில் சிறு நகரமாக இருந்த இம்மையங்கள், பரப்பளவு, மக்கள்தொகை செறிவு (Population density) வணிகம் மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளிலும் விரிவடைந்தன. கடந்த இரு நூற்றாண்டுகளாக உலக அளவில் இந்த நகரமயமாதல் என்பது மக்கள் பெருகிவாழும் இடங்களில் ஏற்பட்டுள்ள மிக முக்கியமான மாற்றமாகும்.

**1.6** 19-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக மக்கள்தொகையில் 5 விழுக்காடு மக்களே 1,00,000 மக்கள்தொகைக்கு மேல் உள்ள நகரங்களில் வாழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மக்கள்தொகை ஆய்வியல் வல்லுநர்கள் 2007 ஆம் ஆண்டில் நகரங்களில் வாழும் மக்கள் எண்ணிக்கை உலக மக்கள்தொகையில் 50 விழுக்காட்டைத் தாண்டியுள்ளது என்று குறிப்பிடுகின்றனர். வளரும் நாடுகளில் நகர மக்கள்தொகைப் பெருக்கம் மூன்று மடங்கு உயர்ந்துள்ளது. இந்த நிலை அண்மைக் காலங்களில் வெகு வேகமாக வளர்ந்துவரும் நகர மக்கள்தொகைப் பெருக்கத்தை எடுத்துக்காட்டுகிறது.

## 1.7 நகர்மயமாதலும் நம்முடைய வளர்ச்சி நிலையும்:

நம்முடைய நாட்டில் 'நகர்மயமாதல்' என்ற நிகழ்வு பெருமளவில் ஏற்பட்டுள்ளது. உண்மை நிலையை ஆய்ந்து நோக்கும்போது 1901-ல் கொல்கத்தா மட்டுமே நம் நாட்டின் ஒரே பெருநகரமாக இருந்தது. பெருநகரங்களின் எண்ணிக்கை 1951-ல் 5 ஆகவும், 1981-ல் 12 ஆகவும், 1991-ல் 23 ஆகவும் மற்றும் 2001-ல் 35 ஆகவும் உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி பத்து இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட இந்த 35 பெருநகரங்களின் மொத்த மக்கள்தொகை பத்து கோடியே எண்பது இலட்சமாகவும், இந்நாட்டில் உள்ள நகர்ப்புற மக்கள்தொகையில் 39 விழுக்காடாகவும் இருந்தது.





**தமிழ்நாடு-அளவின் அடிப்படையில் நகரங்களின் தரம் பிரித்தல் 2001 (வகை வாரியாக)**

| தரம் | மாநகரங்கள்/நகரங்கள் வகைகள் (மக்கள்தொகை அளவு) | நகர்ப்புறத் தொகுப்புகள்/ நகரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| வகைப்பாடு I | மாபெரும் மாநகரங்கள் (50,00,000 மற்றும் அதற்கு மேல்) | 1 |
| | பெருமாநகரங்கள் (10,00,000 - 49,99,999) | 2 |
| | பெரிய மாநகரங்கள் (5,00,000 - 9,99,999) | 3 |
| | நடுத்தர மாநகரங்கள் (3,00,000 - 4,99,999) | 3 |
| | சிறு மாநகரங்கள் (1,00,000 - 2,99,999) | 20 |
| வகைப்பாடு II | பெரிய நகரங்கள் (50,000 - 99,999) | 45 |
| வகைப்பாடு III | நடுத்தர நகரங்கள் (20,000 - 49,999) | 118 |
| வகைப்பாடு IV | சிறிய நகரங்கள் (10,000 - 19,999) | 282 |
| வகைப்பாடு V | நகரங்கள் (5,000 - 9,999) | 182 |
| வகைப்பாடு VI | நகரங்கள் (5,000–க்கும் குறைந்தது) | 12 |
| | மொத்தம் | 668 |

ஆதாரம்: நகர்ப்புற மேலாண்மை மற்றும் வளர்ச்சிக் குழுமங்களின் சங்க (AMDA) ஆய்வறிக்கை.

## 1.8 நகர்மயமாதலால் ஏற்பட்டுள்ள விளைவுகள்:

கடந்த இரு நூற்றாண்டுகளில் ஏற்பட்ட தொழில் புரட்சியாலும், தொழில்நுட்ப சாதனையாலும், வேலைவாய்ப்பு உள்ளாற்றலும், தொழில் உற்பத்தியும் நகர்ப்புற மையங்களின் மேம்பாட்டினை ஊக்குவித்தன. இதன் விளைவாக, நகரங்களிலும் மாநகரங்களிலும் சமூக, பொருளாதார மற்றும் வணிகச் செயல்பாடுகள் குவிந்து

போதுமான அளவு அடிப்படை வசதிகளுடனான மேம்பாடு மற்றும் நகர்ப்புற திட்டமிடல் மேலாண்மைக்கான திறனுள்ள அமைப்பை ஏற்படுத்தும் அவசியத்தை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் இந்த நகர்ப்புற மையங்களின் பங்களிப்பு மிகவும் பெருமளவாக உள்ளதால் இவற்றை இடர்தரும் மையங்களாகக் கருதாமல் தீர்வுகொடுக்கும் மையங்களாகப் பேணி வளர்க்கவேண்டும்.

**1.9** வெகுவேகமான நகர்மயமாதல் என்னும் நிகழ்வால், மக்கள் கூட்டம், நெரிசல், குடிசைப் பகுதி மற்றும் போக்குவரத்து வசதி போதாமை போன்ற இடர்களுக்கு மாநகரங்களும், நகரங்களும் இலக்காகின்றன. நகர்ப்புற பகுதிகளின் இடர்களுக்குத் தகுந்த தீர்வுகள் காணும் முகமாக நகர்ப்புற தோற்றத்தை நிச்சயமாக மேம்படுத்தவும், நகர் விரிவாக்கத்தை முறைப்படுத்தவும் சீரான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது. உடனடியாகத் தேவைப்படும் போக்குவரத்து வசதி (சிறப்பாக பொதுமக்களுக்கான போக்குவரத்து வசதி) குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்று தொடரமைப்பு, மின்சாரம் மற்றும் தொடர்பு வசதிகள் போன்றவற்றை விரைவாக உருவாக்கவேண்டிய அவசியம் உள்ளது. இதுபோன்ற பெரிய நேர்வுகளை நேர்கொள்ளவும், ஒழுங்கற்ற முறையில் ஏற்படும் வளர்ச்சியைத் தவிர்ப்பதற்கும் ஏற்ற உத்திகளை மையமாகக் கொண்ட நீண்ட காலத் திட்டங்களையும், குறுகிய காலத் திட்டங்களையும் செயல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

**1.10 நகர்-ஊரமைப்பு வளர்ச்சிகளை நெறிப்படுத்துதல்:**

புதிதாக வளரும் நகரங்களிலும் மாநகரங்களிலும் வளர்ச்சியையும் கட்டுமானச் செயல்பாடுகளையும் நெறிப்படுத்த வேண்டிய அவசியம் நன்கு உணரப்பட்டு, வளர்ச்சித் திட்டமிடல், நெறிப்படுத்தல் ஆகிய பணிகளை நகர்—ஊரமைப்பு இயக்ககத்தையும் அதன்கீழ் உள்ள அலுவலகங்களையும் செயலாக்க முகமையாகக் கொண்டு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்பு சட்டத்தின்கீழ் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன. இவ்வாறான வளர்ச்சித் திட்டமிடல் அமைப்பு, சரியான குடியிருப்புப் பகுதிகளும், தொழிற்பகுதிகளும் ஏற்படுவதற்கு ஏற்ற சூழலை ஊக்குவிக்கின்றது. அச்சட்டத்தில் வளர்ச்சிக் கட்டணங்கள் விதிக்க வழிவகை உள்ளதால், உள்ளூர் திட்டக் குழுமங்கள் அக்கட்டணங்களை வசூல் செய்வதை மேற்பார்வையிடும் பொறுப்புள்ள இயக்ககம், தேவைக்கேற்ப முக்கியத்துவம் உள்ள திட்டங்களை செயல்படுத்துவதற்கு அந்நிதியினைப் பயன்படுத்தும் வசதியை ஏற்படுத்துகிறது.





சரியான வளர்ச்சித் திட்டமிடலை எட்டுவதற்கும், நகர்ப்புற திட்டமிடலில் உள்ளாட்சி அமைப்புகளை வழிநடத்தவும் இத்துறை ஒரு சிறந்த கருவியாக உள்ளது.

**1.11** நம் நாட்டில் நான்காவது பெருநகரமாக சென்னை மாநகரம் விளங்குகிறது. சென்னை மாநகராட்சி, 16 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள், 10 ஊராட்சி ஒன்றியங்கள், 214 கிராமங்கள் கொண்ட 1,189 சதுர கிலோ மீட்டர் பரப்புள்ள சென்னைப் பெருநகர் வளர்ச்சிப் பகுதிக்கு 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டத்தில் குறிப்பிட்டுள்ள பணிகளை சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமம் செயல்படுத்தி வருகின்றது.

**1.12 சட்டத் திருத்தங்கள் குறித்து பரிந்துரைகள்/ஆலோசனைகள் வழங்குவதற்கான குழு:**

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட பின்னர் சிறப்புத்தன்மை கொண்ட பெரிய அளவிலான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதனால் வளர்ச்சி செயல்பாடுகளை நன்முறையில் நெறிப்படுத்துவதற்கான விதிகளில் கொள்கை ரீதியான மாற்றங்களைச் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வளர்ச்சிப் பணிகளை நெறிப்படுத்தவும் தரமான உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும் வேண்டிய அவசியத்தை முன்னிட்டு தற்போதுள்ள சட்டரீதியான வழிமுறைகளை ஆய்வு செய்து புதுவகையான வளர்ச்சிகளை ஊக்கப்படுத்தும் மாற்றங்களையும் புதிய விதிகளையும் புகுத்துவதற்கு வசதியாக, நடப்பில் உள்ள சட்ட அமைப்பை மறுபரிசீலனை செய்யலாம் என்று நகர்ப்புற திட்ட வல்லுநர்களும், பிற வல்லுநர்களும் ஆலோசனை கூறியுள்ளனர். இத்தகைய புதிய நேர்வுகளை ஆய்ந்த அரசு, தமிழ்நாடு நகர்—ஊரமைப்புச் சட்டத்திற்குத் தேவையான மாற்றங்களை பரிந்துரைப்பதற்காக ஓய்வுபெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி நீதியரசர் மோகன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவினை அமைத்துள்ளது.

**1.13 வீட்டு வசதியை பெருக்கும் துறைகளும் அமைப்புகளும்:**

வீட்டு வசதி மற்றும் அதனுடன் தொடர்புடைய அடிப்படை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்தித்தருவது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு மிகவும் இன்றியமையாதவை ஆகும். இதை நன்குணர்ந்த தமிழக அரசு, சமூகத்தின் எல்லாப் பிரிவினருக்கும் நியாயமான முறையில் தரமான வீட்டு வசதி கிடைக்கும்பொருட்டு பன்முனையோடு இலக்கை நோக்கிச் செல்வதற்கு ஏற்ற

அணுகுமுறையைப் பின்பற்றி வருகிறது. வீட்டு மனைகள் மற்றும் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் பெருமளவில் கிடைத்திட முறையே 1961 மற்றும் 1970 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் இரண்டும், கடந்த இரண்டு ஆண்டுகளில் தீவிரமாகச் செயல்பட ஊக்குவிக்கப்பட்டன.

**1.14** கூட்டுறவு வீட்டு வசதித் துறை, பொதுமக்களே கூட்டுறவு அமைப்பின்கீழ் தங்களது சொந்த முயற்சியுடன் வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த மாநிலம் முழுவதும் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களை உருவாக்கி வருகிறது. அனைத்துப் பிரிவினருக்கும் பயனளிக்கும் வகையில் கொள்கைகளும் திட்டங்களும் கவனமாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதிலும், அவை சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் பயனளிக்கும் பாங்கில் அமையவேண்டும் என்பதைக் கண்காணிப்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தேவை அடிப்படையிலான திட்டமிடல் என்னும் தீர்க்கமான செயல்பாட்டால் நலிந்த பிரிவினரது தேவைகள் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தாலும், கூட்டுறவுச் சங்கங்களாலும் பூர்த்தி செய்யப்படுகின்றன. அவை, மாநில அளவிலான தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தின்மூலம் பிற வங்கிகளிடமிருந்து கடனுதவி பெறுகின்றன. தனியார் அமைப்புகள், தன்னார்வ நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்கள் நன்றாக பங்கேற்றிட வழிசெய்வதற்காக மனை வரைபட ஒப்புதல் நெறிமுறைகள், கட்டட வரைபட ஒப்புதல், அதிகாரப் பரவல் போன்றவை தொடர்பான புதிய வழிமுறையை அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

**1.15 வீட்டு வசதிக் கொள்கையின் முக்கிய நோக்கங்கள்:**

**வீட்டு வசதிக் கொள்கை அமைப்பின் மையக் குறிக்கோள்களைச் சுருக்கமாகப் பின்வருமாறு கூறலாம்:**

- குடிமக்களுக்கு, குறிப்பாக ஏழை மக்களுக்குக் கட்டுப்படியான விலையில் தரமான வீட்டு வசதி கிடைப்பதற்கு வசதியான சூழ்நிலையை உருவாக்குதல்.
- நகர்ப்புற வளர்ச்சியை நெறிப்படுத்துவதுடன், ஊரகப் பகுதிகளில் திட்டமிட்ட, அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சியை ஊக்குவித்தல்.
- குடிநீர் வழங்கல், சுகாதாரம், அணுகு சாலை போன்ற அடிப்படை வசதிகளுடனான தரப்படுத்தப்பட்ட வீட்டு வசதி, தொகுப்பு வீட்டு வசதி, புறநகர்த் திட்டங்களை உருவாக்குவது.





- செயல்திறன், உற்பத்தித் திறன் மற்றும் தரம் ஆகியவற்றை வீட்டு வசதிப் பிரிவில் மேம்படுத்துவதற்கான புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்தல்.
- ஊரகப் பகுதிகளில் குறைவான அடர்த்தியுள்ள வீட்டு வசதி வளர்ச்சியை இயலும் விலையில் ஏற்படுத்தத்தக்க தொழில்நுட்பத்தின் பயனை ஊக்கப்படுத்தல்.
- கூட்டுறவு வீட்டு வசதியையும், தனியார்த் துறை வீட்டு வசதியையும் தக்க உதவிகரமான கொள்கைகளுடன் ஊக்கப்படுத்தல்.
- அரசு முகமைகள், கூட்டுறவுத் துறை, தனியார்த் துறை மற்றும் வீட்டு வசதிகளை ஏற்படுத்துவதில் பொறுப்பேற்பாளர்கள் அனைவருக்கும் இடையில் ஓர் ஒத்திசைவை ஏற்படுத்தல்.
- வேலைவாய்ப்பிற்கு வழிகோலும்வகையில், வீட்டு வசதித் துறையில் புதிய முதலீடுகளுக்கு வழி செய்தல்.

**வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு, 2008-2009**

**சுருக்கம்**

**ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)**

| வ. எண் | துறைத் தலைவர்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 3,94,11 | - | 102,00,00 | 105,94,11 |
| 2. | நகர—ஊரமைப்பு இயக்ககம் | 12,53,36 | - | - | 12,53,36 |
| 3. | வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 7,19,08 | - | 6,50,00 | 13,69,08 |
| 4. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 202,34,01 | 635,56,67 | - | 837,90,68 |
| 5. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் | 17,01,78 | - | - | 17,01,78 |
| 6. | தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் | 64,19,83 | 59,90,00 | - | 124,09,83 |
| | மொத்தம் | 307,22,17 | 695,46,67 | 108,50,00 | 1,111,18,84 |

[2008 ஏப்ரல் 11

**2008-09 ஆம் ஆண்டு புதிய திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்**

| வ. எண். | திட்டப் பணிகளின் விவரம் | 2007-2008 ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| | **தலைமைச் செயலகம்** | |
| 1. | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் உபயோகத்திற்கு 37 கணினிகள், 15 லேசர் ஜெட் பிரிண்டர்கள் மற்றும் 5 இரும்பு நிலையடுக்குகள் வாங்குதல் | 11.40 |
| | **தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம்** | |
| 2. | சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பழுதுபார்த்தல் | 100.00 |
| 3. | நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சிகள் அளித்தல் | 10.00 |
| 4. | தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய சரக மற்றும் கோட்ட அலுவலகங்களைக் கணினிமயமாக்குதல் | 25.00 |
| | **தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்** | |
| 5. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயல்பாடுகள் அனைத்தையும் கணினிமயமாக்குதல் | 55.00 |
| 6. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1971-க்குப் பின் மதுரையில் கட்டப்பட்ட குடிசை மாற்றுக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணி | 95.23 |
| 7. | தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்குச் சிறப்புப் பழுதுபார்க்கும் பணி | 125.00 |
| 8. | தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடிசை மாற்றுக் குடியிருப்புகளைப் பழுது பார்க்கும் மற்றும் புதுப்பிக்கும் பணி | 100.00 |
| | மொத்தம் | 521.63 |



2008 ஏப்ரல் 11]

## 2. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

*2.1* பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர், மத்திய வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினர் ஆகியவர்களின் வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்வதே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் இதுவரை 3,95,381 குடியிருப்புகளும் மேம்பாடு செய்யப்பட்ட மனைகளும் ரூபாய் 2,763 கோடி செலவில் உருவாக்கியுள்ளது.

### 2.2 புதிய திட்டங்கள்

தனியார் கட்டுமான நிறுவனங்களால் கைவிடப்பட்ட, பொருளாதாரத்தில் நலிவுற்ற, குறைந்த வருவாய்ப் பிரிவினர், மத்திய வருவாய்ப் பிரிவினர் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினரது வீட்டு வசதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் 2008-09 ஆம் ஆண்டில் ரூ.2,000 கோடி உத்தேச மதிப்பீட்டில் 22,000 வீடுகளைக் கட்ட தீர்மானித்துள்ளது.

### 2.3 கூட்டு முயற்சித் திட்டம் / பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புத் திட்டம்

கூட்டு முயற்சித் திட்டம்/பொது மற்றும் தனியார் துறை இணைந்த கூட்டு முயற்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியச் சட்டத்தில் 31-A என்ற புதிய பிரிவு சேர்க்கப்பட்டு, 2007-08 ஆம் ஆண்டு இச்சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்திட்டங்களின்மூலம் பண முடக்கம் தவிர்க்கப்படுவதுடன், நவீன தொழில்நுட்பங்களும் மேம்படுத்தப்படும். இவ்வகையான திட்டங்களைத் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான சுமார் 746 ஏக்கர் நிலப்பரப்பில் 24 இடங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. முதலில் இத்திட்டம் சென்னை கே.கே.நகர், தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமம், கோயம்பேடு மற்றும் வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்படவுள்ளது.

### 2.4 தக்கைக்கல் தொழிற்சாலை

எண்ணூரில் 15 வருடங்களாகச் செயல்படுத்தப்படாமலிருந்த தக்கைக்கல் தொழிற்சாலையைக் கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ்

[2008 ஏப்ரல் 11

நவீன தொழில்நுட்ப உத்தியுடன் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கட்டமை கட்டட பாகங்களைத் தயாரிக்கும் புதிய உற்பத்திப் பிரிவை கூட்டு முயற்சித் திட்டத்தின்கீழ் எண்ணூரில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இம்முயற்சி கட்டுமானச் செலவினங்களைக் குறைப்பதுடன், பெரிய அளவிலான கட்டுமானத் திட்டங்களை குறுகிய காலத்தில் தமிழ்நாட்டில் நடைமுறைபடுத்த வழி வகுக்கும்.

**2.5 ஒருங்கிணைக்கப்பட்ட புதிய நகரமைப்பு**

திருவள்ளூர், காஞ்சிபுரம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களில் குறைந்த மற்றும் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கு முக்கியத்துவம் தரும் வகையில், ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் அறிவுசார் நகரம் அமைப்பதற்கான நிலம் கண்டறியப்பட்டுள்ளது.

**2.6 புதிய நிலக் கொள்கை, விலை நிர்ணயக் கொள்கை மற்றும் ஒதுக்கீட்டுக் கொள்கை**

பொருளாதாரத்தில் நலிவுற்ற மற்றும் நடுத்தர மக்களின் பெருகிவரும் வீட்டு வசதித் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், நடப்பு சந்தை விலைக்கு ஏற்றவாறு புதியதோர் நிலக் கொள்கை, திருத்தியமைக்கப்பட்ட விலை நிர்ணயக் கொள்கை மற்றும் ஒதுக்கீட்டுக் கொள்கையினை நடைமுறைப்படுத்த அரசு உத்தேசித்துள்ளது.

**2.7 புதியதாக உருவாக்கப்படும் மற்றும் தேக்க நிலையிலுள்ள அலகுகளை விற்பனை செய்ய சந்தை உத்திகளைக் கையாளுதல்**

புதியதாக உருவாக்கப்படும் மற்றும் தேக்க நிலையிலுள்ள அலகுகளை விற்பனை செய்ய தனியார் கட்டுமான நிறுவனங்களின் சந்தை உத்திகளுக்கு ஈடாக புதிய சந்தை உத்திகளை நடைமுறைப் படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**2.8 புதிய கட்டுமான உத்திகள் - சூரிய ஆற்றல் மற்றும் பசுமைக் குடியிருப்பு உருவாக்கும் திட்டம்.**

சூரிய ஆற்றலைச் செயல்படுத்தி மின் ஆற்றலைச் சேமிக்க புதிய உத்திகளைக் கையாள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பசுமைக் குடியிருப்புகளைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 30 விழுக்காடு மின்னாற்றல் மற்றும் 35 விழுக்காடு தண்ணீர் தேவையைச் சேமிக்க வாய்ப்புள்ளது.



2008 ஏப்ரல் 11]

**2.9 அலுவலக மற்றும் வணிக வளாகங்கள்**

சென்னை மற்றும் மதுரையில் 5 முக்கிய இடங்களில் வளர்ந்து வரும் வணிக வளாகத் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில், அலுவலகக் கட்டடங்கள் மற்றும் வணிக வளாகங்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**2.10 வீட்டு வசதி வாரியச் செயல்பாடுகளை நவீனமயமாக்கல்**

(அ) ஒதுக்கீட்டாளர்கள்/பயனீட்டாளர்கள் சேவையை மேம்படுத்த மின் ஆளுமை, நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் மனித வள மேம்பாடு போன்ற புதிய உத்திகளின்மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் செயல்பர்டுகளை நவீனப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் அனைத்து ஆவணங்களையும் தற்போது நடைமுறையிலுள்ள காகிதப் பயன்பாட்டு முறை தவிர்த்து, கணினி மூலம் படிப்படியாக ஒருங்கிணைத்து ஆவண நூலகம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.11 வீட்டு வசதி வாரியத்தை மறுசீரமைத்தல்**

நிறுவனத்தை மறுசீரமைப்பதன்மூலம் குறிப்பிடத்தக்க மாற்றம் பெறும் வகையில் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும். வாரியத்தின் செயல்பாடுகளைப் பன்முகப்படுத்துவதற்காக மதுரை, திருச்சி, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வட்டார அலுவலகங்களைப் புதுப்பிப்பதன்மூலம் மாநில அளவில் நிறைவேற்றப்படவுள்ள திட்டங்களை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**2.12 பகுதி II திட்டம், 2008-09**

2008-09 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன:-

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயல்பாடுகள் அனைத்தையும் கணினிமயமாக்கும் பணி, ரூ.55.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் 1971-க்குப் பின் மதுரையில் கட்டப்பட்ட குடிசை மாற்றுக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் பணி, ரூ.95.23 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 11

(இ) தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுபார்க்கும் பணி ரூ.125.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஈ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட குடிசை மாற்றுக் குடியிருப்புகளைப் பழுதுபார்க்கும் மற்றும் புதுப்பிக்கும் பணி ரூ.100.00 இலட்சம் செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**

3.1 தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற உயரிய நோக்கத்துடன், குடிசைப் பகுதிகளை மாற்றி குடியிருப்புகள் அமைக்கவும், குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் 1970 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியத்தின் பணிகள் தற்போது தமிழகத்தின் நகரப் பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.

**3.2 குடிசைப் பகுதி குறித்த கொள்கைகள்**

(அ) நகரப் பகுதிகளில் நிலத்தினைச் சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் மிகவும் நெரிசலான இடங்களில், சுகாதாரமற்ற சூழ்நிலையில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.

(ஆ) கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு ஏற்றவாறு அமைந்துள்ள குடிசைப் பகுதிகளில், இக்குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு, கள மேம்பாட்டுப் பணிகள் அமைத்து அப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கேற்றவாறு மேம்படுத்துதல்.

(இ) அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில், மறு குடியமர்வு திட்டத்தின்கீழ் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அமைக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

(ஈ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கடந்த 2 ஆண்டுகளில் 12,877 அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் பல்வேறு திட்டங்களின்கீழ் அமைத்துள்ளது.

(உ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அடுத்த 3 ஆண்டுகளில் தமிழகத்தின் நகரப் பகுதிகளில் பல்வேறு



2008 ஏப்ரல் 11]

திட்டங்களின்கீழ் 60,000 வீடுகளை ரூ.2,000 கோடி செலவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

(ஊ) மேற்கூறப்பட்டுள்ள கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு 2008-09 ஆம் ஆண்டில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தமிழகத்தின் நகரக் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும்பொருட்டு, கீழே கூறப்பட்டுள்ள திட்டப் பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

**3.3 பன்னிரண்டாவது நிதிக் குழு சிறப்புத் தேவை மானியம்**

(i) (அ) இத்திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் இதர நகரங்களில் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளையும், குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளையும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் அமைந்து வருகின்றது.

(ஆ) சென்னை மற்றும் இதர நகரங்களில் 15,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளும், 32,000 குடும்பங்களுக்கு குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகளும், மேலும் [illegible],000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளும், 2006-2010 வரையிலான ஆண்டுகளில் மொத்தம் ரூ.250.00 கோடி செலவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ii) அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டங்கள்**

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை மற்றும் இதர நகரங்களில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 6,311 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைத்துள்ளது. மேலும் 2,242 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன/தொடங்கப்படவுள்ளன.

**(iii) பழுதடைந்த குடியிருப்புகளை மீண்டும் கட்டுதல்**

(அ) அடுக்குமாடிக் குடியிருப்புகளின் தற்போதைய நிலைமை குறித்து கடந்த 2007 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தின்போது மாவட்ட அளவிலான தொழிற்நுட்பக் குழுக்களை அமைத்து, மக்கள் வாழ்வதற்குத் தகுதியற்ற குடியிருப்புகளைக் கண்டறிந்து, அவற்றை இடித்து கூடிய விரைவில் மீண்டும் கட்டவேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

[2008 ஏப்ரல் 11

(ஆ) அதற்கிணங்க ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின்கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மற்றும் கட்டுமானப் பணிகளில் வல்லுநர் ஆகியோரின் பிரதிநிதிகளைக் கொண்டு மாவட்ட அளவிலான தொழிற்நுட்பக் குழுக்கள் அமைக்கப்பட்டன.

(இ) இத்தொழிற்நுட்பக் குழுக்களின் அறிக்கைகளின் அடிப்படையில், சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் 6,544 அடுக்குமாடிக் குடியிருப்புகளை இடித்து மீண்டும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன், அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டத்தின்கீழ் சென்னை நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை உள்ள பகுதிகளில் 2,862 அடுக்குமாடிக் குடியிருப்புகளும் மற்றும் வேறு திட்டத்தின்கீழ் வியாசர்பாடியில் உள்ள 270 குடியிருப்புகளும், குப்பைமேடு பகுதியிலுள்ள 16 குடியிருப்புகளும் இடிக்கப்பட்டு மீண்டும் கட்டப்படும்.

(ஈ) எனவே, மேற்கண்டவாறு சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களில் மொத்தம் 9,692 பழுதடைந்த குடியிருப்புகளை ரூ.263.77 கோடி செலவில், பன்னிரண்டாவது நிதிக் குழுவின் சிறப்புத் தேவை மானியம், அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்ட நிதி மற்றும் இதர நிதி ஆதாரங்களைக் கொண்டு மீண்டும் கட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

**(iv) வேலைவாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி**

மாவட்டங்களில் நகர குடிசைப் பகுதி வாழ் இளைஞர்களுக்கு ரூ.30.00 இலட்சம் செலவில் வேலைவாய்ப்புப் பயிற்சிகள், செவிலியர் உதவி, ஒப்பனை, கணினி இயக்கம், ஊர்தி ஓட்டுதல், குளிர்ச்சாதனம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படும்.

**(v) பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்**

மாவட்ட தொழில்நுட்பக் குழுக்கள், 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளவும் பரிந்துரை செய்துள்ளது. அதற்கிணங்க, சென்னை மற்றும் இதர நகரங்களில் உள்ள 30,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பன்னிரண்டாவது நிதிக் குழுவின் சிறப்புத் தேவை மானியத்தின்கீழ், ரூ.47.88 கோடி செலவில் பழுதுபார்ப்புப் பணிகள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் 2008-09 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.



2008 ஏப்ரல் 11]

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 2008-2009 ஆம் ஆண்டில், மேற்கூறப்பட்ட திட்டப் பணிகளுக்காக, பன்னிரண்டாவது நிதிக் குழு சிறப்புத் தேவை மானியத்தின்கீழ் ரூ.100.00 கோடி செலவிட திட்டமிட்டுள்ளது.

**3.4 சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வீட்டு வசதி**

(i) (அ) சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் அவசர சுனாமி மறுகுடியமர்வு திட்டம், மற்றும் மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இராஜீவ் காந்தி புனரமைப்பு திட்டங்களின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) இத்திட்டங்களின் கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் வாழும் 7,506 குடும்பங்களுக்கு ரூ.95.94 கோடி செலவில் ஏற்கெனவே வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், கூடுதலாக 2,500 வீடுகள் ஒதுக்கீடு செய்ய தயார் நிலையில் உள்ளன.

**(ii) அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம்**

உலக வங்கியின் நிதி உதவியினைக் கொண்டு செயல்படுத்தப்படும் அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டத்தின்கீழ் சென்னையில் மேலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.385.06 கோடி செலவில் அமைக்கும் திட்டப் பணிகளை, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டப் பணிகளுள் திருவொற்றியூர் அகில இந்திய வானொலி நிலையத்தின் நிலத்தில் கட்ட திட்டமிடப்பட்டுள்ள 3,616 குடியிருப்புகளும், ஒக்கியம் துரைப்பாக்கத்தில் கட்டப்படவுள்ள 2,064 குடியிருப்புகளும், நொச்சிக்குப்பம் முதல் சீனிவாசபுரம் வரை கட்ட திட்டமிடப்பட்டுள்ள 7,320 குடியிருப்புகளும் அடங்கும்.

**(iii) இராஜீவ் காந்தி சுனாமி புனரமைப்புத் திட்டம் பகுதி I - தன்னார்வ நிறுவனங்களால் அமைக்கப்படாத வீடுகள்**

(அ) மேலும், சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, முதலில் தன்னார்வ நிறுவனங்களால் அமைக்கத் திட்டமிடப்பட்டு பின்னர் அவர்களால் அமைக்கப்படாத வீடுகள்

(பகுதி I) மற்றும் தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வாழும் குடும்பங்களுக்கும் (பகுதி II) வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) பகுதி I திட்டத்தின்கீழ் இவ்வாரியம் 2007-2008 ஆம் ஆண்டில் 71 வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. மேலும் 748 வீடுகளுக்கான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 398 வீடுகளுக்கான பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு முடிவுறும். மொத்தம் 1,217 வீடுகள் அடிப்படை வசதிகளுடன் ரூ. 42.60 கோடி செலவில் அமைக்கப்படும்.

**(iv) இராஜீவ் காந்தி சுனாமி புனரமைப்புத் திட்டம் பகுதி II - சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வீடுகள் அமைத்தல்**

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கடற்கரையில் இருந்து 200 மீட்டர் தொலைவிற்குள் சுனாமி ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்படக்கூடிய இடங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 221 வீடுகளுக்கானக் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் 512 வீடுகளுக்கானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்விரு பணிகளுக்காக மொத்தம் ரூ.25.66 கோடி செலவிடப்படும். இது தவிர, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கூடுதலாக 5,658 வீடுகள் ரூ.198.03 கோடி செலவில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மொத்தம் 6,391 வீடுகள் ரூ.223.69 கோடி செலவில் அமைக்கப்படும்.

**3.5 ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டம்**

(அ) சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் ஆட்சேபகரமான மற்றும் ஆட்சேபகரமற்றப் பகுதிகளில் வாழும் மீதமுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய அடிப்படை வசதிகளுடன் கூடிய தன்னிறைவான அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒரு பெரும் திட்டத்தினை வகுத்துள்ளது. தமிழகத்தின் பெருநகரங்களான சென்னை, மதுரை மற்றும் கோவை நகரங்களைக் குடிசைப் பகுதிகளற்ற நகரங்களாக 2013 ஆம் ஆண்டிற்குள் மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மைய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியான நகர ஏழை மக்களுக்கு



அடிப்படை வசதிகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் இதுபோன்று பெருமளவில் வீடுகள் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டப் பணிகளுக்கான நிதியுதவி மைய அரசு மற்றும் மாநில அரசுகளிடமிருந்து பெறப்படும்.

(ஆ) இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை, மதுரை மற்றும் கோவை மாநகரங்களில் 35,270 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.1208.55 கோடி செலவில் "ஒருங்கிணைந்த நகரங்களாக" கீழ்க்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:—

| வ. எண் | திட்டப் பகுதியின் பெயர் | குடியிருப்புகள் எண்ணிக்கை | தொகை (ரூபாய் கோடி) |
|---|---|---|---|
| 1. | சென்னை, எழில் நகர் | 9,936 | 257.54 |
| 2. | சென்னை, பெரும்பாக்கம் I | 10,452 | 440.61 |
| 3. | சென்னை, பெரும்பாக்கம் II | 9,476 | 374.24 |
| 4. | கோவை, உக்கடம் | 2,232 | 55.36 |
| 5. | கோவை, அம்மன் குளம் | 1,608 | 41.03 |
| 6. | மதுரை, பெரியார் நகர் | 1,566 | 39.77 |
| | மொத்தம் | 35,270 | 1208.55 |

மேற்கூறப்பட்டுள்ள திட்டங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

**3.6 பகுதி II திட்டம் 2008-2009**

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 2008-2009 ஆம் ஆண்டிற்கான பகுதி II திட்டத்தில் கீழே கூறப்பட்டுள்ளவாறு ரூ. 135.00 இலட்சம் செலவிடத் திட்டமிட்டுள்ளது.

(அ) சென்னை மற்றும் இதர நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் ரூ.100.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும்.

[2008 ஏப்ரல் 11

(ஆ) நகர குடிசைப் பகுதிவாழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புப் பணிகள் ரூ.10.00 இலட்சம் செலவில் அளிக்கப்படும்.

(இ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய சரக மற்றும் கோட்ட அலுவலகங்களைக் கணினிமயமாக்கி இணைக்க ரூ.25.00 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3.7 நகர குடிசைப் பகுதிகளுக்கு சுற்றுப்புற மேம்பாட்டுப் பணிகள்**

நகர குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும், மக்கள் வாழ்வதற்கேற்றவாறு அமைக்கவும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், அடிப்படை வசதிகளான சாலைகள், தெரு மின் விளக்கு, குடிநீர் வசதி, மழை நீர் வடிகால், கழிப்பறைகள் போன்ற பணிகளை 20,000 குடும்பங்களுக்கு ரூ.10.00 கோடி செலவில் 2008-2009 ஆம் ஆண்டில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

**3.8 உயர விரைவு சாலைத் தடங்களில் வாழும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்**

(அ) துறைமுகங்களுடன் சாலைகளை இணைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கப்பல் சரக்குப் போக்குவரத்தினை எளிதாக்க, சென்னை துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை உயர விரைவு சாலை அமைக்க அரசால் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மறுகுடியமர்வுப் பணிகளை மேற்கொள்ள உரிய நிறுவனமாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நியமிக்கப்பட்டுள்ளது.

(ஆ) உயர விரைவு சாலைப் பணிகளுக்குத் தேவைப்படும் கூவம் நதிக் கரையிலுள்ள இடங்களில் வாழும் குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களை, அடிப்படை வசதிகளுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் மாற்றிடங்களில் அமைத்து மறுகுடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி வாரியம் 11,200 குடும்பங்களுக்கு ரூ.392.00 கோடி செலவில் குடியிருப்புகள் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இக்குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

**3.9 சிறப்பு உள்ளடக்கத் திட்டம் 2008-2009**

**நகரப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் மக்களுக்கான திட்டப் பணிகள்**

(அ) நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதி திராவிடர் குடும்பங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது.



2008 ஏப்ரல் 11]

(ஆ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நகர குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்தப் பல்வேறு வீட்டு வசதித் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. நகர குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களில் 26% குடும்பங்கள் ஆதி திராவிடர் குடும்பங்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2008-2009 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டங்களின்மூலம் அவர்கள் பயன்பெறுவர். அதன் விவரம் பின்வருமாறு:

**2008-2009-க்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம்**

**செயலாக்கம்-வீடுகள்/குடும்பங்கள் செலவினம் - ரூ. கோடி**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் | |
|---|---|---|---|
| | | செயலாக்கம் | செலவினம் |
| 1 | நகரக் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல் | 2,195 | 24.99 |

**3.10 சென்னையில் சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வாழ்வியல் ஆதாரங்களை ஏற்படுத்துதல்**

சுனாமி ஆழிப் பேரலைகளால் பாதிக்கப்பட்ட குடிசைப் பகுதிவாழ் குடும்பங்களுக்கு வாழ்வியல் ஆதாரப் பணிகளை 2006-2007 முதல் 2008-2009 வரையிலான காலங்களில் ரூ.4.32 கோடி செலவில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கீழே கூறப்பட்டுள்ள வாழ்வியல் ஆதாரப் பணிகள் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

**(ஆ) சமுதாயக் கட்டமைப்பு**

**(i) சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்**

100 மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்க மகளிர் ஊக்குவிக்கப்படுவார்கள். இத்திட்டத்தின்கீழ் 100 சுய உதவிக் குழுக்களுக்கு சுழற்சி நிதி ஒவ்வொரு குழுவிற்கும் ரூ.30,000/- வரையில் ஏற்படுத்தப்படும்.

**(ii) வேலைவாய்ப்புப் பயிற்சி**

சுனாமியால் பாதிக்கப்பட்ட மகளிர் மற்றும் இளைஞர்களுக்கு, நுகர்வோர் பொருட்கள் தயாரித்தல், குளிர்சாதனங்கள், கணினி அலுவலகப் பயிற்சி, கணினி முறைகள், ஒப்பனை முறைகள், விற்பனை போன்ற இனங்களில் பயிற்சி அளிக்கப்படும்.

**(iii) பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள்**

மூன்று சக்கர வாகனங்கள், மூன்று சக்கர சுமை ஊர்தி, வேன்கள் மற்றும் இதரப் பொருட்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் 1,000 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வாழ்வாதாரப் பணிகள் மேற்கொள்ள வகை செய்யப்படும். 2008-2009 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ரூ.100.00 இலட்சம் செலவிடும்.

**3.11 தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 2008-2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவுள்ள புதிய முறைகள்**

(அ) அவசர சுனாமி மறுகுடியமர்வுத் திட்டம் மற்றும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர சீரமைப்புத் திட்டங்களின்கீழ் இயற்கை இடர்பாடுகளுக்கான தடுப்பாற்றல் பெறும் வகையில் கட்டடங்கள், கான்கிரீட் தூண்கள் மற்றும் உத்தரங்களைக் கொண்டதாக கட்டமைப்புகள் வடிவமைக்கப்படும். இவை, இவ்வாரியத்தால் முதன் முறையாகச் செயல்படுத்தப்படுகின்றன.

(ஆ) நகரத்தில் வாழும் குடிசைப் பகுதிவாழ் மக்களை மாநகரங்களுக்கு அருகே மறுகுடியமர்வு செய்யவும், தற்போது நிலத்திற்கான விலை அதிகரித்துள்ளதாலும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், 7 அடுக்குகள் கொண்ட பல அடுக்குமாடிக் குடியிருப்புகளை, மின் தூக்கி மற்றும் இதர வசதிகளுடன் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

(இ) வருங்காலத்தில் மறுகுடியமர்வுத் திட்டங்கள், ஒருங்கிணைந்த நகரங்களாகத் தேவையான அனைத்து சமூக மற்றும் சமுதாய வசதிகளுடன் அமைக்கப்படும்.



**கூட்டுறவு வீட்டு வசதி**

**.1 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள்**

"ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" என்கிற அரசின் வீட்டு வசதிக் கொள்கையின் இலக்கை அடைவதில் தமிழ்நாட்டில் உள்ள 1,034 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவற்றில் 197 வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், 837 நகர்ப்புறக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களும், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையமும் நமது மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன.

**4.2 மேலாண்மை**

கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் பாரபட்சமற்ற மேலாண்மையினை உறுதிசெய்யும் பொருட்டு அனைத்துக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் 25-5-2001 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களாட்சிக் கோட்பாடுகளின்படி விரைவில் இச்சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

**4.3 வீட்டு வசதிச் சங்கங்களின்மூலம் நிறைவேற்றப்படும் திட்டங்கள்**

(அ) ஊரகப் பகுதியிலுள்ள பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான வீட்டு வசதித் திட்டம், குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான ஊரக வீட்டு வசதித் திட்டம்

(ஆ) நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம்

(இ) வீடுகள் விரிவாக்கம் மற்றும் புதுப்பித்தல்

**4.4 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் சாதனைகள்**

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம் தொடங்கப்பட்டது முதல் இதுவரை பிரதம கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 11,61,127 வீடுகள் கட்டுவதற்காக ரூ.4,698.74 கோடி அளவிற்குக் கீழே குறிப்பிட்டுள்ளவாறு கடனுதவி அளித்துள்ளது:—

| வ. எண். | திட்டத்தின் பெயர் | கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ஊரக வீட்டு வசதித் திட்டம் (பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருவாய்ப் பிரிவினர் மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர்) | 8,02,767 | 1,097.93 |
| 2. | நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் | 3,58,660 | 3,600.81 |
| | மொத்தம் | 11,61,427 | 4,698.74 |

**4.5 2008-2009 ஆம் ஆண்டில் நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்த வீடுகளின் எண்ணிக்கை | உத்தேசிக்கப் பட்ட கடன் தொகை | மானியம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | நகர்ப்புற வீட்டு வசதித் திட்டம் | 6,000 | 100.00 | — | 100.00 |

**4.6 கூட்டுறவு வீட்டு வசதிக் கடன் பெற்றவர்களுக்கான தள்ளுபடித் திட்டம்**

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் 20-3-2008 அன்று நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்து ஆற்றிய உரையில் குறிப்பிட்டுள்ளபடி, கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களிடமிருந்து வீடு கட்டுவதற்குக் கடன் பெற்றவர்களுக்கு உதவும்பொருட்டு, ஒரு தள்ளுபடித் திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டம் கடன்





பெற்றவர்களின் பொருளாதார நிலையின் அடிப்படையில் தள்ளுபடிச் சலுகை கிடைக்குமாறு வகுக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் ரூ.25,000 வரை கடன் பெற்றிருந்தால் முழுத் தள்ளுபடியும், ஏனைய பிரிவினருக்குக் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளவாறு தள்ளுபடியும் வழங்கப்படும். இச்சலுகை 30-9-2008 வரை வழங்கப்படும்:—

| வ. எண். | குடும்பங்களின் வகை (கடன் தொகை அடிப்படையில்) | தள்ளுபடித் தொகையின் அளவு |
|---|---|---|
| 1. | ரூ.25,000 முதல் ரூ.1,00,000 வரை | அபராத வட்டி 100% வட்டி 50% |
| 2. | ரூ.1,00,000 முதல் ரூ2,00,000 வரை | அபராத வட்டி 100% வட்டி 25% |
| 3. | ரூ.2,00,000 முதல் ரூ.7,00,000 வரை | அபராத வட்டி 100% வட்டி 10% |

**5. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்**

**5.1** அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம் கீழ்க்குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக முன்பணம் வழங்க முனைப்புடன் செயல்படுத்தப்படுகிறது :-

(அ) வீட்டுமனை வாங்குதல் மற்றும் வீடு கட்டுதல்

(ஆ) புதியதாக வீடு கட்டுதல்

(இ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு / வீடு வாங்குதல்

(ஈ) தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு / வீடு வாங்குதல்

(உ) ஏற்கெனவே உள்ள வீட்டை விரிவுபடுத்துதல்

(ஊ) ஏற்கெனவே உள்ள வீட்டின் வசதிகளை மேம்படுத்துதல்

**5.2** இத்திட்டத்தின்கீழ் மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.6 இலட்சமும், இந்திய ஆட்சிப் பணி

அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.7.50 இலட்சமும் வீடுகட்ட முன்பணம் வழங்கப்படுகிறது. அதேபோன்று, மேற்குறிப்பிட்ட உயர்ந்தபட்ச வரம்புக்குட்பட்டு ஏற்கெனவே உள்ள வீட்டை விரிவாக்க மற்றும் மேம்படுத்த முன்பணத் தொகை ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

5.3 2008-2009 ஆம் ஆண்டில் அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. வாடகைக் கட்டுப்பாடு**

6.1. தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960 - திருத்தப்பட்ட சட்டம் 23/1973 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| (அ) | இடவசதிக் கட்டுப்பாடு | .. | வீடுகள் வாடகைக்கு விடுவதை முறைப்படுத்துவது |
| (ஆ) | வாடகைக் கட்டுப்பாடு | .. | வாடகையைக் கட்டுப்படுத்துவது |
| (இ) | வெளியேற்றுகை கட்டுப்பாடு | .. | முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது |

6.2. இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி, (சென்னையை பொறுத்த வரை சென்னை மாவட்ட ஆட்சியர்) இடவசதிக் கட்டுப்பாட்டுக்கு பொறுப்பாளர் ஆவார். வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளை நிர்வகிப்பதற்கு இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி மேற்படி சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலர் ஆவார். மேலும், மேற்படி தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960 ஒருங்கியல் சட்டம் என்பதால், எந்தவித திருத்தங்களுக்கும் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படவேண்டும். தற்போது சென்னையில் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சென்னை மாவட்ட ஆட்சியர் சட்டப்பூர்வமான வாடகைதாரர் என்பதால், வீட்டிற்கான வாடகை செலுத்துவது, பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும். தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம், 1960-ன் பிரிவுகளான 3, 3ஏ, 12, 13 (ம) 22 ஆகியவை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி கவனிக்க வேண்டிய பிரிவுகளாகும்.





6.3. இச்சட்டப்பிரிவு 3-ன்படி கட்டடங்கள் அரசுக் கட்டுப்பாட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு அரசு ஊழியர்களின் குடியிருப்புத் தேவைகளுக்கும் அரசு அலுவலகங்களுக்குக் குடியிருப்பு இல்லாத தேவைகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதும், வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவதும் அரசு அவ்வப்போது வழங்கும் நெறிமுறை கட்டளைப்படி நடைபெறுகின்ற சட்டபூர்வமான நடவடிக்கை ஆகும். பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால், கடந்த இருபது வருடங்களாக சென்னை மாநகரில் எந்தக் கட்டடங்களும் அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்படவில்லை. தற்போதைய நில மதிப்பு உயர்வு, பழைய மற்றும் அடிப்படை வசதிகளற்ற கட்டடங்களுக்கும் வாடகை மதிப்பீட்டை உயர்த்திக் காட்டுகிறது. ஆதலால், நிதிநிலை அடிப்படையில் எந்த ஒரு கட்டடத்தையும் அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டுவருவது நன்மை பயக்கக்கூடியதல்ல. ஏனென்றால் யாரும் அந்தக் கட்டடத்திற்குக் குடிவர விரும்பாத நிலையில் அரசு அதற்கான வாடகையைச் செலுத்த வேண்டியுள்ளது. சட்டபூர்வமாக வாடகைதாரர் என்ற முறையில் அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள கட்டடத்தைப் பராமரிக்கும் பொறுப்பு அரசையே சார்ந்ததாகும்.

6.4. முதன்முதலில் 1949-ல் இந்தச் சட்டம் அரசு ஊழியர்களுக்கு, வீடுகள் ஒதுக்கீடு செய்யும் உரிமையை வழங்க அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அரசு ஊழியர்களின் இடவசதிக்கான தேவைகளைக் கவனிக்க வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் மற்றும் வீடுகட்ட முன்பணம் வழங்குதல் போன்ற வசதிகள் உள்ளன. தற்போது 'மாற்றலுக்குரியவர்' என்ற பிரிவில், எந்த அலுவலரும் வீடு ஒதுக்கீடு கோரி சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பதிவு செய்யவில்லை. தற்போது அரசுக் கட்டுப்பாட்டில் 17 கட்டடங்கள் உள்ளன. இந்த வீடுகள் விடுவிக்கப்பட்டு உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கப்படும் வரை அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர் ஆகும். அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள வீடுகள் சம்பந்தமாக 4 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன. தனிப்பட்ட குடியிருப்பாளர் செலுத்தும் வாடகையை ஒரு கட்டடத்தின் மீதான உரிமை குறித்து அல்லது வாடகை பெறும் தகுதி குறித்து உரிமையாளர் இடையே பிரச்சினை இருக்கும்பட்சத்தில், அந்த வீட்டிற்கான வாடகையை, இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரியான சென்னை மாவட்ட ஆட்சியரை வசூலிக்கும் அதிகாரியாக நீதிமன்ற அறிவுரைப்படி அரசு நியமித்துள்ளது.

## 7. நகர் - ஊரமைப்புத் துறை

7.1. தேசிய மற்றும் மாநிலக் கொள்கைகள்/திட்டங்களின்கீழ் பொருளாதார, சமூக நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைய ஏதுவாக அவற்றை வடிவமைப்புத் திட்டங்களாக மாற்றி சமூகத்திற்கான நலனை அதிகரிக்கச் செய்வதே இன்றைய நகர் மற்றும் ஊரகத் திட்டமிடுதலின் குறிக்கோளாக உள்ளது. இந்தச் செயல்பாட்டில் மக்கள் வாழ, பணிபுரிய மற்றும் தங்கள் ஓய்வு நேரங்களைச் செலவிட ரம்மியமான சூழல் உருவாக்கப்படுகிறது.

7.2 தேசிய சராசரி அளவைக் காட்டிலும் மிக அதிக நகர்ப்புற மக்கள்தொகையைக் கொண்டு அதிகளவு நகரமயமானதாக, பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான சூழல் விளங்கும் தமிழ்நாட்டில் குடிமை மற்றும் சமூகக் கட்டமைப்புகளை ஏற்படுத்தி குன்றாத வகையில் பராமரிக்க வேண்டியுள்ளது. பெருநகரம், நகரம் மற்றும் உள்ளூர் என்ற வெவ்வேறு மட்டங்களில் வடிவமைப்புத் திட்டங்கள் அல்லது நில வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. ஒரு சில மண்டலத் திட்டங்கள் சிறிது காலத்திற்கு முன்பே தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மண்டலத்திலும் அமைந்துள்ள இயற்கை வளம், திறன் மற்றும் மூலதனம் போன்ற வளங்களை முழுமையாக உபயோகப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

### 7.3 கொள்கை நோக்கங்கள்

பொருளாதாரத்தில் நலிவடைந்தவர்களின் தரமும் ஒரு சேர முன்னேற்றப்படவேண்டும் என்ற முக்கிய கட்டுப்பாட்டுடன் சமூகத்தை வளமுடையதாக்குவதே நோக்கமாகக் கொள்ளப்படும். மண்டல அளவிலான வருவாயை அதிகரிப்பதே கொள்கையாக இருப்பினும், எந்த ஒரு மண்டலமும் சராசரி வளர்ச்சி விகிதத்தை விடக் குறைவானதாக இருக்க அனுமதிக்கக்கூடாது என்பது உறுதி செய்யப்படவேண்டும். எனவே, பொருளாதாரத் திட்டமிடல் மட்டுமல்லாமல் வடிவமைப்பு திட்டமிடலும் மண்டல அளவில் மேற்கொள்ளப்படவேண்டும். மண்டல அளவிலான வடிவமைப்பு திட்டமிடலும், பொருளாதாரத் திட்டமிடலும் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். வருவாய் மாவட்டப் பரப்பினை ஒரு மண்டலம் என அடிப்படைத் திட்டமிடலுக்கான ஒரு கூறாகக் கொள்ளவேண்டும் என முடிவெடுக்கப்படுவதை அடுத்து நகர் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கான திட்டமிடல் என்பது கீழ்க்கண்டவாறு வெவ்வேறு





நிலையிலான திட்டங்களை உருவாக்குதல், மாநிலத்தின் வெவ்வேறு மண்டலங்களுக்கிடையே சமமான வளர்ச்சி ஏற்படுவதற்கு அவற்றை ஒருங்கிணைத்தல் என்றாகிறது.

**(i) மண்டல நிலை**

ஊரக நிலையிலிருந்து நகர நிலைக்கு மாற்றம் பெறும் நடைமுறையை அடையாளம் கண்டுகொள்ளும் விதத்திலான, வருவாய் மாவட்டப் பரப்பினை மண்டலப் பரப்பாகக் கொண்டு தயாரிக்கப்படும் மண்டலத் திட்டமானது, வளர்ச்சி துருவங்கள், வளர்ச்சி மையங்கள் மற்றும் சேவை மையங்களைக் கண்டறிந்தும், ஊரக மற்றும் நகர்ப் பகுதிகளின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கும் உதவும். மண்டலத் திட்டத்தில் வலுவான குணாதிசயங்களையுடைய ஒரு பகுதிக்கு அல்லது மண்டலத்தின் கூறுகளான ஒரு நகர மையத்துடன் தொடர்புடைய கிராமங்களின் தொகுப்புக்கு குடியிருப்புகளின் தரவரிசை அடிப்படையில் துணை மண்டலத் திட்டம் உருவாக்கப்படுகிறது.

**(ii) நகரப் பகுதி நிலை**

மண்டலத் திட்டத்தில் கண்டறியப்பட்ட பெருநகர்பகுதிகள், நகர வளர்ச்சி மையங்கள் மற்றும் புது நகரங்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு முழுமைத் திட்டம் / புது நகர் வளர்ச்சித் திட்டம்.

**(iii) உள்ளூர் நிலை**

முழுமைத் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட பகுதிகளுக்கு விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள்.

இவ்வாறாக, முற்போக்கு முறைகள் மற்றும் தொழில்நுட்பங்களை திட்டமிடுதலில் புகுத்த காலம் கனிந்திருப்பது மற்றும் ஊரக மற்றும் நகரப் பகுதிகளை பிரிக்கமுடியாத ஓரே கூறாகக் கொண்ட திட்டமிடுதலை வலியுறுத்தும் மண்டல அளவிலான அணுகுமுறை ஆகியன மாநிலம் இன்னும் உயர்வான வளர்ச்சி நிலைகளுக்குச் செல்ல ஏதுவாகும்.

### 7.4 சட்டப்படியிலான திட்டங்கள் தயாரித்தல்:

**மண்டலத் திட்டம்**

வளத்தின் அடிப்படையைக் கண்டறிதல், மக்கள்தொகைப் பரவல் மற்றும் வேலைவாய்ப்பு, பெரிய அளவிலான தொடர்பு இணைப்புகள், விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சிக்கான முக்கியக் கொள்கைகள்,

பாதுகாத்தல் மற்றும் பொழுதுபோக்கு, பசுமைப் பகுதி மற்றும் நகரங்கள் மற்றும் கிராமங்களின் பொது வளர்ச்சிக் கொள்கைகள் ஆகியவை மண்டலத் திட்டத்தில் பரிசீலிக்கப்படும். மண்டலத் திட்டத்தில் முக்கியமாக இடம் பெறுபவை:

(அ) உடனடியாக மேம்பாடு இன்றியமையாதது என உள்ள பெருநகர்ப் பகுதிகள், நகர வளர்ச்சி மையங்கள் மற்றும் கிராமங்களை அந்தப் பகுதிகளுக்குத் தேவையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படலாம் என்பதால் அவற்றைக் கண்டறியும் பணி.

(ஆ) போக்குவரத்து மற்றும் . தொடர்பு அமைப்பு மற்றும் அவற்றின் வளர்ச்சி.

(இ) இயற்கை வளங்கள் மற்றும் அழகுவாய்ந்த நிலப் பகுதிகளை வரையறுத்தல், பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல்.

(ஈ) தொல்லியல் அல்லது வரலாற்று முக்கியத்துவம் அல்லது இயற்கை அழகு வாய்ந்த பொருட்கள் மற்றும் கட்டடங்களை வரையறுத்தல்.

(உ) சமுதாய வளர்ச்சித் திட்டத்தையும் சேர்த்த ஊரக வீட்டு வசதித் திட்டம், மண்டலத் திட்டத்தின்கீழ் ஊரகப் பகுதிகளில் வாழ்வதற்கான சூழலை மேம்படுத்த உதவும் ஒருங்கிணைந்த திட்டமாக அமையும்.

(ஊ) சென்னைப் பெருநகரப் பகுதிக்கு அருகில் உள்ளதைக் கருத்தில் கொண்டு காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களுக்கும், தொழில்துறை வளர்ச்சிக்கான மிக அதிக வளம் இருப்பதைக் கருத்தில் கொண்டு கோயம்புத்தூர் மாவட்டத்தையும் இந்த ஆண்டில் மண்டலத் திட்டங்கள் தயாரிப்பதற்கு எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

**7.5 முழுமைத் திட்டம் / புதுநகர் வளர்ச்சித் திட்டம்**

பெருநகரப் பகுதிகள் நகர மையங்கள் மற்றும் புதிய நகரங்களாக அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு முழுமைத் திட்டம் தயாரிக்கப்படும். அது அப்பகுதியின் விரிவான அமைப்பினை வலியுறுத்துவதாகவும் மற்றும் விரிவான, நிலையான நில உபயோக ஒதுக்கீடு செய்தல் என்றல்லாமல், கொள்கைகள், நோக்கங்கள் மற்றும் தர நிர்ணயம் ஆகியவற்றைக் கையாள்வதாக அமைந்திருக்கும். நகர வளர்ச்சியின்



ிரைவான மாற்றங்கள் மற்றும் நில உபயோகங்களுக்கிடையேயான தொடர்புகள் மற்றும் நில உபயோக வகைப்பாடு மற்றும் போக்குவரத்து ஆகியவற்றிற்கிடையேயான தொடர்புகளைப் புதுப்பித்தல் குறித்து வலியுறுத்தப்படும். நெல்லிக்குப்பம், கும்மிடிப்பூண்டி, திருச்செங்கோடு, காகிதபுரம் (புதுநகர் வளர்ச்சித் திட்டம்), குழித்துறை மற்றும் பத்மநாபபுரம் ஆகிய 6 உள்ளூர் திட்டப் பகுதிகள்/ புதுநகர் வளர்ச்சிப் பகுதி ஆகியவற்றிற்கு 2007-2008 ஆம் ஆண்டில் முழுமைத் திட்டம் / புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் 6 முழுமைத் திட்டங்கள்/ புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்படுகிறது.

**7.6 விரிவு மேம்பாட்டுத் திட்டம்**

பெரிய அளவிலான வளர்ச்சி, புனரமைப்பு அல்லது மேம்பாடு எங்கு செய்யப்படுகிறது மற்றும் எதற்கு விரிவான திட்டமிடல் தேவைப்படுகிறது என முழுமைத் திட்டத்தில் கண்டறியப்பட்ட பகுதிகளுக்கு விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படும். விரிவு மேம்பாட்டுப் பகுதி என்பது புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு அல்லது இதர நோக்கங்களுக்கு, அல்லது ஒரு புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் திட்டத்திற்கான ஒரு பெரிய பகுதியாக அமைந்திருக்கலாம். பொது வளர்ச்சி மற்றும் பொதுச் சேவைகள் மற்றும் பகுதி முழுவதும் வாகன, பாதசாரிகள் இயக்கத்தின் அமைப்பு ஆகியன உள்ளடங்கிய நோக்கங்கள், தரங்கள் மற்றும் வடிவமைப்பு ஆகியவற்றிற்கான கட்டமைப்பு ஆகியவற்றை இத்திட்டம் வழங்கும். இந்த கட்டமைப்பிற்குள் தனி மேம்பாட்டாளருக்கு அதிகபட்ச சுதந்திரம் இருக்கும். 2007-2008 ஆம் ஆண்டில் 100 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2008-2009 ஆம் ஆண்டில் 50 விரிவு மேம்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்படுகிறது.

**நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியின்கீழ் தொடர்ந்து செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**7.7 தொன்மைச் சிறப்புமிகு நகர மேம்பாட்டுத் திட்டம்**

மாநிலம் முழுவதும் 50 நகரங்களை / இடங்களை அரசு தொன்மைச் சிறப்புமிகு நகரங்களாக அறிவித்துள்ளது. தொன்மைச் சிறப்புமிகு இடங்களை/சின்னங்களை பாதுகாக்கும் விதமாகவும் மற்றும் அவற்றை மேலும் சிதைவுறுவதிலிருந்து பாதுகாக்கும் நோக்குடனும்

இத்துறை 38 தொன்மைச் சிறப்புமிகு நகரங்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள் தயாரித்துள்ளது. திட்டமிடுதல் மட்டுமல்லாமல் வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்த ஒவ்வொரு தொன்மைச் சிறப்புமிகு நகருக்கும் திட்ட மதிப்பீட்டில் 100 விழுக்காடு தொகை அதிகபட்சமாக ரூ.50.00 இலட்சம் நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுகாறும் 27 தொன்மைச் சிறப்புமிகு நகரங்களில் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த ரூ.12,75,00,000 மானியம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 25 நகரங்களில் திட்டங்கள் கண்டறியப்பட்டு ரூ.10,74,47,500-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதில் ரூ.8,79,88,500 மானியம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் மேலும் 5 தொன்மைச் சிறப்புமிகு நகரங்களில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

## 7.8 போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டம்

சட்டப்படியான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பது மட்டுமல்லாமல் முறையான போக்குவரத்துத் திட்டத்தைத் தயாரிக்க, நகர மையங்களில் ஏற்படும் முக்கியப் பிரச்சினையைக் குறிப்பாகக் கண்டறிய ஐந்து மாநகராட்சிகளான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து ஆய்வறிக்கைகளையும் மற்றும் 58 நகரங்களுக்கு போக்குவரத்துச் செயல்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டங்களையும் இத்துறை தயாரித்துள்ளது. இவ்வறிக்கைகளின் உத்தேசங்களைச் செயல்படுத்தவும், உடனடி போக்குவரத்து மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், திட்ட மதிப்பீட்டில் 75 விழுக்காடு தொகை நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும், மீதம் 25 விழுக்காடு தொகை தொடர்புடைய உள்ளாட்சியால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்ற நிபந்தனையுடன் நிதி வழங்கப்படுகிறது. அதிகப்ட்ச மானியத் தொகையாக ஒரு மாநகராட்சிக்கு ரூ.50.00 இலட்சமாகவும், ஒரு நகராட்சிக்கு ரூ.25.00 இல்ட்சமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 23 நகரங்களில் திட்டங்கள் கண்டறியப்பட்டு ரூ.6,50,96,500-க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு இதுகாறும் ரூ.1,34,44,300 அளவிற்கு மானியம் சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டில் மேலும் 5 நகராட்சிகளில் போக்குவரத்து மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.



## 7.9 பூங்காக்கள் மேம்பாடு

பொழுதுபோக்கு மேம்பாட்டுக் கொள்கை என்பது நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து நிதியுதவி வழங்கி ஏற்கெனவே உள்ள பூங்காக்களை மேம்படுத்துவதை உள்ளடக்கியதாகும். திட்ட மதிப்பீட்டில் 90 விழுக்காடு தொகை அதிகபட்சமாக ரூ.2.25 இலட்சம் மானியமாக ஒரு பூங்காவிற்கு வழங்கப்படும். மீதித் தொகை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இதற்கு முன், திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு தொகை அதிகபட்சமாக ரூ.1.25 இலட்சம் மட்டுமே மானியமாக வழங்கப்பட்டதை மேற்சொன்ன வகையில் 90 விழுக்காடாக அரசால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2008-2009 ஆண்டில் பூங்காக்களை மேம்படுத்த மானியம் வழங்க உத்தேசிக்கப்படுகிறது.

## 8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

8.1 (அ) சென்னை மாநகரின் வளர்ச்சியை ஒழுங்குபடுத்துவதற்காகவும் சென்னை மக்களுக்கு அடிப்படைச் சேவைகளையும் வசதிகளையும் அளித்து சீரான வளர்ச்சியை உறுதி செய்யும்பொருட்டும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஒரு சட்டமுறை ஆணைக் குழுமமாக 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின்மூலம் அரசால் ஏற்படுத்தப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் இது ஒரு இடைக்கால அமைப்பாக ஏற்படுத்தப்பட்டாலும், 7-3-1975 முதல் இது சட்டமுறை ஆணையமாக ஏற்படுத்தப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார எல்லையின் பரப்பு அதாவது சரியாகக்கூறின், சென்னைப் பெருநகர திட்டப் பகுதியின் எல்லைப் பரப்பு 1,189 சதுர கி.மீ. ஆகும். இதில் சென்னை மாநகராட்சி, 16 நகராட்சிகள், 20 பேரூராட்சிகள் மற்றும் 214 கிராமங்கள் உள்ளடங்கிய 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கியுள்ளன.

(ஆ) 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் பிரிவு 9(C)-ல் குறிப்பிட்டுள்ளபடி சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் முக்கியப் பணிகள் மற்றும் அதிகாரங்கள் கீழ்க்கண்டவற்றையும் உள்ளடக்கும்.

i. சென்னைப் பெருநகரத் திட்டப் பகுதியின் நில அளவை குறித்த பணிகள்.

[2008 ஏப்ரல் 11

ii. முழுமைத் திட்டம் / விரிவான வளர்ச்சித் திட்டம் / புதுநகர் வளர்ச்சித் திட்டம் தயாரித்தல்.

iii. நிலப் பயன்பாட்டு வரைபடம் தயாரித்தல்

(இ) சென்னைப் பெருநகரத் திட்டப் பகுதியினைச் சுற்றி வளர்ந்துவரும் தகவல் தொழில்நுட்ப தொழிலகங்களையும் மற்றும் உயிரிதொழில்நுட்ப தொழிலகங்களையும் கருத்தில் கொண்டு நகர உள்கட்டமைப்புகளையும் குடிமைச் சேவைகளையும் மேம்படுத்த பல்வேறு வழிவகைகளை அரசு உத்தேசித்துள்ளது. பல்வேறு சேவைத் துறைகளின் ஒருங்கிணைப்பாளராகச் செயலாற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் பல ஆய்வுகளையும், நில அளவுகளையும் மேற்கொண்டு சென்னைப் பெருநகர திட்டப் பகுதியின் மக்கள் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றி ஒரு சமச்சீரான நகர வளர்ச்சியினை உறுதி செய்யும் பொருட்டு, பல வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கியுள்ளது.

**8.2 சென்னைப் பெருநகரத் திட்டப் பகுதிக்கான இரண்டாம் முழுமைத் திட்டம் தயாரித்தல்**

(அ) அரசாணை எண் 331, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 5-12-2006-ல் அரசு அறிவுறுத்தியபடி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒரு புதிய வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தினை தயாரித்து, 21-3-2007 அன்று அரசின் இசைவிற்கு அனுப்பியது. வரைவு இரண்டாம் முழுமைத் திட்டம் குறித்து பொதுமக்களின் கருத்துகளைப் பெற 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் பிரிவு 26-ன்கீழ் அறிவிக்கை வெளியிட, அரசாணை எண் 124, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 30-3-2007-ல் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு அரசு இசைவு அளித்தது.

(ஆ) அரசு வழங்கிய இசைவின்படி சட்டம் மற்றும் விதிகளுக்கேற்ப பொதுமக்களின் மறுப்பு மற்றும் ஆலோசனைகளை 12-7-2007-க்குள் அனுப்புமாறு கோரி ஒரு அறிவிக்கையினை 11-4-2007 நாளிட்ட அரசிதழில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் வெளியிட்டது. (பின்னர், மறுப்புகளும் / கருத்துகளும் பெற கடைசி தேதி 31-8-2007 வரை நீட்டிக்கப்பட்டது). 1974 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முழுமைத் திட்ட (தயாரித்தல், வெளியிடுதல் மற்றும் அனுமதித்தல்) விதிகளின்படி அறிவிக்கை, நாளிதழ்களிலும் மாவட்ட அரசிதழிலும் மறு வெளியீடு செய்யப்பட்டது.



2008 ஏப்ரல் 11]

(இ) வரைவு இரண்டாம் முழுமைத் திட்டத்தின் ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பிரதிகள் மற்றும் இவற்றின் சுருக்கப் பிரதிகளும் பொதுமக்களுக்கு கிடைக்கும் வகையில் வெளியிடப்பட்டன. மேலும், இப்பதிப்புகளை இலவசமாகக் காணும்/ உபயோகிக்கும் வகையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும இணைய தளத்திலும் (www.cmdachennai.org.) வெளியிடப்பட்டது. பொதுமக்கள் தங்கள் கருத்துகளை வழங்க வசதி செய்யும்பொருட்டு சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகரப் பகுதியில் 14 இடங்களில் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தியது. கட்டடம் கட்டுபவர்கள் சங்கம் மற்றும் சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்டடத் துறையில் உள்ளவர்கள் ஆகியோருடன் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. பொதுமக்களுடன் மேற்கொண்ட கலந்தாய்வுக் கூட்டத்தில் பெறப்பட்ட ஆலோசனைகள் (ம) மறுப்புகள் தகவலுக்காக குழுமத்தின் இணைய தளத்தில வெளியிடப்பட்டுள்ளன.

(ஈ) சுமார் 900 மறுப்பு மற்றும் ஆலோசனைக் கடிதங்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இக்கடிதங்களை பரிசீலனை செய்ய, அரசுத் துறை/சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலர்கள், இத்துறையைச் சார்ந்த வல்லுநர்கள், தன்னார்வுத தொண்டு நிறுவனங்கள் ஆகியவர்களைக் கொண்டு, துறை / பொருள் வாரியாக ஏழு குழுக்கள் அமைக்கப்பட்டன. அக்குழுக்களின் பரிந்துரைகள் பரிசீலனை செய்யப்பட்டு 26-10-2007 அன்று குழுமத்தின் முன் வைக்கப்பட்டு, திருத்தப்பட்ட இரண்டாம் முழுமைத் திட்டம் 23-11-2007 அன்று அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது.

(உ) உத்தேசிக்கப்பட்ட இரண்டாவது முழுமைத் திட்டம், மக்கள் வசிப்பதற்கு மிகவும் ஏற்ற, பொருளாதாரத்தில் வலுவான, சுற்றுப்புறச் சூழல் தூய்மையாக உள்ள, எதிர்கால தலைமுறையினர்க்கு நல்ல சொத்தாக அமைகிற வகையில் சென்னை மாநகரத்தை மாற்றுவதை, தொலைநோக்காகக் கொண்டுள்ள ஒரு ஒருங்கிணைந்த திட்டமாகும். பெருநகரத்தின் மக்கள்தொகை, பொருளாதாரம், போக்குவரத்து, உறைவிடம், குடிநீர் மற்றும் கழிவுநீர், திடக்கழிவு மேலாண்மை உள்ளடக்கிய சமூக வசதிகள், பெரிய வடிகால் அமைப்பு, சுற்றுச்சூழல் போன்ற அம்சங்களை விரிவாக ஆராய்ந்து, வளர்ச்சிகளுக்கான கோட்பாடு மற்றும் வரைமுறைத் திறம் இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நில உபயோகம் மற்றும் கட்டுமானங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள

[2008 ஏப்ரல் 11

வளர்ச்சி விதிகள் மாறிவரும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

### 8.3 சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம்

(அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னைப் பெருநகரில் உள்கட்டமைப்பு வசதிகள் வளர்ச்சி அடைய தயாரிக்கப்பட்ட ஒரு முதலீட்டுத் திட்டமாகும். இத்திட்டமானது, சென்னைப் பெருநகரிலுள்ள அரசுத் துறைகள், முகமைகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களுடன் கலந்தாலோசித்துத் தயாரிக்கப்பட்ட திட்டமாகும். ஒவ்வொரு துறையின் தேவையான உள்கட்டமைப்புத் தேவைகளைக் கண்டறிந்து திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி சம்பந்தப்பட்ட துறைகள் / முகமைகள் / உள்ளாட்சி நிறுவனங்கள்மூலம் அவற்றினைச் செயல்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டமானது 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரை ரூபாய் 4,202 கோடி மதிப்பில் உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. 2007-2008-ல் ரூபாய் 2,154.69 கோடி முதலீட்டில் திட்டங்கள் வகுக்கப்பட்டு உரிய முகமைகள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(ஆ) அரசுத் துறைகள், முகமைகள் மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றைக் கலந்தாலோசித்து சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்த 2008-2009 ஆம் ஆண்டிற்கான முதலீடு ரூ.2,327.05 கோடி என உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 8.4 கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் அமைக்கப்படவுள்ள மொத்த உணவு தானிய அங்காடி அபிவிருத்தித் திட்டம்

சென்னை மத்திய வணிகப் பகுதியில் உள்ள நெரிசலை நீக்குதல் என்ற, சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் முதன்மைத் திட்டத்தின் கோட்பாடுகளில் ஒன்றினை நிறைவேற்றும் முகமாக கோயம்பேட்டில் அழுகும் பொருட்களின் மொத்த அங்காடி வளாகம் முதல் கட்டமாக அபிவிருத்தி செய்யப்பட்டது. இரண்டாவது கட்டமாக, உணவு தானிய வணிக வளாகமானது தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. வியாபாரிகளுடன் கலந்தாய்வு செய்து அவர்களின் ஒப்புதலோடு, இத்திட்டத்திற்கான விரிவான வரைபடம்



2008 ஏப்ரல் 11]

கட்டட வல்லுனரின்மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. 15.60 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 61.85 கோடி மதிப்பீட்டில் 500 கடைகள் அடங்கிய இவ்வளாகம் கட்டுவதற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. சுற்றுச்சூழல் அறிக்கை தயாரிப்பதற்கு அரசு சார்பு நிறுவனமான தேசிய உற்பத்தித் திறன் குழு நியமனம் செய்யப்பட்டது. அவ்வறிக்கை பெறப்பட்ட பின் சுற்றுச்சூழல் தடை நீக்கம் பெறுவதற்கான விண்ணப்பம் புது தில்லியில் உள்ள மத்திய அரசின் வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சுற்றுச்சூழல் தடைநீக்கம் பெற்றபின் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் ஒப்புதலைப் பெற்று, இத்திட்டம் 2008-2009 ஆம் ஆண்டில் தொடங்கப்படவுள்ளது.

### 8.5 பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II-ன் நிலையங்களில் வான் பகுதியை பயன்படுத்துதல்

(அ) பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டத்தின் இரண்டாவது கட்டமாக மந்தைவெளி, கிரீன்வேஸ் சாலை, கோட்டூர்புரம், கஸ்தூர்பா நகர், இந்திரா நகர், திருவான்மியூர், தரமணி, பெருங்குடி மற்றும் வேளச்சேரி ஆகிய 9 இரயில் நிலையங்களை உள்ளடக்கிய 11.166 கிலோ மீட்டர் தூரத்திற்கான திட்டம் ரூ.733 கோடி செலவு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு நவம்பர் 2007-ல் செயல்படத் துவங்கியுள்ளது. இத்திட்டத்தின் முதல் கட்டத் திட்டத்திற்கு மாறாக இரண்டாவது கட்டத் திட்டத்தில் உள்ள இரயில் நிலையங்களுக்கு மேல் உள்ள வான் பகுதி அல்லது அதனை ஒட்டியுள்ள நிலப்பரப்பில் வணிக மையங்கள் அமைத்து அதனை மேம்படுத்திடும் உரிமையை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் பெற்றுள்ளது.

(ஆ) சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழும நிர்வாகக் குழுமம் இத்திட்டத்தின் அனைத்து இரயில் நிலையங்களிலும் கட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் மாற்றுதல் (BOT) அடிப்படையில் வான் பகுதியைப் பயன்படுத்துதல் திட்டத்தினை நடைமுறைப்படுத்திட ஒப்புதல் அளித்துள்ளது. தரமணி, பெருங்குடி மற்றும் வேளச்சேரி ஆகிய மூன்று இரயில் நிலையங்களும் பக்கிங்காம் கால்வாயிலிருந்து தொலைதூரத்தில் உள்ளதாலும், கடலோர ஒழுங்கு கட்டுப்பாட்டு மண்டல (CRZ) அனுமதி தேவை இல்லாததாலும், இந்த மூன்று இரயில் நிலையங்களிலும் கட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் மாற்றுதல் (BOT) அடிப்படையில் வான் பகுதியைப் பயன்படுத்துதல்

திட்டத்தினை முதலில் செயல்படுத்திட அரசிடம் அனுமதி கோரப்பட்டது. அரசாணை (நிலை) எண் 75, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 26-3-2008-ல் தரமணி, பெருங்குடி மற்றும் வேளச்சேரி ஆகிய இரயில் நிலையங்களில் வான் பகுதியைப் பயன்படுத்தும் திட்டத்தை மேற்கொள்வதற்கு, அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2008-2009-ல் செயல்படுத்தப்படும். அதன் பிறகு மீதமுள்ள, மந்தைவெளி முதல் திருவான்மியூர் வரையிலான 6 இரயில் நிலையங்களிலும் கடலோர ஒழுங்கு கட்டுப்பாட்டு மண்டல (CRZ) அனுமதி பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8.6 பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II விரிவாக்கம்

### வேளச்சேரியிலிருந்து புனித தோமையர் மலை வரை

திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரையிலான பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-II திருத்திய மதிப்பீட்டின்படி ரூ.733.39 கோடி மதிப்பீட்டில் முழுமையாக முடிக்கப்பெற்று நவம்பர் 2007 முதல் செயல்படத் துவங்கியுள்ளது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு அதன் பங்காக இதுவரை ரூ.481.38 கோடியை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முழுப்பயனை அடைய வேண்டுமாயின் சென்னைப் பெருநகரப் பகுதிக்கான முழுமைத் திட்டத்தில் பரிந்துரைத்தபடி இத்திட்டத்தினை மேலும் நீட்டித்து வட்ட வடிவில் அமைப்பதன் மூலமாகப் பெறமுடியும் என்பதனைக் கருத்திற்கொண்டு தொழில்நுட்ப மற்றும் பொருளாதார செய்யத்தக்கமைக்கான ஆய்வறிக்கை தயாரிக்கும் பணியினை அரசு ரைட்ஸ் நிறுவனத்திடம் அளித்தது. அதன்படி, ஒரு வளைவு இரயில் பாதை அமைக்கும்பொருட்டும், சென்னை கடற்கரை-தாம்பரம் புறநகர் இரயில் சேவையுடன் இணைக்கும் வகையிலும், இத்திட்டத்தினை ரூ.496 கோடி செலவில் 5 கி.மீ. தூரத்திற்கு புனித தோமையர் மலை வரை நீட்டிப்பு செய்ய மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதியினை தமிழக அரசும் மத்திய அரசும் சேர்ந்து, முறையே 66.67 : 33.33 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்துகொண்டு இத்திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான காலவரையறை மூன்றாண்டுகள் ஆகும். இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதலை அரசு, ஆணை எண் 14, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14-01-2008-ல் அளித்துள்ளது.





## 8.7 சென்னைப் பெருநகருக்கான பெருநகர் இரயில் திட்டம்

(அ) சென்னை மாநகரின் போக்குவரத்து நெருக்கடியைக் குறைப்பதற்காகவும் பயணிகளின் நன்மையைக் கருத்திற்கொண்டும், அரசு பெருநகர் இரயில் திட்டத்தை சென்னை மாநகரத்தில் அறிமுகம் செய்ய தீர்மானித்திருக்கிறது. டெல்லி பெருநகர இரயில் கழகம் இத்திட்டம் குறித்த விவரங்களை 21-8-2003 அன்று அரசுக்கு வழங்கியது. விரிவான ஆய்வுக்குப் பின்னர் அரசாணை (நிலை) எண் 107, வீட்டு வசதி (ம) நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 18-6-2004-ல் ரூ.54.00 இலட்சம் செலவில் ஒரு விரிவான, செய்யத்தக்கமைக்கான ஆய்வு அறிக்கை தயாரிக்கும் பணியை டெல்லி பெருநகர ரயில் கழகத்திடம் அரசு அளித்தது. இதன்படி மேற்படி கழகம் ஒரு விரிவான, செய்யத்தக்கமைக்கான ஆய்வு அறிக்கையை அரசின் பார்வைக்கு வழங்கியது. அரசு ஆணை எண் 255, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 21-7-2005-ல் இத்திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்க டெல்லி பெருநகர் இரயில் கழகத்தை அரசு பணித்தது.

(ஆ) மேலும் தமிழக அரசு தனது அரசாணை எண் 36 போக்குவரத்துத் துறை, நாள் 5-7-2006-ன்மூலம் பெருநகர் இரயில் திட்டத்தை சென்னை மாநகரில் செயல்படுத்த முடிவு செய்தது.

(இ) டெல்லி பெருநகர் இரயில் கழகம் கீழ்க்கண்ட வழித்தடங்களுக்கான, விரிவான திட்ட அறிக்கையை நவம்பர் 2007-ல் அரசுக்கு சமர்ப்பித்தது.

வழித்தடம்-1 வண்ணாரப்பேட்டை - பிராட்வே - சென்னை மத்திய ரயில் நிலையம் - ரிப்பன் மாளிகை - ஜெமினி - அண்ணா சாலை - சைதாப்பேட்டை - கிண்டி - சென்னை விமான நிலையம்.

வழித்தடம்-2 கோட்டை - சென்னை மத்திய இரயில் நிலையம் - பெரியார் ஈ.வெ.ரா.சாலை - செனாய் நகர் - அண்ணா நகர் - திருமங்கலம் - வடபழனி - அசோக் நகர் - ஆலந்தூர் - பரங்கிமலை (புனித தோமையர் மலை).

(ஈ) அதன் பின்னர் அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் பெருநகர இரயில் திட்டக் குழுவின் கூட்டம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் செயல்படுத்தவேண்டிய பணிகளில் ஒன்றானது விரிவான

[2008 ஏப்ரல் 11

இடம்பெயர் ஆற்றல் திட்டத்தை தயாரிக்கும் பணி ஆகும். அத்திட்டம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தயாரிக்கப்பட்டது.

(உ) மேலும் இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் பொருட்டு சென்னைப் பெருநகர் இரயில் நிறுவனம் என்ற சிறப்பு நோக்க நிறுவனம் நவம்பர் 2007 முதல் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகத் துவங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்திற்காக இயக்குநர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மொத்த மதிப்பீடு (மார்ச் 2007-ல் வரி நீங்கலாக) பின் வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வழித்தடம் - 1 ரூ.5,689 கோடி.
வழித்தடம் - 2 ரூ.3,343 கோடி

(ஊ) இத்திட்டத்திற்காக 2007-08 ஆம் நிதியாண்டில் அரசு ரூ.50.94 கோடியை வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தை செயலாக்கத் தேவையான நிதி ஆதாரங்கள் குறித்து சென்னைப் பெருநகர இரயில் நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளது.

**8.8 சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் இரண்டடுக்கு கீழ்தள இரு சக்கர வாகன நிறுத்துமிடம் அமைத்தல்**

(அ) சென்னை கோயம்பேட்டில் ஜவஹர்லால் நேரு சாலையில் சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தை (CMBT) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் (CMDA) ரூ.103 கோடி செலவில் கட்டி சர்வதேசத் தரத்திற்கு இணையாக கடந்த ஐந்து ஆண்டுகளாக நல்ல முறையில் பராமரித்து வருகிறது. இதற்காக உலக தரச் சான்றான ISO 9001-2000 சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) நாளுக்கு நாள் சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தில் வாகன நிறுத்தத் தேவை அதிகரித்துக் கொண்டே வருகிறது. தற்போதைய வாகன நிறுத்துமிடம் போதுமானதாக இல்லை. குறிப்பாக விடுமுறை, திருவிழா மற்றும் விசேஷ தினங்களில் இரு சக்கர வாகன நிறுத்தத் தேவை அதிகமாக உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, வாகன நிறுத்துமிடத் தேவைகளைச் சந்திக்கும் தீர்வாக ஜவஹர்லால் நேரு சாலையை ஒட்டி, அதாவது சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள இடத்தில், இரண்டடுக்கு கீழ்தள வாகன நிறுத்துமிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டது. குழும தீர்மான எண் 221/07, நாள் 24-7-2007-ன் அடிப்படையில், அரசாணை எண் 321, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற



2008 ஏப்ரல் 11]

வளர்ச்சித் துறை, நாள் 15-10-2007-ல் சுமார் ரூ.9 கோடி செலவில் இத்திட்டத்தினை நிறைவேற்றிட அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

(இ) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கடந்த 19-1-2008 அன்று சென்னை புறநகர் பேருந்து நிலையத்தில் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

(ஈ) உத்தேசிக்கப்பட்டுள்ள இக்கட்டடம் இரு தளமும் சேர்த்து சுமார் 65,000 சதுர அடி பரப்பளவு கொண்டதாகவும் சுமார் 3,000 இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி கொண்டதாகவும் இருக்கும். இதன் மேல்கூரையான தரைதளத்தில் அழகிய பூங்கா ஒன்றும் அதனுள் அதிகாலை நடப்போர்க்கான நடைபாதையும் அமைக்கப்பட்டு நிலையத்தை மேலும் அழகூட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணியை ஒன்றரை ஆண்டுகளுக்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**8.9 முழுமையான இடம்பெயர் ஆற்றல் திட்டம்**

(அ) வரும் நாட்களில் ஒரு கோடி அல்லது அதற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட மாபெரும் நகரங்களில் சென்னையும் ஒன்றாகும். தென்கிழக்கு ஆசியாவிற்கு சென்னையே நுழைவாயிலாகும். அதிவிரைவான நகர்மயமாதல் வளர்ச்சி அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது. அத்துடன் கூடிவரும் மக்கள்தொகையினால் ஏற்படும் வளரும் தேவைகளைச் சந்திக்கும்பொருட்டு போக்குவரத்துப் பிரிவில் கவனத்துடனான திட்டமிடலின் அவசியமும் அரசால் கூர்ந்து உணரப்பட்டது.

(ஆ) குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை போன்ற நகரங்களில் போக்குவரத்து மேம்பாட்டுடன் தொடர்புடைய சாலை மற்றும் இருப்புப் பாதைச் சேவைகள் மற்றும் அதன் இடைநிகழ் சேவைகள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

(இ) சென்னை நகரைப் பொறுத்தமட்டில், சென்னை பெருநகர திட்டப்பகுதிக்கான போக்குவரத்து மேம்பாடு குறித்து, பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை போன்ற துறைகள் முயற்சிகள் மற்றும் ஆய்வுகளை மேற்கொண்ட போதிலும், போக்குவரத்து இணைப்பு, பல்வேறு போக்குவரத்து ஒருங்கிணைப்பு, சாலைகளின் இணைப்பு

[2008 ஏப்ரல் 11

அம்சங்கள், பாதசாரிகள் கடக்குமிடம், வாகன நிறுத்துமிடம் போன்றவற்றிலுள்ள இடர்ப்பாடுகள் தீர்க்கப்படாமல் உள்ள நிலையில், ஒழுங்குமுறையான போக்குவரத்து, போக்குவரத்து அமைப்பு மற்றும் போக்குவரத்து சுழற்சி அமைப்பு போன்றவை, மேற்சொன்ன மாநகரங்களில் அமைக்கப்படுவதை உறுதி செய்திடவேண்டும். இத்தேவையைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியவாறு, சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களில் போக்குவரத்து மேம்பாடு குறித்து ஆய்வு செய்வதற்கு அரசு தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில், பல்வேறு துறைகளின் அலுவலர்கள் மற்றும் வல்லுநர்கள் அடங்கிய ஒரு மாநில அளவிலான குழு, அரசாணை (நிலை) எண் 144, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 23-4-2007-ல் உருவாக்கப்பட்டது.

(ஈ) 5-5-2007 அன்று நடந்த மாநில அளவிலான குழுவின் முதல் கூட்டத்தில் தீர்மானித்தவாறு சென்னை மாநகருக்கு நான்கு துணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டன. இந்த துணைக் குழுக்கள் பின்வரும் பொருள்கள் குறித்து ஆய்வு செய்யும்.

(1) தற்போதுள்ள போக்குவரத்து இணைப்பில் உள்ள இடர்களையும், பல்வேறு போக்குவரத்து ஒருங்கிணைப்பு மற்றும் சாலை இணைப்பில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறிதல்

(2) போக்குவரத்து மேம்பாட்டிற்கான குறுகிய கால நடவடிக்கைகள்

(3) நடுத்தர மற்றும் நீண்டகால நடவடிக்கைகள்

(4) போக்குவரத்து மேலாண்மை

(உ) துணைக் குழுவும், மாநில அளவிலான குழுவும் தற்போதைய போக்குவரவு நிலையையும், குறிப்பாக விரைந்து வளர்ச்சி பெறும் தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் பிற தொழில்களினால் ஏற்படும் மக்களின் தேவைகளையும் குறித்து பன்முறை அமர்ந்து விரிவாகக் கலந்துரையாடி உள்ளன. பல்வேறு பிரிவுகளின்கீழ் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள், போக்குவரவு மேலாண்மைத் திட்டங்கள் போன்றவற்றை முன்னிலைப்படுத்தி சென்னை பெருநகர் திட்டப் பகுதிக்கும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் ஒரு முழுமையான போக்குவரவு மற்றும் போக்குவாத்து கூட்டமைப்புத் திட்டம் தயார்



2008 ஏப்ரல் 11]

செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் நன்கு ஆய்வு செய்யப்பட்டபின், வருங்காலங்களில் செயல்படுத்தப்படும்பொழுது பயணம் செய்யும் பொதுமக்களின் இடர்களைக் குறைப்பதாகவும் போக்குவரத்துத் துறையில் பல்வேறு பிரிவினரின் வளர்ந்துவரும் தேவையை நிறைவேற்றுவதாகவும் அமையும்.

(ஊ) இதுபோன்ற இடம்பெயர் ஆற்றல் திட்டங்கள் கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகரங்களுக்கும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**9. நிறைவுரை**

முந்தைய அத்தியாயங்களில் விரிவாக சொல்லப்பட்ட திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள், துறையினுடைய புதிய திட்டங்கள் மற்றும் சிறப்பான செயல்திறனையும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. எனவே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் இந்த அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் வாயிலாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்பொருட்டு பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி புதிய சாதனை படைத்து வருகிறது என்பது "உள்ளங்கை நெல்லிக்கனி போல" தெளிவாகிறது. சுருங்கக் கூறின் "நல்ல நகரங்களை உருவாக்குதல்" மற்றும் "குடிசைகளற்ற மாநிலத்தை உருவாக்குதல்" என்ற இலக்கை உறுதியாக இத்துறை அடையும்.

———

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
228408
சென்னை-600 008